# ராஜ கர்ஜனை



இலக்கிய சாம்ராட்

கோவி.மணிசேகரன்

# ராஜகர்ஜனை

(வரலாற்றுப் புதினம்)

இலக்கிய சாம்ராட்
**அறிஞர் கோவி. மணிசேகரன்**

**பூம்புகார் பதிப்பகம்**
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை - 600 108.
தொலைபேசி : 044-25267543



எங்கள் பூம்புகார் பதிப்பக வாயிலாக இந்த நாவல் வெளிவர அனுமதித்த அறிஞர் 'கோவி' அவர்களுக்கு எங்கள் நன்றி.

அவர் பல்லாண்டு வாழ்ந்து மேலும் பல நாவல்களை எழுத வாழ்த்துகிறோம்.

**- பூம்புகார் பதிப்பகம்**

# எனது கர்ஜனை

எனது வாழ்வில் எழுதிய நாவல்களுள் நிறைவு தந்தவற்றுள் ராஜகர்ஜனையும் ஒன்று. வித்தியாசமான கர்ஜனை! இந்த நாவல் 'கல்கி' பத்திரிகையில் தொடர்கதையாக (1978-79) வெளிவந்தபோது, இதைக் 'கோவி கர்ஜனை' என்று பாராட்டி எழுதினார்கள். பாராட்டி மட்டுமா எழுதினார்கள்? சிலர் பகிரங்கமாக 'துக்ளக்' தனமாகவும் எழுதினார்கள். அந்தப் பொறாமை மண்டிய அரைவேக்காட்டுக் கூச்சல்களுக்கு அடங்குவதா இந்த ராஜகர்ஜனை! 'புரிந்து கொள்ளாத போதும், பொறாமைப்படுகிற போதும் மனிதன் மற்றவனை முட்டாளாக்குகிறான்' என்று எனது நண்பன் கவிஞர் சுரதா அடிக்கடிப் பொடியை உறிஞ்சிக் கொண்டே சொல்வதுண்டு. அது மெய்யே போலச் சிலர் எரிச்சல் கொண்டு வெந்தும் வெம்பியும் கூச்சலிட்டனர்! ஏதோ இவர்கள் தாம் தர்மத்தின் பிரதிநிதிகள் போலவும் புலம்பினர்.

நான் எப்போது யாரைக் கண்டு அஞ்சினேன்? இப்போது அஞ்சுவதற்கு?

திப்புசுல்தானைப்பற்றி நான் எழுதியதற்காகப் பல்லாயிரக் கணக்கான இசுலாமிய நெஞ்சங்கள் குளிர்ந்து மகிழ்ந்தன. ஏனையவரிடம் திப்பு அகப்பட்டிருந்தால் என்ன பாடுபட்டிருப்பானோ என்றும் கடிதம் எழுதியிருந்தார்கள். இதே இசுலாமியர்கள் ரங்கநாயகிக்காகக் கண்ணீர்மல்கக் கடிதங்கள் எழுதி அனுதாபம் தெரிவித்த விதமே ஓர் இலக்கிய நயம் பொருந்தியதாகும்.

நான் இந்த நாவலைப்பற்றி ஏதும் எழுதுவதற்கில்லை. நீங்கள்தாம் படிக்கப் போகிறீர்களே! 'இந்த நூற்றாண்டில் இதுமாதிரி ஒரு சரித்திர நாவலை இனி யாரும் படைக்க முடியாது' என்று நாகைப்பட்டினத்து வாசகர்கள் பலர் எழுதியிருந்தார்கள். நாவலை முடித்ததும் வாணியம்பாடி, குடியாத்தம், வேலூர் போன்ற



ஊர்களிலிருந்து இன்னும் தொடரக்கூடாதா என்று உரிமையுடன் கோபித்துக் கொண்டார்கள். 'கல்கி' இதழ் எனக்களித்த வாய்ப்பு 25 இதழ்களுக்கு. நான் மேலும் ஏழு இதழ்களை எடுத்துக்கொண்டதே அவர்கள் சம்மதத்தின் பேரில்தான். மேலும் எனது கதை ரங்கநாயகியுடன் முடிகிறது. ஆனால் திப்புவின் கதை நீண்டது. ரங்கநாயகியுடன் எனது நாவலை நிறைவுறச் செய்திருக்கிறேன். அவ்வளவே!

ஆ! இந்தத் திப்புசுல்தானுக்காக நான் படித்த நூல்கள் குழப்பிய குழப்பங்கள். . . கன்னிமரா நூல் நிலையத்துக்குத் தெரியும்! எனக்குப் பெரிதும் துணை புரிந்தவர் என் அருமை நண்பன் நூலக இயக்குநர் திரு. வே. தில்லைநாயகம் அவர்கள். எனக்காகவும் ஓவியர் வினுக்காகவும் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு முதலில் நன்றி சொல்ல வேண்டும்.

இந்தக் கர்ஜனையைக் கல்கியில் தொடராக வெளியிட்டு ஊக்குவித்த அருமை நண்பரும் 'கல்கி'யின் ஆசிரியருமான திரு. கி. ராஜேந்திரன் அவர்கட்கு நன்றி செலுத்துகிறேன். பல அரைவேக்காட்டு எதிர்ப்புகளுக்கு அவர் அளித்த பதில்களுக்காக என் சார்பில் திப்புசுல்தானும் நன்றி செலுத்துகிறான்.

இப்புதினத்தை வெளியிட்ட பூம்புகார் பதிப்பகத்துக்கு நன்றி.

அன்பன்

**கோவி. மணிசேகரன்**

## கோவியின்

# ராஜகர்ஜனை

## 1

'அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் எல்லாப் புகழும் அல்லாவுக்கே! படைப்புகள் யாவற்றையும் படைத்துப் போஷித்துப் பரிபக்குவப் படுத்துகிறவன்!

அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன்!

தீர்ப்பு நாளின் அதிபதி!

இறைவா! உன்னையே நாங்கள் வணங்குகிறோம்!

உன்னிடமே உதவி தேடுகின்றோம்!

நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக!'

குடிமகனாய்ப் பிறந்து, முடிமகனாய்ச் சிறந்து, வெள்ளைக் கும்பினியர்க்கு இடிமகனாய் - தேசியக் கொடி மகனாய்த் திகழ்ந்து வரும் தென்னகத்து மாவீரச் சுல்தான் - மைசூர் புலி - ஹைதர் அலி, தமது இனிதான தொழுகையை முடித்துக்கொண்டு எழுந்து நின்று வானத்தை அண்ணாந்து கவனிக்கிறார். . .

மேற்கு வானில் நெருப்புச் சூரியன், அஸ்தமனத்தில்தான் நிஜமான உதயமே இருக்கிறது என்பதுபோலப் புனிதமான திருக்குரானின் இனிய ஒலிகளுக்குப் பரிசுத்தமான சுருதி கூட்டிக் கொண்டிருக்கிறான். . .



பதினாறு அடி வேங்கையொன்று பெருமிதத்தால் நிமிர்வது போல, இந்த ஆறடி வேங்கை குழுமியிருந்த ஜனக் கூட்டத்தைத் தமது தீட்சண்யமான கண்களை உருட்டி நிமிர்த்திக் கவனிக்கிறது. . .

. . . ஹைதர் அலி வாழ்க!'' என்ற வாழ்த்தொலிகள், அவற்றைத் தொடர்ந்து அதிர் வேட்டுகள் விண்ணைச்சாடி மண்ணை மருட்டுகின்றன! எங்கும் புலிக்கொடிகள்! எவர் மார்பிலும் புலிச் சின்னங்கள்!

ஒரு சாம்ராஜ்யமே நிறைவு கண்டதுபோலக் காலையில்தான் ஒருவிழா இனிது நடந்து முடிந்திருந்தது. அந்த மகிழ்ச்சி அடங்குமுன் மாலையில் இப்படி ஒரு போர்ப் பயணமா?

வீரனுக்குப் போர்க்களம், விளையாடும் பூஞ்சோலை. தமது வாழ்நாளில் தொண்ணூறு சதவிகிதம் போர்க்களமே பொழுது போக்காக எண்ணி, இந்தத் தென்னகம் மட்டுமல்லாமல் வடபுலத்திலும் தமது புலிக்கொடியை நிறுவி, எல்லைகளைப் பரப்புவதில் எல்லையில்லாப் பெருமகிழ்ச்சியும் பெருமுயற்சியும் கொண்டிருப்பவராயிற்றே ஹைதர் அலி! . . .

காலையில் நடைபெற்ற அந்தப் பெருவிழா. . .

ஒரு ராஜகர்ஜனை இன்னொரு ராஜகர்ஜனையின் பிடரியைச் சீவி முடித்த திருவிழா!

மாவீரத் திலகமான தமது மூத்த குமாரன் - இளைய சுல்தான் - திப்புசுல்தானுக்கு முறைப்படி ராஜப்பிரகடனம் நடத்தி வைத்தார் ஹைதர் அலி...

'தமக்குப் பிறகு இந்தச் சாம்ராஜ்யத்தைத் தமக்கு நிகராகவும், ஏன்? தமக்கு மேலாகவும் கட்டியாண்டு காக்கப் போகிறவன் திப்பு' என்று கம்பீரப் பிரகடனம் செய்தார். அத்துடன், 'திப்புவின் ஒவ்வொரு கட்டளைக்கும் இந்தத் தென்னகத்து ஒவ்வொரு புழுப்பூச்சியும் கூட மரியாதையுடன் சலாம் வைத்தே தீரவேண்டும்' என்று ஆணித்தரமாகக் கூறிய ராஜப் பிரகடனம். . .

ஆ! மைசூரின் பழைய ராஜ்ய அந்தஸ்துக்குரிய லட்சுமி யம்மணிக்கும், அந்தம்மாளைச் சார்ந்த ராஜவிசுவாசிகளுக்கும் அந்த ராஜப் பிரகடனம் நாராசமாக இருந்தாலும், பெருவாரியான ஜனங்களுக்குத் தெம்பைத் தரக்கூடிய தேனினும் இனிய செய்தியாகவே இருந்தது. குறிப்பாக திப்புசுல்தானின் இனிய உயிர் நண்பனான பசவராஜுவுக்கு அளவற்ற பெருமகிழ்ச்சியைத் தந்தது.

காலை இந்த விழா முடிந்து ஓரிரவும் காத்திருக்கச் சம்மதியாத தந்தை, மாலைப் போதுக்குள் பேரம்பாக்கம் போருக்குப் பயணம் வைத்துக் கொண்டது திப்புசுல்தானுக்கு என்னமோ போலிருந்தது. இதனை அவன் தனது தாயார் பெரிய சுல்தானாபேகம் பக்ருன்ஷாவிடம் கூட வாதாடி அலுத்துக் கொண்டான். அவன் அவ்விதம் அலுத்துக்கொண்டதற்குக் காரணம் இருந்தது. இத்தருணத்தில் பேரம்பாக்கம் போர் அவ்வளவு உசிதமானதன்று என்பது அவனது அபிப்பிராயம்.

தந்தையாரின் போர்ப் பயணத்தின்போது அவன் வந்திருந்து வழிகூட்டாமலிருப்பது, காலை அவன் அலுத்துக்கொண்ட காரணமாகவும் இருக்கலாமோ என்று அந்தத் தாயுள்ளம் வருந்தியது.

ஸ்ரீரங்கப்பட்டினமே நிறைந்து வழிகிறது. எங்கும் தலையலைகள்! காவிரிக்கரைக்கு அப்பாலும் ஜனசமுத்திரம். . .

படைகளின் அணிவகுப்பை மிகவும் கவனத்துடன் பார்வையிட்டு வந்தார் தளபதியான பௌஜ்தார் முகமதலி, அவர் பல யுத்தங்களைக் கண்ட தானைத் தலைவர். முகமத் உமரின் அருமந்தப் புதல்வர். இந்த முகமத் உமர் ஒரு காலத்தில் ஆர்க்காட்டு நவாப்பிடம் சேவகம் புரிந்து, பிறகு ஹைதர் அலியிடம் வந்து அண்டியவர்.

ஹைதரின் வருகைக்காகக் காத்து நின்றது அலங்கரிக்கப்பட்ட வெள்ளைக் குதிரை, அதனையொட்டினாற்போல் பேஷ்வா-அமைச்சர் திவான் பூரணய்யா அரச மரியாதையுடன் நின்றிருக்கிறார். சற்றே தொலைவில் திவான் மீர்சாதிக் என்பான், தனது மீசையைத் திருகிவிட்டவண்ணம் நரிப்பார்வையை நாலா பக்கமும் சுழலவிட்டுக்



கொண்டிருக்கிறான். ஒற்றர் தலைவர் சாமா ஐயங்காரும், தபால் அதிகாரி ரங்கா ஐயங்காரும் திருதிருவென்று விழித்த விழிப்பிலிருந்து ஏதோ அங்கு நடக்கக்கூடாத உற்பாதம் ஒன்று நடக்கப் போகிறது என்பதைக் காட்டிக் கொடுப்பது போல் தெரிந்தது. மீர்சாதிக் என்பானுக்கு மிகவும் எரிச்சலைத் தந்தது.

லால் மகாலான அரண்மனையின் வாயிலில் தனது கணவருடைய வருகைக்காகக் காத்திருந்த பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா மகன் திப்புசுல்தான் இன்னமும் காணோமே என்கிற தவிப்பு கண்டு கவலையுடன் இங்குமங்குமாக நோக்குகிறாள். தந்தையார் போர்ப்பயணம் செய்கிறபோது இந்தத் திப்பு வராமல் இருப்பது எத்தனை பெரிய மதியீனம்! அவன் இந்த நேரத்தில் எங்கு சென்றிருப்பான் என்பது பெரிய சுல்தானா பேகத்துக்கு நன்றாகவே தெரியும். ஆயினும் இதுவா அதற்கு நேரம்? புலியேறு போன்ற கணவருடைய கோபத்துக்கு இந்நேரம் பார்த்துத்தானா இவன் ஆளாக வேண்டும்? அப்படி என்ன காதல் வேண்டிக் கிடக்கிறது, காதல்!

டாங், டாங், டாங், டாங்...

பழம் பெருமை கொண்டு, மைசூருக்கு அணித்தே விளங்கிய அந்த ஸ்ரீரங்கப்பட்டினத்து ஸ்ரீரங்கநாதப் பெருமாளின் அந்தி காலப் பூஜையை முன்னிட்டுக் கோயில் மணி சுநாதமாக ஓசையெழுப்பத் தொடங்குகிறது.

அந்த மணியோசை கேட்டதும் திப்புசுல்தான் அரைக்கணம்கூட அரண்மனையில் தங்க மாட்டானே... ரங்கநாயகிப் பைத்தியம் அவனை எங்கு தள்ளப் போகிறதோ?

போராபரணம் பூண்டு வருகிற ஹைதர் அலியைக்கண்டு பூரித்து நோக்கினாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா, ஆனால் தமது பட்டத்தரசியை ஹைதர் அலி பார்த்த பார்வை...

'திப்பு எங்கே?' என்று தீப்பொறி பறக்கக் கேட்பது போலிருக்கிறது அந்தப் பார்வை...

''பேகம்! உனது மகன் என்னை ரொம்பவும் கௌரவப் படுத்துகிறான்! ஏனென்றால் காலையில் நான் அளவுக்கு மீறி

அவனைக் கௌரவப்படுத்தி விட்டேன்! ஆனாலும் அவன் எனது மகன்! இந்த ராஜ்யத்தின் சிம்ம கர்ஜனை!''

ஹைதர் அலி இவ்வாறு கூறுகிறபோது, சொல்லில் அழுத்தமான பாசம் வெளிப்பட்டாலும், குரலில் அநர்த்தமான நையாண்டி எதிரொலித்ததைப் பெரிய சுல்தானா பேகத்தால் உணராமல் இருக்க முடியவில்லை. அருகில் இருந்த மற்ற தேவிமார்கள், மௌனப் பதுமைகளாய் மகாசுல்தானுடைய கனன்ற கண்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர். திப்புசுல்தானின் இனிய மனையாள் ருக்காய்யா பானுவுக்கு அது வேதனையாக இருந்தது.

மணியோசை கேட்கிறது...

ஹைதரே மீண்டும் குரல் கொடுத்தார். ''பேகம்! இந்தப் போர்ப்பயணம் ஒரு சாம்ராஜ்ய விஸ்தரிப்புக் கனவு! வெள்ளைக் கும்பினிக் கழுகுகளுக்குப் புகட்டப் போகிற சாசுவதமான பாடம்! ஒருகால் எனது பயணத்தில் விபத்துகள்...''

ஹைதர் முடிக்கு முன்பே, ''பிரபோ!'' என்று சத்தமிட்டு விட்டாள் பக்ருன்ஷா பேகம். பக்கத்திலிருந்த ஏனைய தேவிமார்களும், மருமகள் ருக்காய்யா பானுவும்கூட அதிர்ச்சி கண்டனர்.

ஹைதர் அலி பொருளார்ந்த நகை புரிந்து, ''பேகம்! மரணம் என்பது மனிதரோடு பிறப்பது! ஆனால், வீரன் மரணத்தோடு பிறக்கிறான்! ஆகவே நீ மணந்தது என்னையல்ல; மரணத்தை என்பதை நான் சொல்லி உனக்குத் தெரிய வேண்டியதில்லை. ஒன்றை மட்டும் மறவாமல் உன் மகன் திப்புவுக்குச் சொல்! இந்த சாம்ராஜ்யத்தை எந்த நிமிஷத்திலும் வெள்ளைக் கழுகுகள் (ஆங்கிலேயர்கள்) கொத்தக் காத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, திப்பு காதலிக்க வேண்டியது ரங்கநாயகி என்கிற ஐயங்கார் மகளையல்ல; ராஜ்யம் என்கிற ஹைதரின் ரத்தத்துளிகளை! நல்லது. நேரமாகிறது, வழக்கம்போல் உனது புன்முறுவலின் மூலம் விடை கொடுப்பாயாக!'' என்றார். அவரது முகம், போர்ப்பயண வீரமலர்ச்சி கண்டு வெற்றி மணக்க முறுவலித்தது.



பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் முகத்தில் புன்னகை அரும்பியது.

தயாராகக் காத்துக் கொண்டிருந்த வெள்ளைக் குதிரையை நாடி நடந்தார் ஹைதர் அலி. அது ஒரு வேங்கையின் திமிர்ந்த நடைபோல் இருந்தது.

அனைவருமே தத்தம் தலைப்பாகைகளையும் காலணிகளையும் கழற்றி வைத்துவிட்டு அரசமரியாதை செய்கின்றனர். திவான் பூரணய்யா ஓரக்கண்களால் மீர்சாதிக் என்னும் திவானை நோக்குகிறார். மீர்சாதிக் என்பவனுடைய பார்வை கூட்டத்துள் எங்கோ ஊடுருவி எதையோ பேசிக்கொண்டிருக்கிறது. அவனது உதடுகள் அல்பமாகச் சிரித்துக் கொள்கின்றன, நடக்கப் போகிற உற்பாதத்தின் கட்டியம் போல!

வெள்ளை வெளேரென்றிருந்த அரசக் குதிரையின் அருகே சென்ற ஹைதர் அலி, அதனை மெல்லச் செல்லமாகத் தட்டிக் கொடுக்க, அதுவும் அஃறிணை நன்றி விசுவாசத்துடன் ஒரு முறை கனைத்துச் சிலிர்த்துத் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது. உற்சாகம் மேலிடத் தமது வலக்கரத்தை உயர்த்துகிறார் ஹைதர் அலி. தொடர்ந்து வாள்களும், வேல்களும், ஈட்டிகளும் உயர்த்தப்பட்டு, ''ஹைதர் வாழ்க, அவரது வெற்றி வாழ்க!'' என்று வாழ்த்தொலிகள் எழுகின்றன. மீண்டும் அதிர்வேட்டுகள்! அவற்றைத் தொடர்ந்து...

துப்பாக்கியின் சத்தம் வெடிக்கிறது...

ஓ...! என்ன அசம்பாவிதம் இது...

ஹைதர் அலி ஏறி அமர்ந்த வெண்புரவியின் வயிற்றில் ஒரு குண்டு பாய்ந்து ரத்தம் சொட்டுகிறதே! குதிரை தனது துன்பம் தாங்காது சாய்கிறது! அதன் வெள்ளை உடலில் சிவந்த ரத்தம் பரவி அவலக் காட்சியாய் விரிகிறது.

குதிரைமீது ஏறிய ஹைதர் அலி, தடுமாறிச் சாய்கிறபோது, கூட்டமே அதிர்ச்சியால் ஓலக்குரல் எழுப்ப, பக்கத்தில் இருந்த மெய்க்காப்பாளன் தாங்கிப் பிடிக்கிறபோது...

'படார்' என்று இன்னொருமுறை துப்பாக்கி எங்கிருந்தோ தனித்து வெடிக்கிறது...

'ஓ' என்ற பரிதாபக் குரலுடன் மண்டையைப் பிடித்துக் கொண்டு தரையில் சாய்ந்தான் அந்த மெய்க்காப்பாளன். ஆனாலும் ஹைதர் அலி, கீழே விழுந்து விடாது சமாளித்து ஒதுங்கிக் கொண்டார்! இரண்டு குண்டுகளும் குறி தவறி விட்டனவே என்று தன்னுள் அங்கலாய்த்துக் கொண்டான் திவான் மீர்சாதிக். ஆ! கோட்டை விட்டு விட்டானே அந்தக் குறிபார்த்த மடையன்!...

ஸ்ரீரங்கநாதரின் ஆலயமணி இன்னமும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

இதற்குள் கூட்டத்தில் பெருத்த சலசலப்பும் கலவரமும் நிகழ்ந்து ஒருசிலர் இங்குமங்குமாகச் சிதறியோடுகின்றனர். இந்த நேரத்தில் இப்படியாகச் சுட நினைத்த துரோகி யாராக இருக்க முடியும் என்பதைக் கண்டு பிடிக்க அவர்கள் பதற்றம் கண்டனர். இந்தக் கலவரத்தினூடே நான்கு திசைகளிலிருந்து நால்வர் தங்கள் குதிரைகளை வேகமாகத் தட்டி விரைகின்றனர்.

ஒரு திசையிலிருந்து, ''ஓ... திப்பு சுல்தான்!'' என்ற கூக்குரல்.

இன்னொரு திசையிலிருந்து ''பசவராஜ்'' என்ற முனகல்.

மற்றொரு திசையிலிருந்து ''ராஜாக்கானா...?'' என்ற கேள்விக்குறி.

அடுத்த திசையிலிருந்து ''சையத் கஃபார்!'' என்ற வியப்பு...

இந்த நால்வரில் யாரோ ஒருவர்தான் மகாசுல்தான் ஹைதர் அலியைக் கொன்றுவிட்டு ஓடுகிறார்களோ என்கிற பிரமிக்கத்தக்க ஐயத்தைக் கிளப்புகிறது.

நான்கு திசைகளிலிருந்தும் புயல் வேகத்தில் பறந்த புரவிகளுக்கு முன்னால், ஒரு புரவி அம்பெனப் பாய்ந்து விரைகிறது. அதன்மீது ஆரோகணித்திருந்தவன் ஒரு வெள்ளைக் கும்பினியன் என்பது அந்த இருட்டி வருகிற நேரத்தில் தெளிவாகத் தெரிகிறது.



அவன் தனது கையிலிருந்த குண்டு தீர்ந்த துப்பாக்கியை வீசி எறிந்துவிட்டு மேலும் வேகத்தைக் கூட்டுகிறான். ஆனால் பின்தொடர்ந்து துரத்துகிறவர்கள் புயலானவர்களாயிற்றே!

பசவராஜுவின் குதிரை மரண ஓட்டமெடுத்து எதிரியை மடக்கிப் பிடிக்கிறது. வாள் வீரத்தில் தென்புலத்திலேயே தன்னிகரற்ற பசவராஜுவின் முன்னால் அந்த வெள்ளைக் கும்பினிச் சிப்பாய் எம்மாத்திரம்! துரும்பு! அது அகப்பட்டுக் கொண்டது.

ஆ! யுத்தப் புறப்பாட்டின் போது ஏற்பட்ட அசம்பாவிதம் குறித்துப் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா கண்ணில் நீர் மல்க, ''பிரபோ! புறப்படுகிறபோதே ஏதோ அபசகுனம் போல உற்பாதங்கள் நிகழ்ந்து விட்டன. நாளை புறப்படலாமே?'' என்று வெகுவாக வருந்திக் கேட்டுக் கொண்டாள். ஆனால் ஹைதர் அலி! பெருத்த சிரிப்பொலி எழுப்பினார்.

''பேகம், என் ராணி! எனக்கு எதிரி எங்கிருந்தோ முளைக்க வேண்டுமென்பதில்லை. இங்கும் முளைக்கலாம். ஆகவே எனது இந்த யுத்தப் பயணத்தை நிறுத்துவதில் அர்த்தமில்லை. ஹைதர் இதுவரை முன்வைத்த காலைப் பின் வைத்ததில்லை.''

ஹைதர் அலியின் இந்தக் கம்பீர முழக்கத்தைக் கேட்டுப் பல செவிகள் உணர்ச்சி வயப்பட்டு வெற்றிக் குரல் எழுப்பின. அப்போது தொலைவிலிருந்த திவான் மீர்சாதிக்கை நோக்கிய ஹைதர் அலி, ''திவான்! சுல்தானா பேகம் சகுனம் பார்ப்பதைப்பற்றி, மகா புத்திசாலியான நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்ட குரலின் வித்தியாசம்தான், சற்றே தொலைவிலிருந்த திவான் பூர்ணய்யாவையும் ஒரு கணம் திகைக்கவைக்க வைத்துவிட்டது.

இதற்குள் பிடிப்பட்ட அந்த வெள்ளைக் கும்பினியனைக் கட்டி இழுத்து வந்து எதிரே தள்ளினான் ஸ்ரீரங்கப்பட்டினத்துச் சிங்கமெனப் புகழ்பெற்ற குமாரசுல்தான் திப்பு!

இன்னமும் ஸ்ரீரங்கநாதர் கோயில் ஆலய மணியோசை முழங்கிக் கொண்டே இருக்கிறது.

அது ஹைதர் அலியின் போர்ப்பயணம் தொடங்குகிறவரை முழங்கிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதுபோலத் தெரிகிறது. ஒருகால் கோயிலைச் சார்ந்த ஐயங்கார்களின் ஏற்பாடோ? அல்லது ரங்கநாயகியின் வேண்டுதலோ?

திப்புசுல்தான் செவிகள் வியந்து கொண்டிருக்கின்றன. அது தன்னைக் காதல் குரல் விடுத்து அழைக்கும் அன்றாட மணியோசை ஆயிற்றே!

மணியோசையில் செவிகளையும் மாற்றான்மீது கண்களையும் செலுத்திய ஹைதர் அலி, தமது நிலைக்கு வந்த பின்னர், எதிரே வீரமிடுக்குடன் நின்ற திருக்குமாரனைக் கவனிக்கிறார். அடுத்து பக்கத்தில் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்த பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவை நோக்குகிறார். ''நான் எனது குமாரனைத் தவறாக எடை போட்டுவிட்டேன். இப்படி ஏதோ ஓர் உற்பாதம் நிகழவிருக்கிறது என்பதனை முன்கூட்டியே கேள்விப்பட்டுத் தனது நண்பர்களுடன் நாலா திசைகளிலும் மறைந்து நின்று கண்காணித்திருக்கிறான், திப்பு! நான் தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன் என்று சொல்லவில்லை. போடும்படியாக நினைக்கச் செய்கிறது இந்த மணியோசை...''

இவ்வாறு கூறத்தான் வாயெடுத்தார் ஹைதர் அலி. ஆனால் அது அவசியமில்லை என்பதையுணர்ந்து முறுவலித்தார். அடுத்து மகனை நோக்கினார்:

''திப்பு! இவனது துப்பாக்கி தனியொருவன் தூண்டுதலில் வெடித்ததா? இல்லை பேரம்பாக்கத்து வெள்ளைத் தளபதிகளின் சூழ்ச்சியா? என்ன சொல்லுகிறான் இந்தச் சிப்பாய்?''

ஹைதர் அலியின் கனத்த குரல் கேட்டுக் கதிகலங்கிப் போனான் அந்தச் சிப்பாய். அவனை ஒருமுறை ஏற இறங்கக் கவனித்த திப்புசுல்தான், ''தந்தையே! இந்தச் சிப்பாய் ஓர் ஊமை. நாங்கள் எவ்வளவு துன்புறுத்தியும் பதிலைக் காணோம். இன்னமும் அவனிடமிருந்து உண்மை வரும் என்று எதிர்பார்க்க முடியாது. இது பேரம்பாக்கத்தில் யுத்த முகாமிட்டிருக்கும் கர்னல் பெர்லியின்



சூழ்ச்சியாக இருக்க நியாயமில்லை. நமது அரண்மனையில் இருக்கிற யாரோ ஒரு துரோகியின் சதித் திட்டம்'' என்று எனது நண்பன் பசவராஜை நோக்கினான் திப்புசுல்தான். அந்த நோக்கலில் நட்பின் பிணைப்பு தெரிந்தது.

அவன் அவ்விதம் பசவராஜை மட்டும் பாராட்டிக் கூறியது ஏனைய மூன்று அந்தரங்கச் செயலாளர்களுள் குறிப்பாக ராஜாக்கானுக்கு மட்டும் எரிச்சலை மூட்டியது. அவனுக்கு பசவராஜ் மீது எப்போதும் ஒருவிதமான அர்த்தமற்ற வெறுப்பு. இளைய சுல்தானுடைய அன்பை அதிகமாகப் பெற்றுவிட்டவன் என்பது ஒரு காரணமானாலும், ஓர் இந்து நண்பனுக்கு இவ்விதமான முக்கியத்துவம் கொடுப்பதை அவன் வெறுத்தான். ஏன்? மகாசுல்தான் ஹைதர் அலிக்கும் பசவராஜ்மீது இதேமாதிரியான எரிச்சலும், வெறுப்பும் இருந்ததால் ஓரக் கண்ணால் கூர்ந்து கவனித்து அப்போதைக்கு எது குறித்தும் அவர் தொட்டுக் கொள்ளாமல், அடுத்த விநாடியே திவான் மீர்சாதிக்கை நோக்கி, ''திவான்! இந்தத் துப்பாக்கியால் சுட்ட சைத்தானை எனது போர்ப் பயணத்தின் முதல் பலியாகக் கிழக்கெல்லையில் தோலுரித்துத் தொங்கப் போடவும்! இந்தக் காட்சியைக் கண்டு கொண்டே படை நடக்கட்டும்! இந்தக் காரியத்தை நீங்களே உங்கள் கையால் நிறைவேற்றியாக வேண்டும்'' என்று கூறி இடிமுழக்கம் போலப் பெருநகை புரிகிறார்...

ஆ! சிரிப்பா அது? படையே நடுங்கும் அது ஒரு ராஜகர்ஜனை என்பதை அனைவருமே அறிவர்.

அந்த வெள்ளைக் கும்பினிச் சிப்பாய் பரிதாபமாக மீர்சாதிக்கை நோக்க, மீர்சாதிக்கும் தர்ம சங்கடமான நிலையடைந்து, மகாசுல்தான் ஹைதர் அலியின் கட்டளையை நிறைவேற்றி ஆகவேண்டுமே என்று புறப்பட்டான்.

உண்மையிலும் இந்த உற்பாதம் நிகழ்வதற்கு மூலகாரணம் என்ன என்பது குறித்துப் பெரிதாக ஆராயத் தலைப்பட்டார் திவான் பூரணய்யா. பசவராஜுக்கு மட்டும் இது திவான் மீர்சாதிக்கின் சூழ்ச்சி என்கிற ஐயமிருந்தது.

திடுமென்று ''யாகின்கான்!'' என்று ஓங்கிக் குரல்விடுத்த ஹைதர் அலி, தொடர்ந்து ''நீயும் என்னுடன் புறப்படுகிறாய்!'' என்று கம்பீரமாகக் குரல் விடுத்து, பக்கத்தில் தயாராக வந்து நின்ற இன்னொரு வெண் குதிரையின் மீது ஆரோகணித்துப் புறப்பட்டார். ஸ்ரீரங்கநாதர் கோயிலின் மணியோசை அந்தக் குரலுக்குச் சுருதி கூட்டுவது போல் ஒலித்துக் கொண்டிருக்கிறது...

யுத்த வீரர்களின் கோஷம் வான் முகட்டை முட்டி எதிரொலிக்கச் செய்கிறது...

முதல் பலியாகத் தோலுரித்துத் தொங்கவிடக் கொண்டு சென்ற சிப்பாய்க்கு அப்போதே மாரடைப்பு கண்டுவிடும் போல் இருந்தது. எந்தத் திவான் மீர்சாதிக்கின் பேச்சைக் கேட்டு இந்தக் காரியத்தில் இறங்கினோமோ அந்தத் திவானே தோலுரிக்கக் கொண்டு செல்கிறானே என்கிற வேதனையுடன் அவன் மயக்கம் கண்டு நடந்து கொண்டிருந்தான்...

ஆனால் திவான் மீர்சாதிக்?

ஹைதர் அலி, தன்னை அழைத்து ஏன் இந்தத் தண்டனையை நிறைவேற்றச் செய்ய வேண்டும்? தனது இந்த ஏற்பாட்டினை இவர் முன் கூட்டியே அறிந்து வைத்திருக்கிறாரா? அறிய நியாயமில்லையே! ஒருகால் தன்மீது இருக்கிற நம்பிக்கையின் காரணமாகவும் இவ்வாறு ஏவியிருக்கலாமல்லவா?

எது எப்படியிருந்தாலும் தண்டனையை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்கிற நினைவுடன் மனத்தை இறுகப் பற்றி கொண்டு செயலாற்றினான். அந்தப் பயங்கர - கோரச் சம்பவத்தைக் கண்ணாரக் கண்டவண்ணம் போர்ப்பயணம் எல்லையைக் கடந்து சென்றது.

இருள் கவிந்து கொண்டிருக்கிறது...

ஸ்ரீரங்கநாதர் கோயில் மணியோசை ஓய்ந்தது.

வேடிக்கை பார்க்க வந்த மக்கள் கலைந்து சென்று கொண்டிருந்தனர். முடியாட்சி காலத்துத் தண்டனைகள் ஒரு விதத்தில் நாகரிகத்தின் இழிந்துபட்ட செயல்களானாலும், அவையே



நாகரிகத்தின் அழுத்தமான மக்கள் வளர்ச்சியாகவும் இருக்கின்றன. இல்லையென்றால் மக்களின் போராட்டங்கள் அன்றாடம் ரத்தத்தில் எழுதப்படுகிற அநாவசிய சாசனங்களாய் மலிந்துவிட்டிருக்கும் என்று விவரம் தெரிந்த ஒரு சிலர் விவாதித்துக் கொண்டே நடந்தனர்.

[1]திவான் மீர்சாதிக் என்பவன் திப்புசுல்தான் வரலாற்றில் அநீதியின் சாம்ராஜ்யாதிபதியாக விளங்குகிறவன். அவனது துஷ்பிரயோகப் பிரகடனங்களால் அரும்பாடுபட்டு ஹைதர் அலி வளர்த்து வரும் மைசூர் சாம்ராஜ்யம் அழிந்து பட்டுப் போகுமோ என்று மேல்தளத்து மக்கள் பயந்தனர். நஞ்சினும் கொடிய நெஞ்சத்தனான நரிக்குணம் படைத்த மீர்சாதிக்கை, ஹைதர் அலி புரிந்து கொள்ளாமல் இருக்கிறாரே என்றும் அவர்கள் வருந்தினர். பின்னாளில் இந்த நஞ்சானது திப்புசுல்தானைத் தீண்டிவிடக்கூடாதே என்பதில் அவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கப் பிராமணோத் தமரான பெரிய திவான் பூரணய்யாவிடம் பிரகதூளையும் கொடுத்துப் பார்த்தனர். ஆனால் இதுகுறித்து அவர் மகாசுல்தான் ஹைதர் அலியிடம் பேசிக்கொள்வது கிடையாது. அதற்கான மூலகாரணம் அவருள்ளேயே முளைத்து இலை விரித்துக்கொண்டிருந்தது.

சாமா ஐயங்கார் போன்ற சிலர், திவான் மீர்சாதிக்குக்கு உதவி புரிந்தார்களேயொழியப் பகிரங்கமாக உறவு வைத்துக் கொண்டிருப்பதுபோலக் காட்டிக்கொள்ளப் பயந்தனர். சாமா ஐயங்காருக்கும் ரங்கா ஐயங்காருக்கும் எப்படியும் மைசூரின் பழைய ராஜ்ய அந்தஸ்துக்குரியவர்களான உடையார் வமிசத்தை மீண்டும் நிறுவி, அதன்மூலம் ஐயங்கார்கள் ஆட்சி தலைதூக்கவேண்டும் என்கிற அவா இருந்தது. தஞ்சை நாயக்கர்கள் காலத்தில் ஐயர்களாட்சி தலைதூக்கியதும் இவ்விதமாகத்தான்!

ஆனால், திவான் மீர்சாதிக்கோ, எப்படியாவது வெள்ளையர் களின் துணைகொண்டு, மைசூரின் நவாப்பாகி, இங்கேயும் ஓர் ஆர்க்காட்டை ஸ்தாபிக்க வேண்டுமென்கிற அநியாயக் கனவு

1. இன்றைக்கும் மைசூரிலிருக்கும் ஸ்ரீரங்கபட்டிணத்தில் இவனது சமாதி இருக்கிறது. அந்தச் சமாதியைக் காண்கிற மக்கள் முகம் சுளித்துச் செல்வது வழக்கம் என்கிறது வரலாறு.

கண்டான். அந்த யாகின்கான் மட்டும் கொஞ்சம் துணை புரிவானேயானால்...

‘ஆ! இந்தத் திட்டம் எப்போதோ நிறைவேறியிருக்கும்! ஆண்டவன் எப்படியோ இந்த[1] யாகின்கானுக்கும், ஹைதருடைய தோற்றத்தை அப்படியே உரித்துக் கொடுத்திருக்கிறான்’. அந்தப் பாவி இன்னமும் ஹைதரை நம்பி இருக்கிறானே என்று பல நாட்கள் வருந்தியிருக்கிறான் திவான் மீர்சாதிக்.

இந்தத் திட்டங்களையெல்லாம் ஹைதரும் திப்புவும் எவ்வளவு தூரத்துக்குப் புரிந்து வைத்திருக்கிறார்களோ...

திப்புசுல்தானின் உயிர் நண்பனான பசவராஜ் மட்டும் நன்றாகவே புரிந்து வைத்திருந்தான். சிலவற்றைத் தனது நண்பன் திப்புவுக்கு எடுத்துக் கூறியிருந்தான். பலவற்றை அவன் தன் மனத்தில் பூட்டிவைத்து, ரகசியமாகவே வேரோடு களையச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி கொண்டிருந்தான்.

அனைவரும் லால்மகாலுக்கு (அரண்மனைக்கு)ச் சென்று பிறகு அவரவர் தத்தம் மாளிகைக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். லால்மகால் அலங்கார விளக்குகளால் ஜோதியாகக் காட்சி தந்தது.

அரசியல் அதிகாரிகளுள் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவர்கள் பெரும்பாலானோர்க்கு, ஸ்ரீரங்கப்பட்டினத்திலேயே மாளிகைகள் இருந்தன. திவான் மீர்சாதிக் மட்டும் தொடக்ககால முதற்கொண்டே ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கப்பால் காவிரிக் கரைக்குக் கால்காத தொலைவில் தனியாக மாளிகை கொண்டிருந்தான். அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாய்ப் போய்விட்டது. இந்தத் தனிமைதான் ஒருகால் மீர்சாதிக்கைக் கெடுத்திருக்குமோ என்றும் பின்னாளில் திப்புசுல்தான் எண்ணியது உண்டு.

லால்மகாலைவிட்டு வெளியே வந்த திவான் மீர்சாதிக், தன்னுடன் வந்து கொண்டிருந்த சாமா ஐயங்காரை நோக்கி, ‘‘ஐயங்காரே! நீங்களும் எனது மாளிகை வரை வந்து திரும்பலாமே!’’ என்றான் மெதுவான குரலில்.

1. வரலாற்றுண்மை.



சாமா ஐயங்காரோ, பயத்தால் தாக்குண்டவர்போல், ‘‘மன்னிக்க வேண்டும் திவானய்யா! ஏற்கனவே பெரிய திவான் பூரணய்யா என்மீது சந்தேகக்கண்கொண்டு பார்த்து வருகிறார். இன்றைக்கு வேண்டாம். இது இன்று நாம் போட்டிருக்கும் திட்டத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நீங்கள் முயலுங்கள். தொலைவிலிருந்தே எனது ஆதரவைத் தருவேன்’’ என்றளவில் கூறிவிட்டு, அவர் தமது பல்லக்கில் ஏறிப் புறப்பட்டு விட்டார்.

‘பெரிய திவான்...!’

-மீர்சாதிக்கின் நெஞ்சு கசந்தது. தனது நாவால் உதடுகளை மீட்டிக்கொள்ளுகிறான்...

லால்மகாலின் அலங்கார விளக்குவெளிச்சம் வெகுதூரம் வரை பரவியிருந்ததால், மேலும் அங்கு நின்று செயல்பட விரும்பாத மீர்சாதிக், தன்னைச் சுற்றி நின்றுகொண்டிருந்த சிலருக்குமட்டும் கண்களின் சமிக்ஞையால் ஏதோ சங்கேதமாக ஆணைகளைப் பிறப்பித்தான். பிறகு, தொலைவில் கைகட்டி மௌனமாக நின்றிருந்த சுபேதாரான குருவய்யாவைச் சமிக்ஞையின் மூலம் அருகே அழைத்தான்.

சுபேதார் குருவய்யாவும் மிகுந்த பணிவுடன் அருகே வந்து, வலக்கரத்தின் நடுவிரல் நுனியை மூக்கின் நுனிமேல் வைத்துத் தனது பவ்யத்தைக் காட்டி நின்றான்.

‘‘குருவய்யா மீனவர்கள் வைத்திருக்கும் வலை எங்காவது கிடைக்குமா?’’ என்று ரகசியமாகக் கேட்டான் திவான் மீர்சாதிக்.

சுபேதார் குருவய்யாவும் கிடைக்கும் என்பது போலத் தலையசைத்து வைத்தான்.

‘‘பேஷ்! கொஞ்சம் பெரிதாகவும், வலுவான நூல்களால் பின்னப்பட்டதாகவும், வலையின் அடிப்பாகத்தில் முடிந்திருக்கும் இரும்புக் குண்டுகள் கனமானதாகவும் பார்த்து ஒன்றை ஏற்பாடு செய்து எடுத்துக்கொண்டு உடனடியாக என் மாளிகைக்கு வா! இப்போது ஆறு குதிரைகளுக்குத் தலைவனான சுபேதாராய்

இருக்கிறாய்! எனது திட்டம் முடியட்டும்; உன்னை கில்லேதாராக்குகிறேன்!''

சுபேதார் குருவய்யா திவானின் இந்த வாக்குறுதி கேட்டு மகிழ்ந்து போனான். மீர்சாதிக் மேலும் உத்தரவுகளை வழங்கினான்:

''குருவய்யா! நமது '[1]ஜனாம்ரா' படைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கும்பினிவீரர்கள் பதினைந்து பெயர்களை அழைத்து வா. அவர்கள் வாள்வீச்சில் வல்லவர்களாக இருக்க வேண்டும்; புரிகிறதா?''

மீர்சாதிக்கின் இந்த அதட்டலுக்கு இப்போது பலமாகவே தலையசைத்துப் புறப்பட்டான் சுபேதார் குருவய்யா.

தனக்காகத் தயாராகக் காத்திருந்த புரவியில் ஏறிக்கொண்டு புறப்பட்டான் திவான் மீர்சாதிக். அவனது வஞ்ச நெஞ்சில் பலத்த திட்டங்கள் பயணமாகிக் கொண்டிருந்தன.

## 2

**ஸ்ரீ**ரங்கநாதர் கோயிலுக்குத் தெற்கே ஓர் அடர்ந்த தோப்பினுள் இருந்த அந்தப் பாழடைந்த பதினாறு கால் மண்டபத்துப் படிக்கல் தூணில், பாவை விளக்கேந்திய சிற்பம் ஒன்று ஆளுயரத்துக்கு இருந்தது, இருபுறமும் ஒரு காலத்தில் இவ்விதமான சிற்பம் இருந்திருக்க வேண்டும். ஒன்றை எவன் உருட்டிக் கொண்டு ஓடினானோ?

உருக்குலைந்திருந்தாலும், ஒன்றாவது தனது வசதிக்கு இருக்கிறதே என்று மகிழ்ந்து கொண்டாள் ரங்கநாயகி. அவளது பேரழகுப் பெட்டகம் போன்ற சந்தனத் திருமேனியில், பொன்மலராய்ப் பூத்து மணக்கும் பூமுகம், அந்த இருட்டுகிற நேரத்திலும் பளீரென்று பிரகாசிக்கிறது...

1. கூலிப்படைக்கு ஒப்பானது.



அருமைக் காதலர் திப்புசுல்தான் எப்படியும் வருவார்; தன்னைச் சந்திக்காமல் லால்மகாலான அரண்மனைக்குப் போகமாட்டார் என்ற நம்பிக்கை, உதிராத நட்சத்திரமாக மனத்தில் மின்னிச் சிரித்தது.

இருட்டு நன்றாகவே கரும் போர்வையைத் தரித்துக் கொண்டது. புதர்கள் மண்டிக்கிடந்த அந்த அடர்ந்த தோப்பில் இயல்பான இருட்டோசைகள் ஆரம்பமாய்விட்டன.

எப்போதுமே மண்டபத்தை அடைந்ததும் முதற் காரியமாக அந்தப் பாவை விளக்கில் திரிபோட்டு எண்ணெய்விட்டு ஏற்றி விடுவாள் ரங்கநாயகி.

அரங்கநாதப் பெருமானுக்கு அந்திப் பூஜை முடிந்ததும், இங்கே திப்புசுல்தான் பெருமானுக்குக் காதல் தரிசனம் தர வேண்டும்! அவளைப் பொறுத்தவரையில் இது அன்றாட நைவேத்தியத் திருப்பணி.

வருகிறபோதே அவள், தொன்னையில் விளக்கெண்ணெய் கொண்டு வந்துவிடுவாள். அந்த எண்ணெய் தீருகிற வரைக்கும் ஒரு சில சமயங்களில் அவர்கள் அமர்ந்து உரையாடிக் கொண்டு காலம் போவதே தெரியாமல் காதல் தவமியற்றுவார்கள். சில சமயங்களில் விளக்கே அணைந்து விட்டாலும் இருட்டில் தங்கள் கண்களைப் பழக்கி, முகபாவனைகளைப் புரிந்து கொள்கிற அளவுக்குச் சிரித்துப் பேசி காலம் கடத்துவார்கள். எப்போதாவது விளக்கெண்ணெய் தீர்ந்தும், திப்பு வராமல் போவதுண்டு. அப்போதெல்லாம், ரங்கநாயகி விளையாட்டாகப் பரிகசிப்பாள்:

'திப்புசுல்தான் ஜம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடு!'

திப்புவும் அதனை ரசித்தே சிரிப்பான்.

அவர்களது காதல் அந்த மைசூர் ராஜ்யத்துக்கே பிரசித்தம். அதை அசைத்துப் பார்க்கிற சக்தி அந்த அரங்கநாதப் பெருமானுக்கே இல்லை. ஏனென்றால் அந்த அரங்கநாதப் பெருமானே இவளது தயவில்தான் அப்போதைக்கு அலைமோதிக்கொண்டிருக்கிறார்! ஆகவே அவளை ஆதரித்து வந்த அந்தப் பள்ளி கொண்டான் அசைத்துப் பார்க்கவா ஆசைப்படுவான்!

ஆனால், அசைக்க எண்ணியிருந்தார் ஒருவர். அவர்தான் ஹைதர் அலி பெருமான்! ஆயினும் இதுவரை அவரது ஜம்பமும் சாயவில்லை.

ஒருசமயம் இப்படித்தான்...

இதே மண்டபத்தில் தனது காதலன் திப்புசுல்தானுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள் ரங்கநாயகி, அப்போதும் இந்தப் பாவை விளக்கை ஏற்றி வைத்துவிட்டு அந்தச் சிலையின் பாதத்தில் குத்தங்காலிட்டு அமர்ந்து, கால்களின் முட்டி மேல் இரு கரங்களின் முட்டிகளையும் ஊன்றிப், பத்துக் கைவிரல்களைத் தாமரையாக மலர்த்தி, அவற்றின் மீது தனது தாமரையிலும் அழகுவாய்ந்த கம்பன் கவிதைநயம் போன்ற முகத்தைப் பொருத்திக் கண்களை யுருட்டி எதிர்பார்த்தாள்.

தனித்திருந்த அந்த மண்டபத்தைச் சுற்றி எதுவும் எப்போதும் நிகழ்ந்துவிடலாம். ஆனால், எதுவும் எக்கணத்திலும் எங்கும் நிகழ முடியாத அளவுக்குப் பலத்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார் தனது காதலர் திப்புசுல்தான் என்பதை அவள் பரிபூரணமாக அறிவாள். அவளைச் சுற்றி எப்போதும் காவல்களிருக்கின்றன. அது அவளுக்குத் தெரியும். ஆனால் அவனது கண்களுக்குத் தெரியாது. அவள் வீட்டில் உறங்குகிறபோதும் காவலுண்டு என்பதை அவள் மட்டுமல்லாது அந்த அக்கிரகாரமே அறியும். அவளது மானத்துக்கும் உயிருக்கும் ஆபத்து என்று தெரியவருகிறபோது சிலதலைகள் உருண்டே தீரும்.

[1]திபுதிபுவென்று நான்கு பேர்கள் ரங்கநாயகியை நாடி வந்து நிற்கின்றனர். அப்போது மாலைநேரம் பொன்வெயிலைப் பரப்பிக் கொண்டிருந்தது.

வந்தவர்கள் பழுத்த வைணவர்கள்.

ஒவ்வொருவரும் வியர்வையின் காரணமாகத் தத்தம் யக்யோபவீதத்தைப் பற்றி முதுகை வழித்துக் கொண்டார்கள். ஆ! என்ன சுகம் என்று ஒருவன் அந்தப் பூணூலை வாழ்த்திக் கொண்டான்.

1. திபுதிபு என்ற வழக்கே திப்புவின் வேகத்தைக் காட்ட எழுந்த சொற்கள் என்பது எனது கருத்து. திபு என்பது திப்புவின் மூலப்பெயர்.



மரியாதைக்காக ரங்கநாயகி எழுந்து கொண்டாள். அவர்களில் ஒருவர் அந்த அக்கிரகாரத்தில் தலைமைப் பீடம் வகிக்கும் சாஸ்திரோத்தமர். அவர்தாம் அனைவரையும் மீறிய கோபத்துடன் தோற்றம் தந்தார். நெற்றியிலும் மார்பிலும் பட்டை பட்டையாகத் திருநாமங்கள்!

''டீ, ரங்கா! உனக்கே இது தர்மமா தெரியுதாடீ? உன் அப்பன்தான் சம்மதித்துவிட்டான் என்றால், இந்த அக்ரஹாரமும் சம்மதித்து விட்டதாய் அர்த்தம்னு நெனைச்சுண்டியா?''

அவர் பொரிந்து தள்ளினார். அவரது கண்கள் சாம்பிராணியை எதிர்பார்க்கும் தூபகலசத்து நெருப்புத் துண்டுகளைப் போலக் கனன்று காட்சியளித்தன.

ரங்கநாயகி கொஞ்சமும் பதற்றம் காணாது முறுவலித்தாள். ''இந்தப் பிராதை எத்தனை நாளைக்குத்தான் விசாரிச்சுண்டிருப்பீர்கள்? ஊரறியாத ரகசியமா என்ன? என் தகப்பனாரே ஆட்சேபிக்கவில்லை! உங்களுக்கென்ன வந்துட்டது?''

''மானம் போகிறதடீ!'' என்றார் பக்கத்திலிருந்த வேங்கடரமண ஐயங்கார்.

அவள் கலகலவென்று மிகவும் அலட்சியமாகச் சிரித்தாள். ''மானம் போறதாவது? நம்ம சாமா ஐயங்கார் பெண்டாட்டி சேதி தெரியுமா?''

''அதிகப் பிரசங்கித்தனமான பேச்சு!''

''ஏன்னா அவர் ஒற்றர் படைத்தலைவர்! கமானமா மூடி மறைச்சுட்டேள்! போகட்டும்; ரங்கா ஐயங்கார் தம்பி மகள் எவனோடவோ ஓடிட்டாளாம். பிறகு சேர்த்துண்டாளாமே! எவனோடவாவது... நம் பௌஜ்தார் குலாம் அலிகானோட தம்பிகூடத் தானே...?''

''மூடு வாயை!''

''ரங்கா ஐயங்கார் அரண்மனை அதிகாரி. அதனால் வாயை மூடிண்டேள். நான் ஏழை பிராமணன் மகள். ஆனாலும் அரண்மனைச்

சுத்திகளைச் சுத்திண்டு திரியலை. இந்த நாட்டுக் குமார சுல்தானைத் தானே பகிரங்கமாகவும் பரிசுத்தமாகவும், ராஜாத்தி மாதிரி காதலிக்கிறேன்? போகட்டும், உங்கள் கொழுந்தியா செய்தி என்ன வாழுதாம்?''

''ரங்கநாயகி!''

''ஏன், கோபப்பட்டு மூடி மறைக்கிறேள்? மத்தவாளுக்கும் தெரியட்டுமே!''

''அக்கிரகாரம் மட்டுந்தான் உன்னோட கண்ணுக்குத் தெரியறதோ?''

''மத்தவாளும் நடந்துக்கறா!... ஆனா... அவாள்ளாம் ரங்கநாயகிக்குத் தொல்லை கொடுக்கறதில்லே! பட்டாச்சாரிவாள்! முகமதியரோட ஆட்சியிலே எங்கே எப்படி நார்றதோ? நம்ம ஹைதர் அலி மகாராஜாவின் ஆட்சியில் ரொம்பவும் அமைதியா வாழறோம். ஹைதர் அலி ஒரு பெருந்தன்மையானவர்! இதே மைசூர் உடையார் ஆட்சியிலே பொம்பளைங்க என்ன பாடுபட்டாங்கங்கறது உங்களுக்குத் தெரியாதில்லே! நான் திப்பு மகாராஜனைக் காதலிக்கிறேன்! அவரும் என்னை ஒரு தெய்வப்பொண்ணு மாதிரி நெனைச்சுண்டு வழிபடறாரு! ஒரு விஷயம் தெரியுமோ? நாங்க ஒருத்தரையொருத்தர் விரல் நகத்தால் கூடத் தீண்டிண்டது கிடையாது.''

''அநாச்சாரம்! யாருக்குத் தெரியும்?''

''ரொம்ப ஆசார சீலர்தான்! உங்களுக்குத் தெரிந்து எனக்கு ஆகவேண்டியது ஒண்ணுமில்லே! பட்டாச்சாரியாரே! அரங்கநாதர் கோயிலுக்காகவாவது எங்க காதலை ஆசீர்வாதம் பண்ணுங்கோ...! இந்தக் கோயில் இங்க இருக்கறதே நம்ம ஹைதர் ராஜாவுக்குத் தலைவேதனையா இருக்காம். கோட்டையைப் பெரிசா விஸ்தீரணம் பண்ணப் போறாராம். எப்பவோ இந்தக் கோயிலை இடித்திருப்பார்! நான் புண்ணியம் கட்டிண்டு வர்றேன். அந்த ஸ்ரீரங்கப் பெருமானே என்னோட கனவிலே வந்து திப்புவோட காதலை ஏத்துக்கோன்னு சொல்லிவிட்டு மறைந்தார்!''



''அரங்கநாதனா? கனவிலேயா? சொல்லுவானே இன்னிக்கு எட்டுநூத்து எண்பத்தைந்து வருஷத்துக்கு முன்னால இந்தக் கோயிலைக் கட்டி முடிக்க, திருமலை ஐயா ராஜாவோட கனவுலே வந்து சொன்ன அரங்கநாதன், இப்போ...''

''கோயில் இடிபடப் போறதேன்னு என்னோட கனவுலே வந்து சொல்லியிருக்கான், ஏன் வரக்கூடாது? நான் என்ன பாவத்தைப் பண்ணிண்டா அவன் சன்னதியிலே திருத்துளா வழங்கறேன்? இதை நீங்க மறந்துடப் படாது, என்னோட காதல்தான் இந்த ஸ்ரீரங்கநாதர் கோயிலை இதுவரைக்கும் காத்துண்டு வர்ற மூலதனம்! திப்புசுல்தானோட பிடிவாதமான உத்தரவுக்குப் பயந்தே ஹைதர்அலி மகாராஜா கோயிலை விட்டு வச்சிண்டு வர்றார்! என் உயிர் இருக்கிற வரைக்கும் அரங்கநாதனை இழக்கமாட்டேன். என் காலத்துக்கப் புறமும் இந்தக் கோயில் இப்படியே இருக்கணும் அதுக்காக நான் எந்தத் தியாகத்தையும் ஏத்துண்டு சந்தோஷப்படுவேன்!''

''காதல் வெறி நன்னாவே பேசச் செய்யறதுடீ!''

''ஆமாம்! எனக்குக் காதல் வெறிதான்! அதைப்பற்றி நான் வெட்கப்படலை. மூடி மறைக்கவும் இல்லை. அந்த வேங்கடாசலபதியே துலுக்க நாச்சியாரைக் காதலிச்சப்ப, இந்த ரங்கநாயகி திப்புசுல்தானைக் காதலிக்கப்படாதா? ஒரு காலத்துலே வேங்கடாசலபதி கோயிலுக்கும் இம்மாதிரி ஆபத்து வந்தது. அவருக்கு வேற வழி தோணலை... அவரே ஒரு துலுக்கப் பெண்ணைக் காதல் மணம் செஞ்சுண்டு சமாதானக் கொடி நாட்டியிருக்கிறார். இங்கே ஸ்ரீரங்கநாதர் படுக்கையை விட்டு எழமாட்டேங்கறாரே? இல்லாதுபோனால் நீங்கள் இப்படிக் கூட்டமாக வந்து ஒரு பெண்ணை மிரட்டிக் கொண்டிருக்க முடியுமா? நான் திப்பு சுல்தானைக் காதலிப்பதால் நம்ம ரங்கநாதப் பெருமான் ரொம்ப நிம்மதியா நித்திரை செய்கிறார்...!''

-என்று முதலில் சினந்தும் பிறகு சிரித்தும் கூறிமுடித்த ரங்கநாயகி, ஏளனமும் ஏமாப்புமாக மீண்டும் கலகலவென்று சிரித்தாள்.

பட்டாச்சாரியாருக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே...

''உன்னை அக்ரஹாரத்தை விட்டுவிரட்டறதுக்கு ஏற்பாடு பண்றேன்!''

''முடிகிற காரியமா பட்டாச்சாரிவாள்?''

''எல்லாருமே ஒண்ணு சேர்ந்துட்டா? உன்னை ஆளையே தீர்த்துக்கட்டுவோம்.''

இவ்விதம் பட்டாச்சாரியார் கூறி முடித்த மறுகணம்...

அவரது முதுகில் 'சுரீல் சுரீல்' என்று விழுந்த சவுக்கடியைத் தொடர்ந்து, நோய் பொறுக்காது ''எவண்டா சண்டாளன்!'' என்று அலறிக் கொண்டே முதுகை அஷ்டகோணலாக்கித் துடித்துத் திரும்பினார் பட்டாச்சாரியார்.

எமகிங்கரர்களைப் போலக் காட்சி தந்த வீரர்கள் இருவரை நோக்கியதும், பட்டாச்சாரியாரின் இதயம் ஒரு கணம் நின்று மறு கணம் துடிக்கத் தொடங்கியது.

கையிலிருந்த சவுக்கை மீண்டும் ஓங்கினான் ஒருவன். ஓ...வென்று பெருங்கூச்சல் எழுப்பிக் கொண்டு தப்பித்தால் போதுமென்று நால்வரும் ஓட்டம் பிடித்தனர். அவர்களது அந்த விழுந்தெழுந்து ஓடுகிற நிலையைக்கண்டு பெரிதாகச் சிரிக்கவில்லை; வருத்தத்துடன் புன்னகை புரிந்தாள் ரங்கநாயகி. ஒரு ராணி தன் பிரஜைகளிடம் அன்பும் கண்டிப்பும் ஒருங்கே காட்டுவது போலத் தன்னிடம் வம்பு வளர்த்தவர்களிடமே அவளுக்குப் பரிவும் தோன்றியது.

பாதுகாவலுக்காக ஒளிந்திருந்த அந்த வீரர்கள் ரங்கநாயகியை வணங்கி விடை பெற்றுக் கொண்டு குதிரை சகிதமாகப் பறந்து சென்று மறைந்தனர்.



# 3

அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்துப் பார்த்து ரங்கநாயகி தன்னுள் தானாக ஒரு முறை சிரித்துக் கொள்கிறாள். நேரம் சென்று கொண்டேயிருக்கிறது. எவ்வளவு நேரம்தான் இவ்வாறு மோவாய்க்கட்டையில் கையூன்றியவாறு அமர்ந்திருப்பது?

இன்னும் திப்புசுல்தானைக் காணோமே! தொலைவில் குதிரைகள் வருகிற குளம்படிச் சத்தம் கேட்கிறது. அவர் வருகிறார்! உடன் வழக்கம்போல் நண்பர் பசவராஜும் வந்து தொலைவில் நின்று காவல் காப்பார்!

வேகமாக, குதிரையின் வாயில் விலாழி தள்ள வந்து இறங்கிய திப்புசுல்தான் ஒருகணம் நின்று தனது காதலியை நோக்குகிறான். பின்னர் பொருட்செறிவு நிறைந்த புன்னகையுடன் அவளை நெருங்கி வருகிறான்...

இருபத்தேழு வயது நிரம்பிய துருக்கிய மிடுக்கு அவனது ஒவ்வோர் அங்கங்களிலும் முத்திரைகளாக முறுவலிக்கின்றது.

அடர்ந்து இருள் கவிந்த அந்தக் காட்டில், சின்னஞ் சிறிய விளக்கேற்றித் தன்னந் தனிமையில் காத்திருந்த ரங்கநாயகியிடம் திப்பு சுல்தானுக்குப் பரிதாபமே மிகுந்தது. மௌனமாக ஒரு கவிதையின் ஆழம்போல் அமைதியாக அமர்ந்து காணப்பட்ட ரங்கநாயகியின் பக்கலில் சென்றமர்ந்து, உத்தயுயத்தால் கழுத்துப் பிடரியைத் துடைத்துக் கொள்கிறான். அவர்களுடைய முகங்கள், பாவை விளக்கின் ஒளிபட்டுத் துளிரான ஒரு வித புது அழகுடன் நிழல் நர்த்தனம் புரிகின்றன.

ரங்கநாயகியை மிகவும் அன்புடன் கூர்ந்து கவனித்த திப்பு சுல்தான், ''நான் வரமாட்டேன் என்று நினைத்து விட்டாய்! இல்லையா?'' என்று கேட்கிறபோது அவனது குரலில் பலவீனம் தென்பட்டது. யுத்தப் புறப்பாட்டின்போது ஏற்பட்ட துடிப்பு நிறைந்த அலைச்சல் பலவீனம் அது.

ரங்கநாயகி, மோவாய்க் கட்டையிலிருந்த கரங்களை எடுத்துக் கொண்டே இளைய சுல்தானை நோக்கினாள்: ''எப்படியும் நீங்கள் வருவீர்கள் என்பது எனக்குத் தெரியும்.''

அவள், திப்புக்குத் தெரிந்த கனிரசக் கன்னடத்தில்தான் பேசினாள். ஆனாலும் அவள் தமிழ்மகள்.

''ஒருகால் வரமுடியாத நிலை ஏற்பட்டால்?''

திப்புசுல்தான் கேட்டான்.

அவள் சொன்னாள்: ''இரவு முழுதும் இங்கேயே காத்திருப்பேன்! திப்புசுல்தான் ஜம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடு; அவ்வளவுதானே?''

அவன் பகபகவென்று நகைத்தான்.

''இருட்டுப் பயம் உனக்குக் கிடையாதா?''

''எனது காதலரின் ஆட்சி வெளிச்சம் பற்றி எனக்குத் தெரியாதா? எனது உடலில் ஒரு கட்டெறும்பு மொய்க்கவும் சம்மதியாத வீரர்கள் எனக்குக் காவல் புரிவதை நான் அறிவேன்!''

'ஓகோ'வென்று கர்ஜனை போன்ற சிரிப்பொலி எழுப்பினான் திப்புசுல்தான். பக்கத்து மரங்களில் அமர்ந்திருந்த பறவையினங்கள் கூட ஒரு நிமிடம் எழுந்து ஆர்ப்பரித்து அடங்கி அமர்ந்தன.

இருவர்க்குமிடையே இரண்டு அடி இடைவெளிதான் இருந்தது. திப்புசுல்தான் எப்போதுமே ஒருவித அச்சத்துக்கு ஆளானவன் மாதிரி சற்றுத் தள்ளித்தான் அமர்ந்து கொள்வான்.

பெண்கள் என்றால் வெல்லக் கட்டிகள் என்று எண்ணும் திப்புசுல்தான், ரங்கநாயகி விஷயத்தில் சற்றுத் தள்ளியே நடந்து கொள்வது புரிந்து கொள்ள முடியாத வியப்பாக இருந்தது.

அழகின் திருக்கொலுவான ரங்கநாயகியை இந்த ஓராண்டு காலமாக வெறும் பார்வையளவில் ரசித்து, அவளிடம் ஒரு தெய்வீகக் காதலுக்கு இடம் கொடுத்தது போலப் பழகி நடந்து வருவது, திப்புசுல்தானின் ஒரு மாறுபட்ட குணச்சித்திரத்தை மெய்ப்பித்தது.



ஒரு சமயம் இது குறித்து ரங்கநாயகியே பகிரங்கமாகக் கேட்டுவிட்டாள்.

''நீங்கள் என்னை எதற்காகக் காதலிக்கவேண்டும்?''

திப்புசுல்தான் அமைதியாகச் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான்:

''உன் புனிதமான அழகுக்காக!''

''அழகை என்ன செய்யப் போகிறீர்கள்?''

''புனிதமான அழகை ஆராதிக்கவேண்டும். அனுபவிக்கக் கூடாது ரங்கநாயகி! நீ தமிழ் மகள்; தமிழ்ப் பிராமணக் குடும்பத்தினள். பிராமணமே தமிழ் மண்ணில் தான் மல்லிகையை விட அதிகமாக மணந்துவருகிறது. நான் மல்லிகை மணத்தை எனது அல்லாவுக்குத் தூவி மகிழ்கிறவன். கேவலம் மஞ்சத்துக்கல்ல! உன் அழகும் அப்படித்தான். அதுசரி; நீ என்னை எவ்விதமாக விரும்புகிறாய்?''

''நான் சராசரி ஒரு மனுஷியாகவே நின்று காதலித்து விரும்பி எதிர்பார்க்கிறேன். என்னால் பொய் சொல்ல முடியவில்லை. உங்களை நான் மனசார நேசிக்கிறேன்!''

திப்புசுல்தான் அளவுக்கு மீறி மகிழ்ந்து போனான். ஆ! என்னை இவள் அடைந்து ஆனந்திக்க ஆசைப்படுகிறாள் என்றால், இவள் நிஜமாகவே விரும்பிக் காதலிக்கிறாள். இவளது காதலில் அப்பழுக்கில்லை. வேஷமில்லை. சுயநலமில்லை... ஓ... இவளை எல்லோரையும் போல ஜனானாவுக்கு அழைத்துச் செல்லக் கூடாது. இவளை... இவளை...

அவனுக்கே புரியவில்லை, அவன் மகிழ்ச்சிப் பெருக்கால் திணறுகிறான்...

''ரங்கநாயகி! நான் உன்னளவுக்குப் படித்தவனல்லேன். எனது குடும்பமே படிப்பு வாசனையற்றது. எனது தந்தைக்கு **'ஹை'** என்று மட்டுமே கையெழுத்துப் போடுவதைத் தவிர வேறு எழுத்து வாசனையே கிடையாது. நான் படிப்பு வாசனையில் எனது தந்தை

நிலையிலிருந்து கொஞ்சம் உயர்ந்தவன். படிப்பையே இப்போதுதான் பெரிதாக நினைக்கிறேன். இனிமேல்தான் - அதுவும் உன்னால்தான் நானும் ஒரு நூலகமாக வேண்டும். நீ கடல் போன்ற தமிழ் இலக்கியங்களையும் பயின்றவள். தமிழ்மொழி என்ன என்பதைத் திண்டுக்கல்லில் தங்கியிருந்த போது என்னால் உணர முடிந்தது. சமுத்திரம் போன்ற சமஸ்கிருதம் என்ன என்பதைக் காஞ்சிக்குப் படையெடுத்துச் சென்றபோது கேட்டுணர்ந்து கொண்டேன். இந்த இரண்டிலுமே பாண்டித்தியம் பெற்ற உனது துணை கொண்டு இந்த சாம்ராஜ்யத்தை ஒரு கல்வி மேடையாக - கலையரங்கமாக ஆக்க விரும்புகிறேன். எனவேதான், உன்னைத் தொட இப்போதைக்கு எனது நெஞ்சு அஞ்சுகிறது. உன்னை அரண்மனைக்கு அழைத்துச் சென்று ஜனானாவில் சராசரிப் பெண்களுடன் சேர்க்க எனது இதயம் நாணுகிறது. இதே மண்டபத்தை இடித்து இங்கேயே ஒரு ரங்கமகால் கட்டி, இந்தக் கலை மாளிகையில் உன்னைக் குடியேற்றி, எதிர் காலத்தில் உன்னைத்தான் எனது ஆட்சிப் புத்தகமாக இருக்கச் செய்யவேண்டும் என்று கனவு கண்டு வருகிறேன். அந்தச் சமயத்தில் எனது நெஞ்சு விரும்பினால் உன்னைத் தொடுவேன்.''

''விரும்பாவிட்டால்?... மனிதர்களுக்கான இயற்கையான உணர்வுகள் செத்து நான் மடிய வேண்டியதுதானா?''

''ரங்கநாயகி! நானாக உன்னைத் தொடமாட்டேன். ஏதோ அப்படி ஓர் எண்ணம் முகிழ்ந்துவிட்டது. நீயாக என்னைத் தொட்டு உன்னால் மனைவி ஸ்தானத்தில் நிறுத்திக் கொள்ள முனைந்தால், நான் தடையாகவும் இருக்க மாட்டேன். ஒரு நிபந்தனை. எனது தந்தையார் போர்ப் பயணம் முடித்துத் திரும்பியதும் நான் நமது திருமணம் பற்றி விவாதிப்பேன். முடிவு சாதகமாகவே இருக்கும். பயப்படக் காரணமே இல்லை. திருமணம் முடிந்ததும் இந்த மண்டபம் மாளிகையாகும். இந்த ரங்கநாயகியும் மனைவியாவாள்!''

திப்புவின் உயர்வான இந்த நோக்கத்தை - இலட்சியத்தைக் கண்டு அவனை இவள் ஒரு தெய்வீக உணர்வோடு வழிபட்டுக் கரம் கூப்பினாள்.



இப்போதும் அந்த நிகழ்ச்சியைச் சில நிமிடங்கள் வரை அசை போட்டுப் பார்த்துக்கொண்ட ரங்கநாயகி, மெல்லத் தலையசைத்துக் கொண்டவளாய் ஏதோ ஒரு முடிவை ஜீரணித்துக் கொண்டிருந்தாள். பிறகு தன்னுள் ரகசியமாகச் சிரித்துக் கொண்டாள். தனது கயல் விழிகளை உயர்த்தித் திப்புசுல்தானை நோக்கினாள். திப்புசுல்தானின், பொன்னிறத்தில் கருநீலம் பாய்ந்த தோற்றம் அவளுக்கு ரசனையைத் தந்தது. அவளது இமைகள் படபடத்தன. நெற்றியில் ஒற்றைக் கோடாய்ச் சிவந்து துலங்கிய திருமண், அவளது சிவந்த மேனிக்கு மேலும் அழகைச் சேர்த்தது.

திப்புசுல்தான் அண்ணாந்து கவனிக்கிறான்...

''இப்படியே தினமும் உட்கார்ந்தால்...? கொஞ்சம் நெருங்கி வந்து உட்கார்ந்து பழகவேண்டியதுதானே?'' என்று அவள் குசும்புத்தனமாகக் கூறுகிறபோது, சொற்கள் உதடுகளிலிருந்து மட்டும் ஒட்டிக்கொண்டு உதிர்வன போலத் தெரிந்தன.

ரங்கநாயகியின் இந்தப் புதிய பேச்சுத் தோரணையைக் கேட்டுத் தலையைச் சற்றே ஒருக்களித்துக் கூர்ந்து கவனித்தான் திப்புசுல்தான். இன்றைக்கு அவளது போக்கே ஒரு தனியான மெய்ப்பாட்டை நிரூபிப்பது மாதிரி தெரிந்தது.

அடுத்து, கொஞ்சமும் தாமதிக்க விரும்பாத ரங்கநாயகி அவனது வீரக் கரத்தைத் துணிந்து பற்றி இழுத்துக் கலகலவென்று சிரித்துக்கொண்டே அணைக்க முயலுகிறபோது...

ஆ! திப்புசுல்தானின் அரிமா போன்ற வீரம் எங்கே? இந்த மென்மையான அரிவையின் இழுப்பில் குடை சாய்ந்து போனனே! இலக்கணத்தில் மெல்லினத்தோடு வல்லினம் சேருகிறபோது அதுவும் மெல்லினமாகிவிடுகிறது என்கிற விந்தைபோல, இந்தப் புஷ்பத்தின் அசைப்பில் புயல் அடங்கி விட்டதோ!

ரங்கநாயகியின் எதிர்பாராத அந்த அணைப்புப் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்ட திப்புசுல்தான், ஒன்றுமே புரியாது விழியாய் விழித்தான்.

ஏறத்தாழ [1]நூற்றுக்கு மேற்பட்ட அழகுப் பதுமைகளை அந்தப்புரமான ஜனானாவில் நிற்க வைத்து அழகு பார்த்து ஆனந்த மனோலயத்தில் துய்த்து அனுபவ ரீதியான சொர்க்கத்தைக் காணும் அல்லது சிருஷ்டிக்கும் சர்வ வல்லமை பொருந்திய திப்பு சுல்தானா ஒரு சாதாரண ரங்கநாயகி தொட்டதற்கு இவ்வாறு அரண்டு மருண்டு போய்விட்டான்?

ரங்கநாயகி, நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற இனிய சுவையுடன் கூடிய தமிழ் நகை புரிகிறாள்! அவளது அந்தக் கலகலத்த இனிய சிரிப்பைக் கேட்டு, எங்கோ குயில்கள் தங்களுக்கு மட்டும் ஆண்டவன் இனிய குரல்களைப் படைத்துவிட்டான் என்கிற மாதிரியான கர்வத்தில் மறு குரல்கள் விடுகின்றன. தொடர்ந்து மேலும் மேலும் தனது சங்கீதக் குரலில் பற்களை வரிசை பிறழாமல் காட்டித் தலையை அசைத்து அசைத்துச் சிரிக்கிறாள் ரங்கநாயகி, அவளது அந்தப் பைத்தியக்காரத்தனமான சிரிப்பைக் கண்டு, திப்புசுல்தானுக்கு நிஜமாகவே பைத்தியம் பிடித்துவிடும் போல இருந்தது. தனது கரத்தைக் காரணமில்லாமல் ஒரு மாபெரும் பாவத்தைச் செய்துவிட்டது போல எரிச்சலுடன் நோக்குகிறான். வெறுப்பார்ந்த முகச்சுழிப்பு ரேகையிடுகிறது.

அவனது அந்த மாற்றத்தைக் கண்ட ரங்கநாயகி, ‘‘இப்படிப் பயப்படுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. எனது காதலர், கன்னியர்க் கூட்டம் என்றால், கரும்புத் தோட்டம் என்று யானையவதாரம் எடுப்பாராம்! நான் கேள்விப்பட்டிருக்கிறேன்! இப்படியா பயந்து போவீர்கள்?’’ என்று மேலும் அவள் சிரிப்பை உதிர்க்கிறபோது இன்னமும் மௌனமாகவே விதிர்த்துக் காணப்படுகிறான் திப்புசுல்தான்.

அந்தக் கும்மிருட்டில், பயங்கரமான இரவு வேளையில் இவ்விதமான சிரிப்பு நர்த்தனம் அந்தச் சூழ்நிலைக்கு ஒருவித புதிய சோபையைத் தந்துகொண்டிருப்பதைத் தொலைவில் காவலுக்காக மறைந்திருந்த வீரர்கள்கூட மிகவும் கலகலப்பாக ரசித்தார்கள்.

1. திப்புசுல்தான் கடைசிக் காலத்தில் ஐந்நூறு பெண்களுடன் வாழ்ந்தான் என்பது வரலாறு.





வெகு தூரத்தில் ஆவுடையார் மரத்தடியில் அமர்ந்திருந்த நண்பன் பசவராஜுக்கும் மட்டும் அந்தச் சிரிப்பின் தொடர்ச்சியான போக்குப் புரியவில்லை. என்ன ஏற்பட்டிருக்கும்? இந்த இடத்தில் இம்மாதிரியான சிரிப்பொலியைக் கேட்டதில்லையே!

அவனுக்குத் தனது அன்புக் காதலி மஞ்சுளா தேவியின்பால் நினைவுகள் படர்ந்து கொண்டிருந்தன. மஞ்சுவும் கூட இப்படிதான் காரணமில்லாமல் சிரிப்பாள். அவளையும் பார்த்தே ஒரு வாரத்துக்கு மேலாய் விட்டது!

நெட்ட நெடிய பெருமூச்சுடன் அப்போதைய சூழ்நிலை அவன் அந்தக் காதல் நினைவைக் கலைத்துக் கொள்ள முயலுகிறான்...

திடுமென்று சிரிப்பொலி அடங்கி எங்கும் அமைதி நிலவுகிறது...

திப்புசுல்தானும் ரங்கநாயகியும் ஒருவரையொருவர் பல விநாடிகள் வரை உற்று நோக்கிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் கண்களுக்குள் எதனைத் தேடுகிறார்களோ? கவனங்களில் என்ன விதமான அலைகளை மோதவிட்டுக் கொண்டிருக்கிறார்களோ? ஒரு முகத்துக்கு இன்னொரு முகம் மாறுபட்டும் மன்னிக்கப்பட்டுமாக விகசிக்கின்றன.

திப்புசுல்தானுடைய மாறுபட்ட பார்வையைப் பொறுக்க மாட்டாது அல்லது புரிந்துகொள்ள முடியாது ரங்கநாயகி மருண்டு போனாள். அதுவரை அவள் சிரித்த சிரிப்புக்களெல்லாம் ஒன்றுதிரண்டு பயங்கரமான பீரங்கியொன்று வெடிப்பது போல் உணருகிறாள். இவ்வாறு அதிகப் பிரசங்கிதனமாக நடந்திருக்கக் கூடாது என்று அவளுள் எண்ணி அலமறுகிறாள். தனது சபதத்தை மீற வைத்துவிட்டாளே என்கிற கோபம் திடுமென்று வெடிக்குமோ என்று அஞ்சுகிறாள்! திப்புவுக்குக் கோபம் வந்தால் திரிபுரமும் எரியுண்டது போலத்தான் என்பது அவள் அறிந்த திருஷ்டாந்திரம்! எனவே, அவள் அணிலைவிடக் கோழையாக நடுங்கிப் போனாள். எதிரே இருப்பது சிங்கம்! கர்ஜிக்கவே தேவையில்லை. ஒரு பெருமூச்சுவிட்டாலே அணில் ஐம்பதடித் தொலைவில் போய் விழுமே!

''நான் வேண்டுமென்றே இவ்வாறு செய்யவில்லை. ஒரு விஷயத்தை ஊர்ஜிதப் படுத்திக் கொள்ளவே எண்ணித் துணிந்த செய்கை இது! என்னை மன்னித்து விடுங்கள்!''

ரங்கநாயகியின் நயனங்களில் முத்துக்கள் சரங்கோக்கின்றன. தொண்டை கம்மி யடைபடுகிறது. திப்புசுல்தான் அவளை இன்னமும் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருக்கிறான். அவனது இமைகள் அசைகின்றனவா இல்லையா என்பதுகூடத் தெரியவில்லை.

இன்னமும் தாமதிக்கக் கூடாது என்றெண்ணிய ரங்கநாயகி, எழுந்து சாஷ்டாங்கமாக அவனது முன்னிலையில் விழுந்து நமஸ்கரித்து அழத் தொடங்கி விட்டாள்.

அப்போதுதான் தனது நிலையுணர்ந்த திப்புசுல்தான், பதற்றம் கண்டு ''ரங்கநாயகி! சீ, சீ, எழுந்திரு!'' என்று கூறுகிறபோது தொனித்த அவனது குரலிலிருந்துதான், அவன் கோபவயப்படாது தாப வயப்பட்டுத் தவித்தான் என்பது தெரியவந்தது.

ரங்கநாயகி எழுந்து நின்று கரம் கூப்பிச் சொன்னாள் ''நீங்கள் என்னிடம் வைத்திருக்கிற தெய்வீகமான போக்கு, லட்சியமான நிலைமை உண்மைதானா என்கிற சந்தேகம் நேற்று இரவு முதற்கொண்டே இருந்து வருகிறது, இப்படியான சந்தேகம் ஏற்படக் கூடாதுதான். அது வேதனை நிறைந்த சோதனையான விஷயம்தான் எனக்குப் புரிகிறது. ஆனாலும் சோதித்துப் பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை. தீர்க்கமாக யோசித்து அந்த யோசனைக்கு ஒரு தீர்வு கண்டு இந்தப் பரீட்சையைத் துணிந்து நடத்தினேன்.''

அவள் சற்றே பேச்சை நிறுத்தி அவனைக் கூர்ந்து கவனிக்கிறாள். கண்களில் நீர் மங்கலாகத் தெரிந்தது. கண்ணீர்த்திரை அசைகிறபோது அவனும் அசைவதுபோலத் தெரிகிறான்.

திப்புசுல்தான் அடித்தொண்டையில் கனத்த குரலுடன் கேட்கிறான். ''என்ன முடிவு?''

ரங்கநாயகியின் நீர்த்திரை விலகி முத்தாக உருண்டு சிதறுகிறது.

''நான் தோற்று விட்டேன்.''



சுல்தான் முகத்தில் ஒரு சுகமான மாறுதல். அவனது நெருப்பனைய கண்கள் 'எப்படித் தோற்றாய்?' என்பனபோல் உருளுகின்றன.

''நிஜமாகவே நீங்கள் என்னை உங்கள் இதயாசனத்தில் அமர்த்திக் கௌரவிக்கிறீர்கள் என்றால், நான் தொட்ட மாத்திரத்தில் துடித்து வருந்துவீர்கள்! இதனை நான் சாட்சி பூர்வமாக - சத்தியமாக இப்போது உணர்ந்து கொண்டேன்.''

''இல்லையென்றால்?''

''மன்மத சாகிபான நீங்கள் அவ்வாறு இல்லையென்றால் எனது ஸ்பரிசம் பட்ட அடுத்த கணமே, இந்த மண்டபத்தில் என்னைப் பூவாக்கிக் கசக்கியோ அல்லது கசக்காமலோ நிச்சயம் முகர்ந்து இருப்பீர்கள்! அப்படியே முகர்வதானாலும் இந்தப்பூ உதிராது; வாடாது; சிணுங்கக்கூடச் செய்யாது. ஏனென்றால், இந்தப் புஷ்பம், ஸ்ரீரங்கத்துத் திப்பு நாதருக்கு அர்ச்சனை செய்யப்பட்டு விட்டது!''

ரங்கநாயகியின் இந்த நயம் பொருந்திய சொற்கள், நிஜமாகவே திப்புவை மிகவும் கவர்ந்துவிட்டன. 'எனது ரங்கநாயகி, ஒரு காவியச் சுவடி!' என்று தன்னுள் போற்றிப் பாராட்டிப் பூரிப்பு கண்டான். இப்போது முன்பிருந்த தெய்வீக நிலையிலிருந்து ஒருமாற்றம் அவனது நெஞ்சில் முல்லைக் கொடியாய்ப் படருகிறது. அப்படியே சேர்த்து அணைத்துத் தனது அன்பைக் களங்கமற்ற நெஞ்சத்துடன் தெரிவித்து விடலாமா என்று ஒருகணம் நினைத்துப் பார்க்கிறான்...

முன்பு தந்த வாக்குமூலத்துக்கு இது முரணானது என்று அஞ்சி வாளாயிருந்து விட்டான். இப்போதும் அவளாகத்தானே தன்னைத் தொட்டாள். இனி எப்போதும் அவளாகத் தன்னைத் தொடலாம்! இந்தக் கருத்தை மனம் திறந்து கூறலாம் போல் இருந்தது அவனுக்கு! அப்படிக் கூறுவதே தனது கொள்கைக்கு ஓர் இழுக்காக அவன் எண்ணுகிறான்...

''நேரமாகிறது ரங்கநாயகி! புறப்படு!'' என்று கூறிய திப்புசுல்தான் எழுந்து கொண்டான். அவன் முன்னேசெல்ல,

ரங்கநாயகியும் பின் தொடர்ந்தாள். அவளது கால் தண்டைகள் கலீரிட்டன. கைவளைகள் குலுங்கி நகைத்தன.

வழக்கம் போல, மறைந்து காவலிருக்கும் நண்பன் பசவராஜ், ரங்கநாயகியோடு அக்ரகாரம் வரை சென்று விட்டுத் திரும்புவான் என்ற நம்பிக்கையுடன் தனது புரவியின் மீது ஆரோகணித்து ஒரு முறை ரங்கநாயகியை நோக்கி முறுவலித்துக் கால்களைக் குதிரையின் வயிற்றில் தட்டினான். அந்த அரபுநாட்டுக் குதிரை அடுத்த கணம் நாலுகால் பாய்ச்சலில் அரண்மனையை நோக்கிப் பறந்தது.

சற்றைக்கெல்லாம் மறைவிலிருந்து வெளிப்பட்ட பசவராஜ், ரங்கநாயகியை நாடிவந்து மிக்க மரியாதையுடன் அழைத்துச் சென்றான். வீரர்கள் இருவரும் தொலைவிலிருந்தே பின் தொடர்ந்தனர்.

## 4

**த**னிமையில் அவர்கள் எப்போதும் எது குறித்தும் இது வரையிலும் பேசிக்கொண்டதில்லை. நட்பென்றால் இதுவன்றோ சத்தியமான நட்பு என்று மட்டும் உள்ளுக்குள் எண்ணிப் பலமுறை ரங்கநாயகி பாராட்டிக் கொண்டதுண்டு.

நடந்து வருகையில் ஓரிடத்தை நெருங்கியதும், மரத்தின் மீதிருந்து பொத்தென்று ஏதோ விழ பசவராஜ் திரும்பிப் பார்த்தான். பெரிது பெரிதான மாங்கனிகள் நிறைந்த கொத்து என்பது இரண்டொரு மாங்கனிகள் சிதறியோடியதிலிருந்து தெரிய வந்தது.

ரங்கநாயகி ஆசையோடு அவற்றைக் கவனிக்கிறாள். அவளது அந்த கவனிப்பைக் கண்ட பசவராஜ் எடுக்கச் சென்றான். அவன் அவ்விதம் எடுத்து வந்து கொடுப்பதை விரும்பாத ரங்கநாயகி, ''பொறுங்கள்'' என்று மெல்லக்கூறி விட்டு அவனை முந்திக் கொண்டு ஓடினாள். அப்போது-

மரத்தின் மீதிருந்து கறுத்த கனமான ஒன்று, தொப்பென்று விரிந்து விழுந்தது. அது வேறொன்றுமில்லை, மீனவர்வலை, அந்த



வலைவிரிப்பில் அகப்பட வேண்டியவன் பசவராஜ். ஆனால் அசந்தர்ப்பவசமாக ரங்கநாயகி அகப்பட்டுக் கொண்டு பயந்து பெரிதாக அலறிவிட்டாள்.

அந்த வேகமான வீச்சில் அகப்பட்டுக் கொண்ட ரங்கநாயகி இளஞ்சிவப்பாய் அழகு தரும் சங்கரா மீனைப்போலத் துடிக்கிறாள்...

மீன் சத்தமிடாது; ஆனால் இந்த மீன் விழியாள் உயிர்ப் போராட்டம் கண்டு பெருத்த ஓலத்துடன் கதறுகிறாள்... துடிக்கிறாள்...

இருள் கவிந்து குரூரமான ஓர் அமைதி நர்த்தனமிடும் அந்தப் பயங்கரக் காட்டில் அவளது கதறல் தனித்துப் பரிதாபமாக எதிரொலிக்கிறது.

நீண்டு அடர்ந்த மரத்தின் மேலிருந்து தொங்கிய அந்தக் கனத்த கயிறு இழுக்கப்பட்டு விட்டதால் அகன்று விரிந்த வலையின் அடிப்பாகம், மடல் விரித்த தாழம்பூ மீண்டும் கூம்புவது போலச் சுருங்கி, அதன் நடுவே சிறைப்பட்டு மூட்டையாகி முடங்கி, மேலும் மேலும் கூச்சலிடுகிற ரங்கநாயகியின் நிலை வேதனைக்குரியதாக இருந்தது. வலையின் அடிப்பாகத்தில் சுருக்கை அந்த அளவுக்குத் தயார் செய்திருந்தனர். அது சாதுவான மீனைப் பிடிக்கும் வலையானாலும் அசாதுவான பசவராஜ் என்கிற சிறுத்தையைப் பிடிக்கத் தயார் செய்ததாகும். ஆனால் மீண்டும் ஒரு மீனே அதில் அகப்பட்டுக் கொள்ளும் என்பது எதிரிகள் கொஞ்சமும் எதிர்பாராத ஏமாற்றம்! நினைத்துப் பாராத விதமாக ஏற்பட்டு விட்ட இந்தக் கசப்பு நிறைந்த துணிச்சலான நிகழ்ச்சியின் மூல காரணத்தை அறிய மரத்தை அண்ணாந்து பார்த்த பசவராஜ், மிகவும் வெறி கொண்ட வேகத்துடன் கயிற்றைத் துண்டிக்க வாளை உருவ முனைந்தான். அப்போது-

நீண்டவாள் முனையொன்று அவனது முதுகின் இடப்பாகத்தைத் தொட்டது. தனது வீரவாளைப் பாதிவரை உறையிலிருந்து உருவி விட்ட பசவராஜ், கொதிப்பேறிய ரத்தோட்டத்துடன் வேகச் சுழிப்பு கண்டு திரும்பிப் பார்க்கிறான். அவனது கண்கள் அக்கினி ஜுவாலையாகத் தெரிகின்றன.

''நகராதே! நகர்ந்தால் வாள் முனை இதயத்துள் நகர்ந்து விடும்!'' என்று ஆங்கிலத்தில் மருட்டிக் கொண்டே ஒரு வெள்ளைக் கும்பினிச் சிப்பாய் நின்று கொண்டிருந்தான். இதற்குள் சுற்றியிருந்த மரங்களிலிருந்து சில கும்பினிச் சிப்பாய்கள் உருவிய வாளுடன் தொப்பென்று குதித்தனர். பக்கவாட்டிலிருந்து சில சிப்பாய்கள் வாளேந்தியவாறு அருகில் வியூகம் வகுத்தாற்போல மெல்ல நெருங்கி வந்தனர். இந்தப் பயங்கரக் காட்சியை வலையின் நூற்கண்கள் வழியே கவனித்த ரங்கநாயகியின் கண்கள் அலமருகின்றன. கனியொத்த வாயோ அலறுகிறது...

அந்தக் கும்மிருட்டைப் பிளந்து கொண்டு பல கண்கள் அவளை நோக்குகின்றன.

இந்த வலையில் பாவம், இவளா அகப்பட வேண்டும்? இலக்கு தவறி விட்டதே என்று அந்தச் சிப்பாய்கள் நினைத்து கொண்டிருந்த நேரத்தில் எங்கிருந்தோ 'விர்'ரென்று அம்பு போலப் பாய்ந்து வந்த குத்து வாளொன்று, பசவராஜின் முதுகுக்கு நேரே வாளை நீட்டிப் பிடித்திருந்த அந்த வெள்ளைச் சிப்பாயின் முதுகில் ஆழமாகப் பாய, அவன் அலறித் துடித்துக் கீழே சாய்ந்தான். இந்தக் கணநேரச் சந்தர்ப்பத்தை மிகுந்த திறமையுடன் பயன்படுத்திக்கொண்ட பசவராஜ், தனது உடைவாளை உருவுவதன் மூலம் எதிரிகளுக்கு எச்சரிக்கை செய்ய நேர்ந்துவிடுமோ என்று உணர்ந்து, குத்து வாள் பட்டுக் கீழே சாய்ந்து கொண்டிருந்தவனுடைய நீண்ட வாளை அக்கணநேரத்தில் பறித்துக் கொண்டு இடப்புறம் வலப்புறமாக விசுக், விசுக்கென்று இரண்டு முறை வீசினான்.

அடுத்த கணம், அருகே இருந்த வெள்ளைச் சிப்பாய்கள் சற்றே மருண்டு பின் வாங்கினர்.

பசவராஜ் வாளையுருவி விட்டால்... அவன் ஒரு வீரப் புயல்! யுத்தகளத்தின் எரிமலை வெடிப்பு! இது அன்றைய வெறி கொண்ட எல்லா விதேசிகளுக்கும் நன்கு பிரசித்தம்! ஏன்? லண்டனிலும் பாரீஸிலும் பசவராஜின் வாள் பயிற்சி பற்றித் திடுக்கிடும் செய்திகள் நன்றாகவே பரவியிருந்தன.



ரங்கநாயகிக்காகக் காவலிருந்த இரு இஸ்லாமிய வீரர்கள் கொஞ்சமும் தயங்காமல் இதுவே நேரமென்று பாய்ந்தனர். சாமர்த்தியமாகவும் சாதுரியமாகவும் குத்துவாளை வீசியவனும் அவர்களுள் ஒருவன்தான்.

அந்த இருவரின் உதவியைக் கண்டதும் ''யாரும் இடையில் புகுந்து பலியாக வேண்டாம்!'' என்று பசவராஜ் உருது மொழியில் கத்துகிறான். அவனது அந்தக் கத்தலைக் கேட்டு, அதுவரை கதறிக் கொண்டிருந்த ரங்கநாயகியும் கூடச் சில விநாடிகள் அதிர்ச்சியால் அமைதி கண்டாள். வாளையுருவிக் கொண்டு பாய்ந்து வந்த இஸ்லாமிய வீரர்களும் ஒரு விநாடி மலைத்துக் குதிரைகளின் கடிவாளங்களை இறுகப் பற்றி நிறுத்தினர். குதிரைகளும் ஒருமுறை கனைத்து நின்றன.

பல வாள்களுக்கிடையே ஒரு மந்திரவாள் வீரமுழக்கமிடத் தொடங்கிவிட்டது.

திகைத்து நின்ற இஸ்லாமிய வீரர்கள் தங்களுக்குள் ஏதோ பேசி முடிவெடுக்கிறார்கள். ஒருவன் மிகுந்த வேகத்துடன் குதிரையை விரட்டிக் கொண்டு அந்த இருட்டைக் கிழித்துப் பறந்தோடுகிறான். மற்றவன் உருவிய வாளின் துணைகொண்டு ரங்கநாயகியை மீட்க, அவள் அகப்பட்டுக் கொண்ட வலையைக் கீறி அறுக்கிறான். பீதியால் நடுங்கிப் போன ரங்கநாயகியின் தலை மயக்கத்தால் சுற்றிக் கொண்டிருந்தது. ஒரு பசவராஜால் இத்தனை வெள்ளைக் கும்பினியரை விரட்டித் தன்னை மீட்க முடியுமா என்று சந்தேகப்படுகிறாள்! பசவராஜைப் பற்றி அவள் கேள்விப் பட்டிருந்தாலும், திப்புசுல்தானிடம் அவளுக்கு அசாத்திய நம்பிக்கை இருந்தது இயல்பானதே! இத்தருணத்தில் திப்பு வரமாட்டானா என்று ஏங்குகிறாள்.

ரங்கநாயகியை விடுவித்த அந்த இஸ்லாமிய வீரன், வழித்துணைக்காக வைத்திருந்த இரு தீப்பந்தங்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு அந்தப் பாழடைந்த மண்டபம் நாடி விரைகிறான். அங்கிருந்த பாவை விளக்கில் தீப்பந்தத்தைப் பற்ற வைத்துக்கொண்டு

திரும்புகிறான். அவ்வாறான அவனது உதவி அப்போதைக்குப் போற்றத் தக்கதாக இருக்கிறது.

தீப்பந்த வெளிச்சத்தால் அந்தக் குட்டிப் போர்க்களம் செக்கச் செவேலென்று ரத்தம் கலந்த வண்ணத்துடன் பயங்கரமாகத் தெரிகிறது. நீண்ட நெடிய நிழலுருவங்கள் ஒன்றின்மேல் ஒன்றாக மோதிக் கட்டம் கட்டமாகக் காட்சியளித்து, அந்தக் கறுப்புக் கட்டங்களுக்குள்ளே மனித உருவங்கள் ரத்தப் பகடைகளாய் உருட்டப்படுகிற யுத்தச் சூதாட்டம் போலத் தெரிகிறது! ரங்கநாயகியின் ஒரு கண்ணுக்கு அது நாகரிகமாகவும் மறு கண்ணுக்கு அநாகரிகமாகவும் புலப்படுகிறது.

அதுவரையிலும் ஒரே வாளுடன் போராடிய பசவராஜ், அது போதாதென்று உணர்ந்தபிறகு, தனது இடையிலிருந்த உடைவாளை இடக் கரத்தால் உருவிக்கொண்டு இரட்டைவாள் போர் முறையைக் கையாளத் தொடங்கிவிட்டான். யுத்த களத்தில் அபிமன்யு வாளை ஏந்திச் சுழற்றிய வீர முழக்கக் காட்சிபோல அது புலனாகிறது. அபிமன்யுக்கு 'ஃபென்ஸிங்' போர் முறை தெரியாது. அது பிரெஞ்சுக் காரர்களுடையது. பிரெஞ்சுக்காரர்களிடையே பயின்ற பசவராஜை அந்தப் போர் முறை மிகுந்த வல்லவனாக்கியிருந்தது. அவனது பிடிகளிலிருந்த இரண்டுவாள்களும் புயல்வேகத்தில் சுழல்கின்றன. அந்தச் சுழற்சியின் வலிமை தாங்காத சிலர் குத்துப்பட்டும், வெட்டுப்பட்டும் அலறிச் சாய்கின்றனர். ஒருவனைப் பிடிக்க இருபத்தைந்து பெயர்களா?

தொலைவில் குதிரைகள் வருகிற குளம்படிச் சத்தம் கேட்கிறது...

சற்றைக்கெல்லாம் இருபது வீரர்களுடன் மூர்க்கமான கொடிய வீராவேசம் நிறைந்த தோற்றத்துடன் மாவீரன் திப்புசுல்தான் அந்த இடத்தை நெருங்கியதும், நண்பனுடைய நிலையுணர்ந்து, தனது வருகையை அறிவிப்பது போல, ''பசவராஜ்!'' என்ற பெருத்த குரல் விடுத்து, தனது குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து வலுக்கொண்ட மட்டும் இழுத்து நிறுத்துகிறான். அந்தக் குதிரை ஒரு துள்ளலுடன் முன்னங் கால்களைத் தனது உயரத்துக்கும் மேலே தூக்கிக் கனைத்துப் பிடரியைச் சிலிர்த்து, 'இதோ எனது தலைவன் திப்பு வந்துவிட்டான்' என்று அகங்காரமான ஓர் எச்சரிக்கையே போன்று மற்றவர்களை அச்சுறுத்துகிறது. அதனைத் தொடர்ந்து ஏனைய குதிரைகளும் வாயில் விலாழி தள்ளக் கனைக்கின்றன. அவர்களை அழைத்து வருவதற்காகச் சென்ற அந்த நன்றியுள்ள இசுலாமியவீரன், பெருமிதப்புடன் கையில் தீப்பந்தத்துடன் நின்றுகொண்டிருந்த தனது தோழனை நோக்குகிறான்...



ஆ! திப்பு வந்துவிட்டான்...

வியூகமாக வளைத்துக் கொண்ட இசுலாமிய வீரர்களையும் திப்புசுல்தானையும் கண்டதும் ஆங்கிலக் கும்பினிச் சிப்பாய்களுக்கு அஸ்தியில் அதிர்ச்சி கண்டது. திப்புசுல்தான் வாளையுருவிக்கொண்டு சிங்கம் போலப் பாய்கிறான்...

அவனது முகத்தில் சீற்றம் கர்ஜிக்கிறது!

தனது காதலியின் நினைவுகூட இல்லாது நட்பின் பிணைப்பு அந்தச் சீற்றத்தில் பளிச்சிடுகிறது! கண்கள் நெருப்புத் துண்டங்களாக ஜொலிக்கின்றன!

நண்பன் திப்புவின் ஆவேசப் பிரவேசத்தைக் கண்ட பசவராஜ், ''குமார சுல்தான்! நீங்கள் யாரும் நெருங்க வேண்டாம்!'' என்று வாளோசைகளுக்கும் மீறிக் கூச்சலிடுகிறான். அவ்வாறு அவர்கள் துணைக்கு வருவதைப் பசவராஜ் விரும்பவில்லை. இந்தப் போர் அவனுக்குச் சுண்டைக்காய்களை வைத்துக்கொண்டு கோலி விளையாடுவது போன்று அலட்சியமாகத் தெரிகிறது...

திப்புவோ அந்தக் குரல் கேட்டுப் பெரிதாக அயர்ந்து போனான்.

என்ன இது? இந்த நேரத்தில் இப்படியா தனது திறமைக்குச் சவால் விடவேண்டும்? 'பசவராஜுக்கு ஏனிந்த மரணப் போராட்டம்' என்று ஏனைய வீரர்கள் அலுத்துக் கொண்டனர்.

திப்புசுல்தானோ தனது நண்பனுடைய மெச்சத் தகுந்த புல்லரிக்கத்தக்க மாவீரத்தை உணர்ந்தவனாதலால் உருவிய வாளை உறையிலிட்டு வேடிக்கை பார்த்தான்.

கீழே நான்கைந்து கும்பினிச் சிப்பாய்கள் குற்றுயிரும் குலையுயிருமாக வீழ்ந்து ரத்தக் குளியலில் மிதந்து துடித்துக் கொண்டிருந்தார்கள்.

'சோ' வென்று பெருத்த காற்றுடன் விளங்கிய அந்த வனாந்திரமே வாள்களின் கணகணத்த பெருத்த ஒலிகளால் அதிர்ந்து, அமைதியிழந்து காணப்பட்டது. மரங்களில் ஓய்வும் உறக்கமுமாக இருந்த பறவைகள் கூச்சலிட்டு வானில் பறப்பதும் மரங்களில் அமர்வதுமாகக் காணப்படுகின்றன. அந்த இரவின் அமைதியை ரசிக்கப் புறப்பட்ட அரவங்கள் கூட பீதிகண்டு புற்றுகளைத் தேடிப் புகுந்தன. எங்கோ இரண்டொரு நரிகள் அவலமாக ஊளையிடுகின்றன. அவற்றுக்கு இன்னும் சற்று நேரத்தில் நல்ல வேட்டை காத்துக் கொண்டிருக்கிறதே!

பசவராஜின் சூறாவளியைப் போன்ற வாள் சுழற்சி, பலரை மெய்விதிர்க்கச் செய்தது. அவனது கரங்களில் வாள்கள் இருக்கின்றனவா என்பதுகூடப் புலனாகவில்லை. அவ்வளவுக்கு அவை வேகமாகச் சுழன்று கொண்டிருந்தன. அவனது உடலில் சில சிராய்ப்புக்கள் ஏற்பட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

நண்பனின் இந்த நிலை கண்டு[1] திப்புசுல்தானின் தோள்கள் துடிக்கின்றன. இடை புகுந்து அத்தனை பெயர்களையும் துவம்சம் செய்து சம்கரிக்க அதிக நேரம் பிடிக்காது. ஆயினும் வாள் வீரனான பசவராஜ் இதனை விரும்பவில்லை. அவனது விருப்பத்துக்கு மாறாகச் செயல்படுவது கூடாது என்று வாளாவிருந்து விடுகின்றான் திப்புசுல்தான்.

இவன் மனித உருவில் வந்த வாளரக்கனோ என்றும் ஒரு கணம் வியந்தும் மறு கணம் பயந்தும் போனான். இப்பேர்ப்பட்ட புயல் வீரனை நண்பனாகப் பெற்றதில் அவனது மனம் முன்னிலும்

1. திப்புவுக்குச் சுல்தான் பட்டம் தந்தையாரான ஹைதர் அலி இறந்த பிறகு கிடைத்ததென்று சரித்திரப் பேராசிரியர் ஹாசன் (Hassan) கூறுகிறார். ஆனால் சரித்திரப் பேராசிரியர் கிர்மானி (Kirmani) இது தவறு என்றும் ஆரம்ப முதற்கொண்டே திப்புவைத் திப்புசுல்தான் என்று மக்கள் அழைத்தனர் என்றும் கூறுகிறார். இதுவே சரியென்று ஏனைய நூல்களும் மெய்ப்பிக்கின்றன.



அதிகமாக மகிழ்ந்து கொண்டது. அந்த மகிழ்ச்சிக்குப் பிறகே காதலியின் நினைவு தலைதூக்கியது.

தொலைவில் மாமரத்தடியில் நடுங்கி ஒடுங்கி நின்று கொண்டிருந்த ரங்கநாயகியை நோக்கினான் திப்புசுல்தான். அவள் அருகே சென்று கூர்ந்து கவனித்தான்.

ரங்கநாயகியின் உடல் முழுவதும் வியர்வையால் தெப்பமாக நனைந்திருந்தது. முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் வழிந்து கொண்டிருந்தன. அவள் அவனைக் கண்டதும் விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள்.

அவளை மேலும் நெருங்கிச் சென்ற திப்புசுல்தான், தொடவும் அஞ்சியவனாய் அவளது முகத்தை ஏற இறங்கக் கவனித்து, ''எதற்காகப் பயப்பட வேண்டும் ரங்கநாயகி? எங்கும் எந்த நேரத்திலும் உனக்கு எந்த விதமான ஆபத்தும் நேராது என்று நான் கொடுத்த வாக்குறுதியில் அவ்வளவு அவ நம்பிக்கையா?'' என்றான். அவனது குரல் கரகரத்துக் காணப்பட்டாலும் அதில் ஒரு கம்பீரம் நிறைந்த உறுதி தென்பட்டது.

இதற்குள் பசவராஜிடம் போரிட்ட கும்பினிச் சிப்பாய்கள், தப்பித்தால் போதுமென்ற நிலை கண்டு தருணம்பார்த்துப் பின் வாங்கிக் கொண்டிருந்தனர். வந்தவர்களுள் பாதிப் பேர்கள் குத்துண்டும் வெட்டுண்டும் தரையில் புரண்டு கொண்டிருந்தனர்.

எதிர்த்தவர்கள் ஒவ்வொருவராக ஓட்டம் பிடித்தும் குதிரைகளில் தாவி ஏறியும் மூலைக்கு ஒருவராகப் பறந்தனர். அப்போதும் பசவராஜ் அவர்களை விடாமல் துரத்தக் குதிரை மீது துள்ளி ஏறி, விடாமல் பின் தொடர்ந்து செலுத்தினான். அந்தத் தீப்பந்தம் பிடித்துக் கொண்டிருந்த இசுலாமிய வீரனும் பின் தொடர்ந்தான். ஒரு சில வீரர்களும் இம்முறை வெறுமனே நிற்க மனமில்லாமல் தத்தம் குதிரைகளைச் செலுத்தித் தொடர்ந்தனர். இந்தக் காட்சியைக் கண்ட திப்புசுல்தானும் தனது குதிரையின் மேல் பாய்ந்தேறிப் புறப்பட முனைகிறபோது, ''நீங்களும் போக வேண்டுமா?'' என்று ரங்கநாயகியின் கம்மிய குரல் கேட்டுத்

திரும்பினான். ரங்கநாயகியின் கண்களில் நீர் அருவிபோல் தாரையிட்டது. ‘‘துரத்திப் பிடித்துவர அவர்களே போதும்!’’

சற்றைக்கெல்லாம் இரண்டு கும்பினிக்காரர்களை மடக்கிச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து நிறுத்தினான் பசவராஜ்.

அவர்களைக் கண்டதும் முகம் சிவக்க, மீசை துடிக்க ஒரு சிங்கம் போலச் சிலிர்த்தெழுந்து அடிமேல் அடியெடுத்து வைத்து அருகே நடந்து வந்தான் திப்புசுல்தான்.

குதிரையிலிருந்து இறங்கிய பசவராஜ், வாளை உறையிலிட்டுத் தனது நண்பன் திப்புசுல்தான் பக்கமாக வந்து நின்றான். அவனது உடலில் காயம்பட்டு வழிந்த ரத்தத்தைக் கண்டு ஆத்திரமாகப் பொங்கியது திப்புசுல்தானுக்கு.

‘‘பசவராஜ்! இந்த நாய்களை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ உடனடியாக நமது அரண்மனை மருத்துவர் வீட்டுக்குச் செல்; இதோ நானும் பின்தொடர்ந்து வருகிறேன்!’’ என்று அவசரப்படுத்திய நண்பன் திப்புசுல்தானை நோக்கிய பசவராஜ், ‘‘பரவாயில்லை சுல்தான்! நான் உங்களுடனேயே வருகிறேன்!’’ என்று அமைதியாகப் பதில் சொன்னான்.

‘‘இவர்கள் யார்? ஏன் இந்த வழிப்பறி? இதற்கு இவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள்?’’

‘‘ஒரு பதிலும் கிடைக்கவில்லை. இவர்கள் யாருக்குக் குறி வைத்தார்கள் என்பதில்தான் எனக்குச் சந்தேகம்!’’

‘‘அப்படியா! பதில் வரவில்லையானால் நான் முயல்கிறேன்?’’ என்று கூறிய திப்புசுல்தான், பக்கத்திலிருந்த வீரனது கையில் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தத்தைப் பெற்று அந்தக் கும்பினியச் சிப்பாய்களின் அருகே சென்றான். அந்தச் செவ்விய ஒளியில் சிப்பாய்களின் முகங்கள் விகாரமாகத் தெரிந்தன.

‘‘யார் நீங்கள்? யாரால் அனுப்பப்பட்டவர்கள்? என்ன காரியத்துக்காக வந்தீர்கள்?’’ என்று திப்புசுல்தான் ஆங்கிலத்திலேயே கேட்டான். அவனுக்குத் தாய் பாஷையுடன் ஆங்கிலம், பிரெஞ்சு,



மகாராஷ்டிரம், தமிழ் ஆகிய மொழிகளும் ஓரளவு பேசத் தெரியும்; கன்னடத்தில் மொழிப் புலமையே உண்டு.

அந்தச் சிப்பாய்கள் எந்த விதப் பதிலையும் சொல்லாமல் கல்லுளிமங்கனைப் போலக் காணப்பட்டார்கள்.

கையிலிருந்த தீப்பந்தத்தை இருவரின் முகங்களுக்கு நேரே நீட்டி நீட்டிச் சுடுவது மாதிரி பயமுறுத்திப் பார்த்தான் திப்புசுல்தான்.

சிப்பாய்கள் பயந்து கதறினார்களே யொழியத் தப்பிக்க வாய்திறந்து எதையும் சொல்ல மறுத்தார்கள். மீண்டும் தீப்பந்தத்தை வைத்துக் கொண்டே பயமுறுத்திக் கேட்டான் திப்புசுல்தான். பயனளிக்கவில்லை. இருவர் முகங்களையும் தீப்புண்ணாக்கிப் பார்த்தான். தங்கள் எசமானர்களுக்கு விசுவாசமுள்ள சிப்பாய்களாகவே அவர்கள் துன்பங்களைத் தாங்கி எரிச்சல் தாளாது கதறினார்களேயொழிய, காட்டிக் கொடுக்க அவர்கள் துணியவில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் காட்டிக் கொடுக்காவிட்டாலும் துன்பம்; காட்டிக் கொடுத்தால் அதைவிட அதிகத் துன்பம். துன்பத்தின் அளவும் அதை அளிக்கப் போகிற நபர்களும் வித்தியாசப்பட்டாலும் அனுபவிக்கப் போகிறவர்கள் அவர்கள்தாம்.

திப்புசுல்தானுக்குக் கோபம் நெற்றிப் பொட்டைப் பிளந்தது.

அந்தச் சிப்பாய்களின் கரங்களை ஒரு சேர இணைத்துக் கட்ட ஆணை பிறப்பித்தான். அவ்விதமாகவே ஆணை நிறைவேறியது.

திப்புசுல்தானின் ஆத்திரம் தலைக்கு மேலே குடை விரித்துக் கொண்டிருந்தது.

வழக்கமாக நிறைவேற்றும் தண்டனை போலத் தயாராகக் கொண்டு வந்திருந்த நீண்ட தாம்புக் கயிற்றை எடுத்துத் தனது இசுலாமிய வீரனை நோக்கி எறிய, அந்த வீரனும் அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு தாம்புக் கயிற்றின் ஒரு முனையை எடுத்துச் சிப்பாய்களின் கட்டுண்ட கரங்களின் நடுவே செருகி இழுத்துப் பலமாக முடித்தான். பிறகு மறுமுனையைத் திப்புசுல்தானின் திடகாத்திரமான குதிரைக்குப் பின்புறமாக இருந்த வளையத்தில் செருகி முடிச்சலிட்டான்.

ரங்கநாயகியை நோக்கிய திப்புசுல்தான், ''ரங்கநாயகி என் வீரர்கள் உன்னைப் பத்திரமாக அக்ரஹாரத்துக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். தைரியமாகப் போ!'' என்று கூறிவிட்டுத் தனது குதிரையின் மேல் ஒரு துள்ளு துள்ளிப் பாய்ந்து ஏறியமர்ந்தான். தொடர்ந்து பசவராஜும் ஏனைய வீரர்களும் குதிரைகளில் ஆரோகணித்தனர்.

'ஓ...' என்ற வெறி கொண்ட பேரிரைச்சலுடன் திப்புசுல்தான், குதிரையின் வயிற்றில் தனது கால்களால் ஓங்கித் தாக்க, அந்தக் குதிரையும் தாக்குதலின் அளவையும் வேகத்தையும் உணர்ந்ததே போல முன்னங்கால்களைத் தலைக்கு மேலே தூக்கி ஒருமுறை கனைத்து விட்டுப் படுவேகமாகப் பாய்ந்தோடியது.

கயிற்றால் கட்டப்பட்ட தங்களது மரண நிலையுணர்ந்த சிப்பாய்கள், தரையில் தடாலென்று நெடுமரங்களாய் விழுந்து அவலமாகக் கூச்சலிட்டுப் புரண்டு புழுதி மண்ணில் இருகட்டைகளைப் போலத் தேய்ந்து சென்ற அந்த மூர்க்கத்தனம் நிறைந்த கொடூரமான காட்சி...

ரங்கநாயகியின் நெஞ்சைப் பிளப்பதாக இருந்தது.

## 5

**'மா**னுஷ்ய சிம்ஹம்' (மானுட சிங்கம்) என்று கருநாடகத்து மக்களால் வாய் மணக்கப் புகழ்ந்தும், புகழ்ந்தவர்களே மெய் விதிர்க்கப் பயந்தும், பயத்தால் மட்டுமல்லாமல் அன்புடன் பணிந்தும்...

இவ்விதமான தனிச் சிறப்புகளால் வீரமா காவியத் தலைவனாய்த் திகழும் திப்புசுல்தான், அழகுத் தோற்றம் கொண்டு பிரமாண்டமாய் விளங்கிய அரண்மனையுள்-லால்மகாலுள் அடியெடுத்து வைத்ததும், அது வரையிலும் சற்று முன்னர் ரங்கநாயகி விஷயமாக நடந்த களேபரத்தைப் பற்றிப் பெரிதுபடுத்திக் கொண்டிருந்த ஒவ்வோர் உயிர்மூச்சும், இருக்கிற இடம் தெரியாது அடங்கி ஒடுங்கிப் போயின.



அதிகப்படியான நேரமாய் விட்டாலும் லால் மகால் முழுவதும் இன்னமும் தீபப்பிரகாசத்துடன் இருக்கும் என்று எதிர்பார்த்த திப்புசுல்தான், வியப்புக் கலந்த ஏமாற்றத்துடன் ஒரு கணம் நின்று மகாலைச் சுற்று முற்றும் கவனிக்கிறான்.

பெரிது பெரிதான முக்கிய லஸ்தர் விளக்குகள் யாவும் அணைந்து காணப்படுகின்றன. யார் இட்ட உத்தரவு இது?

மகாநவாப் சுல்தான் ஹைதர் அலி, நகரில் இருக்கிறபோது அவரது உத்தரவுக்குப் பிறகுதான் இரவில் அந்த அலங்காரம் மிக்க பெரிய பெரிய லஸ்தர் விளக்குகளை அணைக்கவேண்டும். அவர் நகரில் இல்லாதபோது இவ்விதமான அதிகாரங்கள் திப்புசுல்தானுக்கே உண்டு என்று காலையில்தானே பிரகடனப்படுத்தினார் ஹைதர் அலி! இன்னும் எத்தனையோ அதிகாரங்களைச் சாஸன பூர்வமாக பிரகடனப்படுத்தியபோது...

ஆ! அப்துல் கரீம்தான் என்ன பாடுபட்டு விட்டான்! திப்பு தனது சிறு வயது முதற்கொண்டே இயல்பாகப் பெற்றுவிட்ட 'சுல்தான்' பட்டம் அவனது எதிர்காலத்தையே அது தன்னிறைவு கொண்டு பறைசாற்றுவதாகும் என்று ஹைதர் அலி கம்பீரமாக முழங்கியபோது, இந்த இளைய மகனான அப்துல் கரீம் உள்ளூர வெந்து நொந்து கொண்டானே! தனது பெயருக்குப் பின்னால் இவ்விதமான சுல்தான் பட்டம் இல்லையே என்ற அவனது அங்கலாய்ப்பு...

இது குறித்து அவன் பேசவும் செய்தான்.

தந்தை ஹைதர் அலி இதனை ஒரு பொருட்டாக - ஏன்? அவனையே ஒரு பொருட்டாகவும் மதிக்கவில்லையே! இதனால் அப்துல் கரீமும் அவனைச் சார்ந்தவர்களும் நேர்மையற்ற நெஞ்சுள் பொருமிக்கொள்ளவும் செய்தனர்.

தனது எதிர்கால சாம்ராஜ்யக் கனவுக்குத் தம்பியே புல்லுருவியாக முளைப்பானோ என்றும் திப்புசுல்தான் மறுகிக் கொண்டான்.

இப்போதும் அவ்விதமான சந்தேகத்துக்குட்பட்டு அண்ணாந்து விளக்குகளைக் கவனிக்கிறான்.

''சலாம் சுல்தான்!'' என்ற குரல் மிகவும் அடித் தொண்டையிலிருந்து பவ்யமாக ஒலிக்கக் கேட்டுத் தனது ஆத்திர உணர்ச்சியிலிருந்து மீளமுடியாது திரும்பிப் பார்க்கிறான்.

எதிரே அரண்மனைப் பாதுகாவலனான மாரியட் என்பவன் ரொம்பவும் மரியாதையுடன் இஸ்லாமிய முறைக்கொப்ப வணக்கம் செய்து நின்று கொண்டிருக்கிறான். அவன் ஆங்கிலேயனானாலும் ஹைதர் அலியின் வீரத்தில் மயக்கம் கொண்டு சேவகம் செய்ய வந்தவன். அந்த லால் மகாலில் ஆங்கில ஆண்-பெண்கள் பலர் இப்படிப் பலவிதமான சேவைகளில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்தார்கள். இவர்களுள் துரோகிகளும் தங்கள் பொய்யான முகங்களில் போலியான புன்னகையைக் காட்டி நடமாடினார்கள்.

''மாரியட்! விளக்குகளை அணைக்கச் சொன்னது யார்?''

திப்புவின் குரல் கனத்து ஒலித்தாலும் அவனது கண்கள் கனன்று நெருப்பைக் கொட்டுகின்றன.

''உங்கள் தம்பி அப்துல் கரீம் சாகிப்!''

''சாகிப்...?''

பயந்து ஒடுங்கிக் காணப்பட்ட மாரியட்டின் தோளைத் தனது இடக் கரத்தால் பற்றிக் குலுக்கி, அலட்சியமாகக் கேட்டுப் பின்னர் அவனது தலையை நிமிர்த்தி, ''எங்கே அவன்?'' என்று கேட்கிறபோது திப்புவின் குரலில் கோபம் இரும்பாய்க் கனக்கிறது.

மாரியட் பொறி கலங்கி நடுங்கிப் போனான்: ''ஹுஸூர் நான் எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. நேரம் அதிகமானால் யாரும் விளக்கை அணைக்க உத்தரவிடலாம் என்று கூறி இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்.''

''நீ அதிகப்படியாய் பயப்படுகிறாய். உன்னை ஒன்றும் செய்துவிடமாட்டேன். கரீம் எங்கே இருக்கிறான்? இதற்குப் பதில் சொல்!''

''ராத்திரி வேட்டைக்குக் கிளம்பி விட்டார்!''



''ஓகோ! ஸ்ரீரங்கப்பட்டினம் நிம்மதியாகத் தூங்கக் கூடாதே அவனுக்கு!''

எதையோ மனத்துள் எண்ணி வெறுப்புடன் கறுவிக் கொண்டவனாய் லால் மகாலுள் பிரவேசித்தான் திப்புசுல்தான்.

ஓரளவு அதிர்ச்சி நீங்கிய மாரியட், தனது கடமை முடிந்ததென்று இருப்பிடம் நாடி நடந்தான்.

உணவு கூடத்தில் இன்னமும் பலர் சாப்பிடாமல் இருப்பது தெரியவந்தது. திப்புசுல்தான் எப்போதுமே அறிவு ஜீவிகளுடன் அமர்ந்து சாப்பிடுவதில் தனி மகிழ்ச்சியடைவான். அவர்களோடு அந்த நேரத்தில்தான் பழம்பெரும் இலக்கியங்களைப் பற்றியும் தனது முன்னோரின் சரித்திரங்களைப் பற்றியும் பேசியும் விவாதித்தும் சுவைப்பான். தனது இடைக்காலம் பகைவர்களாலும் யுத்தங்களாலும் ஆக்கிரமிப்புக் கொண்டிருந்தாலும், வருங்காலம் ஓர் அறிவு பூர்வமான சாஸனமாகத் திகழ அவன் மேற்கொண்டிருந்த இந்த ஆசை மெச்சத் தகுந்ததாக இருந்தது.

அன்றைக்கு அவன் சாப்பாட்டையே விரும்பவில்லை. அவனது மனம் சகோதரன் அப்துல் கரீமைச் சுற்றி வட்டமிட்டது. கரீமைச் சூழ்ந்த பலரும், பலரைச் சூழ்ந்த கரீமுமாக ஒரு பொய்யான வேஷம் தரித்து இருப்பதை அவன் சில நாள்களாகவே கூர்ந்து கவனித்து வைத்திருந்தான். இன்றைய நிகழ்ச்சி அவனது நீண்ட புகழ் வெளிச்சத்தின் ஒரு பகுதிக்கான விளக்குகளே அணைந்திருப்பது போல் எடுத்துக் காட்டியது. அவனது நீண்டு கூராக வளைந்திருந்த மீசையும் உணர்ச்சி வயப்பட்டுத் துடித்தது.

உணவுக் கூடத்தில் காத்திருந்த அனைவரையும் சாப்பிட்டுச் செல்லும்படி உத்தரவு பணித்துவிட்டு நேரே மேன்மாடத்து முற்றம் நோக்கி விரைந்தான். ஒரு மணி நேரமாவது கண்மூடி ஒரு தியானமே போல் ஓய்வு கண்டால் தாழ்விலைபோலத் தெரிந்தது அவனுக்கும்.

ஒரு மணி நேரம் கழித்து மேன் மாடத்தை விட்டுக் கீழே இறங்கி வந்தான் திப்புசுல்தான். மனம் ஒருவாறு அமைதி கண்டிருந்தது. நேரே ஜனானா (அந்தப்புரம்)வுக்குச் சென்று காம சாஸ்திர விவாதத்தில்

மூழ்கி, அது பற்றிக் கொச்சையாக ஆராய்வதில் ஒரு தன்னிறைவு கிடைக்காதா என்று யோசித்தான். இரவு தூங்குவதற்கு அதுவே சிறந்த மார்க்கமாக அவனுக்குத் தெரிந்தது. ஏனென்றால், அவனுக்கு மது அருந்தும் பழக்கம் கிடையாது.

வழியில் எதிர்ப்பட்ட பணிப் பெண்களைக் கைதட்டி அழைத்தான். உணவை ஜனானாவுக்குக் கொண்டு வருமாறு ஆக்ஞை பிறப்பித்து விட்டுத் தனது உடைகளை மாற்றிக் கொண்டு புறப்பட்டு அலங்காரக் கூடத்துக்குள் நுழைந்தான்.

சற்றைக்கெல்லாம் வெள்ளை வெளேர் என்று நீண்ட அங்கி மாதிரியான உடை தரித்துக் கொண்டு சிருங்காரச் சுவைஞனாய் வெளிப்பட்டான். அவனது ஆடையின் அடிப்பாகம் மடி மடியாய் அகன்று சுற்றிலும் பலவிதமான ஜரிகை பூ வேலைப்பாடுகளுடன் இருந்தது. கால்களில் பிடிப்பான நீண்ட காற்சட்டை, இடுப்பில் பச்சை நிறத்தில் ஜரிகை வேய்ந்த பட்டையைச் சுற்றி முடிந்திருந்தான். தலைப்பாகை இல்லை. கழுத்துவரை நீண்டு சுருண்ட கேசத்தைச் சீவியிருந்தான். நிச்சயமாக அந்த அலங்காரத்தில் அவனது ஆண்மைமிக்க கம்பீரத் தோற்றத்தைக் கண்டு எந்தப் பெண்ணும் மயங்கி விடுவாள் என்றே நினைத்துக் கொண்டான், தொலைவில் நின்று கொண்டிருந்த அந்தரங்கப் பணியாளர்களுள் ஒருவனான ஹபிபுல்லா.

பெரிய கூடத்து வழியாக வந்து கொண்டிருந்த திப்புசுல்தான், சற்றே நின்று எதிர்ச்சுவரை நோக்கினான்.

நீண்டு பருத்த பெண்டுலத்துடன் இயங்கிக்கொண்டிருந்த அந்த பெரிய [1]கடிகாரம் மணி பதினொன்று என்று காட்டியது.

திப்புசுல்தானின் யுத்தகளப் பாதங்கள் ஜனானாவை நோக்கி நடக்கிறபோது, அதிலிருந்த முரட்டு சுபாவம் நீங்கி, ஒரு மென்மையான ரதிநிவேதன நளினம் தெரிகிறது.

1. திப்பு கடிகாரத் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை மாதிரியானவைகளை மேல்நாட்டார் துணை கொண்டு தொடங்கினான். (History of Tipu Sultan by Hassan.)



லால் மகாலின் பின்புறமாக இருந்த ஜனானாவையொட்டித் தனித்து நிமிர்ந்திருக்கும் சுல்தானா மகால், தீபப் பிரகாசமாய்க் காட்சி தந்தது. இன்னமும் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா விழித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அந்த மணி விளக்குகள் மெய்ப்பித்துக் கொண்டிருந்தன. ஹைதர் அலியின் ஆட்சியில் அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, அவளிட்டதுதான் சட்டம்; இயம்பியது தான் வேதமானாலும் எது எதில் எப்படியெப்படி எந்தெந்த நேரத்தில் தனது சர்வவல்லமை பொருந்திய அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனமுடையவள்.

சற்று நேரத்துக்கு முன்புதான் தனது மருமகள் ருக்காய்யா பானு, ஏதோ குழப்பம் விளைவிக்க இருப்பதாகச் செய்தி வந்தது ஏன்? எதற்காக? என்பதை நேரில் கண்டறிய புறப்பட்டுக் கொண்டிருந்தாள். மகா சுல்தான் நகரில் இல்லாத போது, ரங்கநாயகியால் ஏற்பட்ட குழப்பம்தான் சற்று முன் தெரிய வந்து மண்டையைப் பிளந்து கொண்டிருக்கிறது. இவள்வேறு குழப்பம் பண்ணப் போகிறாளாமே...

பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் தோற்றம் மிகவும் அழகு நிறைந்ததாகும். அவளது இயற்பெயர் ஃபாத்திமா, கடப்பாவின் ஆளுநராகப் பணிப்புரிந்த மீர் முயின் உத்தின் என்பவரின் செல்வத் திருமகள். இவள் ஏனோ இஸ்லாமியர்க்குரிய 'பர்தா' முறையை விரும்பாது வெறுத்தாள். இதில் ஏனையவர்களும் தன்னையே பின்பற்ற வேண்டும் என்றும் பிரகடனப்படுத்தினாள். ஹைதர் அலிக்கு இது பிடிக்கவில்லையானாலும் மறுப்புக்கூற முடியவில்லை. ஹைதர் படைக்களத்தில் புலி! பக்ருன்ஷாவைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு சாதுவான பதுமை!

கவிதையழகு கொஞ்சும் ஜனானாவின் வர்ணஜாலச் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஓர் அறையினுள், தந்தத்தாலான மஞ்சனையில் புஷ்பபாணம் போலப் படுத்துக் கொண்டிருந்தாள் ருக்காய்யா பானு.

மாமியாரின் வருகை அறிந்து எழுந்து நின்று தனது வலக்கரத்தின் நுனி விரல்கள் நெற்றியில் படக் குனிந்து வணக்கம் தெரிவித்தாள். அவளது அலங்காரமும் அபரிமிதமாக இருந்தது.

எதிரே இருந்த புலியாசனத்தில் ஒரு பெண்புலிக்குரிய காரம்பர்யத்துடன் அமர்ந்த சுல்தானா பேகம் பக்ருன்ஷா, தனது மருமகளைக் கூர்ந்து கவனிக்கிறாள்.

''பானு! திப்பு வந்ததும் ஏதோ குழப்பம் செய்யப் போகிறாயாமே? கேள்விப்பட்டேன். நம்ப முடியவில்லை. சிங்கத்தின் பாதங்களில் விழு! தவறில்லை. அதன் நகக்கூர்மையைச் சோதிக்காதே! உனது அழகில் கீறல் விழுந்து விடும்!''

-பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் குரலில் அழுத்தம் தெறிக்கிறது...

மாமியாரை ஓரக் கண்களால் கவனித்த ருக்காய்யா பானு 'சிங்கம் என்பதால் அசிங்கமான காரியத்தைச் செய்யலாமா?' என்றாள். அவளது குரலில் அடக்கம் இருந்தாலும் துணிவு மிஞ்சியது.

பெரிய சுல்தானா பேகத்தின் கண்கள் சற்றே அகன்றன. ''என்ன அசிங்கத்தைக் கண்டு பிடித்து விட்டாய்? அவனிலும் உத்தமமானவனை இந்த...''

பெரிய சுல்தானா பேகம் கூறி முடிப்பதற்குள், இடைப்புகுந்து ருக்காய்யா பானு, ''ரங்கநாயகியைப் பற்றிய விஷயம் ஸ்ரீரங்கப் பட்டினத்தையே நாற்றமடிக்கச் செய்து கொண்டிருக்கிறது!'' என்று கூறி நிறுத்தித் தலைகுனிந்து கொண்டாள். ''நீங்களும் கண்டிப்பதில்லை. மாமாவும் கண்டும் காணாமல் இருக்கிறார்...! இங்கே இருக்கிற சட்டப்படியான சுல்தானாக்களோ (ராணிகள்) உங்கள் பிள்ளை புன்னகை புரிந்தால் போதும்... எல்லாவற்றையும் மறந்து விடுகிறார்கள். ஏனைய அழகிகள் அவருக்குச் சிற்றின்ப விளையாட்டுக்கு உதவும் பதுமைகள்...! வாய்திறக்க மாட்டார்கள். அவர்களுள் ஒருத்தியான ரோஷானி பேகம் ஒரு பிள்ளையைப் பெற்றாலும் பெற்று விட்டாள்... அவளுக்குத் தலை கால் தெரியவில்லை.''

உள்ளூறச் சிரிப்பும் ஆனால் வெளிக்குக் கோபமுமாகக் கவனித்த பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா, ''ஏன்? நீயும் சட்டப் படியான ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொடுக்கப் போகிறாயே!'' என்று



வேண்டுமென்றே சொல்லி நிறுத்தினாள், வார்த்தைகளில் நக்கல் எதிரொலித்தது.

''அதற்கு நேரம் வந்து விட்டதானாலும், போதாக்குறைக்கு ரங்கநாயகி தொடர்புவேறு...''

அவள் விசும்பத் தொடங்கிவிட்டாள். அவளது கோரிக்கையில் ஒரு நியாயமிருப்பதாகவே தெரிந்தது...

''பானு! ரங்கநாயகி விஷயத்தில் நானோ, உன் மாமனாரோ சிந்திக்கவில்லை என்று எண்ணிவிடாதே! எதற்கும் ஒரு நேரம் உண்டு; முடிவும் உண்டு.''

''அதற்குள் அந்த ஐயங்கார்ப் பெண் என் புருஷனோட நெற்றியில் நாமம் போட்டு விடுகிற அளவுக்கு மயக்கிவிடக் கூடாதல்லவா...!''

''ருக்காய்யா பானு...

பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் குரல் அதிகார அழுத்தத்துடன் ஆவேசம் பொங்க வெளிப்பட்டு அந்த இடத்தையே கிடுகிடுக்கச் செய்தது. ருக்காய்யா பானு மட்டுமல்லாது, தொலைவில் இருந்த தோழிப் பெண்களும் கதிகலங்கி போயினர்.

ஏன்? ஜனானாவை நாடி வருகிறபோது, தொலைவில் தாய்க்கும் தாரத்துக்குமாக நடக்கும் இந்தச் சம்வாதத்தை மறைந்திருந்து செவி சாய்த்த திப்பு சுல்தானுக்கும் ஒருகணம் அதிர்ச்சி கண்டது.

மீண்டும் பெரிய சுல்தானா பேகத்தின் குரல் ஓங்கி ஒலிக்கிறது:

''பானு! என் மகனை நீ புரிந்து கொள்ளவில்லை. அவன் உன்னை ஏன் புறக்கணிக்கிறான் என்பதற்கு இப்போதுதான் காரணம் புரிகிறது. அவன் பகைவர்களுக்கு நாமம் போடப் பிறந்தவன்! அவனது நாமம்-அதாவது அவனது பெயர், சிங்கம்! அதன் ராஜகர்ஜனையை நீ அறியமாட்டாய்! இப்போது கழுதைப் புலிகளும் கர்ஜிக்கின்றன! அவற்றின் செயற்கையான குரலைக் கேட்டு நீ போலியாக வருகிறாய்! ஒரு விஷயத்தை நீ மனதில் கொள்ள வேண்டும். பிற மதத்தவருக்கு ஆதரவு தருவது வேறு விஷயம்! அது

இந்துக்களைச் சகோதரத்துவப்படுத்துவது! இந்த ஜனானாவில் எத்தனை இங்கிலாந்துக்காரிகளும், பிரெஞ்சுக்காரிகளும், டச்சுக்காரிகளும் இருக்கிறார்கள் என்பது நீ அறியாததல்ல. அவன் இஸ்லாத்துக்கு இழுக்கை உண்டுபண்ண மாட்டான். அவன் எனது மகன்! எனது ரத்தம்! நான் படித்த குரானின் ஒவ்வொரு வரியும் அவனது உடலுள் ஒவ்வொரு அங்கம்!''

அயர்ந்து போனாள் ருக்காய்யா பானு...

பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா அதற்கு மேலும் அங்கே நிற்க விரும்பாமல் தனது மாளிகையை நோக்கி நடந்தாள். ஆயினும் நெஞ்சில் ரங்கநாயகி அக்கினிக் குழம்பைத் தடவிக் கொண்டிருந்தாள்.

பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்து எதிர் பக்கம் நடந்தாள் ருக்காய்யா பானு. இடையில் ஒரு குறுக்குச் சுவர்ப்புறமாக நுழைந்திருந்த திப்புசுல்தான் திடுமென்று வெளிப்பட்டு அவள் முன்னே வந்து நின்றான். அவனது தோற்றம் பயங்கரமாகத் தெரிகிறது. கண்கள் அக்கினிக் குண்டங்களாகக் காட்சியளிக்கின்றன. விடுகிற மூச்சும் புயலை நினைவுபடுத்துகிறது...

அண்ணாந்து கவனித்த ருக்காய்யா பானு, அடிவயிறு கலங்க, வெலத்து, மலைத்து நின்றாள்.

## 6

**கி.**பி. 1774.

இந்த ஆண்டில்தான் லால்மகாலில் ஒரு பிரச்சனை கேள்விக் குறியாய் விகசித்தது.

திப்புசுல்தானின் திருமணப் பிரச்சனைதான்!

லாலா மியானின் மகளும், புரான் உத்தீனுடைய சகோதரியுமான ருக்காய்யா பானுவையே திப்புசுல்தானுக்கு மணம் முடிக்கத் தீர்மானித்தாள், அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா.



ருக்காய்யா பானு அப்படியொன்றும் செல்வச் செழிப்பில் வந்தவளில்லையானாலும் கண்ணிறைந்த பேரழகி! கவின்மிகுந்த ராஜ மண்டபம்! அறிவு மிகுந்த ராஜ தந்திரி. எனவேதான் அன்னை பெரிய சுல்தானா பேகம் இவளை மணமகளாக அடையத் தீவிரமாக முனைந்தாள்.

மகா சுல்தான் ஹைதர் அலிக்கு இந்த ஏற்பாடு துப்புரவாகப் பிடிக்கவில்லை. அவருக்குப் புதுச்சேரியின் மகா நவாப்பும் செல்வச் சீமானுமான [1]குலாம் உசைன் கானின் சகோதரியும், இமாம் சாகிப் பக்ஷியின் மகளுமான சுல்தானா பேகம் சாகிப் என்பாளை மணம் முடிக்கவே ஏற்பாடுகளைக் கவனித்தார். இப்பேர்ப்பட்டவளை மருமகளாக அடைய ஹைதர் அலி விரும்பியது இயல்பானதே!

திப்புசுல்தான் இந்த இருதரப்பு எரிதழலின் முன்னே நின்றான்.

''திப்பு! உனது வருங்காலத்தை மனத்தில் கொண்டே இந்த ஏற்பாட்டினைச் செய்கிறேன். உனக்குத் தந்தை வேண்டுமானால் நான் சொன்ன பெண்ணை மணக்க உடன்படு!'' என்று தனித்து மகனை அழைத்துத் தீவிரமாக எச்சரித்தார் தந்தை.

ஆனால் அன்னை பெரிய சுல்தானா பேகம்...

''திப்பு! நான் உனது தாய்! உனக்கு நல்லது செய்ய வேண்டிய பொறுப்பு என்னுடையது. உனது தந்தையார் காட்டுகிற பெண் செல்வச் சீமாட்டியாக இருக்கலாம். அந்தச் செல்வம் நம்மிடம் ஏராளமாக இருக்கிறது. எனது காலத்துக்குப் பிறகு அறிவோடு இந்த ஆட்சியை நிர்வகிக்கக் கூடிய ஒரு மருமகள் தேவை! இதனால் உன் அறிவைக்குறை கூறுவதாக நினைத்துவிடாதே! நீயோ உன் தந்தையைப் போல யுத்தம் யுத்தம் என்று இறக்கைகளில் பீரங்கிகளைக் கட்டிக் கொண்டு பறக்கப் போகிறவன்! அப்போது இந்த ஸ்ரீரங்கப் பட்டினத்துக்கு ஆட்சித்திறன் நிரம்பிய ஒரு சாதுரியமான சுல்தானா தேவை! எந்த நிமிஷத்தில் நாம் ஏமாறுவோம் என்று எதிர்பார்க்கின்றாள் மைசூரின் விதவை மகாராணி லட்சுமி யம்மணியம்மாள். அவளுக்குத் தூப கலசமாக இருந்து சாம்பிராணி

1. சந்தா சாகிப்பின் மரபினர்.

போட்டு வருகிறார் மகா ராஜ தந்திரியான திருமலை ராவ்! ஆகவே மகனே, நான் உனது நன்மைக்காக இந்த ஏற்பாட்டைச் செய்கிறேன் என்பதை மனத்தில் கொண்டு ருக்காய்யா பானுவை மணந்து கொள்!''

அன்னையின் இந்த முழக்கத்திலும் நியாயமிருப்பதாகப் பட்டது திப்புசுல்தானுக்கு, ஆனால் தந்தை ஹைதர் அலியின் கோபாக்கினிக்கு ஆளாக நேரிடுமே...!

''அப்பாவிடம்...''

அவன் முடிக்கவில்லை.

''முடியாது என்று சொல்லிவிடு!''

- அன்னை குறுக்கிட்டு முடித்தாள். மேலும் தனது நிலையை விளக்கினாள்:

''திப்பு! ஒரு மகனுக்குத் தாயும், மகளுக்குத் தந்தையுமே முக்கியமானவர்கள் என்பது இயற்கையின் மறைமுகமான விதி! உன்னைப் பெற்றெடுக்க நான் என்ன தவம் செய்தேன்; என்ன தருமம் செய்தேன் என்பதை நீயறியாய்! அப்போது நான் ஒரு பக்தை ஃபாத்திமா! சில சமயங்களில் இந்த எனது இயற்பெயரிட்டு உன் தந்தை அழைப்பதை நீ கவனித்திருக்கலாம். திப்பு! நீ வயிற்றிலிருக் கிறபோது ஒவ்வொரு நாளும் உனக்கு நான் குரானைப் போதித்தேன்! ஏன்? நீ அறிவாளியாக ஜனனம் ஆகவேண்டும் என்பதற்காக! நிறை கர்ப்பிணியாக இருக்கிற போது உன் தந்தையாரை அழைத்துக் கொண்டு ஆர்க்காட்டுக்குச் சென்றேன். அங்கே திப்பு மஸ்தான் அவுலியா என்கிற மகானுடைய [1]சமாதி இருக்கிறது. அந்தச் சமாதிக்குச் சென்று பிரார்த்தனை செய்தேன். ஏன்? நீ வயிற்றில் அதிகப்படியாகக் கனத்து இருந்தாய். உனது கனம் எத்தகையது என்பதை நான் அப்போதே உணர்ந்தேன். அதனால் சுகப்பிரசவம் வேண்டும் என்றும் அவ்வாறு பிறப்பவன் மகனாக இருந்தால் மகானுடைய பெயரையே வைப்பதாகவும் வேண்டிக் கொண்டேன்.

1. கி.பி. 1729-ல் இந்தச் சமாதியைக் கட்டியவர் நவாப் சாத துல்லாகான். (Bowring L.B. Haidar Ali and Tipu Sultan P. 118 Footnote.)

He (prayers were answered and on Friday the 2th zill-Hijji 1153 A.H. (November 20, 1750) a son was born to her at Devana halli (History of Tippu Sultan by Hasan)



அந்த மகன் சர்வ வல்லமை பொருந்திய மகா வீரனாகத் திகழ வேண்டும் என்று மண்டியிட்டு அழுதேன். எனது பிரார்த்தனை, வேண்டுதல், அழுகை வீண் போகவில்லை. அந்த மகானுடைய பெயர்தான் திப்பு. நான் வைத்த இந்தப் பெயரே இன்றும் நின்று நிலவி உன்னையும் என்னையும் நிரூபிக்கிறது! ஆனால் உன் தந்தை வைத்த பெயரோ... ஃபாத் அலி! அது பிரபலமடைந்ததா? இதிலிருந்து புரிந்து கொள்... எனது ஆக்ஞைதான் உனது வாழ்வின் ஒளி விளக்கு!''

தாயின் இந்த வாதங்கள் மூலம் திப்புசுல்தான் அதிகமாகவே மனமாற்றம் கண்டான். தந்தையாரை நினைக்கையில்தான் அவனுக்கு அஸ்தியில் காய்ச்சல் கண்டிருந்தது. அந்தக் கர்ஜனையை மீறுவது சாத்தியமா...?

நண்பன் பசவராஜிடம் தனது குழப்பத்துக்கான ஒரு விடிவை எதிர்பார்த்துப் பளுவை அவனது தோளில் இறக்கி வைத்தான். பசவராஜும் அது குறித்து யோசித்துப் பார்த்ததில், அன்னையின் சொல் என்பதற்காக முக்காலும் மதிப்பளித்தாலும், இது ஒரு பெண்ணிடமிருந்து வெளிப்படுகிறது என்பதற்காகக் கால் பாகம் சிந்தித்துப் பார்த்து முடிவில் இருவர் பார்த்த பெண்களையும் ஏக காலத்தில் மணந்து கொள்ளுமாறு தனது அபிப்பிராயத்தைக் கூறினான்.

நண்பனுடைய அபிப்பிராயத்தை ஏற்றுப் பெற்றோரிடம் முடிவு கூறினான். மகனின் இந்தப் புத்தி சாதுரியத்தைத் தந்தையார் ஹைதர் அலி ஒப்புக்கொண்டு பாராட்டினாலும், தாயார் பக்ருன்ஷா பேகம் ஒப்புக் கொண்டாளேயொழிய பாராட்டவில்லை.

ஒரு நல்ல இரவில் அந்த இரட்டைத் திருமணம் இனிது நிறைந்தது.

ஏழாண்டுகளுக்கு முன்பு நடந்த இந்தப் பிரச்சனைக்குரிய குழப்பமான நிகழ்ச்சியை அந்த ஓரிரு நிமிடங்களுக்குள் எண்ணிப் பார்க்கிறான் திப்புசுல்தான்...

ஓங்கிக் கன்னம் இரு பிளவாகப் பிளக்கிற மாதிரி ஓர் அறைவிடலாமா என்று மூர்க்கமாக யோசிக்கிறான்...

சீ...!

வெட்கப்பட வேண்டிய அந்த யோசனையைக் கைவிட்டு அந்த இடத்தை விட்டு நகர முனைகிறபோது...

அதுவரை சிலையாய் நின்றுகொண்டிருந்த ருக்காய்யா பானு வேறெது பற்றியும் பேச முடியாது, தனது கணவனுடைய வீரக்கழல்களில் மண்டியிட்டுக் குமுங்கினாள். அவளுக்குள்ள கடைசி ஆயுதம் அதுதானே!

அதைப்பற்றித் திப்புசுல்தான் கொஞ்சமும் கவலை கொள்ளாமல் நடந்து கொண்டே இருந்தான்!... அந்த நடையின் ஒவ்வோர் அடியிலும் ஆத்திரத்தின் சிகரத்தை உணர முடிகிறது. அதனைத் தணிப்பதற்கு அவன் தன்னைத் திசை திருப்பிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

காலத்தின் அழகுக் கூடுபோல் இருந்த அந்த ஜனானாவுள் திப்பு சுல்தான் பிரவேசிக்கிறான்...

அங்கிருந்த அத்தனை அழகுப் பதுமைகளும் உயிர் பெற்று எழுந்தன போல் மரியாதை செலுத்துகின்றன.

பதுமைகளில் எத்தனையோ நிறங்கள், இனங்கள்.... மதங்கள்...

சற்றே தொலைவில் சுல்தானா பேகம் சாகிப் நிற்கிறாள். இவள்தான் ருக்காய்யா பானுவுடன் ஒரே இரவில் மணந்து கொண்ட மனைவி! - தந்தையார் ஹைதர் அலி கொண்டு வந்த மருமகள் - செல்வத் திருமகள்!

இடப்புறத்துக் கோடியில் பின்னாளில் மணந்துகொண்ட இன்னொரு மனைவி புராந்தி பேகம் நிற்கிறாள். இவள் தில்லியின் சிறப்பு வாய்ந்த பெரிய மனிதரான மீர்முகமதுவின் புதல்வி!

ஏனைய பதுமைகள் அதிகாரமேதுமற்ற அலங்காரப் பதுமைகள்.[1]

1. Concubines.



ஏனைய மனைவிமார்களைக் கூர்ந்து - ஓர் அர்த்தம் நிறைந்த அநர்த்தத்தை எதிர்பார்க்கும் பார்வையுடன் நோக்குகிறான் திப்புசுல்தான். அவனது சைத்தான் பிடித்த மாதிரியான இந்தக் குழப்ப நிலைக்கு மருந்தாக நின்று ஆறுதல் அளிக்க என்னென்ன மாதிரியான விகாரங்களெல்லாமோ தேவைப்படுகின்றன. அவை ரசமாகவும் இருந்தன; விரசமாகவுமிருந்தன. அவற்றை அவன் எப்படியெல்லாம் வரவேற்பானோ? எவ்விதமாக வெல்லாம் ரசிப்பானோ? புசிப்பானோ? இல்லை நசிப்பானோ?

''இங்கே நடக்கவிருக்கிற களியாட்டங்கள் உங்கள் கண்களைக் கூசச் செய்யுமானால் நீங்கள் போகலாம். இது என்றோ ஒரு நாள் நானாக ஏற்படுத்திக் கொள்கிற வாடிக்கை!''

-ஒரு முன்னெச்சரிக்கையே போன்று கர்ஜிக்கிறான் திப்புசுல்தான்...

அவனது மனநிலை புலன்களைப் பிராண்டி ரணப்படுத்திக் கொண்டிருக்கிறது...

சுல்தானா பேகமும், புராந்தி பேகமும் நடக்கப் போவது நிர்வாண நாடகம் என்பதை முற்றுமாக உணர்ந்து அவர்கள் அங்கிருக்க நாணியவர்களாய் தத்தம் அறை நாடி நடந்தனர்.

திப்புசுல்தானுடைய சிவந்து கனன்றிருந்த நெருப்புப் பார்வை, அருகிலிருந்த ரோஷானி பேகத்தின்பால் செல்கிறது...

அவளும் ஓர் ஆசைநாயகிக்குச் சமமானவளேயானாலும் அவளுக்கென்று ஒரு மரியாதையுடன் கூடிய அந்தஸ்து இருந்தது. திப்புசுல்தானின் சட்டப்படியான திருமணம் நடப்பதற்கு முன்னமே இஷ்டப் படியான இனியவளாக அவனது இதயத்தில் இடம் பிடித்த அழகு ராணி. அது மட்டுமல்லாது, [1]அவளுக்கு ஃபாத் ஹைதர் என்ற ஓர் ஆண் குழந்தையிருந்தது. சந்ததியை இவள் உற்பத்தி செய்து தந்தாளே என்கிற மரியாதையை அவளுக்கு மகாசுல்தான் ஹைதர்அலி வழங்கி இருந்தார். எனவே, அவளை ஆசைநாயகிகள்

1. Roshani Begum the mother of Fath Haider; Tipu's eldest son, is regarded by Wellesley as a Concubine.

யாவரும் ஆசைநாயகியாக நினைக்காவிட்டாலும், மனைவிமார்கள் அவளை ஆசைநாயகியாகவே வைக்க வேண்டிய இடத்தில் வைத்திருந்தனர். ஆனால், திப்பு சுல்தான் மட்டும் அவளைத் தனது நெஞ்சில் இருக்க வேண்டிய ஸ்தானத்தில் அமர்த்தி வைத்திருந்ததால், ''ரோஷானி! நீயும் போகலாமே!'' என்று சற்று அமைதியாகவே சொன்னான்.

ரோஷானி பேகமும் அந்த உத்தரவுக்காகவே காத்திருந்தவள் போலப் புறப்பட்டாள். அவ்விதம் புறப்படுகிற போது, அருகில் வந்து பயபக்தியுடன் நின்றாள்.

''என்ன ரோஷானி?''

''இது தேவையா?''

இந்த நேரத்தில் எத்தனை துணிவு இந்த ரோஷானி பேகத்துக்கு...

நீண்ட பெருமூச்சுடன் அவளை உற்றுக் கவனிக்கிறான் திப்புசுல்தான். ''இது எனது அக்கினியைத் தணிக்கும் அருவி!''

''நல்லது; அமைதி கிடைத்ததும் நேரே என் அறைக்குத்தான் வரவேண்டும்?''

ஓர் உத்தரவே போலக் கூறிய ரோஷானி பேகம், கம்பீரமாக நடந்து செல்கிறாள். அவளது பேச்சுக்குத் திப்புசுல்தான் மௌனம் சாதித்ததே ஒரு கௌரவத்தைப் பறைசாற்றியது. அவளது நடையை அவன் கூர்ந்து கவனிக்கிறான்...

காஷ்மீரத்துக் கலப்பில் வந்த கவிதையாயிற்றே அது!

சில விநாடிகளுக்குப் பிறகு...

ஏதோ ஓர் உசுப்பலுடன் தனது இரு கரங்களையும் உயர்த்தி மோதி, ''இசை ஒலிக்கட்டும்; நடனங்கள் தொடங்கட்டும்'' என்று கர்ஜிக்கிறான்...

மாயா ஜாலங்கள் போன்று காரியங்கள் சுறுசுறுவென்று நடக்கின்றன.



கொதிக்கும் பாலிலிருந்து மேலெழும் ஆவியானது எவ்வித மிருக்குமோ, அவ்விதமாக மூலைக்கு ஓர் ஆடையாகப் பறந்து சென்று விழுகிறது...

வண்ண வண்ணமான ஆடைகள்...

வளைந்து நிமிர்ந்த ரவிக்கைகள்...

எண்ண எண்ண இனிக்கும் எத்தனையோ ஆபரணங்கள்... அணிகலன்கள்...

அத்தனையும் கழன்று அனாதைகளைப்போல அங்கொன்றும் இங்கொன்றுமாக விழுகின்றன...

ஆ! என்ன சுகமான இளந்தென்றல் ரசனை அனுபவங்கள்...

மேலே மிகப் பெரிய - [1]பாரீஸ் நகரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஓவிய அழகு நிறைந்த லஸ்தர் விளக்குகள் ஒளியை அபரிமிதமாகக் கொட்டிக் கொண்டிருக்கின்றன...

கனத்த மெத்தை விரிப்பின் மீது அமர்ந்து மீசையைத் திருகி விடுகிறான் திப்புசுல்தான்...

பக்கவாட்டில் பெரிய பெரிய திண்டு திமாசுகள்...

இளமாதர்கள் பிறந்த மேனியர்களாய்ப் பக்கத்தில் அமர்ந்து அவனது எரிச்சலையும் அரிப்பையும் தணித்துக் கொண்டிருக் கிறார்கள்...

நான்கு செம்மேனி மாதர்கள், தம்மேனி யழகுணர்ந்து, கையில் மயில் விசிறிகள் கொண்டு திப்புவின் பொன் மேனி வியர்க்காது வீசுகிறார்கள்...

ஆடலும் பாடலும், அனுபவிக்கப் பிறந்தவர்களுக்கென்றே துவங்குகின்றன...

இசையா அது? இசையாதிருக்கும் இதயமெல்லாம் வசையாது வசப்படுத்தும் [2]கானா...

1. திப்புவுக்கு நெப்போலியன் நட்புத் தொடர்பிருந்தது.

2. பாட்டு.

கீதத் கஜானா...

தித்திக்கும் தில்லானா...

என்ன இனிதான இந்துஸ்தானி கானடா ராகம்...

அது முடிந்து அமீர் கல்யாணி...

ஒரு பெண் தனது உடலில் அழுந்த வைத்துக் கொண்டிருந்த தபோவை வாசிக்கிறபோது, அவளது இனிதான அழகின் முன்னுரையும் அணிந்துரையும் தாளஜதி களினூடே கோல மயிலைப் போலக் கூத்தாடுகிற விதம்...

ஜல், ஜல், ஜல், ஜல்...

ஆ!

கண்வியக்கும் கோபுரத்துக்கலை மணக்கும் சிலைகளெல்லாம், மண்பெயர்த்து வந்தனபோல் மயக்கமிகு திருக்கோலம்...

தேர்கள்பல இசைபாடி, சதுராடி, பொன்னுலகைச் சிருஷ்டிக்கும் மண்ணுலக நிர்வாணம்; திரிசங்கு நிர்வாணம்; விண்ணுலக நிர்வாணம்...

நிர்வாணத்து முடிவுதானே மகா நிர்வாணம்...?

திப்புசுல்தான் ஓரளவு தனது கொதிப்புண்ட ரத்தம் சம நிலையடைய, மிதிப்புண்ட குழப்பம் ஒருவாறு தீர மதிப்புண்ட ரங்கநாயகியை ஒரு நிமிடம் நினைத்துப் பார்க்கிறான்...

அவளை ஏன் மகாராணியாக்கக் கூடாது?

இவ்விதமாக அவன் நினைத்துப் பார்க்கையில் ஒருபுறம் எரிமலைகள் குமுறுகின்றன...

மறுபுறம் சூறாவளி வீசுகிறது...

இன்னொருபுறம் பூகம்பம் பிளக்கிறது...

என்ன நினைத்தானோ, திடுமென்று எழுந்து கொள்கிறான்...

இசை நின்றது; தாளம் அடங்கியது; நாட்டியம் சிலையானது...



நேரே அவன் ரோஷானி பேகம் இருக்கும் அறை நாடி விரைகிறான்...

அவன் சாப்பிடவில்லை.

அவனைக் கண்ட ரோஷானி பேகம், அவனது நிலையறிந்து பாலையும் பழங்களையும் எடுத்து வைக்கிறாள்...

அகோரப் பசி; அது ஒருவாறு தணிந்து, இன்னொரு பசி ஆரம்பிக்கிறது. மெல்ல ரோஷானி பேகத்தை அவனது கரம் பற்றுகிறது...

''தயவு செய்து ருக்காய்யா பானுவைச் சமாதானம் செய்யுங்கள். அது மிகவும் முக்கியம். கர்ப்பிணியான அவளது இந்த நேரத்தில் அசம்பாவிதங்கள் ஏதும் நடந்து விடக்கூடாது?''

''இதற்காகத்தான் என்னை இப்படியே வரச் சொன்னாயா?''

''இதற்காகவேதான்! என் கணவர்தான் மதுவருந்துவது கிடையாதே! அதனால் எனக்கு அநேக நம்பிக்கைகள் உண்டு. எனது நம்பிக்கை வீண் போகவில்லை. தயவு செய்து புறப்படுங்கள்.''

அவனை வலுக்கட்டாயமாக உசுப்பி எழுப்பி அழைத்துச் சென்ற ரோஷானி பேகம், மிகவும் சாமர்த்தியமாக ருக்காய்யா பானுவின் அறையில் ஏதோ முதலிரவு அனுபவம் போலத் தள்ளி விட்டுத் திரும்புகிறாள். அவளுள் ஒரு நியாயமான நிறைவு...

அது வரையில் அழுதழுது முகத்தை வீங்கடித்துக் கொண்டிருந்த ருக்காய்யா பானு, கணவனது பிரவேசத்தைக் கண்ட மாத்திரத்தில் நிரம்பவும் மகிழ்வு கண்டு எழுந்து கொள்கிறாள்...

நீர்த்துளிகளை உகுத்த அவளது கண்களைத் துடைத்த திப்புசுல்தான், தனது கோபத்திலிருந்து விடுபட்ட பிறிதொரு மனிதனாகக் காட்சி தந்ததை நோக்க...

விளக்குகள் வியந்து கண் மூடிக் கொண்டன...

ஆபரணங்கள் எழுப்பிய ஒலி, இருட்டுமொழி பேசுகின்றன...

சற்றைக்கெல்லாம் ருக்காய்யா பானு என்கிற கர்ப்பிணிப் புஷ்பம்...

ஓ... இது விஷயத்தில் முரட்டுத்தனமான திப்புசுல்தான் மென்மையாகி...

புஷ்பமும் சத்தமிடுமோ?

## 7

**மா**னுடத்தின் நிரந்தர ஞானாசிரியனாய்க் கீழ்த் திசையில் செங்கதிர்ச் செல்வன் உதயமாகிறான்...

மேல் திசையிலிருந்து, ஒரு நாகரிகத்தின் மண்டையைப் பிளந்து கொண்டு இன்னொரு நாகரிகம் பீறிட்டு வருவது போலக் காவிரி நதி, பொங்கிப் பிரவகித்துக் கிழக்கு நோக்கி ஓடிவருகிற அழகு...

கொள்ளையழகு! மைசூருக்கு நேர் வடக்கே ஏறத்தாழ பத்துக்கல் தொலைவில் இந்தக் காவிரி இரண்டாகப் பிளந்து மீண்டும் ஒன்று சேருகிற இடைப்பட்ட தீவு-ஸ்ரீரங்கப்பட்டினம்-அந்த இளங்காலைப் போதில் இனிதாக விழித்தெழுகிறது.

மூன்றரைக் கல் நீளமும் ஒன்றரைக் கல் அகலமும் கொண்ட இந்த மத்தியரங்கம் என்கிற ஸ்ரீரங்கப்பட்டினத்து வாழ் புள்ளினங்கள் கூட ஹைதரையும் திப்புவையும் அலகு விரித்து வாழ்த்துவதில் ஓர் ஆனந்தம் காண்கின்றன!... அந்த அளவுக்கு இந்த மண்ணின்பால் அவர்களது மூலநாடிகள் கொஞ்சமும் மாசு மறுவின்றித் துடிக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவது போலப் பிஞ்சுக்காற்று நிரம்பவும் ஆரோக்கியமாக வீசுகிறது...

ஸ்ரீரங்கநாதர் கோயில் கலசம்கூட சூரியோதயப்பிரகாசம் பட்டுத் திப்புசுல்தானின் தீட்சண்யம் நிறைந்த ஞானக்கண் போல ஒளிர்கிறது.

துயில் கலைந்து எழுந்த திப்புசுல்தான், விரைந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, வழக்கமான உடற்பயிற்சியில்





ஈடுபடுகிறான். அவனது நினைவு முழுவதும் நண்பன் பசவராஜைக் காணவேண்டும் என்றிருந்ததால், நேரத்தைக் கொஞ்சம் சுருக்கிக் கொள்ள நேருகிறது. இரவு மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வீட்டுக்குச் சென்றவன் எந்த நிலைமையில் இருக்கிறானோ? தக்கணத்து வீர வாளாயிற்றே அவன்!

பெருமிதமாக மகிழ்ந்து கொள்கிறான் திப்புசுல்தான்.

பன்னீர் மணக்கும் நந்நீரில் குளித்து முடித்து இறை வணக்கத்திலாழ்ந்து விடுகிறான். [1]காலையில் இறைவனை வணங்கித் திருக்குரானைப் படிப்பது அவனது நித்தியப் பழக்கம்!

புனித பூஜையை முடித்துக் கொண்டு அலங்கார அறைக்குள் நுழைந்தான். அவனுக்கு எப்போதுமே தனக்குத் தானே அலங்காரம் செய்து கொள்வதில் ஓர் அலாதி நிறைவு. நீண்ட வெண்ணிற அங்கியையே தரித்துக் கொண்டான். அதிலே வைரப் பித்தான்கள் கண்களைப் பறிக்கிற மாதிரி...

தலையில் தட்டையாக அகலச் சுற்றப்பட்ட புரான்பூர் தலைப்பாகை. காலில் இரும்புமுட்களைக் கொண்டு தோலால் தைக்கப்பட்ட பாத ரட்சைகள். இடுப்பில் வைரப்பூண் கொண்ட வீரவாள்.

வாசனைத் திரவம் கமகமக்க அவன், நெய் மணக்கும் உணவுக் கூடத்துள் நுழைந்து அமர்ந்தான். அவனது மூன்று வயது மகன் ஃபாத் ஹைதர் - ரோஷானி பேகத்துக்குப் பிறந்தவன் - சிங்கக் குட்டியொன்று அலங்காரம் செய்து கொண்டு வந்தமர்ந்து இருப்பதுபோல ஏற்கெனவே அங்கு அமர்ந்து கொண்டிருந்தான்.

திப்புசுல்தான் என்றைக்குமே தனது மக்களைப் பிரிந்துண வெடுக்க மனமில்லாதவன். வீட்டு மக்கள் மீது அன்புடையவன்தானே நாட்டு மக்கள் மீதும் பற்றுடையவனாக இருக்க முடியும்?

பக்குவமாகச் செய்யப்பட்ட [2]அடைக்கலாங் குருவிகளுள் ஆண் குருவிகளின் தலைக்கறியுடன் காலைச் சிற்றுண்டியை முடித்துக்

1. He performed his morning Prayers and read the Quran-History of Tippu Sultan - P.370. By Hasan.
2. Brains of Male Sparrows I.O.Mss. Eur. C. 10 P. 250.

கொண்டு எழுந்தான். மகன் ஃபாத் ஹைதரைத் தழுவியணைத்து முத்தமிட்டான்.

லால்மகாலின் பிரமாண்டமான தெற்குவாயிலான ஆனை வாயிலுக்கருகே தும்பைப்பூ போன்ற வெண்ணிறமான அவனது புரவி தனது தலைவனை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தது. அதன்மீது ஓர் அரிமாவைப்போல் ஆரோகணித்தான் திப்புசுல்தான். இயல்பாகவே கொஞ்சம் குட்டையான கைகளும் சுருங்கிய பாதங்களையுமுடையவனாக அவன் இருந்தாலும் மாந்தளிர் நிறமான அவனது மேனி ஒரு கொழுத்த சிங்கத்தின் திடகாத்திரத்தை நிரூபணம் செய்தது.

புரவியைத் தட்டிவிட்டான்.

அது, அதன் கம்பீரத்துடன் பறக்கிறது. தொடர்ந்து முன்னும் பின்னுமாகப் பத்து ராணுவ வீரர்கள் ஆயுதபாணிகளாகப் புரவிகளிலேறிப் புறப்பட்டுச் சென்றனர்.

அழியா வாழிக் காவேரிக்கரையின் அந்தண்டைப்புறமாக இருந்த வயற்காட்டில் தனித்துத் தெரிவதுதான் பசவராஜின் வீடு. மொட்டை மாடி வீடானாலும் சத்திரம் மாதிரி அகன்றிருந்தது. பெரும்பாலும் தானிய மூட்டைகள் இருந்தன. விவசாயக் குடும்பம்.

ஓர் அறையினுள் படுக்கையில் சாய்ந்து கிடந்தான் பசவராஜ். உடலில் பல இடங்களில் பத்துப் போட்டிருந்தார்கள். சில இடங்களில் கட்டுப் போட்டிருந்தார்கள்.

அருகே ஒரு மரபுக் கவிதைபோல் அவனது அருமைக் காதலி மஞ்சுளாதேவி கலங்கிய கண்களுடன் அமர்ந்து கொண்டிருந்தாள். இருபதாண்டு முத்திரைகளைப் பெற்ற அவளது பழுத்தஜாதி எலுமிச்சம் பழம் போன்ற மேனி, ஏதோ அகாரணமாகக் கன்றிக் கிடப்பதுபோல் பசவராஜுக்குத் தெரிந்தது.

''மஞ்சு! வீரனது வாழ்க்கை ரத்தத்தில் எழுதப்பட்டு ரணத்தில் முற்றுப்பெற்று, வீர சொர்க்கத்தில் அமரத்துவமடைகிற ஒரு மகா காவியம்! உனக்கு இது புரிய நியாயமில்லை! நீ ஒரு பெண்! உலகம்



புரியாத பெண்! ஒரு மகாயக்ஞத்தில் பிரசன்னமாகி குடும்ப தேவதை! தயவுசெய்து அழுகையை நிறுத்து!''

பசவராஜ் சற்று கடுமையாகவே அவளுக்கு ஆறுதல் அளித்தான்.

மஞ்சுளா தேவியும் மெல்லச் சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். ''திப்புசுல்தான் காதலிக்காக நீங்கள் இவ்வாறு ரணகாயமடைய வேண்டுமா? உங்கள் காதலியாகிய எனக்கு இப்படி நேர்ந்தால் இந்த உதவியை அவர் செய்வாரா?''

''உனக்கு அப்படி நேரக் காரணமே இல்லை.''

''ஒருகால் நேர்ந்திடுமானால் என்றுதான் கேட்டேன்.''

''தன் உயிரையும் கொடுப்பார்!''

''கொடுப்பாரே! இன்னும் உங்களை நண்பனாகத்தானே வைத்துக் கொண்டிருக்கிறார்! ஒரு பதவி, பட்டம் கொடுக்காதவரா உயிரைக் கொடுப்பார்?''

மஞ்சுளாதேவி தனது அந்தராத்மாவில் கொண்டிருந்த பேராசையான கேள்வி, பசவராஜிடம் ஓர் உண்மை புரிந்த அசட்டையான சிரிப்பை வெளிப்படுத்தச் செய்தது. ''எனக்கு நண்பன் என்ற பதவியைவிட, பட்டத்தைவிடச் சிறந்தது எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. விரும்பினால் என்னால் வஸீராக முடியும். மீர் அஸாஃபாகவும் முடியும்.''

''நீங்கள் நினைப்பது போலத் திப்புசுல்தான் அப்படியொன்றும் ஏமாளியல்ல; ஒரு ராஜதந்திரி. உங்கள் வலிவான வாளுக்கு அவர் நண்பராக இருக்கிறாரேயொழிய, பரிதாபமான உங்களுக்கல்ல!''

மஞ்சுளா தேவி இவ்விதமாகக் கூறி நிறுத்தியதும் தனது கட்டுக்கடங்காத கோபம் பீறிட, ''மஞ்சு!'' என்று மிகுந்த மூர்க்கமாகக் கத்திக்கொண்டே படுக்கையின் சாய்விலிருந்து நிமிர்ந்தான் பசவராஜ், நண்பன் திப்புசுல்தானைப் பற்றித் தனது ரசமான காதலியும் குறைகூற அவனது மனம் சம்மதிக்கவில்லை.

''மஞ்சு! மீண்டும் நீ திப்புவைப் பற்றிப் பேச என்னால் அனுமதிக்க முடியாது. உனது நிர்தாட்சண்யமான விமரிசனம் எனக்குத் தேவையுமில்லை. நீ அம்மாவோடு சேர்ந்துகொண்டு இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாய். திப்பு ஒரு மகா மனிதர். அவரது இதயம் ஒரு மானுஷ்யோபநிஷதம்! மூளை இஸ்லாமிய வேதமானாலும் மனம் இந்தக் காவிரியில் தவழ்ந்து விளையாடுகிற பேதமற்ற மானுடக் குழந்தை! 'எனது ஒரு கண் இஸ்லாமானால், மறுகண் இந்து! இதில் வலது இடது என்கிற பேதமே கிடையாது. அது ஒரு வெறும் குறிப்புணர்ச்சி. கண்கள் ஒன்றைவிட்டு ஒன்று தூங்கவும் முடியாது; விழிக்கவும் முடியாது; ஏன்? அழவும் முடியாது' என்று அவர் அடிக்கடி சொல்கிறவர்! அவரது எதிர்கால ஆட்சியில் இந்தத் தக்கண மென்ன? இந்தியாவே ஒரு மானுடக் குடையின் கீழ் நிழலாகி இயங்க வேண்டும் என்று கனவு காண்பவர்! உனக்கு மட்டுமல்ல, ரொம்பப் பேருக்கு அவரைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால் பிடிக்கவுமில்லை. ஒன்றை நினைவில் வைத்துக்கொள். எனது உறையில் கிடப்பது வாளல்ல; அதற்குப் பெயரே திப்புசுல்தான்!''

காதலனின் இந்த நீண்ட பேச்சைக் கேட்டு பெரிதாக அரண்டு போனாள் மஞ்சுளாதேவி. ஆ! இவருக்குத்தான் எத்துணைச் சிநேக விசுவாசம்...

மகனுடைய இந்த வீராவேசமான நட்பிலக்கணச் சூத்திரம், பாற்செம்புடன் அப்போது உள்ளே நுழைய முற்பட்ட பசவராஜின் அன்னை கங்கம்மாளின் செவிகளில் அக்கினிப் பொறிகளாக நுழைந்தன. திப்புசுல்தான் விஷயத்தில் மகனுக்குள்ள பிடிப்பான பாசத்தைப் பற்றி அவள் நன்றாகவே அறிவாள். இது குறித்து அவள் அநேக முறை விருப்பாகவும் வெறுப்பாகவும் விவாதித்தும் இருக்கிறாள்.

பாற்செம்பிலிருந்த பாலை இரு குவளைகளில் ஊற்றி மகனுக்கும் மருமகளுக்குமாகப் பகிர்ந்தளித்த கங்கம்மா, ''பசவா! நீ சொன்னதை நானும் கேட்டுக் கொண்டுதான் வந்தேன், உனக்கு இருக்கிற சிநேகிதப்பற்று அந்த நவாப்புக்கும் இருக்க வேண்டு மல்லவா? நீ அவருக்காகத் தானே போராடிக் காயப்பட்டாய்? இப்படி



பலமுறை உதவி இருக்கிறாய்? எப்போதாவது திப்புசுல்தான் இந்த வீட்டைத் தேடி வந்திருக்கிறாரா? நீ அரண்மனைக்குச் சென்றால்தானே சிநேகிதன்? இதுதான் அரச ஞாயம்! அரசாங்க சிநேகிதம் அடுப்புக்கு உதவாது என்பார்கள்'' என்று கூறுகிறபோது, பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை எடுத்துப் பசவராஜின் முதுகில் இழுப்பதுபோலத் தெரிந்தது மஞ்சுளா தேவிக்கு.

அந்தச் சமயம் பார்த்து...

வெளியில் பல குதிரைகள் வந்து நிற்கிற குளம்புச் சத்தங்கள் கேட்கின்றன...

சன்னல் வழியாகவே எட்டிப் பார்த்த பசவராஜின் கண்கள் வியப்பால் விரிகின்றன.

''அம்மா திப்புசுல்தான் வருகிறார்!''

பசவராஜ் சொன்னது இதுதான்.

அடுத்த வினாடி ஏதோ சிங்கத்தின் வருகையைக் கேள்விப் பட்டவர்களைப் போலப் பயத்தால் துடிப்பு கண்டனர் கங்கம்மாளும் மஞ்சுளாதேவியும். மஞ்சுளாதேவி தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து ஒரு பக்கமாகச் சென்று பதவிசாக நின்று கொண்டாள். கங்கம்மாள் எதிர்கொண்டு அழைக்க வெளியே ஓடினாள்.

'கம்'மென்ற வாசனை முன்னே நுழைய, பின்னே மிகுந்த கம்பீர புருஷனாக உள்ளே நுழைந்த திப்புசுல்தானை நோக்கி, ''எங்கள் வீடு பாக்கியம் செய்தது; நான்தான் பசவராஜின் அம்மா!'' என்று தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டாள் கங்கம்மாள். அந்தம்மாளின் உடல், கௌரவத்தின் சுமையைத் தாங்க முடியாது நடுங்கியது. சற்று முன்பு காட்டிய வெறுப்புணர்வுகள் எங்கோ ஓடிச்சென்று பதுங்கிக் கொண்டன.

பசவராஜின் தாயார் என்று தெரிந்த மாத்திரத்தில் திப்புசுல்தான் மரியாதை உந்தித் தள்ளக் குனிந்து வலக்கரத்தின் விரல்கள் பூமியில் தொட, ''மாவீரனைப் பெற்றெடுத்த அன்னையே, வணங்குகிறேன்! என்னை ஆசீர்வதியுங்கள்'' என்று கூறி வணங்கி நிமிர்ந்தான்.

எப்பேர்ப்பட்ட ராஜியாதிபதியாகப் போகிறவன், எவ்வளவு எளிமையாக வணங்குகிறான் என்பதனையறிகிறபோது, வியப்பின் விளிம்பில் மின்னல் பளீரிடுகிறது! வீரமான நண்பனைப் பெற்றெடுத்த தாயாயிற்றே!

கங்கம்மாளும், ''உலகம் வியக்க வாழவேண்டும்! மக்கள் போற்ற ஆளவேண்டும்!'' என்று வாய் நடுங்க, சொற்கள் அலைமோதச் சொல்லி முடிக்கிறாள்.

''பசவராஜ் எங்கிருக்கிறான்?'' என்று கேட்கிறபோது அவனது அவசரம் வெளிப்பட்டது.

கங்கம்மாள் ஓர் அறையைச் சுட்டிக்காட்ட, அந்த அறையை நோக்கி நடந்து உள்ளே நுழைந்தான் திப்புசுல்தான்.

படுக்கையிலிருந்த பசவராஜ், எழுந்து நின்று மரியாதையுடன் வணக்கம் தெரிவித்தது திப்புசுல்தானுக்கு எரிச்சலாக இருந்தது. இவன் எதற்காகத் தனக்கு மரியாதை செய்கிறான் என்றே எண்ணி வருந்தினான்.

''பசவராஜ்! நீ கூடவா எனக்கு மரியாதை செய்ய வேண்டும்? அது என்னை நானே அவமானப்படுத்திக் கொள்வதாயிற்றே!'' என்று திப்புசுல்தான் ஒரு புனிதமான நட்பின் பந்தங்களெல்லாம் திரண்டு, அது ஒரு சூத்திரமாய் ஒலிப்பதுபோலக் கூறியது அங்குள்ளவர்களை ஆச்சரிய சாகரத்தில் வீழ்த்தியது. சற்று நேரத்துக்கு முன்பு திப்புவைப் பற்றிச் சாரமற்றுப் பேசிய மஞ்சுளாதேவியைக் கூர்ந்து ஒரு நியாய போதனையுடன் கவனிக்கிறான் பசவராஜ். அவனது கண்கள் சென்ற திசையை நோக்கித் திப்புசுல்தானின் தீட்சண்யம் நிறைந்த கண்கள் திரும்பி நோக்குகின்றன. சுவரோரமாக நின்றிருந்த மஞ்சுளாதேவி, தன்னைத் திப்புசுல்தான் கவனிக்கிறார் என்று உணர்ந்து, நாணக்கடலாய்... ஆனால், கொந்தளிக்கத் தெரியாத அமைதியுடன் கரங்களைக் கூப்பி மரியாதை செய்கிறாள்.

''சுல்தான்! இவள் எனது முறைப்பெண். சிவ சமுத்திரத்தில் இருக்கிறாள். பெயர் மஞ்சுளா'' என்று அறிமுகம் செய்து வைத்தான் பசவராஜ்.



மஞ்சுளா தேவியையும் பசவராஜையும் மாறி மாறிப் பார்த்த திப்புசுல்தான், ''பசவராஜ்! உனக்கும் ஒரு காதலி இருக்கிறாள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இவ்வளவு அழகு வாய்ந்த காதலி இருப்பாள் என்பது நான் எதிர்பாராதது. பாரசீகக் கவிதைபோல் இருக்கிறாளே! நீதான் அதிர்ஷ்டக்காரன் என்றில்லை. இந்த ரோஜாவும் அதிர்ஷ்டமுடையதே; இந்த உலகமே வியக்கப் போகிற வாள்வீரனை மணக்கப் போகிறாளல்லவா?'' என்று கூறுகிறபோது, அவனது பார்வை களங்கமற்ற நிதானமும், சொற்களில் பேதமற்ற சரளமும், குரலில் பிசிரில்லாத அழுத்தமும் தெரிந்தன. இன்னமும் அவன் மஞ்சுளாதேவியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருக்கிறான்...

ஒரு தேவதையைப் பார்ப்பது போல அல்லது நிசப்தமான இரவு நேரத்து வெட்ட வெளியில் தோன்றும் மோகினியைக் காண்பதுபோல அவளது அழகு நயத்தை ரசித்தானேயொழிய மற்றபடி எந்தவிதக் கசப்பான சுமைகளையும் கண்களிலோ நெஞ்சிலோ சுமந்து துய்க்கவில்லை என்பது பசவராஜுக்குப் புலனானது.

அந்தப் பார்வையைத் தவறாகப் புரிந்து கொண்டதனாலோ அல்லது தாங்க முடியாத காரணத்தினாலோ மஞ்சுளாதேவி அவ்விடத்தை விட்டகன்று மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தாள். அவளது நினைவின் போக்கினை உணர்ந்து கொண்ட திப்புசுல்தான், ''மஞ்சுளா! நீ இப்போது திப்புசுல்தான் பார்வையில் இருக்கிறாய்! இந்த ராஜ்யத்தின் ஒவ்வொரு ஜடப்பொருளுக்கும் அவன் காவல் என்றால், உயிர் பொருளான நீ அவனது உத்தரவின்றி வெளியே செல்வது அவனையே அவமதிப்பது போல!'' என்று ஒரு நுணுக்கமான கோடிட்டுவரைந்த சொற்சித்திரத்தைக் காட்டியதும், மஞ்சுளா தேவி மருள மருள விழிக்கத் தொடங்கினாள்.

''நீ என் நண்பனின் காதலி! அது எனது நெஞ்சில் பூரணமாகத் தெரிகிறது.''

இவ்விதம் கூறிவிட்டுக் கலகலவென்று நகைக்கிறான் திப்பு சுல்தான். அவனது விளையாட்டு பசவராஜுக்கு அத்துப்படியானது. ஆதலால் அவனும் மௌனமாகவே சிரிக்கிறான். தனது காதலனும்

கூடவே சிரிப்பதைக் கண்ட மஞ்சுளா தேவிக்கு மேலும் எரிச்சலாக இருந்தது.

தனது சிரிப்பு முழக்கத்தை அடக்கிய திப்புசுல்தான், ''மஞ்சுளா! நான் ஒரு கவிதையுடன் இதுவரை பேசியதாக நினைத்துக்கொள். கவிதை எழுதியவனுக்குத்தான் சொந்தம். ஆனால் ரசித்துப் பாராட்ட எல்லாருக்குமே உரிமையுண்டு. அந்த உரிமையிலும் நண்பனுடைய காதலி என்ற பெருமையிலும் நான் அதிகப்படியாகவும் தமாஷாகவும் பேசிவிட்டேன். கோபமா? கோபமிருந்தால் என்னை மன்னித்து விடம்மா!'' என்று கூறுகிறபோது, அவனது பிரகாசமான முகம் மேலுமாக ஒளிர்ந்தது.

ராஜா வாயிலிருந்து, 'மன்னித்து விடு' என்ற சொற்கள் வெளிப்பட்டதும், ''ஐயய்யோ! எவ்வளவு பெரிய வார்த்தையை இந்த ஏழையைப் பார்த்துச் சொல்லி விட்டீர்கள்! நீங்கள் இந்த ராஜ்யத்தின் சுல்தான்!'' என்று படபடப்புடன் மஞ்சுளாதேவி கூறியதைக் கேட்ட திப்புசுல்தான், அந்தச் சொற்களில் படர்ந்த பொருள் நயத்தை ஒரு விமரிசனக் கண்ணோட்டத்துடன் தன்னுள் ரசித்துக் கொள்கிறான்.

இதற்குள் உள்ளே சென்ற கங்கம்மாள் தட்டு நிறையப் பழங்களை அடுக்கிக் கொண்டு வந்து வைத்தாள். அவற்றைக் கவனித்த திப்புசுல்தான், ''அரண்மனையில் இல்லாத பழங்களா இவை?'' என்றான். இந்த வார்த்தைகள் கங்கம்மாளுக்கு மட்டுமின்றி பசவராஜுக்கும் வேதனையைத் தந்தன. ஆயினும் அவன் கண்டு கொள்ளவில்லை. திப்புசுல்தானின் ஒவ்வொரு பேச்சிலும் அசைவிலும் ஏதோ ஓர் உள்ளர்த்தம் இருக்கும் என்பதை அவன் அறிவான்.

பசவராஜுக்குப் பட்டிருந்த காயங்களை ஏற்கெனவே கண்கள் மூலம் அளந்து விட்டான் திப்புசுல்தான். அப்படியொன்றும் பெரிய காயங்களல்ல. வலக்கைப் புறத்தில் மட்டும் வாள்முனை நன்றாகப் பாய்ந்திருந்தது. மற்றபடி சிறுசிறு சிறாய்ப்புகள்தாம், கவசமணியாது தனித்து எதிர்த்ததன் விளைவு! துணைக்கு வருகிற போது தடுக்காமல் இருந்திருந்தால் இந்தச் சிறாய்ப்புகளுக்கும் காரணமில்லாமல்



போயிருக்குமே...! ஆயினும் ஒவ்வொரு காயமும் அவனது வீரத்தின் கமல முத்திரைகளே என்று எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டான் திப்புசுல்தான்!

''பசவராஜ்! இங்கே இருந்து ஏன் அவஸ்தைப்பட வேண்டும்? லால் மகாலுக்கே வந்து விடலாமே! வேண்டுமானால் எனது ஜனானாவான அந்தப்புரத்திலேயே உன்னை வைத்துக் கவனிக்கச் சொல்லுகிறேன்!'' என்று ஓர் அர்த்தப் புதைவுடன் ஏதோ ஒரு நோக்கத்தை வெளிப்படுத்த அல்லது வெளிச்சமாக்கத் திப்புசுல்தான் இவ்விதம் கூறியதை கேட்டு மறுகணமே ஒரு பதைப்பு கண்டவளாய், ''வேண்டாம். வேண்டாம்! உங்களுக்கு ஏன் வீண்சிரமம்? இவர் இங்கிருந்தால் நானே கவனித்துக் கொள்வேன்'' என்று ஒரு மாதிரியான குரலில் மஞ்சுளாதேவி சொல்லி முடித்தாள்.

அவள் அவ்விதம் சொல்லி முடித்ததும் அந்த வீடே அதிருகிற மாதிரி 'பகபக' வென்று முகத்தை அண்ணாத்தி நகைத்து நிறுத்திய திப்புசுல்தான், அவளை மிகவும் கவனத்துடன் நோக்குகிறான்...

''மஞ்சுளா! எனது பார்வைக்குட்பட்ட ஜனானாவை நீ ரொம்பவும் தரக் குறைவாக நினைத்து விட்டாய்!''

திப்புசுல்தான் தனது குரலில் ஓர் அர்த்தமுள்ள வித்தியாசத்தை நோக்கிக் கூறுகிறபோது, அதன் உள்ளுரையிலிருந்து வெளிப்பட்ட தீப்பொறிகளால் சுடப்பட்ட மஞ்சுளாதேவி, ''மன்னிக்கவேண்டும் ஜஹாம்பனா!'' என்றாள். அவளது தொனியில் ஏதோ குற்ற உணர்வு வெளிப்பட்டது.

'ஜஹாம்பனா...'

-இதனைத் தனது மனத்துக்குள் ஒருமுறை கூறிக் கொள்ளுகிறான் திப்புசுல்தான். இது குறித்துப் பிறகு கேட்டுக் கொள்ளலாம் என்கிற நினைவுடன், நண்பனை நோக்கினான். பசவராஜும் இவர்கள் விவாதத்தில் தனது நுழைவை விரும்பாது ஒரு மேற்பார்வையாளன் மாதிரி, மௌனமாகக் கவனித்துப் புன்முறுவல் பூக்கிறான்...

''மஞ்சுளா சின்ன பெண்! உணர்ச்சி வயப்பட்டுப் பேசி விட்டாள்!'' என்று ஒரு சமாதானமே போலச் சொல்லி முடித்தாள், அருகே நின்றிருந்த பசவராஜின் தாயார் கங்கம்மாள்.

இந்தச் சமாதானத்தை ஏற்றுக் கொள்ள விரும்பாத மஞ்சுளா தேவி, ''நான் ஒன்றும் உணர்ச்சி வயப்பட்டுப் பேசிவிடவில்லை. அரண்மனையில் பலதரப்பட்ட தோழிப்பெண்கள் ரொம்பவும் அழகுடையவர்களாக இருக்கிறார்களாம்! அதனால்தான் அப்படிச் சொன்னேன்!'' என்று கூறுகிறபோது, அவளது தோற்றத்தில் தன்னை நியாயப்படுத்திக் கொள்கிற நிமிர்வு தென்பட்டது.

திப்புசுல்தான் மீண்டும் பொருட்செறிவுடன் புன்னகை புரிகிறான்...

''மஞ்சுளா! எனது ஜனானாவில் மட்டுமல்ல; லால் மகால் முழுவதுமே பலதரப்பட்ட அழகிகள், பல வயசுகளில் பலவிதமான எண்ணங்களுடன் உலவி வருகிறார்கள். இது உண்மை; நான் மறுக்கவில்லை. பசவராஜுக்கும் அவர்கள் அனைவருமே பழக்கப்பட்டவர்கள்.''

''பழக்கப்பட்டவர்களா?''

மஞ்சுளாதேவியின் விழிகள் வியப்பால் மருண்டு அகன்று விரிகின்றன...

திப்புசுல்தான், ஒரு காட்சியை வெகு நாசூக்காக விரியக் காட்டி, அதன் மூலம் ஏற்படுகிற எதிருணர்வின் அவஸ்தாபேதங்களைப் பசவராஜும் சேர்ந்து அனுபவிக்கட்டுமே என்கிற தோரணையுடன் இடி முழக்கம் போலச் சிரிக்கிறான்...

''ஆம் மஞ்சுளா! நன்றாகவே பழக்கப்பட்டவர்கள். ஆனால் எனது நண்பன் - உனது காதலன். பெண்கள் விஷயத்தில் புனிதமானவன்! புரிகிறதா?''

திப்புசுல்தானின் இந்த விளக்கம் மஞ்சுளா தேவிக்கும், கங்கம்மாளுக்கும் மெய்ச் சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது.



திப்பு மீண்டும் நாவசைத்தான்: ''மஞ்சுளா! இன்னொரு விஷயம் தெரியுமா?''

''என்ன ஜஹாம்பனா?''

'ஜஹாம்பனா'

திப்புவின் மன ஆழத்தின் மெல்லிய முனகல்...

பிறகு சொன்னான்: ''எனது லால்மகாலில் உன்னைவிட அழகானவள் எவளுமே இல்லை. ஏன்? என் மனைவிமார்களும் இல்லை.''

மஞ்சுளாதேவிக்கு அது பெருமை தரத்தக்கதாக இல்லை; ''நீங்கள் என்னைச் சோதிக்க வேண்டாம். இப்போதே இவரை உங்கள் ஜனானாவுக்கே அழைத்துச் செல்லலாம்.''

மஞ்சுளா தேவியின் இந்தத் தீர்க்கமான பேச்சைக்கேட்டு மீண்டும் நகை முழக்கம் செய்கிறான் திப்புசுல்தான். அது முந்திய இடி முழக்கச் சிரிப்புக்கு வேறுபட்டு ஒலிக்கிறது...

''மஞ்சுளா! நீ அழைத்தாயே ஜஹாம்பனா அதன் அர்த்தம்?''

''நிலப்பரப்பின் அரசே!''

''அச்சா! உனக்கு உருது தெரியுமா?''

''தெரியும்!''

''ஓகோ! நல்லது; நேரமாகிறது?'' என்று கூறிக் கொண்டே சட்டைப் பை கடிகாரத்தை இழுத்து மணி பார்க்க நினைத்து முயலுகிறபோது...

அதனையவன் எடுத்து வர மறந்துவிட்டான் என்பது புலனானது. ஓ... என்ன மறதி!

பசவராஜும் எழுந்து கொண்டான்.

''உட்கார் நீ எதற்காக எழுந்து கொள்கிறாய்?'' என்று திப்பு சுல்தான் பொய்க்கோபத்துடன் அரற்றிக் கொள்கிறான்.

''என்ன இருந்தாலும் நீங்கள் ஜஹாம்பனா என்றான் பசவராஜ்.''

திப்புவுக்கு நிஜமாகவே கோபம் இலேசாகத் தலை நீட்டியது. ''அவ்விதம் நினைப்பதனால், நீ இனிமேல் அரண்மனைக்கு வராதே! நான் இந்த தென் ராஜ்யத்துக்கு ஜஹாம்பனாவாகப் போகிறேன்! நீ என் இதய சாம்ராஜ்யத்துக்கே ஆலம்பனா... (அனைத்தின் தலைவன்) ஆலேஜா... (பெருந்தலைவன்) புரிகிறதா?''

பசவராஜின் கண்கள் வெகுவாகக் கலங்கி விட்டன. நட்பின் சாரமாய் நீர்த்துளிகள்...

ஒரு கம்பீரப் பார்வையைத் தனது நண்பன்பால் வீசி, இமைகள் படபடக்க, உதடுகளை அழுந்தக் கடித்துப் பின்னர் பிரித்து, மஞ்சுளா தேவியை நோக்குகிறான் திப்புசுல்தான்.

''மஞ்சுளா! பசவராஜைக் கவனித்து என்னிடம் ஒப்படைக்க வேண்டியது உன் பொறுப்பு. அரண்மனை வைத்தியரை அனுப்பி வைக்கிறேன்'' என்று கூறிய திப்புசுல்தான் புறப்பட ஆயத்தமானபோது...

''சின்ன நவாப் ஒன்றும் சாப்பிடாமல் செல்வது மனசுக்கு என்னவோ போல் இருக்கிறது!''

கங்கம்மாள் இவ்வாறு கூறி வருத்தப்பட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, மஞ்சுளா தேவி சொன்னாள்: ''நம்ம வீட்டில் அவருக்குக் கொடுக்கக்கூடியது பழம் ஒன்றுதான். அது அவருடைய அரண்மனையில் அம்பாரி அம்பாரியாக இருக்கிறது. அரண்மனையில் இல்லாத எதை நம்மால் தர முடியும்?''

திப்புசுல்தான் ஒரு மர்மமான புன்முறுவலுடன் அவர்களைப் பார்க்கிறான்...

''அரண்மனையில் இல்லாதது இங்கே இருக்கிறது! அதைச் சாப்பிட வேண்டும் என்றுதான் இந்தக் குப்பைகளான பழங்களை ஒதுக்கித் தள்ளினேன். மஞ்சுளா! பசவராஜ் அடிக்கடி கம்பங்கூழின் இனிமையான வாசனையைப் பற்றி வர்ணிப்பான்! அதைச் சாப்பிடப் போகிறேன். ஏதோ, உன் கையாலேயே அதைக் கரைத்து அளவான உப்பிட்டு, தொட்டுக் கொள்ளக் கருவாடு இருந்தால்... ஓ... நீங்கள் லிங்காயத்து வகுப்பைச் சார்ந்த சைவர்களில்லையா...? மறந்து



போனேன்....! பரவாயில்லை... திண்டுக்கல் வெங்காயமிருந்தால் உரித்துக் கொண்டு வந்து வை... போதுமானது!''

சர்வ வல்லமை படைத்த ஒரு ராஜ கம்பீரம், கேவலம் கம்பங்கூழ், வெங்காயம்...

பசவராஜோ வியப்பில் அதிர்ந்து போனான்...

சற்றைக்கெல்லாம் மஞ்சுளா தேவி கொண்டு வந்த இந்த மண்ணின் நிஜமான மணங்கொண்ட வலிவான அமுதத்தை, சாகா வரத்தைப் பெறுகிறவன் மாதிரிப் பெற்று, அமர்ந்து ஆனந்த மனோலயத்துடன் பருகுகிறான் திப்புசுல்தான்.

வெங்காயத்தைக் கடிக்கிறபோது... சுவை, இனிதான சுருதிதான்...

ஆனால் பொறி கலங்கிக் கண்களில் நீர்திரண்டு விடுகிறது...

மஞ்சுளாதேவி கலகலவென்று சிரித்து விடுகிறாள்...

அனைவருமே மௌனமாக ரசித்துச் சிரிக்கின்றனர்...

திப்புசுல்தானும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டு தானும் சிரித்து, மூன்று குவளைக் கம்பங்கூழைப் பருகி முடித்துப் பட்டுத் துணியால் வாயைத் துடைத்துக் கொண்டு ஓசை எழாது ஏப்பம் விடவும் செய்தான்...

பிறகு, கையலம்பிக் கொண்டு புறப்பட்டான்.

ஆ! இவன்தான் திப்புசுல்தானோ?

இரண்டு இதயங்கள் மட்டும் இவ்வாறு எண்ணி வியக்கின்றன...

'இவன்தான் திப்புசுல்தான்' என்பது போல எங்கோ ஓர் ஈசான மூலையிலிருந்து பல்லி பலபலக்கிறது...

'இன்னொரு திப்புசுல்தானும் இருக்கிறான்...' என்கிற ஒரு புதிய செய்தியையும் தோட்டத்துத் தொழுவத்தில் கட்டியிருந்த பசுமாடுகளில் ஒன்று 'அம்மா' என்று அலறுவதன் மூலம் அறிவிப்பதும் காதுகளில் விழுகிறது...

அது...

அவனது இளம் பிராயத்துப் பசுவதைக் கொடுமையை எடுத்துக் கூறுவது போலத் தெரிகிறது...

நாணயம் என்பதற்கே இருபக்கங்கள் உண்டு. அப்போது தானே செலாவணியாக முடியும். நாணயமான மனிதனும் இருபக்கங்களை அல்லது இரு மாறுபட்ட இளமையில் ஒரு மாதிரியும் அந்தக் கட்டத்தைத் தாண்டுகிறபோது ஒருமாதிரியான குணாதிசயங் களையுடையவன்தானே.... என்கிற மாதிரி தெருவாசலில் நின்றிருந்த அந்த ராஜ குதிரை கனைக்கிறது.

அதன் பாஷையை உணர்ந்து கொண்டவன் மாதிரி அதனைத் தட்டிக்கொடுத்த திப்புசுல்தான், அதன்மீது கம்பீரமாக ஆரோகணித்தான். உடன் வந்த வீரர்கள் குதிரைகளில் ஏறிக் கொண்டனர்.

குளம்படிச் சத்தங்கள் லால் மகால் வரை மிகவும் துரிதகதியில் தொடர்ந்தன.

## 8

**லா**ல்மகாலை அடைகிறபோது, நேரம் பகலின் உச்சிப் போதைத் தொட்டுக் கொண்டிருந்தது.

அதுவரையில் லால்மகாலில் ஒரு விஷயம் பற்றிப் பெரிதான கசாமுசாக்கள் ஏற்பட்டுப் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவைக் குழப்பிக் கொண்டிருந்தது. ஒரு சர்வாதிகாரிக்குச் சமமான அந்த ஜஹானே மலிக் (புவியின் தலைவி) எது எதைத்தான் சமாளிக்க முடியும்? அண்ணன் தம்பிகளான திப்புசுல்தான், அப்துல் கரீம் பகைமையுணர்ச்சிகளுக்குப் பாதுகாவலாக இருப்பாளா? திப்பு சுல்தானின் காதலியான ரங்கநாயகி பற்றிய பிரச்சினைக்குச் சமாதானம் கூறுவாளா? எப்போதும் யுத்தம் யுத்தம் என்று படைச் சவாரி செய்து வரும் கணவர் ஹைதர் அலிக்கு அமைதி கொடுப்பாளா? அரசாங்க நிர்வாகத்தைத்தான் மேற்பார்வையிடுவாளா?



இவ்விதம் ஏதேனும் ஒரு பிரச்சனை எந்த ரூபத்திலாவது வந்து குதித்துச் சிந்தையைப் பிளக்கிறதே என்று நொந்து கொள்கிறாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. அவள் இப்படியான நேரங்களில் அந்த ஆர்க்காட்டில் திருச்சமாதி கொண்டிருக்கும் மகானான திப்பு மஸ்தான் அவுலியா என்பவரையே வேண்டிப் பிரார்த்தனை செய்து கொள்வாள். அந்த மகானுடைய அருளையும் பெயரையும் கொண்டவனல்லவா திப்புசுல்தான்! அவனுக்கு ஏதும் அசம்பாவிதம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகுந்த கவனமுடன் இருந்தாள் பெரிய சுல்தானா பேகம்.

தப்பிப் பிறந்துவிட்டானோ தம்பி அப்துல் கரீம்...

இப்போதும் சிலசில வழுக்கைக் காரணங்களைக் கொண்டு, மைசூரின் பழைய மகாராணியான லட்சுமியம்மணியம்மாளை உடனடியாகக் கைது செய்து சிறையில் தள்ளவேண்டும் என்கிற தீவிரமான முயற்சியில் ஈடுபட்டு, அதற்கான ஆணையைப் பிறப்பிக்குமாறு விவாத யுத்தம் புரிந்துகொண்டிருக்கிறான் அப்துல் கரீம்...

அவனுக்குச் சாதகமாகவும் அதே நேரத்தில் தமது அரசாங்கத்துக்கு ஏற்படப் போகிற பாதகங்களை விளக்கியும் ஆதரவாக எடுத்துக் கூறினான் திவான் சாகிப் மீர்சாதிக், தொலைவில் திவான் கிருஷ்ணாராவும், ஜீவாஜி சீனுவாசராவும், சாமாராவும், ரங்க ஐயங்காரும், குலாம் அலிகானும், மாரியட்டும் அவரவர் இருக்கைகளில் அமர்ந்து காணப்பட்டனர். திவான் பூரணய்யாவைக் காணவில்லை. அவர் தமது மிர்மிரான் (ராணுவம்) பகுதியை ஓர் அவசியத்தை முன்னிட்டுப் பார்வையிடச் சென்றிருந்தார்.

நடுநாயகமாக வீற்றிருந்த பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா, அந்தச் சித்திரக் கூடத்தைக் கவனிப்பவள் போல் பாவனை செய்து கொண்டே, ''எதற்கும் திப்பு வரட்டும், கரீம்! அவனைக் கலந்து ஆலோசிக்காமல் நான் எந்த முடிவுக்கும் வருவதற்கில்லை. உனது தந்தையின் ராஜப் பிரகடனம் அவ்வாறானது என்பது நீங்கள் அனைவரும் அறியாததல்லவே?'' என்றாள்.

பெரிய சுல்தானா பேகத்தின் இந்தப் பதிலை நன்றாகவே ஜீரணித்துக் கொண்ட திவான் சாகிப் மீர்சாதிக், தன்னுள் மிகுந்த நயமாகச் சிரித்துக் கொள்கிறான்; ''பேகம் சாஹிபா! நிலைமைகள் மோசமாக இருக்கின்றன! மைசூர் மகாராணி லட்சுமியம்மணி யம்மாள், மகா ராஜ தந்திரியான திருமலை ராவுடன் ஒரு வருமான சதவிகித ஒப்பந்தத்துடன் நமது ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி செய்கிறாள். அதற்குப் பல கும்பினி அதிகாரிகள் துணை நிற்கிறார்கள். இந்த நேரத்தில் நாம் மகாராணி லட்சுமியம்மணியம்மாளைச் சிறைப் படுத்தவில்லையானால் காரியங்கள் மீறிப் போகும்!'' என்று கூறுகிறபோது, அதில் பொய் கலவாத உண்மையானது, பெரிய சுல்தானா பேகத்தின் காதுகளில் அணிந்திருந்த கரன்பூல் அணியைப் போன்று பிரகாசமாகத் தெரிகிறது. இது பெரிய சுல்தானா பேகத்துக்கும் புரியாமல் இல்லை. ஆனால் இதில் அப்துல் கரீம் ஏன் சம்பந்தப் பட்டிருக்கிறான் என்பதுதான் புரியாத வியப்பாக இருந்தது. எனவே அவள் பதில் சொல்ல முடியாது யோசித்தாள்.

லால்மகாலையடைந்த திப்புசுல்தான், உள்ளே ரகசியமாக நடந்து கொண்டிருக்கிற விஷயத்தைக் கேள்விப்பட்டு, நிரம்பவும் துரிதத்துடன் நேரே சித்திரக் கூடத்துள் பிரவேசித்தான்.

அவனைக் கண்டதும் அத்தனை அதிகாரிகளும் எழுந்து நின்று மரியாதை செய்வதை ஒரு கௌரவமான கண்ணோட்டத்துடன் ஏற்கிறான் திப்புசுல்தான். அன்னையின் அருகில் அமர்ந்திருந்த தம்பி அப்துல் கரீம் மட்டும் எழுந்திராமல் தாயுடன் அமர்ந்தே காணப்படுகிறான்...

அவனது கர்வம் திப்புவின் உணர்ச்சிக்குத் தீமூட்டுவதாக இருக்கிறது.

தாயின் வலப்புறத்தே இருந்த புலியாசனத்தில் அக்கினிச் சொரூபமாய் அமர்ந்த திப்புசுல்தான், விவரத்தைத் தனது அந்தரங்கக் காரியதரிசி குலாம் அலிகான் மூலமாகத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறான். அனைத்தையும் செவிமடுத்துச் சற்றுநேரம் வரை அமைதியாக யோசித்துப் பின்னர் கணீரென்று பதில் சொன்னான்:



''மகாராணி லட்சுமியம்மணியம்மாவைக் கைது செய்கிற அதிகாரம் இந்த லால் மகாலில் எனது தந்தையாரை நீக்கி வேறு எவருக்குமே கிடையாது. எனவே தந்தையார் திரும்பியதும் இது குறித்து ஆலோசிக்கலாம்! ஒரு காலத்தில் இதே மகாராணி லட்சுமியம் மணியம்மாளும், காலஞ்சென்ற அவரது ராஜபுருஷர் கிருஷ்ண ராஜ உடையாரும் ஓகோவென்று இந்த மைசூர் சாம்ராஜ்யத்தை ஆளுகிறபோது எனது தந்தையார் கைகட்டிச் சேவகம் செய்திருக்கிறார்! விழாக்களில் 'சலா'மிட்டிருக்கிறார்! அவர் செய்த நன்றியை அவர்கள் மறந்தனர்; நாட்டை இழந்தனர்; இப்போது விதவையாகி பொம்மையாகிப் போனார் மகாராணி லட்சுமியம்மணி யம்மாள். கோடான கோடி செல்வம் இருக்கலாம். ஆனால் ஒரு சாதாரண திருமலை ராவ் மூலம் எதையும் சாதித்து விடமுடியாது. அவர் அவர்களையடக்கியாள எனது தந்தையாரின் பத்து விரல்களுக்குத் தெரியும்! ஒருவேளை அவை போதாதென்றால், இந்த எதிர்கால ஜஹாம்பனா திப்புசுல்தானின் குட்டை விரல்களுக்குப் பூவைப் பறிக்கத் தெரியும்; பூமியைப் பிளக்கவும் தெரியும்!'' என்று சிம்மம் போலக் கர்ஜனை புரிந்த திப்புசுல்தான் மேலும் அங்கு அமர்ந்து விவாதிக்க மனமில்லாதவனாய் எழுந்து கொண்டான். மீண்டும் அனைத்து அதிகாரிகளும் எழுந்து நின்றனர். இப்போது அப்துல் கரீம் முன் மாதிரியே தாயோடு மிகுந்த கர்வத்துடன் அமர்ந்து காணப்பட்டது திப்புசுல்தானுக்கு எரிச்சலைச் சற்று அதிகமாகவே மூட்டிவிட்டது.

அருகே இருந்த தபால் அதிகாரி ரங்கா ஐயங்காரை நோக்கி ''ரங்கா ஐயங்காரே! தபால்களையும் மனுக்களையும் பார்வையிடச் சற்றுக் கால தாமதம் ஏற்பட்டு விட்டது. அவற்றை என் அறைக்கு எடுத்துக் கொண்டு வாருங்கள்!'' என்று ஆணை பிறப்பித்துவிட்டுத் தனது அறை நோக்கி நடந்தான். அவ்விதம் நடந்து சென்றவன் பத்தடிதூரம் சென்றதும் திரும்பிப் பார்த்து, ''கரீம்! காலில் ஏதேனும் அடிபட்டிருக்கிறதா?' என்று தனது தம்பியை மிகவும் குத்தலாகக் கேட்டான்.

அப்துல் கரீம் வாய் திறந்து பதில் சொல்லாமல், இல்லை என்பது போலத் தலையசைத்து வைத்தான். அது இன்னும் எரிச்சலைத்

தூண்டவே, ''நல்லவேளை கரீம்! மூளையில் ஏதும் அடிபட வில்லையே வாயைக் கூடத் திறக்க முடியாதபடி?'' என்று கிண்டலும் கோபமுமாகக் கேட்டவனாக விரைந்து சென்று மாடிப்படிகளை இரட்டை இரட்டையாகத் தாவி ஏறுகிறபோது...

மகனுடைய இந்த மூர்க்கமான பிடிவாதப் போக்குக் காரணமாகத் திவான்சாகிப் மீர்சாதிக் ஏதும் புதுக்குழப்பங்களை உண்டு பண்ணிவிடக் கூடாதே என்றெண்ணி வேதனைப்பட்டுக் கொண்டாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. அவளது கவனம் முழுவதும் கரீமின் போக்கைக் கண்டிப்பதா? மீர்சாதிக்கைச் சமாதானம் செய்வதா?

பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் குழப்பம் கணத்துக்கு கணம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

அனைவரையும் வழியனுப்பிவிட்டுத் தனிமையிலிருந்த இளைய மகன் அப்துல் கரீமை மிகுந்த ஆத்திரத்துடன் கவனித்தாள்.

''கரீம்! என்ன இருந்தாலும் திப்பு உனது அண்ணன்; நாளைய நவாப்! அவனுக்கு நீ கொடுக்கிற மரியாதை பொறுத்துக்கொள்ள முடியாதது.''

அன்னையின் இந்த அறிவுரைக்குத் தனது செவிகளைத் தயார்படுத்த மனமில்லாதவனாய் எழுந்து கொண்ட அப்துல் கரீம், ''திப்பு எனது அண்ணன்; மறுக்கவில்லை அம்மாஜான்! ஆனால் எதிர்கால நவாப்பாக ஏன் நான் வரக்கூடாது?'' என்றான். அந்தச் சொற்கள் நெருப்புத் துண்டங்களாகத் தெறித்து, பெரிய சுல்தனா பேகம் பக்ருன்ஷாவின் உடலில் பட்டுச் சுட்டன.

''அவ்வளவு பெரிய பேராசை இருக்கிறதா, உனக்கு அப்துல்?''

''இது பேராசையல்லம்மா! நியாயமான ஆசை!''

''நடக்கிற காரியத்தைப் பற்றித்தான் கற்பனை செய்து பார்க்கிறாயா, கரீம்?''

''கரீம் எப்போதுமே யதார்த்த கற்பனா வாதி! உங்கள் பெரிய மகனைப்போல அதீத கற்பனா வாதியல்ல.''



''உன் அழிவை நீயே தேடிக் கொள்ளப்போகிறாய்?''

''ஒன்று நானழிவேன்; அல்லது இந்த ஸ்ரீரங்கப்பட்டினம் அழியும். நீங்கள் முன்கூட்டியே உங்கள் செல்வ மகன் - திப்பு மஸ்தான் அவுலியாவின் வரத்தில் பிறந்த தெய்வமகன் - திப்புவிடம் சொன்னாலும் எனக்குக் கவலையில்லை. எதை எது கொண்டு எப்படித் தவிர்க்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும்.''

''திவான்சாகிப் மீர்சாதிக்கின் துணைகொண்டு நீ அதிகமாகப் பேசுகிறாய்''

''ஏன் ராணுவ திவான் பூரணய்யாவையும் என் கைக்குள் போட்டுக்கொள்ள வெகுநேரம் பிடிக்காது. என்னை எந்த அதிகாரமும் கட்டுப்படுத்த முடியாது.''

''ரொம்பவும் திமிராகப் பேசுகிறாய்! உனது தாய்க்குள்ள அதிகாரம் என்ன என்பது கூடப்புரியாது பேசுகிறாய்.''

''நிச்சயமாக என் தாய் எனது அழிவுக்குப் பாதை வகுக்க மாட்டார் என்பதை நான் பூரணமாக அறிவேன். அப்படிப் பாதை வகுப்பவள் ஒரு நல்ல தாயாகவும் இருக்க முடியாது; எனது தாய் அல்லாஹ்வுக்குப் பயந்தவள்; குரானை வணங்குகிறவள். திப்புவையும் அப்துல் கரீமையும் இரு கண்களாகப் பாவிப்பவள்; இதனை நானறிவேன்.''

பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா ஒரு கணம் அயர்ந்து போனாள். தன்மீது இவனுக்குள்ள நம்பிக்கைதான் எத்தனை பெரிது...

உண்மையும் அதுதானே?

''அப்துல்! இந்த நாடு வெள்ளைக் கழுகுகளால் கொள்ளைப் போக இருக்கிறது... நமது தேசம், நமது மக்கள், வெள்ளையர்களுக்கு அடிமையாய்க் காலம் பூராவும் தங்கள் பெருமைகளையிழந்து நாயினும் கேடாகிவிடப் போகிறார்களோ என்றுணர்ந்துதான், உனது தந்தையாரும், அண்ணனும் சுதந்திர முழக்கமிட்டு யுத்த பயணங்களையே தங்கள் வாழ்வாகக் கருதி, ரத்தம் சிந்தி வருகிறார்கள், யோசித்துப் பார்!''

''சுதந்திரம் யாருக்கு வேண்டும்? இருக்கிறவரை நாம் சுகபோகமாக இருந்து அனுபவிப்பதைவிட்டு வெள்ளையனை வெளியேற்ற நாம் யார்? வெள்ளையர்கள் நமது கோட்டைக் கொத்தளங்களை இடித்துத் தரைமட்டமாகவா நினைக்கிறார்கள்? ஒரு சமாதான உடன்படிக்கை கேட்கிறார்கள். பிறகு அவர்கள் இந்தப் பரந்த தேசத்தை தங்கள் வசப்படுத்திக் கொண்டு ஏதோ அவர்கள் வந்த காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளப்போகிறார்கள். அவர்களுக்குச் சேர வேண்டியது கப்பம்! அதனைக் கொடுத்துவிட்டால், நமது சுகபோக வாழ்வில் அவர்கள் தலையிடவே மாட்டார்கள். தெற்கில் பாளையக்காரர்கள் ஒவ்வொருவராகத் தூக்கில் தொங்கிக் கொண்டு வருகிறார்கள்... நமக்கும் அந்த நிலைதான் முடிவில் தேவை என்றால் நாமும் இந்தத் தேவையற்ற அநாகரிகச் சுதந்திரப் பிரகடனம் செய்து மடிய வேண்டியதுதான்!''

அப்துல் கரீம் இவ்வாறு சொன்ன மறுகணம், ஓங்கிக் கன்னத்தில் பளீரென்று அறைந்தாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. ''தூ நீ என் வயிற்றில் பிறக்கவேண்டியவனே இல்லை! உன் தந்தையார் இந்த நிலைக்கு வர எப்படி எல்லாம் பாடுபட்டிருக்கிறார் என்கிற கதை உனக்குத் தெரியாது. நமது ராஜ்யத்தில் முப்பத்தேழு ஜில்லாக்களும் ஆயிரத்தி இருபத்து நான்கு தாலுக்காக்களும் உருவாக எவ்வளவு ரத்தம் சிந்த வேண்டியதாயிற்று தெரியுமா? உனது அண்ணன் திப்பு, தனது பதினேழாவது வயதிலேயே யுத்தகளம் சென்று பல வெற்றிகளைக் கண்டவன். அவனுக்கு ஊறு செய்ய நீ நினைப்பாயானால், எனது இடுப்பிலிருக்கிற குத்துவாள், நினைத்த உன் நெஞ்சுள் பாய்ந்து விடும். சைத்தான்! நீ ஹைதர் என்கிற ஒரு மகாசிங்கத்துக்குப் பிறந்தவனாடா நீ?''

''அது உங்களுக்குத்தான் தெரியும்.''

அடுத்தகணமே ஓங்கி இன்னொரு அறைவிட்டாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. அவள் ஒரு பெண் சிம்மம் என்பதை அவளது அந்தச் சீற்றம் காண்பித்தது.

''பெற்ற தாயைக் கேட்கிற கேள்வியாடா நீ கேட்டாய்?''



''பெற்ற தாய் கேட்கவேண்டிய கேள்வியாக நீங்கள் கேட்கவில்லையா!''

''உன்னைப் பெற்றேனே... அந்த முட்டாள்தனத்தை நான் அனுபவிக்கிறேன்.''

''உங்கள் வயிற்றில் பிறந்தேனே அந்தப் பாவத்தை நான் அனுபவிக்கிறேன்.''

''முட்டாள்! கன்னடத்தின் சிங்கத்தின் புதல்வன் என்ற பெயருடன் திப்பு, ராஜகர்ஜனை புரிகிறான்! நீயோ கோழைத்தனமாக ஊளையிடுகிறாய்.''

''ஊளையிடுவது நரி; அது தந்திரமுள்ளது. எனது ஊளை ஒரு ராஜதந்திரம்!''

''என்னடா ராஜதந்திரம் உனக்குத் தெரியும்? எடுப்பார் கைப்பிள்ளையாகிப் பேசுகிற உனக்கு சுயசிந்தனை ஏது? அது இல்லாதவனுக்கு ராஜ்யமாவது? தந்திரமாவது?''

இவ்விதம் கூறி, ஓரிரு விநாடிகள் வரை தனது தேம்பலைச் சரிசெய்து கொண்டு, திணறலையடக்கிக் கொண்டு, கண்களைத் துடைத்துக் கொண்டாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. பிறகு, மெல்லவும் சாந்தமாகவும் ஒரு விஷயத்தை விளக்கினாள்:

''கரீம்! இந்த விஷயம் உனது தந்தையின் செவிக்கு எட்டுமே யானால், அடுத்த கணமே கொறடா அடிபடுவாயோ அல்லது கொடிய தோலுரிக்கும் தண்டனையை அனுபவிப்பாயோ! ஒரு விஷயத்தை உனக்குச் சொல்லுகிறேன். அப்போது நீ சிறுவன். திப்புவுக்குப் பதினாறுவயது. இந்த மைசூர் ராஜ்யத்தின் புனிதமான இனங்களில் ஒன்றாகக் கருதப்படுவது லிங்காயத்தார் இனம்.''

''அதாவது நமது பசவராஜ் என்கிற சண்டாளனுடைய இனம்...''

''அவன் சண்டாளனோ, சன்மார்க்கனோ... அது வேறு விஷயம். அந்த இனம்! அவர்கள் தங்களது கோயிலுக்குத் தங்களால் பவித்திரமாகக் கருதப்படும் மாடுகளைத் திரிசூலக் குறியிட்டுச் சுற்றி விடுவார்கள். உனது அண்ணன் திப்பு, அந்த மாடுகளைக் கண்டாலே

தனது வைரிகள் என்பது மாதிரிச் சுட்டுத் தள்ளிக் கொண்டே இருந்தான். இந்த அநீதியான செய்கையால் பொதுமக்கள் வெகுண்டெழுந்து உனது தந்தையிடம் முறையிட்டார்கள்.''

''நியாயம்தானே! இந்த நியாயத்துக்கு அப்பா மகிழ்ந்திருப்பாரே!''

''நீ ஒரு காட்டு மிராண்டி! அதனால்தான் இது உனக்கு நியாயமாகப் படுகிறது. ஆனால் உனது தந்தையார், மகா சுல்தானல்லன்; மகாமனிதர்! இந்து முஸ்லீம்கள் ஒற்றுமையே தனது வாழ்வின் குறிக்கோளாகக்கொண்ட மானுட மேதை! உடனே விசாரணை செய்தார். அப்போது திப்புவுக்கு நமது மதக் கொள்கைகளைப் பயிற்சியளிக்கச் சில காஜிகளை நேமித்திருந்தார். அவர்கள் சொல்லிக்கொடுத்த பாடங்களில் ஒன்று பசுக்களை வதை செய்ய வேண்டும் என்பது.''

''இந்துக்களே இதனைச் செய்கிறார்களே!''

''யார் செய்தாலும் அவர்கள் சண்டாளர்களே! விசாரணையின் போது, திப்பு, உண்மையை வெளியிட்டான். 'எனக்கு இவ்வாறு கற்றுக் கொடுத்தவர்கள் எனது ஆசான்களான காஜிகளே' என்று! உடனே அந்தக் காஜிகளை அழைத்து விசாரித்தார். 'என் மகனுக்கு நன்கு விஷயங்களைச் சொல்லித் தரத்தான் உங்களை அமர்த்தினேனே யல்லாது, இப்படியான தீயவைகளைக் கற்றுத்தரவா அமர்த்தினேன்?' என்று கர்ஜித்தார். அந்தக் காஜிகளும், 'நமது மதக்கோட்பாடுபடி அவ்வாறு செய்வதே புண்ணியம்!' என்று பதில் தந்தனர். அத்துடன் நிற்காமல், 'இது உங்களுக்குத் தெரியாது போலும்!' என்று எள்ளினர்.''

''அப்பாஜானுக்குக் கோபம் உடனே கொதித்தெழுந் திருக்குமே!''

''இதையாவது புரிந்து கொண்டாயே! வந்த கோபத்தால் 'மதவிஷயம் முற்றிலும் தெரியாத என்னிடம் நீங்கள் இருப்பது நியாயமல்ல; தெரிந்தவர்கள் ஆண்டவனிடம் செல்வதுதான் நியாயம்!' என்று கூறி அடுத்த கணமே அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்.''



''அப்பாவும் அநியாயவாதிதானா?''

''சீ! நீ உனது தாத்தாவைப்போல பேசுகிறாய்! நாமிருப்பது இந்துதேசம். நமது கொள்கைகளைப் பிறர் மீது ஆக்கிரமித்து அநியாயம் விளைக்கக்கூடாது. நாம் எவ்வாறு இந்துக்களை மதிக்கிறோமோ, அவ்வாறே இந்துக்களும் இஸ்லாமியத்தை மதிக்க வேண்டும் என்ற கொள்கைகளுக்கெல்லாம் பெரிய கொள்கை - மகாகொள்கையுடையவர் உனது தந்தையார். அவர் அத்துடன் நில்லாமல், உனது அண்ணனை, பூலோக நரகம் என்று அவரால் சிருஷ்டிக்கப்பட்ட - ஏன்? மகத சாம்ராஜ்யத்தை யாண்ட அசோகவர்த்தன மகாசக்கரவர்த்தியைப் பின்பற்றிச் சிருஷ்டிக்கப்பட்ட அந்த பயங்கர அறையில் தள்ளி ரத்தம் பீறிட கொறடா அடிகொடுத்த கொடுமையை நானே கண்ணால் கண்டேன். பிறகு எனது தலையீட்டின் பேரில், திப்புக்கு மன்னிப்பை வாங்கிக் கொடுத்தேன். அத்துடன் நிற்காமல் அந்தக் காஜிகளையும் தூக்குத்தண்டனை யிலிருந்து விடுதலைப் பெற்றுத் தந்தேன். முடிவில் உன் தந்தை என்ன செய்தார் தெரியுமா!''

''என்ன செய்தார்?''

இம்முறை அப்துல் கரீமின் குரலில் தெரிந்த நடுக்கத்தைப் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவால் உணர முடிந்தது. அவள் விளக்கினாள்:

''திப்புவிடம் ஓர் ஒப்பந்த கையெழுத்துப் பெற்றார். அதாவது 'நான் திருடினாலோ, சொல் தவறினாலோ, பொய் சொன்னாலோ, யாரிடமாவது லஞ்சம் வாங்கினாலோ, ரகசியச்சதி செயல் புரிந்தாலோ, நான் எந்தத் தண்டனையையும் ஏற்றுக் கொள்வேன்' என்று எழுதிக் கொடுத்துக் கையொப்பமிட்டான் திப்புசுல்தான். அந்த நிலை உனக்கு வரவேண்டாமே என்றுதான் கவலைப்படுகிறேன். சதி செய்கிறவனுக்கு இந்த ஆட்சியில் தூக்கு தண்டனை. அதனை நீ அனுபவிக்க வேண்டுமா? இந்து முஸ்லீம்களுக்கிடையே போராட்டத்தை விளைவிப்பவனுக்குத் தோலுரிக்கும் தண்டனை. அதனை நீ அனுபவிக்க வேண்டுமா? வெள்ளையனை

ஆதரிப்பவனுக்கு மாறுகால், மாறுகை வெட்டப்படும். இதனை நீ அடைய வேண்டுமா? சொல் அப்துல் கரீம்!''

வெகு நேரம்வரை திணறல் கண்ட அப்துல் கரீம், பிறகு சொன்னான்: ''நான் இந்தக் குற்றங்களுக்கெல்லாம் தலைவனாகத் தானே ஆசைப்படுகிறேன்.''

''அப்படி ஓர் ஆசையிருந்தால், பொறுத்திரு. நமது தந்தைக்கே விருப்பமான ஹைதர் நகருக்கு உன்னைத் தலைவனாக்குகிறேன். அதற்காகக் கண்டவர் பேச்சைக் கேட்டுக் கொண்டு சதியில் இறங்காதே!''

ஒரு நிமிடம் மௌனமாக இருந்த அப்துல் கரீம், தனது குறுகிய மனத்துள் என்ன நினைத்துக் கொண்டானோ, அதனை வெளியில் காட்டிக் கொள்ளாமல், பேச்சைத் திசை திருப்புகிறவன் மாதிரி, ''அது சரி; அம்மாஜான்! அது என்ன பூலோக நரகம்? நான் அதனைப் பார்க்கலாமா!'' என்றான்.

''ஓ... அதை நானே உனக்குக் காட்ட நினைத்தேன். நீயாகவே பார்க்க ஆசைப்பட்டுவிட்டாய். வா, என்னுடன்'' என்று கூறிய பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா முன்னே நடக்க, அப்துல் கரீம் பின் தொடர்ந்தான்.

கோட்டைக்குச் சற்றே தள்ளி வடக்குப்புற ஒதுக்குப் புறமான வாயினுள் இருவரும் நுழைந்தனர். மகாசுல்தானா பேகம் வருவதையறிந்து காவலர்கள் மரியாதையுடன் வணங்கி வழிவிட்டனர்.

ஒரு சுரங்கப் பாதை வழியாக பலபடிகள் முன்னே ஒரு காவல் வீரன் தீப்பந்தம் பிடித்துச் செல்ல, பின்னே இருவரும் மிகவும் கவனமாக நடந்தனர்.

பாதாளத்திலிருந்த அந்த அறை, இருள் சூழ்ந்து காணப்பட்டது. தீப்பந்த வெளிச்சத்தைக் கண்டதும், அந்த அறையிலிருந்த கும்பினிச் சிப்பாய்கள் எழுந்து கொண்டனர். மேலும் யாரோ தங்களினத்தைச் சார்ந்த வெள்ளையர்கள் அடைபட வருகிறார்கள் என்றே அவர்கள் நினைத்தனர். ஆனால் வந்தது மகாசுல்தானா பேகம் பக்ருன்ஷா.



''இங்கே அழைக்கப்படுகிறவர்கள் ரொம்பவும் கொடியவர்களான வெள்ளையர்தாம்.'' என்று கூறி நிறுத்தினாள் பெரிய சுல்தானா பக்ருன்ஷா.

ஒரு கிடங்கு போலிருந்த அந்த அறை, நூறடி நீளமும் நாற்பது அடி அகலமுமாகக் காணப்பட்டது. சுவர்களில் இருப்புவளையங்கள்; சங்கிலிகள். உள்ளே இருப்பவர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந் தார்கள். சுகாதார வசதியற்றுப் பார்க்க அசிங்கமாக - மலஜல வாடையுடன் காணப்பட்டது. ஏறத்தாழ 100 பேர்களை நெரிசலுடன் அடைத்து வைக்கலாம்.

காற்றாவது? வெளிச்சமாவது? இந்த இடத்தைப் பார்க்கையில் அப்துல் கரீமுக்கு உடல் பெரிதாக நடுக்கமுற்றது.

''இது உண்மையிலேயே பூலோக நரகம்தானம்மா!''

''இதன் பெயர் அதுவல்ல. பட்டணசாவடி தல்கணெ கிடங்கு! அல்லது பாதாளச் சிறை. இதனில் அனுபவித்து விட்டு விடுதலையாகிச் சென்ற வெள்ளையர்கள் பூலோக நரகம் என்று பெயர் வைத்தார்கள். புறப்படலாமா?''

அங்கு மேலும் தங்கி நிற்க, துணிவில்லாமற் போன அப்துல் கரீம், தலையசைத்தான்.

இருவரும் புறப்பட்டு வெளியேறினர்.

அப்துல் கரீமுக்கு ஏற்பட்ட அஸ்திநடுக்கம் இன்னமும் சமநிலையடையாது அவனைப் பயமுறுத்தியது. ஆயினும் அவனது வக்கிரமான புத்தியில் முளைத்த வஞ்சகமான எண்ணங்கள் இன்னமும் ஒரு நரகத்தைப் போலவே படம் விரித்து ஆடிக் கொண்டிருந்தது.

## 9

**வெ**ள்ளிக்கிழமை சூரியன் சுக்கிரப் பிரகாசத்துடன் உதயமாகி, வானத்தை மேல் நோக்கி அளந்து கொண்டிருக்கிறான்...

அல்லாஹ்வின் திருநாமத்தைத் தொழுது முடித்து நிறைவு கண்ட திப்புசுல்தான், அழகின் வார்ப்படமாய் அமைந்த காதலி ரங்கநாயகியை நான்கு புரவிகள் பூட்டிய சாரட்டில் அமர்த்திக் கொண்டு, ஏதோ ஒரு முடிவை அல்லது அதன் முழுச் சொரூபத்தைக் காணத் தேடிச் செல்வது போலப் படுவேகமாகச் சென்று கொண்டிருக்கிறான்...

அடிக்கடி அவனது தீட்சண்யமிக்க கண்கள், தீங்கனிச் சுவை போன்ற ரங்கநாயகியின் சௌந்தரியமான முகத்தில் லயித்து அதிலும் ஓர் உண்மை அல்லது முடிவைத் தேடுகின்றனவோ என்று நினைக்கத் தோன்றினாலும் அவ்வாறு நினைக்க காரணமே இல்லை என்பது போல அவனது புன்னகை விரிந்து ஒளிர்கிறது.

நேற்றைய முன் தினம்தான் ரங்கநாயகி, ஏதோ பேச்சுவாக்கில் சமீபத்தில் இருக்கும் மேல் கோட்டையில் கோயில் கொண்டிருக்கும் திருநாரணப் பெருமாளைப் பற்றிச் சொல்ல நேர்ந்தது. வைணவப் பெண் என்பது ஒரு புறமானாலும், சந்தர்ப்பத்தின் பாற்பட்ட எதிர்பாராத காரணமாகவே இப்பேச்சு உதயமானது.

இந்தத் தட்சிணப் பீடபூமியில் இந்துக்களும் இஸ்லாமியர்களும் எவ்வளவு சகோதரவாஞ்சையுடன் பழகி, மனிதாபிமானம் என்பது மனிதாபிமானத்துக்கெல்லாம் மிகப் பெரியதென்றும் மிகச் சிறந்ததென்றும் விளங்கியும் அதன்படி நின்றொழுகியும் இருந்திருக்கிறார்கள்! அது வடபுலம் வரை எட்டி எவ்விதமாக வெல்லாம் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது என்கிற ஒற்றுமைத் தத்துவத்தைப் பற்றி ரங்கநாயகி ஒரு ஞானவாசகமே போலக் கூறியதைக் கேட்டுத் திப்புசுல்தான், தனக்கு இச்செய்தி தெரிந்த ஒன்றானாலும், தனது காதலியின் மூலம் கேட்ட காரணத்தினால் வியந்து போனான்! அவனது பரந்து விரிந்த இதயமுரசு முழக்கமிட்டுக் கொண்டிருக்கிற வைராக்கியமும் அதுதானே? அதற்கு ஒரு தெய்வச் சான்றாகச் சொன்ன மேல்கோட்டைக் கதைதான் அவனை ஓர் அபூர்வ ஆச்சரியத்திலாழ்த்தியது! ஆகவேதான் அந்த இடத்தை ஒரு சாட்சி பூர்வமாக நேரில் சென்று, அதுவும் தனது காதலி ரங்கநாயகியுடன் அந்த உண்மையை அல்லது உணர்ந்தெழும் ஆனந்தத்தைப் பகிர்ந்து



கொள்ளவேண்டும் என்று சென்று கொண்டிருக்கிறான்...! அதனுள் அடங்கிக் கிடந்ததை ஏதோ ஒரு புதிய தேசிய ஞானத்தைப் பறைசாற்றுவதாக இருக்கிறது!

திக்கெல்லாம் புகழும் திப்பு சுல்தானாக உருவெடுக்க என்னென்ன வழிகளிருக்கின்றன என்று அவன் பல நாள்களில், பல நேரங்களில் யோசித்ததுண்டு. இந்த மனிதாபிமான சேவையுடன் ஒற்றுமையாய்த் திகழ என்னவெல்லாம் செய்வது என்று பக்கங்களைப் புரட்டுவதும் நூல்களை எழுதுவதும், நுண்ணறிஞர்களுடன் விவாதிப்பதுமாக இருந்து வருகிறான்...

ரங்கநாயகியின் இந்தப் பேச்சுத் திருப்புமுனையில் ஏதேனும் அற்புதங்களை அபூர்வமாகச் சந்திக்க முடியுமா என்று அவனது சிந்தை ஆவல் கொண்டதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமே இல்லை!

சாரட்டு செல்கிற வேகமும், எதிரே கிழித்துக்கொண்டு மோதும் காலைப் போதின் காற்றும் நிரம்பவும் இதமாக இருக்கின்றன.

நீலமங்கலா என்கிற இடத்தைத் தாண்டிச் செல்கிறபோதே மேல் கோட்டை தெரிகிறது. ''அதோ, அதுதான் மேல் கோட்டை'' என்று சுட்டிக் காட்டினாள் ரங்கநாயகி.

எங்கும் பசிய போர்வை கண்களுக்குக் குளுமையாகத் தெரிகிறது. முன்னும் பின்னுமாகக் காவலுக்கு வந்து கொண்டிருந்த வீரர்கள் எந்த நேரத்தில் சாரட்டு எங்கு நிற்குமோ என்கிற கவனத்துடன் குதிரைகளைச் செலுத்திக் கொண்டு வருகிறார்கள்.

மலையடிவாரத்துப் பிரதான வீதியான கீழவீதியில் சாரட்டை நிறுத்துமாறு சாரதிக்கு உத்தரவிடப்படுகிறது. ஒரு காலத்தில் மைசூர் ராஜ பரம்பரையினர்தாம் அந்த வீதியில் வந்து இறங்கலாம். ஆனால் ஹைதர் அலியின் ஆட்சிக்குப் பிறகு, அந்தப் பிரதான வீதியில் யாரும் செல்லலாம் என்கிற உத்தரவு பிறந்தது; தெய்வ சந்நிதானத்தில் பேதா-அபேதமாவது?

அந்த வீதியைக் கவனிக்கிறான் திப்பசுல்தான்...

கோபுர வாயிலை நோக்குகிறான்...

பூ... இவ்வளவுதானா?

''ரங்கநாயகி, நமது ஸ்ரீரங்கப்பட்டினத்துக் கோயில் கோபுரத்துக்கு இது எம்மாத்திரம்?''

ரங்கநாயகி ஞான முறுவலுடன், ''நமது கோயில் இந்த வட்டாரத்திலேயே பெரிய கோயிலாயிற்றே! ஆனால் நமது கோயிலைவிட இந்த கோயிலுக்குச் செல்வம் அதிகம்... மைசூர் ராஜபரம்பரை நவரத்தினங்களை அள்ளிக் கொட்டியிருக்கிறது!'' என்றாள்.

திப்புசுல்தான் ஓர் அழுத்தமான காரணத்துடன் சிரிக்கிறான்...

''செல்வங்களைக் கொட்டி வைப்பது என்பது ஒரு சேமிப்பு; கோயில்களைக் கட்டி முடிப்பது என்பதுதான் ஒரு சேவை! தமிழ் நாட்டுக்கு நீ சென்றதில்லை. அது ஒரு கோயில் பூமி. நான் கண்கூடாக இந்தச் சேவையுணர்வைக் கண்டவன்! நானே நமது ஸ்ரீரங்கப் பட்டினத்தில் ஒரு பெரிய மசூதியைக் கட்டப் போகிறேன்.''

''தொடக்க நாளன்று நீங்கள் அனுமதித்தாலும் அனுமதிக்கா விட்டாலும் நான்தான் சுல்தானாவாக நுழைந்து முதல் தொழுகை நடத்துவேன்!''

சரியோ, தவறோ... ஆனால் ரங்கநாயகியின் சொற்களிலிருந்து ஒரு பரிபூரணத்துவம் தெரிகிறது.

திப்புசுல்தான் தனது காதலியை மிகவும் அர்த்தானு பாவத்துடன் நோக்கிப் பரிசீலிக்கிறான்...

இதற்குள் தொலைவில் அந்தக் கிராமத்து மக்கள் கூடிவிட்டனர். பெரும்பாலும் தமிழ் ஐயங்கார்களும், ஹரிஜன மக்களுமே வாழ்கிற பகுதி அது. ஹரிஜன மக்களுக்குப் பெரியதொரு மதிப்பை வழங்க வேண்டும்; ஆலயத்துள் பிரவேசிக்க வைக்க வேண்டும் என்று இராமானுஜர் உத்தரவிட்டுச் சென்ற முதல் இடமும் இதுதான்!



கோயிலைச் சார்ந்த ஐயங்கார்கள் இளைய நவாப் திப்பு சுல்தானே வருகை தந்ததைக் கவனித்து அருகே வந்து மரியாதை செய்து சாஸ்திர முறைப்படி அழைத்துச் சென்றனர்.

அவன் கோயிலை நாடிச் சென்று பார்வையிடவே விரும்பினான். யாரும் மறுக்கவில்லை; மறுக்க முடியுமா? மூச்...

மேல்கோட்டை மலையின் அடிவாரத்திலேயே திரு நாரணப் பெருமாள் வாசம் செய்து கொண்டிருக்கிறார்...

கிழக்கு நோக்கியிருக்கும் அந்தக் கோயிலினுள் திப்புசுல்தான் நுழைகிறபோது, முறைப்படி தனது பாதரட்சைகளைக் கழற்றி வைத்துவிட்டு நுழைகிற பாங்கு பலருடைய மனத்தைக் கவருகிறது...

''ரங்கநாயகி! ஏதோ எங்கள் மதப் பெண்ணொருத்தி பூஜிக்கத் தக்க தெய்வமாக வைக்கப்பட்டிருக்கிறாள் என்று சொன்னாயே?'' என்று திப்புசுல்தான் கேட்டதும், அனைவருமே இனிமையான கன்னட பாஷையைப் போற்றும் தமிழ் ஐயங்கார்களாதலால் திப்புவின் பேச்சைப் புரிந்துகொண்டு, ''ரங்கநாயகி பதில் சொல்லவே தேவையில்லை. இதோ, அதற்காகத்தானே நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்!'' என்று கூறினார் ஆலயப் பட்டாச்சாரியார். அவரும், அவரைச் சார்ந்தவர்களும் நெற்றியிலும் மார்பிலும் கைகளிலுமாகச் சாற்றியிருந்த திருநாமக் கோலம் திப்புசுல்தானுக்குச் சிரிப்பையுண்டு பண்ணியது. ஆனால் அவன் சிரிக்கவில்லை. நாகரிகம் உணர்ந்த நல்ல அரசியலாளனாயிற்றே அவன்!

பட்டாச்சாரியார் ஒரு பக்கமாகத் தமது கையை நீட்டி சுட்டிக் காட்ட, உடனே இன்னொருவர், கைவிளக்கேந்தி அருகே சென்று ஒரு சிலையைக் காட்டி விளக்குகிறார்; ''சுல்தான் அவர்கள் கவனிக்க வேண்டும்; இவர்தான் சாட்சாத் திருநாரண எம்பெருமாள்! இவரைச் செல்லப்பிள்ளை ராயர் என்றும் அழைப்பர்! இதற்குக் காரணம், இதோ இருக்கிறாளே இந்தப் பீகம் நாச்சியார்தான்! இவள் பெயர் வரதநந்தினி. தில்லி சுல்தான் தென்னாட்டுக் கோயில்களைக் கொள்ளையடித்துச் சென்றபோது, இதோ இருக்கிற உற்சவர் மூர்த்தத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டார். இந்த விக்கிரகத்தை தெய்வச் செயலாக இந்தச் சுல்தான் மகள் வரதநந்தினி

பார்த்துவிட்டாள். பெருமாளுடைய அழகில் மனசைப் பறிகொடுத்துக் காதலித்து விட்டாள். கலி காலத்திலேயே இப்படியும் ஏற்பட்டிருக் கிறது, ரங்கநாயகி உங்கள் மீது காதல் கொண்ட மாதிரி!''

இந்தக் கட்டத்தில் திப்புசுல்தான், அந்தப் பட்டாச்சாரியாரைக் கூர்ந்து கவனிக்க, அந்தக் கண்களில் விளக்கின் வெளிச்சம் கொழுந்து விட்டெரிய, சற்றே நடுக்கம் கொண்ட அந்தப் பட்டாச்சாரியார், ''நீங்க ரெண்டு பேரும் நன்னாயிருக்கணும்! ஓர் ஒற்றுமையை முன்னிட்டுப் பகவானாகப் பார்த்து ஏற்படுத்திய காதல்! இல்லையென்றால் ரங்கநாயகி உங்களை இங்கு அழைத்து வந்திருப்பாளா?'' என்று கூறுகிற போது அவரது குரல் பயத்தால் பிசிர் தட்டியது.

திப்புசுல்தான் மெல்லச் சிரித்துக் கொண்டே, ''இங்கே என்னை அழைத்துவந்தது அவளல்ல; நானாகவே புறப்பட்டு வந்திருக்கிறேன். மனிதாபிமானம் நிறைந்த ஒரு சித்தாந்தத்தைப் பரிசீலித்துத் தெரிந்து கொள்ள அல்லது தெளிவுப்படுத்திக் கொள்ளவே நான் வந்திருக்கிறேன். நான்தான் இவ்வாறு ஓர் ஒற்றுமையைக் கருதி ரங்கநாயகியைக் காதலித்தேன் என்று பார்த்தால், எனக்கு முன்பே ஒரு சுல்தான் மகள் முந்திக் கொண்டு ரங்கநாயகனையே காதலித்து விட்டாள்; பிறகு இந்துக் கோயிலுக்கே வந்து மோக்ஷம் அடைந்தாள் என்கிற கதை எவ்வளவு தூரத்துக்கு உண்மையோ? சிலையை மீட்டு வந்த அந்த ராமாநுஜப் பெரியவர்க்கே வெளிச்சம்! ஆயினும் எனது மதச்சகோதரி ஒருத்தி இங்கே அமர்ந்து ஒற்றுமையைப் பிரகடனப் படுத்துகிறாள் என்கிற மனிதாபிமானச் செய்திதான் என்னை மலைக்க வைக்கிறது. இதனை நேரில் காணவேண்டும் என்று ஆசைப்பட்டேன்; கண்டு கொண்டேன். ஆமாம் இந்தச் சுல்தான் மகளுக்கு வரதநந்தினி என்று பெயர் வரக் காரணம்?''

திப்புசுல்தானுடைய கேள்வியில் ஒரு தெளிவு மின்னலிடுகிறது.

பட்டாச்சாரியார் விழிக்கிறார்...

திப்புசுல்தானே ஒரு யூகத்தால் தெளிவுபடுத்துகிறான்; ''தில்லி சுல்தான் மனைவியர்களுள் ஒருத்தி எனது ரங்கநாயகி போன்றவள். அவளது மகள்தான் இந்த வரதநந்தினி!''



இந்த யூகத்தைப் புரிந்துகொண்ட பட்டாச்சாரியார்கள் பதில் சொல்ல முடியாமலோ, அல்லது பயந்தோ வாய்ப் பொத்திக் கொண்டனர். ஆனால் ரங்கநாயகி கணீரென்று சொன்னாள்:

''எப்படிப் பார்த்தாலும் இவள் சுல்தான் மகள்தானே? நான் இப்போது உங்கள் காதலி; அதனால் வைணவப் பெண்ணாகவே இருக்கிறேன், நாளையே மனைவியான பிறகு நானும் ஒரு சுல்தானா பேகம்தானே?''

திப்புசுல்தான் தனது காதலியின் பேச்சு நயத்தை ரசித்துத் தன்னுள் மகிழ்ந்து கொள்கிறான்.

மலை உச்சியை அண்ணாந்து கவனிக்கிறான்...

''மேலே இருப்பது யார்?''

ரங்கநாயகி பதில் சொன்னாள்:

''நரசிம்ம மூர்த்தி!''

''அப்படியென்றால்?''

''சிங்க உருவில் மனித தெய்வம்!''

''ஓ... எனது தந்தையைப்போல இங்கேயும் ஒரு ராஜ கர்ஜனையா?''

''இது நரசிம்ம கர்ஜனை! இங்கேயும் ஒரு கதையுண்டு; அதுவும் உங்கள் சம்பந்தப்பட்டவர்கள் கதை! வாருங்கள் நடந்தே பேசிக்கொண்டு போகலாம்!''

இருவரும் மலைமீது ஏறிக் கொண்டிருந்தனர்.

''இந்தக் கோயில்களுக்கு உங்கள் பகைவர்களான மைசூர் ராஜ குடும்பம் அடிக்கடி வருவதுண்டு.''

''அப்படியா?''

''அப்போதெல்லாம் உங்கள் தந்தையாரும் வருவதுண்டு. நீங்கள் கைக்குழந்தையாக இருந்திருப்பீர்கள்.''

''அப்படியா?''

''என்ன அப்படியா? நையாண்டி செய்கிறீர்களா? ஒரு சமயம் இப்படி மகாராஜா கிருஷ்ணராஜ உடையாரும் மகாராணி லட்சுமியம் மணியம்மாளும் இந்தக் கோயிலுக்கு வந்து பூஜைகளை முடித்துக் கொண்டு மேலே நாம் செல்வதுபோல் நரசிம்மபெருமாளை தரிசிக்கச் சென்றனர். லட்சுமியம்மணியம்மாள் பூரண கர்ப்பம். மலையேற முடியாததால் அடிவாரத்திலேயே நின்று கொண்டார்கள். மகாராஜா மட்டும் மலைமீது ஏறிச் சென்றார். ஓரிடத்தில் கல் இடறி உருண்டு விழுந்தார் பாருங்களேன்...''

ரங்கநாயகி ஆச்சரியத்துடன் இவ்வாறு கூறிக்கொண்டு வந்ததும், திப்புசுல்தான் இதனை ஒரு சுவை மிக்க நகைச்சுவைச் செய்தியாக ரசித்து, 'ஓகோ' என்று கெக்கலிக்கொட்டிச் சிரிக்கிறான். ''ஓ... எனது சிங்கத்தைப் பழிவாங்க நினைத்தார்கள். அதற்கு முன்பு, இந்த நரசிம்மன் அவர்களை பழிவாங்கி விட்டானா? நன்றி புரிந்தவனாயிற்றே நரசிங்கப் பெருமான்!''

மேலும் மேலும் கெக்கலி கொட்டிச் சிரிக்கிறான் திப்புசுல்தான்...

''பிறகு?''

''பிறகென்ன? உருண்டு விழுந்த மகாராஜாவுக்கு எங்குமே ஒரு சிராய்ப்புக்கூட ஏற்படவில்லை. அதனால் பல தானங்களைச் செய்தார்!''

''ஆ! கப்ஸா!''

''சீ, சீ! உண்மை!''

''அப்படி என்றால், நான் விழுகிறேன்! எனக்கு அடிபடாமல் இருக்கிறதா என்று பார்க்கலாமா?''

விளையாட்டுக்காக வேண்டித் திப்புசுல்தான், நிஜமாகவே விழுவதுபோல பாவனை செய்ய, அதனை நிஜமென்று நம்பிவிட்ட ரங்கநாயகி, அவனைப் பிடிக்க முயன்று ஓடி நிறுத்தபோய் அவளது கால் இடறி உண்மையாகவே விழுந்து உருண்டுகொண்டே போகிறாள்....

''ரங்கநாயகீ!''





பெருத்த கூச்சலிட்டுப் பின் தொடர்ந்து ஓடி வருகிறான் திப்புசுல்தான்...

இதற்குள் தொலைவில் வேடிக்கைப் பார்த்துக் கொண் டிருந்தவர்கள் ஓடி வந்து ரங்கநாயகியைப் பிடித்துக் காப்பாற்றி விடுகிறார்கள்...

புழுதியைத் தட்டிக் கொண்டு, ஏதோ அமர்ந்திருந்து எழுந்தவளைப்போலச் சுபாவமாக நோக்கிச் சிரிக்கிறாள்.

''எங்காவது அடிபட்டு விட்டதா ரங்கநாயகி?'' என்று அக்கறையுடன் விசாரிக்கிறான் திப்புசுல்தான்.

''இல்லை. அடிபட்டதாகத் தெரியவில்லை. ஒரு சிங்கத்தின் காதலியை இன்னொரு சிங்கம் காத்துவிட்டது!'' என்றாள் ரங்கநாயகி.

சற்றுமுன் சொன்ன மகாராணிக் கதை ஊஞ்சலாடுகிறது...

மலையுச்சியை அண்ணாந்து கவனிக்கிறான் திப்புசுல்தான். அந்தப் பார்வை ஒரு சிங்கத்தை இன்னொரு சிங்கம் பார்ப்பதுபோல இருக்கிறது. ஒருவேளை கர்ஜிக்கிற போது குரல்களில் வித்தியாசம் தெரியுமோ என்னமோ?

''ரங்கநாயகி! அந்தக் கோயிலுக்காக நானும் ஏதேனும் உன் பொருட்டு வழங்கியாக வேண்டும் போலத் தெரிகிறது! [1]பத்து யானைகளை எனது அன்பளிப்பாக அளிக்கிறேன்!'' என்று அவன் ஒரு கர்ஜனையே போலப் பிரகடனப்படுத்துகிறபோது, கூடியிருந்த அனைவரும் கரகோஷம் செய்து வாழ்த்துக்கூறி மெய்ம்மறந்து போயினர்.

கீழே இறங்கி வந்து சாரட்டை நெருங்கிய திப்புசுல்தானும் ரங்கநாயகியும் அதில் ஏறியமர்ந்து கொண்டனர். குழுமியிருந்த அனைவருமே கரம் கூப்பி வணங்கி மரியாதை செலுத்தினர். முன்னும் பின்னுமாகக் காவலர்கள் தொடர, சாரட்டு புறப்பட்டது.

வழி நெடுக அவர்கள் வண்டி வண்டியாய் ஏதேதோ பேசி தீர்த்தனர்; பல விஷயங்கள் குறித்தும் தங்கள் எதிர்காலம் பற்றியும்

1. திப்புசுல்தான் இக்கோயிலுக்கு யானைகளை அன்பளிப்பாகக் கொடுத்தான் என்பதற்குச் சாசனம் உண்டு.

மிகவும் ஆழ்ந்து அலசினார். இந்தக் காதல் நிறைவேற வேண்டுமானால் தந்தையார் ஹைதர் அலி ஒப்புதல் தேவை; அது ஒரு பாரமாகத் தெரிகிறது! எதற்கும் ஒரு தீர்க்கமான முடிவெடுக்க அவனால் முடியும். எதையும் மூர்த்தண்யமாக மறுக்கவும் அவனால் இயலும்! அவனைப் பற்றி அவனுக்கே நன்றாகவே தெரியும்.

வேகமாகச் செல்கிற சாரட்டைக் கண்டு மனிதர்கள் மட்டுமல்லாது சாலை நெடுக இருந்த மரங்களும் பயந்து எதிர் கொண்டு ஓடுவன மாதிரி தென்பட்டன.

பாதி வழியைக் கடந்தாய் விட்டது.

லால் மகாலுக்குச் சென்று கவனிக்க வேண்டிய வேலைகள் நிரம்பவும் இருந்தன.

''நான் உங்களை ஒன்று கேட்க வேண்டும்!'' என்றாள் ரங்கநாயகி. சாரட்டின் வேகத்தில் அவள் அசைந்து காணப்பட்டது ஓர் அலாதி அழகைத் தந்தது.

'என்ன?' என்பது போலத் தனது கண்களால் சமிக்ஞை செய்து கேட்கிறான் திப்புசுல்தான்.

''எத்தனை நாளைக்குத்தான் இப்படிப் பயந்து பயந்து நான் உங்களைச் சந்திப்பது?''

ஒரு நிமிடம் ஆழமாக அவளது கேள்வியைப் பரிசீலிக்கிறான் திப்புசுல்தான்.

''விரைவில் விமோசனம் உண்டு. உனக்கென்று ஒரு தனி மாளிகையை நான் கட்டித் தருகிற வரைக்கும் இருக்கிற மாளிகை களின் ஒன்றை ஏற்பாடு செய்கிறேன். ஏன்? எனது தந்தையாரின் வசந்த மாளிகையான தாரியா தவுலத்தையே உனக்கு எனது அன்பளிப்பாகத் தரவேண்டும் என்றுதான் ஆசை. கொஞ்சநாள் பொறுத்துக் கொள்!''

[1]ஸ்ரீரங்கப்பட்டினத்து லால்பாக் நந்தவனத்தில், மிகப் பிரமாதமான வசந்தமாளிகையான தாரியா தவுலத்தில் தன்னைத் தனது

1. பெங்களூரில் மட்டுமல்லாது ஸ்ரீரங்கப்பட்டினத்திலும் ஒரு லால் பாக் உண்டு. அங்கே இருக்கும் இந்த தாரியா தவுலத் என்கிற வசந்த மாளிகையை இன்றைக்கும் பார்க்கலாம். அவ்வளவு அழகு வாய்ந்த இதனைக் கட்டியது ஹைதர் அலி. திப்புசுல்தான் அல்ல.



காதலர் கொண்டுபோய் குடிவைக்கப் போகிறார் என்கிற செய்தி, ரங்கநாயகியின் காதலுக்குத் தேனாபிஷேகமே செய்வித்தது போலிருக்கிறது...

தொலைவில் யாரோ குதிரையில் வாயுவேகம் மனோவேகமாக வருவதைக் கூர்ந்து கவனிக்கிறான் திப்புசுல்தான். அருகே செல்லச் செல்ல வருவது பசவராஜ் என்பது புலனாகிறது.

இந்த இருபத்து மூன்று தினங்களுக்குப் பிறகு, நேற்றுத்தானே இவன் நடமாடத் தொடங்கியிருக்கிறான்! இதற்குள் என்ன குடிமூழ்கி விட்டதென்று இவ்விதம் குதிரையை விரட்டோ விரட்டென்று விரட்டிக் கொண்டு வருகிறான்?

சாரட்டு தனது கடகடத்த சத்தத்தைக் கட்டுப்படுத்தி நிற்கிறது. திடுமென்று வேகத்தைக் குறைத்ததால் அந்த நான்கு புரவிகளும் கனைத்து அடங்குகின்றன.

எதிரே வந்த பசவராஜ் தனது குதிரையின் கடிவாளத்தைப் பலங்கொண்ட மட்டும் இழுத்து நிறுத்துகிறான்...

பெருத்த குரலெழுப்பி அந்தக் குதிரை வாயில் நுங்கும் நுரையுமாக முன்னங்கால்களை வானளாவத் தூக்கி, ஒரு சுற்றுச் சுற்றிப் பின்னர் கால்களைத் தரையில் போட்டுச் சமநிலைக்கு வந்து கனைக்கிறது...

மிகுந்த பரபரப்புடன் குதிரையை விட்டிறங்கிய பசவராஜ், வேகமாகச் சாரட்டை நெருங்கி வந்து ஒருகணம் ரங்கநாயகியைக் கவனித்து, மறுகணம் தனது துடிப்பு நிறைந்த கண்களைத் திப்புவின்பால் திருப்பி, ''குமார சுல்தான்! பேரம்பாக்க யுத்தத்தில் நமது மகாசுல்தான் - உங்கள் தந்தையார் பேராபத்தில் சிக்கியிருக் கிறாராம்! எந்த நேரத்திலும் கும்பினிக்காரர்களிடம் பிடிபடலாம் என்கிற ஆபத்தான அவசரச் செய்தி வந்திருக்கிறது. எனவே நீங்கள் உடனடியாகப் படைகளுடன் புறப்பட்டுப் போக நேர்ந்தாலும் நேரலாம்!'' என்று கூறி நிறுத்தினான்.

இச்செய்தி திப்புசுல்தானை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. சிங்கத்திற்கு வலைவிரித்து விட்டார்களா? அது முடிகிற காரியந்தானா?

''ஓ... கர்னல் பெய்லி! உன்னைச் சந்திக்க நானே வருகிறேன்!'' என்று ஓங்கிக் குரல் விடுத்தான் திப்புசுல்தான். அந்தக் குரல், வான கர்ஜனையோ? அல்லது ராஜ கர்ஜனையோ? என்று நினைக்கத் தோன்றியது. அடுத்து அனைத்துக் குதிரைகளும் கனைக்கின்றன. சாரட்டுப் புயலெனப் பறந்தது.

ரங்கநாயகி உள்ளூற அதிர்ந்து போனாள். என்ன நடக்குமோ? நாளைப்பொழுது எவ்வாறு விடியுமோ?

## 10

**லா**ல்மகாலே ஒருவித சூன்யம் சூழ்ந்த அமைதியுடன் காணப் பட்டாலும், அங்கு நிறைந்திருந்த மனித இதயங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவித களேபரம் கவிந்த போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஆ! மகா சுல்தான் ஹைதர் அலி ஆபத்தில் சிக்கிக் கொண்டார்...

யுத்த களத்திலிருந்து வந்த செய்தியைப் படிக்கப் படிக்கத் திப்பு சுல்தானின் கண்கள் தீப்பிழம்பாகின்றன. நயவஞ்சகக் கும்பலான இந்த வெள்ளைப் பறங்கியரிடம் தந்தையார் சிக்கிக் கொண்டால்?

ஓ... நினைக்கவே நெஞ்சு அலமருகிறது...

ஹைதர் அலி என்ற பெயரிலிருக்கிற ஒவ்வோர் எழுத்தையும் ஒன்பது துண்டுகளாகக் கிழித்தெறிய முனைவார்களே! அவர் மீது இருக்கிற ஆவேசத்தை அந்த வெள்ளை நாரைகள் அலகின் கூர்மை மழுங்குகிற வரைக்கும் கொத்தித் தீர்க்குமே!

[1]பதினோராண்டுகட்கு முன்பு செய்து கொண்ட 'சென்னை ஒப்பந்தத்தை'ப் பதினொரு நாட்களிலேயே கிழித்தெறிய ஆலோசனை நடத்தியவர்களாயிற்றே அந்தக் கிழக்கிந்திய கும்பினிப் பேய்கள்...

அந்த அமைதி ஒப்பந்தத்துக்கு மட்டும் தந்தையார் ஒப்புக் கொண்டிராவிட்டால்!

1. 3-4-1769.



இந்நேரம் இந்தத் தேசத்தில் உரிமைக் கொடி எவ்வளவு சுதந்திரமாய்ப் பறந்திருக்கும்! இவ்வளவுக்கும் காரணம் யார்? ஈன மனத்தவரான நம்மவர்கள்! கூடவே இருந்து குழி பறிக்கிற எண்ணம் கொண்டவர்கள்! மராத்தியரும், நிஜாமும், ஆர்க்காட்டு நவாப்பும், திருவிதாங்கூர் அரசனும்...

எந்தவிதச் சுதந்திர தாகமுமற்ற இவர்கள் தங்கள் சுயநலச் சோபன வாழ்வுக்காக ஒருவரையொருவர் தூண்டிக் கொண்டும், துண்டித்துக் கொண்டும், அதன்மூலம் கிடைக்கும் அற்பமான அமைதியில் தூங்கிக் கொண்டும், தேவையானபோது தேவையானவர் களின் பாதங்களை வருடிக்கொண்டும் வாழ்க்கை நடத்தும் இவர்கள்...

திப்புசுல்தான் பற்கள் கோபத்தால் நற நறக்கின்றன...

பொங்கு மாங்கடல் போலக் கொந்தளிக்கும் அவனது மனம் ''தூ'' என்று தன்னுள் வெறுத்தும் மதித்தும் காறியுமிழ்ந்து கொள்கிறது...

வண்ணச் சித்திரக் கூடம் முழுதும் நிரம்பிக் காணப்பட்ட அனைவரையும் தனது கனன்ற கண்களுடன் பாகுபடுத்திப் பரிசீலிக் கிறான் நண்பன் திப்புசுல்தான், என்கிற நிலைமையை மிகவும் பக்குவமாக உணர்ந்து கொண்டு ஒரு பக்கமாக ஒதுங்கியிருந்து கவனிக்கிறான் பசவராஜ்.

அரசாங்கத்தை நடத்தும் அனைவருமே அவரவர் தத்தம் தகுதிகளுக்கேற்ப அமர்ந்தும், நின்றும், ஒதுங்கியும் காணப்படு கின்றனர். பக்கத்தில் அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா, தனது மகனுடைய பதிலை எதிர்ப்பார்ப்பவளே போலக் காம்பீரியத் தோரணையுடன் அமர்ந்து காட்சியளிக்கிறாள். அவளது மனத்துள் பல்வேறுபட்ட நுரை தள்ளும் பிரச்சனைகளுடன் கூடிய அலைமோதல்கள்! தனது கணவர் - மகா சுல்தான் ஹைதர் அலி- புறப்படுகிறபோதே தடங்கல் மாதிரியான உற்பாதங்கள்! தடுத்தும் முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்று கர்ஜித்தார். இப்போது அந்த வெள்ளைக் கழுகுகள் வலையில் இந்த மைசூர் சுதந்திரச் சிங்கம் அகப்பட்டுக் கொள்ளுமேயானால்...

ஆ! தேசீயமாவது? சுதந்திரமாவது?

எல்லா நாய்களும் பேய்களும் நரிகளும் கழுதைப் புலிகளும் சுயநலப் பன்றிகளும், 'இருக்கிற வரை சொர்க்கம்; எவன் வந்தால் என்ன? எவன் போனால் என்ன?' என்று கருதும்போது அமைதியிழந்து, நாடி தளர்ந்து துடிக்கிற மக்களைப் பிழிந்து, அவர்களது வியர்வையில் நாணயங்களைத் தயாரிக்கும் நாணயமற்றதுகள் நடுவில் இவர்-ஹைதர் அலி - ஏன் உரிமை முழக்கம் செய்து வரவேண்டும்? மைசூர் வரை நின்று ஸ்ரீரங்கப் பட்டினத்தைக் காத்தால் போதாதா? எதற்காக இப்படி எங்கெல்லாம் அடிமைப்படுத்த வந்த வெள்ளைக் கும்பினிக்காரர்கள் அகம்பாவக் குரல் கொடுக்கிறார்களோ, அங்கெல்லாம் ராஜகர்ஜனை முழக்கத்துடன் சென்று அவர்களுடைய குரல் வளைகளைக் கவ்விக் குதறித் தன்னிச்சையாய்-தன்னிறைவு காணும் சுதந்திர ரத்த நாளத்தையடக்கிக் கொள்ள வேண்டும்?

பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா இவ்விதமாக நினைந்து வருந்தித் தனது கணவரிடம் விவாதித்தும் பார்த்தாய் விட்டது! அப்போதெல்லாம் கிடைக்கிற பதில்:

''நல்ல ரத்தம் கொண்ட ஒவ்வொரு மானுடனுக்கும் தேசீய உணர்வு இயல்பாகவே மலர்ந்திருக்கும். அல்லாதவர்கள் சுட்டுத் தள்ள வேண்டிய சொறி நாய்கள்!''

ஹைதர் அலியின் அந்தப் பரிசுத்தமான பதில் இன்னமும் செவிகளில் ஒரு புதிய மானுட மறையே போன்று ரீங்கரிக்கிறது...

தனது மகனை-ஹைதர் அலியின் மறுபதிப்பை உற்றுக் கவனித்த பெரிய சுல்தானா பேகம், ''திப்பு! நமது ராணுவ திவான் பூரணய்யா, உனது உத்தரவுக்காக காத்துக் கொண்டிருக்கிறார். ராணுவத்தை திரட்ட வேண்டும். குறிப்பாகக் குதிரைப் படைகள் நிறையத் தேவை என்று உன் அப்பாஜான் (தந்தை) எழுதியிருக்கிறார்?'' என்று ஒரு மகாராணியின் கம்பீரத்துடன் கேட்டு நிறுத்தி மகனைக் கூர்ந்து கவனிக்கிறாள்.



ஒருவாறு தன்னுள் முடிவு கண்ட திப்பு சுல்தான், ''ஜோதிடரைக் கேட்க வேண்டும்!'' என்றான். அவனது பதில் அனைவருக்கும் விசித்திரமாகத் தெரியவில்லை. தந்தையும் மகனும் ஜோதிடத்தில் அபார நம்பிக்கை கொண்டவர்கள்;

''திப்பு! உனது ஜோதிட நம்பிக்கையை அறிந்தே காலையிலேயே நமது அரண்மனை ஜோதிடரைக் கேட்டு விட்டேன். இன்றைக்கு நாள்நன்றாக இல்லையாம். நாளைக் காலையில் நன்றாக இருக்கிறது என்றார். ஆனால் நமது திவான்கள் ஆபத்தான இந்த நேரத்தில் நாளாவது? நட்சத்திரமாவது என்கிறார்கள்.''

அன்னை இவ்வாறு கூறியதும் திப்புசுல்தானின் அகன்ற விழிகள் திவான்களை நோக்கின.

''அம்மா! நாள் செய்யாததை இந்தத் திவான்கள் செய்ய முடியாது; நட்சத்திரம் செய்யாததைப் பெற்ற அன்னையும் செய்ய முடியாது! போர்ப் பயணம் நாளைக் காலையில்தான்!''

அது வரையிலும் மௌனமாக இருந்த திவான் பூரணய்யா, ''குமார சுல்தான்! தந்தையார் ரொம்பவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார்! ஒருநாள் தாமதம்...'' என்று அவர் கூறி முடிக்கு முன்னம் இடைமறித்த திப்புசுல்தான், ''ஒன்றும் நேர்ந்து விடாது! திவானய்யா! செய்தி கொண்டு வந்த தூதுவன் வருகிற வழியில் ஒருகால் அசந்தர்ப்பம் ஏற்பட்டு நாளைக் காலையில் செய்தி கொண்டு வந்திருப்பானேயானால் என்ன செய்திருக்க முடியும்? ஹைதர் என்ற சிங்கம் வீழ்ந்து பட்டுத்தான் தீரவேண்டும் என்றால் யாரும் தடுத்து நிறுத்த முடியாது. அது அவரது கிரக பலன்! நான் போய்ச் சேருவதற்குள் ஏதும் நிகழ்ந்துவிட முடியாது என்பதை எந்த நிச்சயத்தை வைத்துச் சொல்ல முடியும்?'' என்று அவன் கூறுகிற போது, ஒரு வீரனது நிலையிலிருந்து மாறி, அறிவு பூர்வமான சித்தனாவாதி போலக் காட்சியளிக்கிறான். பிறகு ஓர் உள்ளடக்கம் நிறைந்த அழுத்தமான சிரிப்பையுதிர்க்கிறான். அந்தச் சிரிப்பில், 'ஹைதர் உங்கள் தலைவர்; ஆனால் எனது தந்தை! உங்களிலும் எனக்கே அக்கறையுண்டு!' என்ற மெய்ப்பாடு தெரிகிறது...

ஆ! இரண்டு ஹைதரைச் சேர்த்தால் ஒரு திப்புசுல்தான் என்று நினைத்துப் பார்க்கிறார் திவான் பூரணய்யா. அவருக்கு அவன் மீது அலாதியான அன்பும், பாசமும், பற்றுமிருந்தன. பதினேழாம் வயதில் அவன் வாளேந்தினான்... இது வரையிலும் அவனது வீரவாள் சோர்ந்ததில்லை. இந்தக் கன்னட நாடு இவனைப் பெற்றதில் ஆரோக்கியமான சுகத்தை அனுபவிக்கிறது...

''குமார சுல்தான்! அடுத்து உங்கள் தம்பியார் பற்றி மகா சுல்தான் குறிப்பிட்டிருக்கிறார். அது குறித்தும் பரிசீலிக்க வேண்டும்!'' என்று திவான் பூரணய்யா கூறுகிறபோது, எதிரே அமர்ந்திருந்த திவான் மீர்சாதிக்கின் குரூரக் கண்கள் அப்துல் கரீமை நோக்குகின்றன...

திப்புசுல்தானும் அதை ஒரு சாதாரண விஷயம்போல ஏற்றுக் கொண்ட பாவனையுடன் [1]''பறங்கிப் பேட்டையில் நடக்கிற வெள்ளையர் கலவரத்தை அடக்கி ஒடுக்கத் தம்பியை அனுப்பி வைக்குமாறு தந்தை கட்டளை பிறப்பித்திருக்கிறார். அவன் அதை விரும்புகிறானா என்பது முதலில் தெரிய வேண்டும் திவானய்யா!'' என்று கூறிவிட்டு அப்போதுதான் தம்பி என்பவன் பக்கத்தில் அமர்ந்திருக்கிறான் என்கிற நினைவு வந்தவன் போலத் திரும்பிப் பார்த்தான், ''தம்பி! நீ ஏதாகிலும் ஜோதிடம் பார்க்க வேண்டுமா?''

''அந்த மூடத்தனமான பழக்கம் என்னிடமில்லை. நான் தாத்தா புட்டே முகமதுவின் பேரன்!'' என்று அப்துல் கரீம் கூறுகிறபோது தன்னை அவன் உயர்ந்த நிலையில் வைத்துப் பேசுவது போலத் தெரிந்தது. அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவுக்கே அது எரிச்சலைத் தந்தது.

திப்புசுல்தான் ஒரு கர்ஜனையே போன்று கடகடத்துப் பெருநகை புரிகிறான்: ''ஓகோ! தாத்தா ஒரு சாதாரணக் குடிமகனாக இருந்து 'நாயக்' பட்டம் பெறுகிற அளவுக்கு வீரத்தால் உயர்ந்ததோடு, ஒரு ஹைதர் அலி என்கிற வீரமிகு சிங்கத்தை இந்த நாட்டுக்கு ஈன்று தந்து விட்டுச் சென்றிருக்கிறார்? நீ கேவலம் பறங்கிப் பேட்டைக்குச் சென்று வெள்ளையன் கொட்டத்தை அடக்க முடியவில்லையே!''

1. சிதம்பரத்துக்கு அண்மையில் இருப்பது.



''பறங்கிப் பேட்டையில் வெள்ளையன் செய்கிற கலாட்டாவுக்கு நாம் ஏன் போர்க்கொடி தூக்க வேண்டும்? நமது ராஜ்யம் மைசூர்! நமது எல்லைக்கு ஏதேனும் தீங்கென்றால் போர்க்கொடி தூக்க வேண்டியதுதான்!''

''காஞ்சீபுரம் பக்கத்தில் இருக்கும் பேரம்பாக்கத்துக்கு நமது தந்தையார் எதற்காகச் சென்று ஜயப் பதாகை நிறுவ ஆசைப்பட வேண்டும்? காஞ்சீபுரம் எங்கே? ஸ்ரீரங்கப்பட்டினம் எங்கே? அது தமிழ் எல்லை; இது கன்னட எல்லை. ஒரு விதத்தில் சொல்லப் போனால் தமிழகமும் நமது ஆட்சிக்கு உட்பட்டதுதான். திண்டுகல்லிலிருந்து கன்னியாகுமரியைப் பார்க்கிற பார்வைபோல, காஞ்சீபுரத்திலிருந்து சென்னை, ஆர்க்காடு, புதுச்சேரி முதலான இடங்களைப் பார்வையிடவே இந்தப் போர்ப் பயணம்! அநேகமாக இம்முறை ஆர்க்காட்டு நவாப்பின் கொட்டம் அடங்கியே தீரும். எதற்காக நமது தந்தை இவ்விதமாகத் தேசியப் போர் முழக்கம் செய்து புறப்பட வேண்டும்? இந்தப் பரந்த இந்திய மண்ணில் அந்நியர் புகுவது என்ன நீதி என்று சுதந்திர வேட்கை கொண்டு போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்! இந்த அந்நியர்களுள் எவர் உதவினாலும்-அவர்கள் நம்மவர்களாக இருந்தாலும் அழித்து ஒழித்தே தீருவேன் என்று வஞ்சினம் கொண்டு வாழ்பவர்.''

''அப்படிப் பார்த்தால் நாமும் அந்நியர்கள்தாமே?''

''எந்த மடையன் சொன்னான்? சரித்திரம் தெரியாத சண்டாளர்களுடன் நீ பழகி வருகிறாய் என்பது தெரிகிறது!''

திப்புசுல்தான் இவ்வாறு கோடரி கொண்டு பிளப்பது போலக் கூறியது கண்டு, திவான் மீர்சாதிக்கின் முகம், வெயிலைக் கண்டு சுருங்கும் பாகற்பழத்தைப் போலச் சுருங்குகிறது...

ஆவேசம் கண்ட திப்புசுல்தான், அடுத்துத் தனது தம்பியைக் கொஞ்சமும் சட்டை செய்யாது, தாயின் பக்கம் திரும்பி, ''அம்மா! இவன் பறங்கிப் பேட்டைக்குப் போவதும் போகாததும் இவனது விருப்பம்! நான், நாளைய புலரியத்தின் போது புறப்படுகிறேன். இந்த ஸ்ரீரங்கப்பட்டினத்தை உங்களிடம் நான் மிகுந்த பொறுப்புணர்ச்சி

யுடன் ஒப்படைத்து விட்டுப் புறப்பட்டாலும், எனது ஆணைகளை நான் இப்போதே பிறப்பிக்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். நீங்களும் திவான்களும் அரசியல் காரியங்களைக் கவனியுங்கள்!'' என்று கூறிவிட்டு எதிரே அமர்ந்திருந்த ஹபிபுல்லாவை நோக்கி, ''ஹபிபுல்லா! நீ அம்மாவுக்குப் பக்கத்திலிருந்து ஆவனவற்றைக் கவனிக்க வேண்டும்!'' என்றான். அந்தரங்கப் பணியாளனான ஹபிபுல்லாவும் எழுந்து நின்று தனது வாளையுருவி முகத்துக்கு நேரே பிடித்து மரியாதை வழங்கினான்.

அடுத்து, ''குலாம் அலிகான்! நீ எனது சொந்த விவகாரங்கள் தனிப்பட்டு வருமானால், அவற்றை மிகவும் ரகசியத்தோடு கவனிக்க வேண்டும்!'' என்று ஆணை பிறப்பிக்கிறான்.

அந்தரங்கச் செயலாளனான குலாம் அலிகான் அந்த உத்தரவை ஏற்று எழுந்து நின்று வாளையுருவி மரியாதை செய்கிறான்.

''ராஜாக்கான்! நீ என்னுடன் வருகிறாய்! பௌஜ்தார் (சேனாபதி) நாதீமிடம் ஸ்ரீரங்கப்பட்டினத்துக் கோட்டையை ஒப்படைக்கிறேன். பௌஜ்தார் குலாம் உத்தீர்கான் என்னுடன் புறப்படுகிறார்! மாரியட்! லால்மகால் ஜாக்கிரதை! சையத் கஃபார்! நீ நமது கோட்டைத் தலைவர் அசாத்கானுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். நீயும் யுத்தத்துக்கு வரத் துடிக்கிறாய்! இங்கே தந்தையுமில்லை நானுமில்லை. தக்கார் இங்கு அவசியம் தேவைப்படுகிறார்கள். ஒற்றர்கள் விஷயத்தில் சாமா ஐயங்கார் தமது காரியங்களைச் செவ்வனே செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்! கடிதப் போக்குவரத்துகளில் ரங்கா ஐயங்கார் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும். ஸ்ரீரங்கப்பட்டினத்து ஆளுனரான சையத் முகமது அனைத்துப் பொறுப்புக்கும் மேற்பார்வையாளராக இருக்க நேமிக்கிறேன்! நரசிங்கராவ்...!''

இவ்வாறு அழைத்து ஏனோ சற்றுத் தயங்கினான் திப்புசுல்தான்.

நரசிங்கராவும் எழுந்து நின்று சலாமிட்டார்.

''நரசிங்கராவ்! நகரத் தலைவரான (மேயர்) நீங்கள் சம்பளப்பட்டுவாடா செய்பவராகவுமிருப்பதால், ஜுலை இருபத்து நான்காம் தேதி வருகிறபோது, எந்தவிதச் சுணக்கமுமில்லாது



அனைவருக்கும், நமது கஜானா அதிகாரியான திவான் கிருஷ்ணாராவுடன் கலந்து சம்பளப்பட்டுவாடா செய்துவிட வேண்டும். நான் உடனடியாகவும் திரும்பலாம். நாள் பட்டும் திரும்பலாம்'' என்று கூறி நிறுத்தி, தொலைவில் நின்று தன்னையே கவனித்துக் கொண்டிருந்த நண்பன் பசவராஜை நோக்குகிறபோது, திப்புசுல்தான் பிடரியில் ஒரு வித சிலிர்ப்பு காண்கிறது:

''பசவராஜ்!''

- குரல் கம்பீரமாக ஒலிக்கிறது...

பசவராஜ் ஓடோடி வந்து எதிரே நின்று சலாம் வைக்க முனைகிறபோது...

என்ன நினைத்தானோ திப்புசுல்தான்...

உடனே அவன் தனது இருப்பிடத்தை விட்டெழுந்து நண்பனை முந்திக்கொண்டு, ''சலாம்! எனது வீர நண்பனே!'' என்று கூறி நடந்து கொண்ட விதம், பலருக்குத் தூக்கி வாரிப் போட்டது. பசவராஜ் ஒன்றுமே புரியாமல் சிலையாக நின்றுவிட்டான். இவ்விதமாகத் திப்புசுல்தான் நடந்து கொண்டது, பலருக்கு ஏற்கனவே தன்பேரில் இருக்கிற பொறாமையுணர்ச்சியை மேலும் தூண்டி விடுவதாக அமைந்துவிட்டதே என்று வருத்தப்பட்டான் பசவராஜ்.

''என்ன பசவராஜ்! திப்புவே எழுந்து சலாமிடுகிறானே என்று பார்க்கிறாயா? நான் உனக்குச் சலாமிடவில்லை. எனது காதலியின் உயிர் காத்த உனது வீரவாளுக்குச் சலாமிட்டேன்!'' என்று வேண்டுமென்றே ஓர் உள் நோக்கத்தை மனத்தில் கொண்டு திப்புசுல்தான், இந்த நாடகத்தைக் கற்பிதம் செய்து நடித்துக் காட்டினான். அவன்தான் அற்புதமான கலா ரசிகனாயிற்றே! அவனது இந்த நாடகம் பலருக்கு வெறுப்பைத் தூண்டியது. அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா நிரம்பவும் எரிச்சல் அடைந்தாள். யாருக்கு, யார் சலாமிடுவது?

பொறுக்க மாட்டாத அப்துல் கரீம்-

''அப்படி என்ன பொல்லாத அலெக்சாந்தர், ஜங்கிஸ்கான் பெற்றிருந்த வீரவாளை இவன் பெற்றிருக்கிறான்?'' என்று கேட்க, அதனை ஆதரிப்பது போலத் திவான் மீர்சாகிப் சிரித்துவிட, தொடர்ந்து ஒரு சிலரும் சிரித்து விட்டனர்.

திப்புசுல்தானும் இந்த எதிருணர்வை எதிர்பார்த்தவனே போல, ''அப்படி என்றால் இன்று மாலை தமது வீரத்திடலில் ஒரு வீர விளையாட்டை வேடிக்கையாக ஏற்படுத்தலாம். நாளை நான் போருக்குப் புறப்படுமுன் ஒரு முடிவுக்கு வரவேண்டும். பலருக்கு பசவராஜ் யார் என்பது புரியவேண்டும். அவனை வாள்வித்தையில் ஜெயிக்கும் யாருக்கும் 'படேபௌஜ்தார்' (மகா சேனாதிபதி) பட்டம் வழங்குவேன். ஒருகால் பசவராஜை எதிர்க்க யாருமே இல்லையென்றால் இந்த ராஜ்யத்தின் ஒட்டுமொத்த பாதுகாவலனாக அவனையே நியமித்துச் செல்வதாக இருக்கிறேன்!'' என்று கூறுகிறபோது அவனது நோக்கம் என்னவென்பது அனைவருக்குமே புரிகிறது! நாட்டை பசவராஜிடம் பகிரங்கமாக ஒப்படைப்பதற்கு மாறாக, இம்மாதிரியான நாடகமிடுகிறான் திப்புசுல்தான்...

''குமார சுல்தான்! இது தேவையா?'' என்று மிகுந்த அடக்கத்துடன் கேட்டான் பசவராஜ்.

''யாருக்குத் தேவையோ இல்லையோ? எனக்குத் தேவை. ஏன்? நானே உனது வாள்மீது பொறாமை கொண்டவன்! நானே எதிர்த்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை'' என்று கூறிக்கொண்டே தனது தோள்களை உசுப்பிச் சிலிர்த்து எழும் சிங்கம் போல் எழுந்து நின்றான். அவனது குரலில் ஒரு தீவிர முனைப்பு எதிரொலித்தது.

திவான் பூரணய்யாவுக்கு இந்த நிகழ்ச்சியை எவ்வகை யிலாவது நிறுத்த வேண்டும் போலத் தோன்றியது.

நாளை, போர்ப்பயணம் இருக்கிறபோது இது எதற்காக என்று வேதனைப்பட்டாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா.

ஆனால், திவான் சாகிப் மீர் சாதிக்?

பசவராஜை இந்த நிகழ்ச்சியின் மூலம் மட்டந்தட்டச் சரியான ஒரு சந்தர்ப்பம் என்றே மனத்துள் கறுவிக் கொண்டான்.



## 11

இந்த வாள்பலச் சோதனை, திப்புசுல்தானின் எண்ணித் துணியாத அவசர முடிவு என்று பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா கருதி, எவ்வகையிலேனும் அதனை நிறுத்திவிட வேண்டும் என்று அதி தீவிரமாக முனைந்து, திவான் பூரணய்யாவுடன் தனிமையில் கலந்து ஆலோசித்து அதற்கு ஒரு தீர்வு கண்டு அதன்படி அந்த நேரத்தில் இளையவன் அப்துல் கரீமைப் போர் முகாந்திரமாகப் பறங்கிப் பேட்டை நோக்கிச் சேனைகளுடன் புறப்படச் செய்யக் கூடுமானவரையில் முயன்று பார்த்தாள். ஆனால், அவ்விதமான அவளது ஜபம் முற்றும் சாயவில்லை. அவளையும் மீறி, யாரும் அறிய முடியாத ஒரு ரகசிய சக்தி, அப்துல் கரீமைக் கவ்விக்கொண்டு இருப்பதை அந்த அன்னையுள்ளம் அறியாமல் போனது ஆச்சரியம்.

இந்த வாள்பலச் சோதனையின் மூலம் ஏதேனும் ஒரு புதிய களேபரத்தை யுண்டு பண்ணலாமா என்று நிமிஷத்துக்கு நிமிஷம் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருந்த திவான் மீர் சாதிக், அப்துல் கரீமைத் தன் வயப்படுத்தி, இந்த வாள்பலச் சோதனைக்குப் பிறகே பறங்கிப் பேட்டை யுத்தகளம் நோக்கிச் செல்லலாம் என்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தான். இன்னும் சொல்லப்போனால் பறங்கிப் பேட்டைப் போர்ப் பயணத்தை நிறுத்தி விடவேண்டும்; அவ்விதம் நிறுத்துவதன் மூலம் திப்புசுல்தான் நகரில் இல்லாத போது சில ராஜதந்திரமான குயுக்திகளைக் கையாளலாமா என்பதும் திவான் மீர் சாதிக்கின் நயவஞ்சகமான ஓர் எண்ணம். அப்துல் கரீமை எவ்வகையிலாவது அரியணையிலமர்த்தி விட்டால், அவனைப் பொம்மைச் சுல்தானாக்கி, அனைத்து ஆட்சி முறைகளையும் தனது உள்ளங்கையில் அடக்கிக் கொள்ளலாமல்லவா?

திவான் சாகிப் மீர் சாதிக்கின் இந்த அபிப்பிராயத்தை - பறங்கிப் பேட்டைக்குப் போக வேண்டாம் என்று கூறிய அபிப்பிராயத்தை ஏற்க அப்துல் கரீம் மறுத்து விட்டான். தந்தை ஹைதர் அலியின் சர்வ வல்லமை பொருந்திய ஆணையை மீறுவது எவ்வளவுக்குத்

தலையைக் கிள்ளிப் பந்தாடுவதற்கு ஒப்பானது என்பதை அவனறிவான்.

மாலை சரியாக நான்கு மணியளவில் பெரிதான அந்த வீரத் திடலில் ஜனக்கூட்டம் ஒரு புழுக்கமான ஆவேசத்துடனும் வழக்கத்துக்கு மீறிய எதிர்பார்ப்புடனும் கூடிவிட்டது. சுற்றிலும் அரண்மனைச் சம்பந்தப்பட்டவர்களுடன் ஸ்ரீரங்கப்பட்டினத்து வாசிகளும் நிறைந்திருந்தனர். ஒரு மருங்கே கங்கம்மாளும் மஞ்சுளா தேவியும் கூட அமர்ந்து மனவேதனையுடன் எதிர் நோக்கினர். ‘உடல் குணமாகி இரு தினங்கள்தாம் ஆகின்றன; மறுபடியும் வாளையேந்துகிற மூர்க்கமான சோதனையா?’ என்று அந்தத் தாயுள்ளமும் காதலுள்ளமும் மறுகின.

அக்கிரகாரமும் திரளாக வந்திருந்தது.

ஆயினும் ரங்கநாயகி வரவில்லை. அவ்விதம் வருவதை அவள் விரும்பவில்லை; அவளுக்கு அது அவசியமாகவும் படவில்லை.

திப்பு சுல்தானுடைய கண்கள் துருவித் துருவித் தேடுகின்றன. எங்காகிலும் ஒரு மருங்கே அவள் பதுங்கியவண்ணம் அமர்ந்திருப்பாளோ என்றும் அவனது கண்கள் அலை மோதுகின்றன.

“இன்னும் யாருடைய வருகைக்காவது எதிர்பார்க்கிறாயா, திப்பு?” என்று சுரத்தில்லாத குரலில், அந்த நிகழ்ச்சியை வெறுப்பவர்களைப் போலக் கேட்டாள் அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. அன்னையின் குரலொலியிலிருந்து அவளது மனவொலியை உணர்ந்து கொண்ட திப்புசுல்தான், “உங்கள் உத்தரவுக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேனம்மா!” என்று கூறிய ஒரு ராஜதந்திரமான போக்கில் தான் யார் என்பதை நிஜப்படுத்துகிறான்!

“என்னைக் கேட்டுதானா திப்பு, இந்த அவசர ஏற்பாட்டை - தேவையற்ற ஏற்பாட்டைச் செய்தாய்?”

“ஏதோ தெரியாமல் அவசரப்பட்டு ஏற்பாடு செய்து விட்டேன். தேவையென்று நீங்கள் கருதித் தொடங்கி வைப்பதன் மூலம்தான் என்னைத் தெளிந்தவனாக்க வேண்டும்!”



திப்பு நன்றாகவே பேசக் கற்றுக்கொண்டவன்; ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வோர் ஆசானிடம் கல்வி பயின்றவனாயிற்றே!

“உன்னிஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் திப்பு!” என்று பட்டும் படாததுமாக உத்தரவிட்டாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா.

தன் அன்னையின் மனநிலையை நன்றாகவே புரிந்துகொண்ட திப்புசுல்தான், அடுத்துப் பக்கத்திலிருந்த பசவராஜை நோக்கி, “பசவராஜ்! நீ முதலில் கோதாவில் இறங்கலாமே!” என்று உத்தரவு பணித்தான், வலது கையின் ஆள்காட்டி விரலால் மூக்கின் நுனியைத் தேய்த்துக் கொண்டே! கண்கள், தனது நண்பனின் கண்களைப் பரிசீலிப்பன போலக் கவனிக்கின்றன...

ஒருகணம் தனது கண்களைமூடி தான் வணங்கும் சாமுண்டீஸ்வரியை மனத்தில் வழிபட்டுக் கொண்டவனாய் எழுந்த பசவராஜ், பிறகு தனது ராஜ நண்பனது கரங்களைப் பற்றி, “என்னை வாழ்த்துங்கள் குமார சுல்தான்!” என்றான்.

ஒரு பக்தி பூர்வமான மரியாதையுடன் தன்னைப் பசவராஜ் இவ்வாறு கேட்பான் என்பது திப்புசுல்தான் கொஞ்சமும் எதிர்பாராதது. அவனது கண்களில் நட்பின் மேலோங்கிய ஆனந்த நீர்த் திவலைகள்...

“பசவராஜ், என்னரும் நண்பனே! உனது வெற்றியில் எனக்கு எப்போதுமே நம்பிக்கையுண்டு. அதுசரி? கவசமணியாமலா இந்தச் சோதனையில் இறங்குகிறாய்?”

“அவசியமில்லை.”

“எனக்கு அவசியமாகப்படுகிறது. ஒருகால் நாளை நீ என்னுடன் யுத்தப் பயணத்தின்போது புறப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.”

திப்புசுல்தான் இவ்வாறு கூறிய பின்னர்தான் இந்தச் சோதனையின் முக்கிய உள்நோக்கம் என்ன என்பது பலருக்குப்

புலனாயிற்று திவான் பூரணய்யா பூரணமாக ஜீரணித்து கொண்டார். ‘ஓ.... இதற்குப் பெயர்தான் திப்புசுல்தானோ?’

“என்னை மன்னிக்க வேண்டும் குமாரசுல்தான்? யுத்த களத்திலன்றி வேறெங்கும் கவசமணிவதில்லை என்னுள் சங்கல்பித்துக் கொண்டவன் நான்! எனக்கு இது ஒரு பொழுதுபோக்கு விளையாட்டு மாதிரியானது. இந்த விளையாட்டுக்காகக் கவசமணிந்து விட்டால், பிறகு எனது வாளை நானே அவமதிப்பதற்கு ஒப்பாகும்!” என்று பசவராஜ் மிகவும் அமைதியுடன் கூறி நிறுத்தியதும், அவனது அந்த வார்த்தைகள் வாளினும் கூர்மையாகப் பலரைப் புண்படுத்தின.

“ஒருவேளை நானே கோதாவில் இறங்க நேர்ந்தால்?”

“நீங்கள் நிச்சயம் இதற்காகக் கவசமணிய மாட்டீர்கள். எனது இந்த வார்த்தைகளின் உள்ளர்த்தம் மரியாதைக்குரியது.”

“ஒருகால் அணிந்தால்?”

“நானும் அணிவது பற்றி அப்போது யோசிப்பேன்.”

அதற்கு மேலும் பேச்சு நீண்டு செல்ல விரும்பாத பசவராஜ், ஒரு துள்ளு துள்ளி மேடையிலிருந்து குதித்துத் திடலின் நடுவே போய் நின்றான்.

திப்புசுல்தானும் தனது ஆருயிர் நண்பனது திடமான நெஞ்சைக் கண்டு பெரிதாக வியந்தவண்ணம், “எனது இந்தச் சதஸில் வாளில் வல்லவர்களான யாரும் பசவராஜை எதிர்த்து, அவனை வீழ்த்துவதன் மூலம் இந்தச் சபைக்கும் செங்கோலுக்கும் பெருமை சேர்ப்பார்களாக! படே பௌஜ்தார் என்கிற மகா சேனாதிபதி விருதைப் பெற்று நாளை புறப்பட இருக்கும் சைன்யங்களுக்குத் தலைமை தாங்குவார்களாக!” என்று ஒரு சவால் பிரகடனமே போலக் கர்ஜித்த கர்ஜனை பலரை ஊக்குவிப்பதாகவும், உணர்ச்சி மேலிடச் செய்வதாகவும், அதே நேரத்தில் பசவராஜை வீழ்த்த வேண்டும் என்கிற போலியான அர்த்தம் தொனிப்பதாகவும் இருந்தது.

‘ஆ! நாளை இந்தப் பசவராஜைப் படைக்குத் தலைமை தாங்கச் செய்து அழைத்துச் செல்ல இந்த ஏற்பாடா என்றும் அரண்மனையைச்



சார்ந்த பலர் புரிந்து கொண்டு வியந்து எதிர்பார்த்தனர். ஆனால் பசவராஜ், “குமார சுல்தான்! எனக்கு இந்தப் படே பௌஜ்தார் பட்டம் தேவையற்றது. நான் விரும்பாததும்கூட! நண்பன் என்கிற பவித்திரமான விருதுக்கு மிஞ்சி, நாடாளும் அரசன் பதவி கொடுத்தாலும் நான் விரும்பேன். நான் விரும்பினால் எத்தனையோ ஜாகீர்களை உங்களிடமிருந்து பெற முடியும் என்கிற பரிபூரண நம்பிக்கை எனக்குப் பலமாக இருக்கிறது” என்று மறுத்துக் கூறியதைக் கேட்கிறபோது, இவன் பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டு ராஜ நட்பைப் பெறவில்லை என்பது தெளிவாகப் பலருக்குப் புரிந்தது. இவ்விதமான பல விஷயங்கள் பலருக்குப் புரிந்தது. இவ்விதமான பல விஷயங்கள் பலருக்குப் புரிய வேண்டும் என்பதுதானே இந்த ஏற்பாட்டின் நோக்கம்?

ஒரே கூச்சலும் நெரிச்சலுமாக இருந்த கூட்டம் ஒரு விநாடி அமைதியில் ஆழ்ந்து கவனிக்கிறது. மஞ்சுளா தேவியின் இதயம் அளவுக்கு மீறித் துடிக்கத் தொடங்குகிறது...

திவான் மீர்சாதிக் மிகுந்த சினந்த பார்வையுடன் அப்துல் கரீமை நோக்கினான்...

முதல் எதிரியே போல அப்துல் கரீம் மேடையிலிருந்து சினச் சுழிப்புடன் வாளையுருவிக் கொண்டு குதிக்கிறான். எதிர்பார்த்த திப்புசுல்தான் முறுவலிக்கிறான்.

அப்துல் கரீமைக் கண்ட பசவராஜ், “சின்ன சுல்தான்! உங்களுக்கேன் இந்தத் தலையெழுத்து?” என்று மரியாதையாகவும் நன்மையை உத்தேசித்தும் சொன்னான். அது அப்துல் கரீமைக் கேலி செய்வது போலத்தென்படவே, அவன் சற்றுக் கடுமையாக, “இந்தச் சிங்கப் பரம்பரையின் முன் நீ ஒரு சுண்டெலி என்பதை நான் நிரூபிக்க வேண்டாமா?” என்றான்...

பசவராஜ் இந்தக் கடுஞ்சொற்களுக்காக கொஞ்சமும் கோபப்படவில்லை. “ஓ... அப்படியா? கவசமணிந்து இருக்கிறீர்களா?” என்றான்.

“தெரியாமல் அணிந்து விட்டேன்.”

''கழற்றிப் போட எவ்வளவு நேரமாகும்?''

''அவசியமில்லை.''

''நல்லது; ஒரு திருத்தம். தனித்தனியே ஒவ்வொருவரிடமும் வீரத்தை நிரூபித்து எனது சக்தியை விரயம் செய்ய நான் விரும்பவில்லை. யார் யாரெல்லாம் என்னை எதிர்க்க ஆசைப் படுகிறார்களோ, அவர்களெல்லாம் ஒட்டு மொத்தமாக வந்தால் எனது சக்தியின் அருமை பெருமைகள் விரயமாகாமல் நிரூபணமாகலாம்!''

இவ்வாறு பசவராஜ் ஒரு திமிரான சவாலைப் போலக் கூறியதைக் கேட்ட திப்புசுல்தான், ''பசவராஜ்! என்ன இது?'' என்று அதிர்ச்சி கண்ட நிலையில் சத்தமிடுகிறான்.

பசவராஜும் அந்தச் சத்தத்தின் சத்தினையுணர்ந்து தனது சித்தத்தின் எதிரொலியாய் ''நான் ஒரு ராஜகர்ஜனையின் நண்பன்! குள்ள நரிகளின் ஊளையல்ல!'' என்று கூறியதுமல்லாமல், திவான் மீர்சாதிக்கை நோக்கியபோது, அரசியலின் உட்பொருளையுணர்ந்த சிலருக்குச் சில விஷயங்கள் பட்டும் படாமலுமாகப் புலப்படலாயின.

ராஜாக்கான், சையத் கஃபார், மற்றும் பலர் தொடர்ந்து வாளையுருவிக் கொண்டு வந்து நின்றனர். அவர்களுள் தளபதி நாதீம், வந்து நின்றதுதான் திப்புசுல்தானுக்கு வியப்பாக இருந்தது. நாதீம், பசவராஜ் வீரத்தில் ரசிப்புத் தன்மையுடன், நாளைப் போர்ப் பயணத்தில் தன்னைத் தேர்ந்தெடுக்காமல் தனக்குச் சமதையான பௌஜ்தாரான குலாம் உத்தீர் கானைத் தேர்ந்தெடுத்து விட்டாரே குமார சுல்தான் என்கிற வெறுப்பில் ஏற்பட்ட துடிப்பு; இதன் மூலம் ஒரு வெற்றி கிடைக்குமானால்...

பலர் ஒன்றாகச் சேர்ந்து எதிர்ப்பதால் யாருக்கும் படே பௌஜ்தார் விருது கிடைக்கப் போவதில்லை. குறைந்தபட்சம் நாளைய போர் பயணத்துக்காகவாவது பௌஜ்தார் ஸ்தானம் கேட்கலாம் அல்லவா?

ஏறத்தாழ முப்பது பெயர்கள் வாளையுருவி நின்றனர். அவர்களுள் நான்கு பெயர்கள் பிரதேச மொழியினரான கன்னடத்து உபதளபதிகள். இரண்டு பிரெஞ்சு தேசத்து வீரர்கள். ஹைதர் அலியின் ஆட்சியில் பிரெஞ்சு தேசம் நட்பு நாடானதால் பல பிரெஞ்சு வீரர்கள் அவரது ராணுவத்தில் இடம் பெற்றிருந்தனர்.



பசவராஜ், தனது இடையிலிருந்த நீண்ட வாட்களையுருவி இரண்டையும் இரு கரங்களில் பற்றிக் கொண்டான். ஒரு விநாடி அனைவருக்குமே சிறு நடுக்கம். பசவராஜ் இரட்டை வாள்களை ஏந்தி விட்டால், அவன் பம்பரமாகச் சுழல்வான்; வாள்கள் மந்திரமாய்ப் பேசும்!

வாள்கள் ஒன்றோடொன்று மோதத் தொடங்குகின்றன.

கணகணத்த ஒலிகளுடன் வியூகம் வகுத்துக் கொண்ட எதிரிகள் மத்தியில் ஓர் அனாதை போல் பசவராஜ் அகப்பட்டுக் கொண்டதாகவே மற்றவர் நினைத்து வேடிக்கை பார்த்தனர்.

பெற்ற அன்னை கங்கம்மாள் அக்கணமே மயக்கமுற்றுச் சாய்ந்துவிட்டாள். அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்ட மஞ்சுளாதேவி, அழுத கண்ணீரும் துடித்த இதயமுமாகக் கணத்துக்குக் கணம் என்ன நடக்குமோ என்று பயந்து கவனிக்கிறாள்.

ஆ! பசவராஜின் வாள் புயலுருக் கொள்கிறது. அவனது கால்கள் போர்த் தளத்துக்கேற்ப நர்த்தனமாடுகின்றன. உடம்பு வளைந்தும், அமர்ந்தும், எழுந்தும், துள்ளியும் எதிரிகளின் வாள்கள் தன் பேரில் விழாவண்ணம் சுழன்றும் காட்சி தருகிறது. சூறாவளியைப் போல மிகவும் பயங்கர மாயவித்தை தெரிந்த தேவனைப் போல வாள்களை வீசி எதிரிகளை ஒவ்வொருவராக வீழ்த்தி வருகிறான்...

மகாபாரதம் படித்தவர்கள் இவனென்ன ''அபிமன்யுவா?'' என மூக்கின் மேல் விரல் வைத்து வியக்கின்றனர்...

'இவன் தெய்வ வரம் பெற்றவனா? அல்லது கர்ணனோடு கவசம் பிறந்தது போல இவனுடன் வாள்கள் பிறந்தனவா?' என்று திவான் பூரணய்யா ஆச்சரியப்படுகிறார்...

'ஆ! பசவராஜ் உண்மையிலேயே மாவீரன்தான்!' என்று பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா வியந்து இமைக்க மறந்த கண்களுடன் கவனிக்கிறாள்...

திவான் மீர்சாதிக் மருட்சி கண்டு கவனிக்கிறான்...

அதுவரையிலும் தனது காதலனின் வீரப்பிரதாபங்களைப் பார்த்தறியா மஞ்சுளா தேவியின் அங்கங்கள், பூரிப்புக் கண்டு விம்மிப் புடைக்கின்றன. தனது மாமியாரும் இந்தக் காட்சியைக் கவனிக்க வேண்டுமே என்று அவளது மூர்ச்சையைத் தெளிவிக்கிறாள்...

மக்கள் அனைவரும் ஆரவாரக் குரலெழுப்புகின்றனர்.

திப்புசுல்தானோ சிலைச் சாபம் பெற்றவன் மாதிரி ஸ்தம்பித்துக் கவனிக்கிறான்...

பலருக்குச் சட்டைகள் கிழிபடுகின்றன...

[1]சிலர் நிர்வாணமாக்கப்பட்டு ஓடி மறைகின்றனர்...

வேறு சிலர் ரணப்பட்டும் போராடுகின்றனர். அப்துல் கரீமும், நாதீமும், ராஜாக்கானும், சையத் கஃபாரும் இப்படி ஒரு வீரனாகப் பசவராஜ் இருப்பான் என்று எதிர்பார்க்கவில்லை. கவசங்களை யணிந்திருந்ததால் அவர்கள் ரணப்படவில்லை. பசவராஜின் கழுத்தோரத்தில் மட்டும் ஒரு சின்னச் சிறாய்ப்பு! மற்றபடி அவன் ரங்கநாயகியை மீட்ட அன்றைக்கு மாதிரி இருளிலா போரிடுகிறான்...?

எப்படியும் பசவராஜைத் தீர்த்துக்கட்டிவிடுவது என்கிற முடிவுடன் போரிட்டனர். பசவராஜும் இனி இவர்களுக்குப் பச்சாதாபம் பார்ப்பது முறையல்ல என்று உணர்ந்து தீர்த்துக் கட்டி விடுவது என்கிற நோக்கத்துடன் ஆவேசப் பொறி கிளம்பச் சிறுத்தைப் போலப் பாய்ந்து, புலி போலப் பிராண்டி, சிங்கம் போன்ற தனது வாள்களைக் கர்ஜிக்கச் செய்கிறான்...

அடுத்த சில விநாடிகளில் அனைவருடைய வாள்களும் அவரவர் கைகளை விட்டுப் பறந்து சென்று விழ, ஓட்டமே பிடிக்கத் தலைப்பட்டனர்.

மக்களிடையே ஒரே கரகோஷம்-வானைப் பிளக்கிறது.

1. ஃபென்சிங் போர் முறையில் ஆடைகளை வாளால் கிழித்து நிர்வாணமாக்குவது இயல்பானது.



## 12

**வி**யர்த்துத் தெப்பமாக நனைந்துவிட்ட பசவராஜ். இரு வாள்களையும் தூக்கி நிறுத்தியவண்ணம், ''இன்னும் யாராவது இருக்கிறார்களா?'' என்று சிங்கம் போலக் கர்ஜிக்கிறான்...

அடுத்து ஒரு கர்ஜனை, முதல் கர்ஜனையை மீறி ஒலிக்கிறது...

''நான் இருக்கிறேன்!''

அது-

திப்புசுல்தானுடைய ராஜகர்ஜனை...

''குமார சுல்தான்!''

'குமார சுல்தான் நீயுமா?' என்பதுபோல் பசவராஜின் அந்தக் குரல் தீனமாக ஒலிக்கிறது...

திப்புசுல்தானும் பெரிதாக உணர்ச்சி வயப்பட்டவனைப் போல மேடையிலிருந்து எழுகிறான்...

''மகனே! உனக்கெதற்கு இந்தச் சவால்?'' என்கிறாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. தொடர்ந்து, ''நான் தடுத்தால் நீ நிற்கப் போவதில்லை. எதற்கும் கவசம் அணிந்து கொள் மகனே!'' என்றாள்.

''தேவையில்லையம்மா!''

''நாளை நீ யுத்தத்துக்குப் புறப்பட வேண்டியவன்!''

''எனது வீரமிகு நண்பன் கையால் நான் வீர சொர்க்கம் அடைந்தால் அதுவே நான் செய்த பாக்கியம்!''

''மூர்க்கனே! உனது வீர சொர்க்கம் பற்றி நான் கவலைப் படவில்லை. தந்தையாரின் ஆபத்து நிலைபற்றி இந்தத் தேசமே கவலைப்படுகிறது.''

''கவலை வேண்டாம்! எனது நண்பன் பசவராஜ் இந்தத் தேசத்தையும் அதன் தலைவரான எனது தந்தை ஹைதர் அலியையும் மீட்பான்!''

ஆ! எத்தனைக்குச் சிநேகிதன்பால் இவனுக்கு நம்பிக்கை...

''குமார சுல்தான்! நாம் நண்பர்கள்; நமக்குள் சோதனை வேண்டாம்!'' என்கிறான் பசவராஜ்...

''வாள்களுக்கு நட்பு தெரியாது. வீரத்துக்குப் பாசம் புரியாது; வெற்றிக்கு உறவே தெரியாது. நான் குரானுக்குக் குரியவன். ஆனாலும் கீதையை ஞாபகப்படுத்துகிறேன். அது என்ன சொல்லுகிறது? யுத்தத்தில் கொல்பவனோ, கொல்லப்படுபவனோ பாவிகளாவதில்லை. அது இறைவன் சித்தம்! ஆத்மாவுக்கு நட்பேது? பாசமேது? உறவேது?''

திடலுக்கு வந்த திப்புசுல்தான் இரு வாள்களை, இரு கரங்களில் ஏந்தி நிற்கிறான்.

அனைவருக்கும் வியப்பு! ஏன் பசவராஜுக்கும் வியப்பு...

திப்புசுல்தானுக்கு இப்படியான - இரட்டை வாள் பயிற்சியும் உண்டா? யாரிடம் பயின்றான்?

இருவரும் இரு மத்தகங்களைப் போல, இரு மலைகளைப் போல மோத ஆயத்தமாகிறார்கள்...

மக்களிடையே ஒரே ஆரவார எழுச்சிக் குரல்கள்...

''குமார சுல்தான்! தயவு செய்து வேண்டுகிறேன்... நமக்குள் இந்தச் சோதனை வேண்டாம்!''

பசவராஜ் தடுத்து நிறுத்த முனைகிறான்.

''நமக்குள் நாம் யார் என்பதை நிரூபித்து ஒரு முடிவுக்கு வர வேண்டுமல்லவா?''

திப்புசுல்தான் இவ்வாறு கூறிக்கொண்டே இருகரங்களிலிருந்த வாள்களை இடமும் வலமுமாக 'விசுக் விசுக்' கென்று வீசி, பசவராஜின் மார்புக்கு நேரே குறிவைத்துத் தனது வலக்கரத்து வாளை நீட்டி ஆவேசமாகப் பாய்கிறான்.

ஒரு பகைவனின் நிர்தாட்சண்யமான மூர்க்கத்தனம் போல் வாளை மார்புக்கு நேரே நீட்டிப் பாய்ந்த திப்புசுல்தானைக் கண்ணுற்று,



ஒரு விநாடி நட்பு தழுவி அன்பால் தடுமாறி, மறுகணம் சற்றே பின்வாங்கி ஒதுங்கிய பசவராஜ், தனது வாள்களை வட்ட வடிவமாக, இடம் வலமாகச் சுழற்றி ஒதுங்கிக் கவனிக்கிறான்...

''குமார சுல்தான்! தயவு செய்து நான் சொல்வதைச் செவியில் நிரப்புங்கள்! உங்கள் கரங்களிலிருக்கிற வாள்கள் என் பொருட்டு உறைகளில் ஓய்வெடுக்கட்டும்.''

நிரம்பவும் தாழ்மையாகவும் ஓர் அன்பின் உத்தரவே போலும், அதே நேரத்தில் தனது வாள்பலத்தைப் பற்றித் தானே நன்குணர்ந்து கேட்டுக் கொள்கிறான் பசவராஜ்.

திப்புசுல்தான் குரூரமாகப் பசவராஜைக் கவனிக்கிறான்...

அது சுபாவமானதோ அல்லது சூட்சுமமிக்கதோ?

''பசவராஜ்! நீ இப்போது எனது நண்பனல்லன்; இந்த வாட்போரைப் பொறுத்தமட்டில் நீ ஒரு சத்தியமான வீரனாகவே என்னை வெல்ல அல்லது வீழ்த்த முனைதல் வேண்டும். உன்னை எதிர்ப்பவன் ஒருவீரன்; நண்பன் திப்புசுல்தான் அல்லன்?''

இவ்விதம் ஓர் உள்ளார்ந்த அர்த்தத்துடன் சொற்களைத் துப்பாக்கி ரவைகளாக வெடிக்கச் செய்த திப்புசுல்தான், ஓர் அரிமாவைப் போன்ற சிலிர்ப்புடன் வாள்களை மேலும் கீழுமாக வெட்ட, பசவராஜ் குனிந்தும், துள்ளியும் மீள...

ஆ! துவந்த தனிப் பல யுத்தம் துவங்கிவிட்டது, புயலும் புயலும் மோதிச் சுழன்று அடிப்பனபோல...

மலையும் மலையும் மோதிப் பிளப்பனபோல...

மத்தகமும் மத்தகமும் மோதி மதநீர் சுரந்து வெறி கொண்டனபோல...

கூரிய வாள்களில், வீரிய மின்னல்கள் பறக்கின்றன...

கணங், கணங், கண, கண, கண...

வானம் கிழிபட, பூமி வெடிபட, அண்டம் பொடிபட...

பெருத்த ஓசைகளுக்கிடையே மக்களின் பெருத்த கூச்சல்...

எத்தனையோ இதயங்கள் பலவீனப்பட்டு இயங்குகின்றன... அலை மோதுகின்றன... என்ன நடக்குமோ? யார் வீழ்ச்சியடையப் போவது?

அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா, ஒரு விதத்தில் அஞ்சியும் மறுவிதத்தில் அஞ்சாமலுமாக மெல்ல திவான் சாகிப் மீர்சாதிக்கை நோக்குகிறாள்...

தனது உள்ளுணர்வைப் பகிர்ந்து கொள்ளச் சமிக்ஞை மூலம் அருகே அழைக்கிறாள்...

திவான் சாகிப் மீர்சாதிக்கும் தனது இருக்கையைத் தள்ளி அருகே நகர்ந்து, வந்து, செவியின் மீது வலக்கரத்தை வைத்து, ''சொல்லுங்கள் பேகம் சாஹிபா!'' என்கிறான்.

''இந்தச் சண்டையை நிறுத்த முடியுமா திவான்?''

அன்னையுள்ளம் குழம்புகிறது...

திவான் சாகிப் மீர்சாதிக் திகைக்கிறான்...

எதிர்வரிசையில் திவான் பூரணய்யாவும், ஆளுநர் சையத் முகமதுவும், நகரத் தலைவர் நரசிங்கராவும் என்னவென்று புரியாது கவனிக்கின்றனர். மக்களின் பெருத்த ஆரவாரத்தில் அவர்கள் உதடுகள் அசைவனதாம் தெரிகின்றனவேயொழிய, என்ன பேசிக் கொண்டார்கள் என்பது கேட்கவில்லை.

திப்புசுல்தானும் பசவராஜும் சிங்கங்களைப் போலப் பாய்ந்து பாய்ந்து வாட்களை மந்திரமாகச் சுழற்றுகின்றனர். வேடிக்கை பார்க்கிற ஜனத்திரள், ''இவர்களை வெல்ல யாரால் முடியும்?'' என்று முனகுகிறார்கள். 'இவர்களில் யார் வெல்லப் போகிறார்கள்?'

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மஞ்சுளா தேவியின் பூவினும் மென்மையான இதயாசனத்தில், தனதருமைக் காதலன் பசவராஜே வெற்றி வாகை சூடிக் கெக்கலி கொட்டிப் பெருமிதத்துடன் சிரிப்பதாக உணருகிறாள்...



மாபெரும் வீரனை மணக்கப்போகிற மகாபாக்கியத்துக்குரிய தன்னை, பலரும், குறிப்பாக தன்னந்தஸ்துக்குரிய பெண்களும், அதற்கு மேலும் உள்ளவர்களும் ஒரு ராணிக்குரிய மரியாதையைச் செலுத்துவதாகக் கற்பிதம் செய்து பூரிக்கிறாள்...

ஆனால் பசவராஜின் அன்னை கங்கம்மாள், 'எதற்காக இந்தத் திப்புசுல்தான், தனது மகனிடம் ஒரு விரோதியைப் போல எதிர்த்து போரிட வேண்டும்? கம்பங்கூழையும் வெங்காயத்தையும் சாப்பிட்ட பொன் மனச் செம்மலா இவ்வாறு புறத்தே உள்ளவன்பால் பகை கொண்டு, போருக்கு அழைப்பது போல அழைத்துப் புற முதுகிடச் செய்ய அல்லது புறமுதுகிட ஆசை வைக்க வேண்டுமா?' என்று மனத்துள் புலம்புகிறாள். மகனுக்கு ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று அந்தத் தாயுள்ளம் மைசூரில் கோயில் கொண்ட சாமுண்டீஸ்வரியை வழிப்பட்டுக் கொள்கிறது.

குழுமியிருந்த கூட்டம் 'ஓ' வென்று கூச்சலிடுகிறது...

அந்த வீரத் திடலே துவம்சமாகிற மாதிரி திப்புசுல்தானும் பசவராஜும் போரிடுகிற காட்சி...

ஆ...

கவசமணியாது அவர்கள் சூறைக் காற்றைப் போலச் சுழன்று சுழன்று யுத்தம் புரிந்தாலும்...

வாள்களுடன் வாள்கள் மோதினவே யொழிய, அந்த வாள்கள் மறந்தும்கூட அவர்களுடைய தேகங்களைத் தொடப் பயப்பட்டன என்று சொல்வதைவிட நாணப்பட்டன என்றே சொல்லவேண்டும். அவர்கள் உடல்களில் வியர்வைத் துளிகள் அரும்பி வழிந்தனவே யன்றிச் சிறு ரத்தத் துளிகள்கூட எட்டிப் பார்க்கவில்லை. வாள்கள் தங்களுக்குள்தாம் பகைமை பாராட்டிக் கொண்டன; அவற்றைப் பற்றிக் கொண்டிருப்பவர்கள் கெழுதகை நண்பர்கள் என்கிற அக்கினி போன்ற உண்மை அவற்றுக்கு நன்றாகவே புரிந்திருந்தது.

மாறி மாறிப் பாயும் நண்பர்களின் இந்தத் தனிப் போரைக் கண்டு, ''எனக்கு ரொம்பவும் பயமாக இருக்கிறது, மீர் சாதிக்'' என்று அஞ்சியவாறு பதைபதைக்கிறாள் பெரிய சுல்தானா பேகம்

பக்ருன்ஷா. மகன் தோற்றுவிடுவானோ என்கிற அவமானத்துக்குரிய சந்தேகம்.

திவான் சாகிப் மீர்சாதிக்கும் மிகுந்த நயத்துடன் சிரித்துக் கொண்டே, ''பேகம் சாஹிபா! இது நிஜமான யுத்தம் என்று நினைக்கிறீர்களா? இது ஒரு நாடகம்! இது ஒரு ஏற்பாடு! நாளைய யுத்தப் புறப்பாட்டுக்கு பசவராஜ் தலைமை தாங்க வேண்டும் என்பது நமது இளையசுல்தானது விருப்பம். அதனை இவ்வாறு ஒரு நாடகமாடி வீரமிடுக்குடன் அரங்கேற்றுகிறார்!'' என்றான்.

''அப்படியென்றால் திப்பு தோற்றுவிடுவான் என்று நினைக்கிறீர்களா?''

''தோற்கமாட்டார். தோற்றதுபோல் பாவனை செய்யப் போகிறார்!''

''நடக்கிற சண்டையைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே.''

''நிஜமான சிங்கத்தின் நட்பு முறையில் மோதிக் கொண்டாலும் அவற்றின் கர்ஜனைகள் பயமாகத்தானே இருக்கும்?''

திடுமென்று ஜனத்திடையே பெருத்தவானைக் கிழிக்கிற அளவுக்குச் சத்தம்...

இருவரும் திடலை நோக்க -

திப்புசுல்தான் என்கிற சிங்கம் தரையில் விழுந்து உருளுகிறபோது...

''மீர் சாதிக்!'' என்று அலறி விடுகிறாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா.

பக்கத்தில் அமர்ந்திருந்த திப்புசுல்தானின் ராணிகள் 'வீல்' என்று குரல் கொடுத்து இருகரங்களையும் வாயில் பொத்தி, கண்களை அகலவிரித்து என்ன நடக்குமோ என்கிற பய உணர்ச்சியுடன் கவனிக்கின்றனர்.



திவான் மீர்சாதிக்கும் கூட அதுவரை அவர் தெரிவித்த கருத்துக்கு முரணாகவே நடந்த அந்தப் பலப் பரீட்சையைக் கண்டு ஒரு நிமிடம் அரண்டு போனார். இவர்கள் உண்மையாகத்தான் போரிடுகிறார்களா?

உருண்டு சென்ற திப்புசுல்தானைத் தொடர்ந்து, வாளை ஓங்கிக் கொண்டு பாய்ந்து வந்த பசவராஜ், அதனைத் தரைநோக்கி 'விசுக் விசுக்' கென்று வீசுகிறான்...

திப்புசுல்தானோ அந்த வீச்சிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டிப் புரள, மீண்டும் பசவராஜ் வாளை 'விசுக்' கென்று வீச, புரள, வீச, புரள...

தரையில் வாள்முனைக் கீறல்கள் கோடு கோடாய்ப் பதிந்து, மண்ணைக் கிளப்பி, 'பசவராஜின் வாள்வீச்சைப் பொய்யென்று நினைப்பதா? திப்புசுல்தான் விழுந்ததை மெய்யென்று நிரூபிப்பதா?' என்று புரியாது வாய் பிளந்து சிரிக்கின்றன.

திப்புசுல்தான் மிகுந்த சமத்காரத்துடன் புரண்டு, துள்ளி எழுந்து, வலது கையிலிருந்த வாளால் எதிர் வீச்சு வீசி எதிரியின் வாளைத் தடுத்து முன்னேறுகிறபோது...

மக்களின் கரகோஷம் மெய்ச்சிலிர்க்க வைக்கிறது; சிலரை மெய் விதிர்க்கச் செய்கிறது...

திவான் பூரணய்யாவும் தம்மை மறந்து கைத்தட்டுகிறார். திப்புசுல்தான் வெற்றியடைய வேண்டும் என்பது அந்த மெய்ப்பாட்டில் புலனாகிறது.

ஒருவாறு பயம் நீங்கிய பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா, ''மீர்சாதிக்! இந்தப் பலப்பரீட்சையில் திப்பு தோற்கிறானோ ஜெயிக்கிறானோ... எனக்குள் நான் ஒன்றைத் தீவிரமாக முடிவு செய்து விட்டேன்...'' என்றாள்.

திவான் சாகிப் மீர்சாதிக் மெல்லத் திரும்பி, பெரிய சுல்தானா பேகத்தைக் கூர்ந்து பரிசீலித்து முறுவலிக்கிறான். அவனுக்கு அம்மாதிரியான ரகசிய ஆலோசனைகளுக்கு மகாசுல்தான் ஹைதர்

அலியிடமே அதிகமான செல்வாக்குண்டு. துன்மார்க்கமான முறையில் ராஜ தந்திரத்துடன் அபிப்ராயங்களை வழங்குவதில் அவன் ஓர் அசுர வித்து. பெரிய சுல்தானா பேகமும் அவனிடம் இது மாதிரியான சதி பற்றியதில் சர்வ ஜாக்கிரதையாகக் கலந்து ஆலோசிப்பாள். வருவாய்த் துறையின் வாசலாயிற்றே அவன்!

தனக்குள்ள மரியாதைகள் என்ன என்பதைப் பூரணமாக அறிந்து கொண்டிருந்த திவான் சாகிப் மீர்சாதிக்கும், அவற்றை எப்போதுமே பகிரங்கமாக இழக்கச் சம்மதியாத சமர்த்தனாகவே நடந்து கொள்வான். இப்போதும் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் தீவிர முடிவுக்குச் செவி சாய்க்கும் பவ்யத்துடன் ''சொல்லுங்கள் பேகம் சாஹிபா!'' என்று கூறுகிறபோது ஒருவித நயமான ஓசை அவனது நாவில் இயல்பாகவே குந்தியது.

''மீர்சாதிக்! பசவராஜை இனியும் விட்டு வைக்கக் கூடாது. இப்பேர்ப்பட்ட துணிச்சல் மிக்க வீரனைச் சதிகாரர்கள் வலைவீசி விலைக்கு வாங்கி விட்டால், பிறகு நமது அரசாங்கத்துக்கு ஆபத்து!'' என்று பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா கூறுகிறபோது அந்தச் சொற்கள் வாள் முனைகளாகத் திவான் சாகிப் மீர்சாதிக்கின் இதயத்தில் குத்தின. அப்படியும் அவன் சிரிக்கிறான். ''பசவராஜை அவ்வளவு எளிதாக யாரும் வலைவீசி வாங்கமுடியாது, பேகம் சாஹிபா! வேண்டுமானால் வீழ்த்துவதற்கு என்ன வழி என்பது குறித்து யோசிக்கலாம்!''

''நிச்சயமாக யோசிக்க வேண்டும். அத்துடன் அந்த ரங்கநாயகியைத் தொலைத்து விடவும் தீர்மானித்து விட்டேன். நாளை திப்பு போர்ப் பயணம் செய்கிறான். நாளைய கழித்து மறுநாள் இந்த இருவருக்கும் முடிவு காணவேண்டும்.''

''நமது மகா சுல்தான் அவர்கள், இது குறித்து ஒப்புதல் தெரிவிக்க வேண்டுமே பேகம் சாஹிபா!''

''பயப்பட வேண்டாம் மீர்சாதிக்! மகாசுல்தானே இது குறித்து எனக்கு ரகசியக் கடிதம் எழுதியனுப்பியிருக்கிறார்.''



''அப்படியானால் இருவரையும் நான் கவனித்துக்கொள்கிறேன். உத்தரவுக்காகத்தான் எதிர்பார்க்கிறேன். ஒருகால் நாளையப் போர்ப் பயணத்தின்போது பசவராஜ் உடன் புறப்பட்டாலும் கவலையில்லை, அதற்கும் வழிவகுக்க என்னால் முடியும். எனக்கும் இந்த இரண்டு சைத்தான்களால் ஏதாவது புதுக் குழப்பங்கள் ஏற்படுமோ என்கிற சந்தேகம் எப்போதுமே உண்டு.''

திவான் சாகிப் மீர்சாதிக் இவ்வாறு கூறுகிறபோது ''சில நாள்களுக்கு முன்பே இது தீர்ந்திருக்க வேண்டிய விஷயம். தவறி விட்டது'' என்று மனத்துள் முனகிக் கொண்டான். சொல்லப் போனால், மகா சுல்தான் ஹைதர் அலியே ஒரு சமயம் இது குறித்துத் திவான் சாகிப் மீர்சாதிக்கிடமும் திவான் பூரணய்யாவிடமும் வருந்தியிருக்கிறார். ஆனால் திவான் மீர்சாதிக்கிடம் மட்டும் தனிமையில் பேசுகிறபோது, ரங்கநாயகியைத் தீர்த்துக்கட்டிவிட்டுப் பழியை பசவராஜ்மீது போட்டு விடவும் ஆலோசனை வழங்கியிருந்தார்.

ஒரு பூகம்பமே ஏற்பட்டது போன்ற அதிர்ச்சி மாதிரியான சத்தம் கூட்டத்தினரிடையே எழுந்தது. அனைவரது கண்களும் இமைக்க மறந்து பரபரப்புடன் நோக்கின.

பசவராஜின் இரு கரங்களிலிருந்த வாட்களிரண்டில் ஒன்று நழுவி மேலே பறந்து பூமியில் வந்து விழுகிறது. அதனை ஓடிச்சென்று எடுக்க முயல்கிறான் பசவராஜ். அதற்குள் திப்புசுல்தானின் இடது கால், கீழே விழுந்த அந்த வாளின் பிடியை மிதித்துக் கொள்கிறது.

ஒரு விநாடி தொலைவிலிருந்து தனதருமை நண்பன் திப்பு சுல்தானை நோக்குகிறான் பசவராஜ். 'எனது வீரம் உனது காலடியில்' என்பதுபோல் ஒரு நிவேதனமாய் அவனது கண்களில் நீர் திரையிடுகிறது. அடுத்துக் கொஞ்சமும் தனது தயக்கத்தைக் காட்டாது, அவ்விதம் காட்டுவதன் மூலம் தனது மனநிலை வெளிப்படுமோ என்றஞ்சி, வலது கையிலிருந்த வாளை வீசிக் கொண்டு துரோணரின் வாரிசைப்போலப் பாய்கிறான்... ஆயினும் அவனது உள்ளம் கண்ணனின் கீதையாய் உருவிக்கொண்டிருக்கிறதே...

இந்தக் கட்டத்தில் திப்புசுல்தான் ஒருபடி மீறிய மானுஷ்ய நிலையிலிருந்து தனது நண்பனை நோக்கி, ஓ... இவன் மட்டும் ஒற்றை வாள் கொண்டு போரிட, தான் மட்டும் இரட்டை வாள்கள் மூலம் வீரத்தை நிறுவுவதாவது? என்றெண்ணி தனது இரு கரங்களிலிருந்த வாள்களுள் ஒன்றை அநாயசமாகத் தூக்கி எறிகிறான்...

மானுட மறிந்தோர் கூச்சலிட்டு வரவேற்கிறார்கள்...

அறியாதார் ‘எதற்காக ஒருவாளை வீசி எறிய வேண்டும்? ஒரே மூச்சில் இந்தப் பசவராஜை வீழ்த்தலாமே!’ என்று அரற்றிக் கொள்கின்றனர்.

திப்புசுல்தானும் பசவராஜும் ஒற்றை வாள் கொண்டு ஆவேசமாகப் போரிடுகிறபோது, வாள்களின் மோதல்களால் ஏற்பட்ட நெருப்புப் பொறிகள் பிரமிக்க வைக்கின்றன.

ஓர் அருமையான சந்தர்ப்பத்தில் திப்புசுல்தான் இசகு பிசகாக அகப்பட்டுக் கொண்டு திணறுகிறான்...

இந்த இடத்தில் நிச்சயமாகத் திப்புசுல்தான் வீழ்த்தப்பட்டான் என்றே எல்லாருமே ஏகோபித்து இரைச்சலிடுகின்றனர்...

‘பசவராஜே வெற்றி கண்டான்’ என்று அவனைச் சார்ந்தவர்கள் உற்சாகக் குரல் எழுப்புகிறார்கள்...

பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா முதல், மாரியட் ஈறாக ‘நமது திப்பு வீழ்ந்து பட்டான்’ என்றெண்ணித் துடிக்கின்றனர்...

அந்த ஒரு நிமிஷ நேரத்தில் ஒரு திசைத் திருப்பமான நிகழ்ச்சி நடந்து விடுகிறது...

ஆ! பசவராஜ் கோட்டை விட்டு விட்டானே! அவன் கையிலிருந்த வீரவாள், திப்புவின் வீரமிகு வாள் வீச்சால் நழுவிப் பளீரென வானோக்கிப் பறக்கிறது...

நிராயுத பாணியாகி விட்ட பசவராஜ் தலைகுனிந்து நின்று விடுகிறான்...



‘‘குமார சுல்தான்! எனது தோல்வியை மனமுவந்து பகிரங்கமாக ஏற்றுக் கொள்கிறேன்!’’

வீரவாள்-தோல்வி காணாத செருக்கனைய வெற்றி வாள்-முதன் முறையாகப் பூமியில் விழுந்து கிடப்பதைக் கண்ட திப்பு சுல்தான், மரியாதையாக அதைத் தொட்டு, வணங்கி, எடுத்து முத்தமிடுகிறான்.

பசவராஜின் குனிந்த தலை இன்னமும் நிமிரவே இல்லை.

அவனைக் காணக் காண...

நினைக்க, நினைக்க...

கற்பனை செய்யச் செய்ய...

திப்புசுல்தானுக்கு ஒன்றுமே புரியவில்லை. இவன் உண்மையில் தோற்றானா இல்லை; நான்தான் உண்மையில் வென்றேனா?

சூழ்ந்திருந்த மக்களிடையே எழுந்த பல தரப்பட்ட ஆரவாரங்கள் அடங்க நீண்ட நேரம் பிடிக்கிறது...

திப்புசுல்தானைப் பாராட்டும் முகாந்தரமாகத் திவான்களும், பௌஜ்தார்களும், அரசியல் அதிகாரிகளும் அருகே வருகிறார்கள்.

இதனை விரும்பாத திப்புசுல்தான், ‘‘தயவுசெய்து போய் விடுங்கள்! ஒரு வருங்கால மகா சுல்தானிடம் ஒரு வீரப்பிரஜை தோற்ற விளையாட்டு இது! அவரவர் இருப்பிடங்களுக்குச் செல்லலாம்!’ என்று உரத்தகுரலில் வெறுப்பார்ந்த நிலையில் சத்தமிட்டுக் கத்துகிறான்...

சற்று துணிவுகொண்டு அருகே வந்த திவான் பூரணய்யா ‘‘குமார சுல்தான்! உங்கள் தம்பியார் பறங்கிப் பேட்டை நோக்கி படைகளுடன் புறப்படுகிறாராம்! வழிகூட்டிவைக்க...’’ என்று கூறி முடிக்கு முன்னம் இடைமறித்த திப்புசுல்தான், மிகுந்த எரிச்சலுடன், ‘‘நீங்கள் வழி கூட்டி யனுப்புங்கள்! என்னையே வழி கூட்டியனுப்புகிற பொறுப்பு ராணுவ மந்திரியாகிய உங்களுக்குத்தானே இருக்கிறது?’’ என்றான்.

திவான் பூரணய்யா தமது மரியாதையைச் செலுத்திவிட்டு அங்கிருந்து அகன்றார்.

அந்தத் திடலே காலியாகி வெறிச்சோடிக் கிடக்கிறது...

இன்னமும் பசவராஜ் தலைகுனிந்தே நின்றிருக்கிறான்...

''பசவராஜ்! என் பாராட்டுக்குரிய நண்பனே! என்னைப் பாராட்ட வந்தவர்களுக்கு நான் சொன்ன பதில் சரிதானே?'' என்று கூறிக் கொண்டே நண்பனது வலது தோளைப்பற்றித் திரும்பினான் திப்புசுல்தான்.

''சரியானதல்ல குமாரசுல்தான்! நான் உண்மையிலேயே தோற்றுப் போனேன்!''

அவன் கண்கள் கலங்குகின்றன...

''பொய் சொல்லுகிறாய் பசவராஜ்! பல சந்தர்ப்பங்களில் உனது வீரவாளின் வீச்சின், முன் நான் பயந்துப் பிரமித்தும் நடுங்கியும் போனேன்! அப்போதெல்லாம் நீ விளையாட்டாகவே என்னை விட்டு வைத்தாய் என்பதை நானறிவேன்! பசவராஜ்! நீ வென்றிருந்தால் நான் சந்தோஷப் பட்டிருப்பேன்!''

''நீங்கள் தோற்றிருந்தால் நான் தற்கொலை செய்து கொண்டிருப்பேன். பசவராஜ், ஒரு விவசாயியின் மகன்! ஆனால் எனது நண்பர் திப்புசுல்தான், ஒரு மாவீர மகா சுல்தான் ஹைதர் அலிகான் நவாப்பின் அருமந்த புதல்வர்! இந்தத் தென்னகத்தின் வீரகர்ஜனை! ராஜகர்ஜனை! அவரது சரித்திரம் இந்தத் தேசத்தின் - இந்த உலகத்தின் ஓர் அங்கம். எனது சரித்திரம் இந்த மண்ணில் ஒரு புதைகுழி! எனவே சரி, சரி... புறப்படுங்கள் குமார சுல்தான்!''

திப்புசுல்தானின் வீரக் கண்கள் - கலங்கியறியா அகன்ற கண்கள் கலகலவென்று நீரை உகுக்கின்றன...

''பசவராஜ்! நாளை நீ என்னுடன் யுத்தத்துக்குப் புறப்படுகிறாய்! மகா தளபதியாகவல்ல; இந்த விருது உனக்கு அவசியமுமில்லை. அதனினும் மேம்பட்ட திப்புசுல்தானின் மகா நண்பன் என்ற நிலையான விருதுடன் புறப்படுகிறாய். எல்லாரும் போர்ப்





புறப்பாட்டின்போது தங்கள் மார்பில் புலிச் சின்னமணிய வேண்டும்! ஏன்? நானும் அணிந்தே தீர வேண்டும்! ஆனால் உனக்கு வேறு சின்னத்தை நான் அளிக்கிறேன். அதனை நீ மார்பில் அணிந்து கொண்டு புறப்படவேண்டும்?''

அண்ணாந்து கவனித்த பசவராஜ், ''என்ன சின்னம் குமார சுல்தான்?'' என்று கேட்கிறபோது, அவனது குரல் தழுதழுக்கிறது.

பெருமிதமான சிரிப்புடன், ''எனது உருவம் பொறித்த சின்னம்!'' ராஜ கம்பீரமாகக் கூறிய திப்புசுல்தான், தனது நண்பனை அன்புடன் அணைத்தவாறு குதிரைகள் நின்றிருக்கும் இடம் நாடி நடக்கிறான்.

தான் கண்ட பெருவெற்றியை எண்ணிப் புளகம் கண்ட பசவராஜின் மெய்யெல்லாம் புல்லரிப்புடன் பூரித்து விம்முகிறது...

ஸ்ரீரங்கநாதர் கோயில் மணியோசை 'டாங் டாங்' என்று ஒலிக்கத் தொடங்குகிறது.

## 13

**ஸ்ரீ**ரங்க நாதத்தில் அந்த இனிய ஒலியில் மயங்கித் தன்னைப் பறிகொடுத்துக் குத்தங் காலிட்டு அமர்ந்திருக்கிறாள் ரங்கநாயகி. அவளது மனோலயத்தில் காதல் சீராகத் தாளமிட்டும் பல சுருதிபேதங்களைக் காண்கிறது. அங்கே சுருதிபேதம் ஏற்படக் காரணமே இல்லை என்று அவள் தீர்த்தமாகவும் தெளிவாகவும் நம்புகிறாள்...

ஆனால், மனம் மட்டும் ஏனோ தடுமாறி ஒரு புதுப் பயத்தைத் தன்னுள் ஏற்றி அலமரல் கண்டு நடுக்கத்துடன் ஆரோக்கியமிழந்து அவதிப்படுகிறது...

கொஞ்ச நேரத்துக்கு முன்பு திப்புசுல்தான் கண்ட வாள் பலத்துப் பெரு வெற்றியைப்பற்றி மக்கள் பேசிக் கொண்டதைச் செவி சாய்த்தாள். அவள் அது குறித்துப் பெருமை கொள்ளவில்லை. திப்பு என்றாலே வீரம்; வெற்றி; என்பதுதான் அவளது அகராதியில் அர்த்தம், அதனால்தான் அவள் வருகை தரவில்லை போலும்!

அவளது கவலையெல்லாம், நாளை திப்புசுல்தான் பெருத்த சைன்யத்துடன் யுத்தத்துக்குப் புறப்படப்போகிறார்! என்று திரும்பு வாரோ? அதற்குள் இங்கு என்னவெல்லாம் தன் விஷயத்தில் அசம்பாவிதங்கள் நடந்துமுடியுமோ என்பதில் மொய்த்துப் பலவீனப்பட்டுக் கொண்டிருக்கிறது...

அன்றைய தினம் வலையில் அகப்பட்டு மீண்ட நிகழ்ச்சிக்குப் பிறகு, அவள் மிகவும் சோர்வடைந்திருந்தாள். தன் விஷயத்தில் பல சூழ்ச்சிகள் நடப்பதாகவே அவள் முழுதுமாக நம்பி அலைமோதிக் கொண்டிருக்கிறாள்!

குதிரையின் குளம்படிச் சத்தம் கேட்கிறது...

அவர் அதோ வருகிறார்...

ஆகாயத்திலிருந்து ஒரு துண்டு வெண்மேகம் பிட்டுக் கொண்டு வந்து பூமியில் விழுந்து, அது குதிரை வடிவம் தாங்கி, திப்புசுல்தான் என்கிற தேவ புருஷனை ஏற்றிச் சுமந்து கொண்டு ஓடி வருவது போலத் தொலைவில் வெண்புரவியில் ஆரோக்கணித்து வருகிற திப்புசுல்தானைப் பற்றிக் கற்பனை செய்து பார்க்கிறாள் ரங்கநாயகி.

அந்தப் பதினாறு கால் பாழடைந்த மண்டபத்தையடைந்த திப்பு சுல்தான், தனது வெண் புரவியை இழுத்து, நிறுத்தி, ஒரு நிமிடம் அதன் மீதிருந்தே காதலியை நோட்டம் விடுகிறான். பிறகு, ஒரு துள்ளுத் துள்ளி இறங்கி ஓடி வருகிறான்.

தலையில் தலைப்பாகையற்று, உடல் முழுவதுமாக நீண்ட வெள்ளங்கியுடுத்தி, கழுத்தில் முத்தாரம் மட்டும் பெருமை பேச, கைவிரலில் கோமேதகக் கல்பொறித்த மோதிரம் பிரகாசிக்க அவன் வந்திறங்கிய கோலம், உண்மையிலேயே தேவ புருஷனை ஞாபகப்படுத்துகிறது...

ஓ...

அல்லாஹ் என்கிற அந்த ஆண்டவன் ஒரு பரம புருஷனே! எவ்வளவு விசுவாசமாக - கருணையோடு இந்தத் திப்புசுல்தானை ஒரு தேவையாகக் கருதி, தேவ தூதனாகப் படைத்து, இந்த அடிமைகளாய்



அல்லலுறும் மாந்தர்களைக் காக்கவும், ஆண்டான் போல் அட்டகாசம் செய்யப் புகுந்த வெள்ளைக் கும்பினியனை விரட்டவும் பூலோகத்துக்கு அனுப்பியிருக்கிறார்...

ரங்கநாயகி தனது முறையில் இவ்விதமாகக் கற்பிதம் செய்து கொண்டதோடல்லாது, 'யாஹ் அல்லாஹ்!' என்றும் அவள் ஒரு கணம் எல்லாம் வல்ல அல்லாஹ்வை எண்ணிப் பார்க்கிறாள்...

''ஆதியை, அமுதை, என்னை யாளுடை அப்பனை ஒப்பவர் இல்லார்'' என்று அந்த ஸ்ரீரங்கநாதப் பெருமானை வணங்கும் அவள்...

'வைகுண்டேதுபரேலோகே, ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந' என்று அந்த ஜநார்த்தனை வழிபடும் ரங்கநாயகி...

திருக்குரானையும் அவள் முழுதுமாக மனனம் செய்து கொண்டவள். திப்புவின் நாயகியாகப் போகிறவளாயிற்றே!

[1]'வானங்கள் மீதும் பூமியின்மீதும் ஆட்சி அல்லாவுக்கே உரியது என்பதையும் நீர் அறியவில்லையா?' என்கிற தூயதான மனப்பாங்குடன் அவள் திப்புவை எண்ணி வாழ்த்திக் கொண்டதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்? என்ன குற்றம்தான் இருக்க முடியும்?

தனது காதலனை இருகரம் நீட்டி வரவேற்கிறாள்...

ஓர் இசுலாமிய மன்மதனைப் போலக் கவர்ச்சிப் புன்னகை புரிந்து அருகே வந்தமர்ந்த திப்புசுல்தான், தனது அருமைக்கும் பெருமைக்கும் கௌரவத்துக்கும் உரிய கவிதை நயம் பொருந்திய இனிய காதலியைக் கண்கொட்டாமல் கவனிக்கிறான்...

அந்தப் பார்வையில் பிரிவாற்றாமை தெரிகிறது...

நாளைக்கு யுத்தப் புறப்பாடு; திரும்பிவர எத்தனை நாளாகுமோ? அதுவரை இந்த அழகுப் பொக்கிஷத்தைப் பார்வையிட முடியாது; பாதுகாத்து ஒப்படைக்கவல்ல அரிய நண்பன் பசவராஜுவும் தன்னுடன் புறப்படுகிறான்...

1. 2:107, திருக்குரான்.

மனத்தே இலேசான கலக்கம் பலவீனமாகத் தலை நீட்டுகிறது...

அருகே எரிந்து ஒளியுமிழந்து கொண்டிருக்கிறது பாவை விளக்கு...

இருட்டு நன்றாகவே முற்றுகையிட்டுக் கொண்டது.

"ரங்கநாயகி! நீ இன்றைக்கு நடந்த வீரப்பலப் பரீட்சையைப் பார்வையிட வந்தாயல்லவா?"

திப்புசுல்தான் நாவிலிருந்து சொற்கள் உதிர்கின்றன. கண்களில் பலவிதமான கேள்விக் குறிகள்.

"இல்லை."

இம்மட்டே பதில் சொல்லித் தலைகுனிகிறாள் ரங்கநாயகி.

"ஏன் ரங்கநாயகி? ஸ்ரீரங்கப்பட்டினமே திரளாக வந்தது."

"அதனால்தான் நான் வரவில்லை."

"பேஷ், பேஷ்?"

"ஆனாலும் நீங்கள் பசவராஜ் அண்ணனை எதிர்த்திருக்கக் கூடாது. கேள்விப்பட்டேன்."

திப்புசுல்தான் ஒருகணம் விழிக்கிறான்...

"காரணம்?"

"உங்கள் வீரத்தை நீங்களே நம்ப மறுத்தது தேவையற்றது. நீங்கள் வாள் எடுக்க வேண்டுமா? உங்கள் கர்ஜனையே போதுமே! மாவீரத் திலகமான நீங்கள், பழிவாங்க வேண்டியவர்கள் வெள்ளைக் கும்பினியர்; வெள்ளை மனம் படைத்த அண்ணன் பசவராஜல்ல! உங்கள் வீரத்தை அவர் என்றாவது குறைத்து மதிப்பிட்டிருக்கிறாரா? உங்கள் வீரத்தை பார்க்கையில் அவர் எம்மாத்திரம்? அதை வேடிக்கை பார்க்கக் கொடுத்து வைக்க வில்லையே என்று ஏங்குவதே ஒரு பலவீனம். நான் அதை விரும்பவில்லை."

ஓ... எனது வீரத்தை ஒரு மகாயக்ஞம் போல - ஒரு காப்பியம் போல எண்ணி இறுமாந்திருக்கும் இவளை, நாம் சராசரி



மாந்தர்களோடு ஒப்பிட்டுக் கேட்டதே ஓர் ஆரோக்கியமற்ற விஷயம்...

"ரங்கநாயகி! நான் நாளை போர்முகம் நோக்கிப் பயணப் படுகிறேன்."

"கேள்விப்பட்டேன்."

"பத்திரமாக இருப்பாயா?"

"உங்களுக்கே சந்தேகமா? நிச்சயமாக இருக்க முடியாது. அடிக்கடி எனது வலது கண்ணும் வலது தோளும் துடிக்கின்றன. எங்கள் நம்பிக்கைப்படி துன்பம் வருகிறது என்று அர்த்தம். ஆகவே நாளை நானும் உங்களுடன் வருவதாக உத்தேசம்."

"நீயா?"

திப்புசுல்தான் பெரிதாக அதிர்ந்து போனான், இவளை அழைத்துக் கொண்டு யுத்த களம் நோக்கிச் செல்வதாவது? அதுவும் தந்தையார் தண்டு இறங்கியிருக்கும் போர் முகாமை நோக்கி இவளை அழைத்துச் சென்றால், அந்நியரை எதிர்க்கப் போய், தந்தையும் தனயனும் ஒருவரையொருவர் எதிர்த்துக் கொள்கிற அவலமான நிலைமை ஏற்பட்டுவிடாதா?

"என்ன யோசிக்கிறீர்கள்?"

"என் அப்பா அங்கே இருக்கிறார்."

"அதனால்தான் நான் வருகிறேன் என்கிறேன்! உங்கள் அப்பாவை இந்த லால் மகாலில் வைத்தோ, தாரியாதௌலத்தில் அமர்த்தியோ சமாதானம் செய்து உங்கள் காதலின் ஜயப்பதாகையை நிறுவ முடியாது. இங்கே கோட்டான்களும் குள்ளநரிகளும் இருக்கின்றன. அங்கே அவர் தனித்திருப்பார். இயல்பாகவே அவரைச் சம்மதிக்கச் செய்ய என்னால் முடியும்."

"அப்படியா சொல்கிறாய்?"

"அப்படித்தான் சொல்லுகிறேன். சுல்தான்! தயவு செய்து நாளை என்னை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். எனக்குப் பயமாக

இருக்கிறது. என்னுயிருக்கே ஆபத்து வருமோ என்று பயப்படுகிறேன். நீங்கள் என்னை இங்கே விட்டுச் செல்வதானால் பசவராஜ் அண்ணனைக் காவலாக வைத்து விட்டுச் செல்லுங்கள். இல்லையென்றால், நீங்கள் திரும்பி வருகிறபோது என்னைச் சத்தியமாகக் காணமுடியாது என்றே என் மனம் அறிவுறுத்துகிறது. அன்றைக்கு வலையில் அகப்பட்டுக் கொண்ட நாள்முதற் கொண்டே, இங்கே ஏதோ சூழ்ச்சி நடக்கிறது என்பது திட்டவட்டமாகப் புரியவில்லையா? ரங்கநாயகியை இழப்பதால் இந்த ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கு எந்தவித நஷ்டமுமில்லை. ஆனால் ரங்கநாயகியை இழந்த எனது சுல்தானால் இந்த ஸ்ரீரங்கப்பட்டினமே நஷ்டத்துக்குள்ளாகிவிடும் என்பதை நானறிவேன். தயவுசெய்து என் சொல்லைத் தட்டவேண்டாம்.''

அழுகையும் தொண்டையடைத்தலுமாகக் கூறி முடித்த ரங்கநாயகியை, மண்டபத் தூணில் சாய்ந்து அமர்ந்திருந்த திப்புசுல்தான் மிகவும் கவலையுடன் அண்ணாந்து கவனிக்கிறான்...

தேவதைபோல் ஒயிலாக நின்றிருந்த ரங்கநாயகி அப்படியே அட்டங்கமும் நெட்டங்கமுமாகத் தரையில் பட விழுந்து, திப்புசுல்தானின் பாதங்களில் தனது அலங்காரத் தலை புதைத்து நமஸ்கரிக்கிறாள். இவளது கண்ணீர், திப்புவின் பாதங்களைக் கழுவி மன்றாடுகிறது...

முடிவு தெரியாமல் குழம்பிய திப்புசுல்தான், சிலைத்துப் போனான். அவனது நினைவு நண்பன் பசவராஜைச் சுற்றி வட்டமிடுகிறது...

நாளை அவனை அழைத்துச் செல்வதா? விட்டுச் செல்வதா?

பசவராஜ் தனது அறையில் விசித்திருந்த பஞ்சணையில் மல்லாந்து படுத்துக் கொண்டிருக்கிறான்...

பக்கத்தில் அமர்ந்திருந்த மஞ்சுளா தேவி, அவனது சிந்தனைகள் போர்முகத்தில் இருப்பதாக நினைத்து, ''நான் ஒருத்தி பக்கத்தில் அமர்ந்திருக்கிறேன்... போர்ப் பயணம் நாளைக்குத்தானே? இன்றே என்ன அதுபற்றிய சிந்தனை?'' என்று சிணுங்கினாள்.



சற்றே ஒருக்களித்துக் கவனிக்கிறான் பசவராஜ்...

''சிந்தனை போர்க்களம் பற்றியல்ல; உன்னைப் பற்றித்தான்!'' என்று கூறியதுமல்லாது அவளது இடுப்பில் விரல்களைத் துழாவிக் 'கிச்சு கிச்சு' மூட்டுகிறான்...

அதுவரைச் சிரிப்பற்றுக் கிடந்த அவள், மெல்லச் சிரித்து உடலை நெளிக்கிறாள். ''போதும், இந்த ஆண்கள் பெண்கள் விஷயத்தில்தான் சூரர்கள். இல்லாவிட்டால் தோற்றுவிட்டு 'ஹிஹிஹி' என்று பல்லிளித்துக் கொண்டு நிற்பீர்களா?''

''நான் தோற்றது தீரன் திப்புசுல்தானிடம் தானே? அவர் தம்பி அப்துல் கரீமிடமா? இல்லை, அந்த அதர்மன் திவான் மீர்சாதிக்கிடமா? அல்லது ஆங்கிலக் கும்பினிவாள் வீரனான லார்டு மக்கார்ட்னீயிடமா? பசவராஜ் என்பவன் வாளின் வித்தியாதரன்!''

''அப்போது திப்புசுல்தான் உங்களைவிட வீரர் என்று சொல்லுங்கள்?''

''சந்தேகம் இல்லை; இல்லையென்றால் அவர் நாடாள முடியுமா? போகட்டும். நீ எப்போது சிவசமுத்திரத்துக்குப் புறப்படுகிற மாதிரி?''

''நீங்கள் போரிலிருந்து திரும்புகிறவரை நான் இங்கேயே இருக்க வேண்டும் என்பது அத்தையின் கட்டளை.''

''அத்தை தூங்கி விட்டார்களா?''

''ஏன்?''

''ராத்திரி வேளையில் உன்னை இப்படித் தனியாகப் பேச அனுமதித்து இருக்கிறார்களே என்றுதான்...''

''தன் பிள்ளையைப் பற்றிய தாராள நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. பாவம்! அழுது அழுது கண்ணே வீங்கி அடுப்பங் கரையிலிலேயே தூங்கி விட்டார்களோ, என்னமோ? நீங்கள் யுத்த களத்துக்குப் புறப்படுவது அவர்களுக்கு விருப்பமே இல்லை! எனக்கே விருப்பமில்லை என்றால்... எதற்காக இந்த அநாகரிக

மானப்போர்? மனிதர்களை வெட்டிச் சாய்த்து எலும்புக் கூடுகளைக் கணக்கிட்டோ அல்லது மண்டையோடுகளை மாலையாக்கி அணிந்து கொண்டோ ஏற்படுகிற நாகரிகம்தான் சிறந்தது என்றால் மனிதப் படைப்பு ரொம்பவும் மட்டமானது.''

''அடடா! பலே வியாக்கியானம்தான்! போகட்டும்; அம்மா தூங்கி விட்டார்களா என்று பார்த்து விட்டு வாயேன்!''

''எதற்கு?''

பசவராஜ் அவளை மெல்லத் தன் மடியில் சாய்த்து அவளது ரோஜா இதழ்களில் தனது வீர இதழ்களைப் பொருத்தியவாறு ''இதற்காகத்தான்!'' என்றான்.

அவள் சிணிங்கியவாறு எழ முயற்சி செய்கிறாள்...

அவனது முறுக்கேறிய கரங்களிலிருந்து அவளால் விடுபடுவது என்பது அவ்வளவு எளிதாக முடிகிற காரியமா, என்ன?

''என்ன இன்று புது நடவடிக்கைகள்?''

அவளது கண்களில் பொய்யான கோபாக்கினி...

அவனும் மெய்யாகவே சிரித்து...

''நாளை நான் யுத்தகளம் நோக்கிப் பயணமாகிறேன். ஒருகால் திரும்பாமலும்...''

அவன் முடிக்கவில்லை.

அவள் மின்னல் அதிர்ச்சி கொண்டு தனது வலக்கரத்தால் அவனது வாயைப் பொத்துகிறாள். அதனை மெல்ல விலக்கிய பசவராஜ், ''கையால் பொத்துவதைவிட அதரங்களால் பொத்தியிருந்தால் அதுவே எனது வெற்றியாக இருக்கும் என்று எதிர்பார்த்தேன். மஞ்சு! வீரன் என்பவன் மரணத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டே பிறக்கிறான். அதற்காகப் பயப்படுகிறவன் மானுடத்தின் கடைசிக் கோழை! என்னமோ உன்னை அனுபவிக்க வேண்டுமென்று இதுகாறும் தோன்றாத ஆசை இப்போது தோன்றியது எனக்கே புரியாத ஆச்சரியமாக இருக்கிறது. இது விபரீதமான



ஆசையோ, விவஸ்தையற்ற ஆசையோ, விவேகமான ஆசையோ; எனக்குப் புரிபடவில்லை என்றால் விளக்கை அணைக்கலாம்!''

ஒரு நிமிஷம் யோசிக்கிறாள் மஞ்சுளாதேவி...

அவளை யோசிக்கவிட்டு மௌனமாகக் கவனிக்கிறான் பசவராஜ்.

அவளது வாயிலிருந்து இரகசியமாகச் சொற்கள் வெளிப்படுகின்றன. ''கல்யாணம் ஆகாமல்...''

''உனக்கு நான், எனக்கு நீ என்றான பிறகு - அல்லது அந்தப் பிரமன் எழுதிவிட்டப் பிறகு - அவன் சாட்சி என்று துணிய வேண்டியதுதான். காந்தருவ மணம் என்பது பெரிய விஷயம்! இப்போது மனிதர்கள் நம்பிக்கையற்றவர்களாக - நாகரிகம் முதிர்ந்தவர்களாக - நாலும் தெரிந்தவர்களாக என்று சொல்வதைவிட நாலையும் ருசிக்கவேண்டியவர்களாகி விட்டார்கள். புனித காந்தருவ மணம் காற்றில் பறந்து விட்டது. நாம் அதனை ரொம்ப மரியாதையுடன் வீட்டுக்குள் அழைத்து, நேசித்து, உபசரித்து, பக்தியுடன் வணங்குவோமாக; வாழ்த்துவோமாக!''

பசவராஜ் மிகுந்த நுணுக்கத்துடன் விளக்கம் கூறி, மஞ்சுளா தேவியை உன்னிப்பாகக் கவனிக்கிறான்.

அவனது கண்களில் மன்மதன் மகா யக்ஞம் வளர்ப்பது அவளுக்கும் புரிகிறது.

ஏமாற்ற விரும்பாத அவள்-ஏமாந்து போகவும் விரும்பாத அவள். மெல்ல எழுந்து சென்று வெளியே கவனித்துவிட்டுத் திரும்புகிறாள். அவ்விதம் உள்ளே நுழைகிறபோது கதவைச் சாத்தித் தாழிடுகிறாள்.

அவன் போதையுடன் முறுவலிக்கிறான்.

அவள் பேதை நெஞ்சாய்ப்பக்கத்தில் வந்து அமர்கிறாள்...

இன்னும் விளக்கு அணையவில்லை. அதை அணைக்க வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் நினைத்துவிட்டார்கள் போலும்!

திறந்த ஜன்னல்களின் வழியாகக் குடகுமலைக் காற்று குளுகுளுவென்று வீசுகிறது.

அவளை மெல்லத் தனது மடியில் சாய்த்து...

அவள் அங்கங்கள் பூரிப்பில் விம்மி மென்னகை புரிகின்றன...

மைவிழியில் காதலெனும் கவிதை கருக்கொண்டு, மெய் வழியில் காமமெனும் அதிரசம் வாய்ந்த காப்பியம் உதயமாகிறது...

இது...

பொய் வழியோ, மெய் விழியோ போனவரும் வந்தவரும் சத்தியமாய்ப் புகன்றாரில்லை. எனவே, கைவழியே புஷ்பங்கள் மணக்க, கால் வழியே சதங்கை ஓசையார்ப்ப சொர்க்கம் செய்வழியும், அது சொன்ன செவிவழியும் சங்கமித்து, அங்கே நெய்வழிய விளக்கின் திரி ஜோதியாய் ஒளிர்கிறது...

இரவு முடிகிறது; அதன் சிருஷ்டியும் புரிகிறது...

ஆ... இளங்காலைப் போது எவ்வளவு இன்பமாய் விடிகிறது...!

## 14

**போ**ருடை தரித்துப் புறப்படுகிற மகனுக்கு அன்புடன் ஆசி வழங்குகிறாள் அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா.

''திப்பு! என் மகனே! போரில் நீ காணத் துடிக்கும் வெற்றியை விட நான் காணத்துடிக்கும் உனது தந்தை மேலானவர். ஆகவே அவரை மீட்டு வரவே உன்னை அனுப்புகிறேன்...''

கண்களில் நீர் தளும்ப அன்னை இவ்வாறு கூறியதும், தனது குதிரை சிலிர்ப்புக் கண்டு கனைப்பதைக் கவனிக்கிறான் திப்புசுல்தான். அவனது உதடுகளில் வெறுமை கலந்த சிரிப்பு தவழுகிறது. அதனில் அடங்கிய ஆழம் அளவிட முடியாது இருக்கிறது.

''அம்மா! ஹைதர் அலி என்பவர் எனது தந்தை, உங்கள் கணவர்! ஆனால் ஹைதர் அலிகான் நவாப்பகதூர் என்பவர் இந்தத்



தேசத்தின் விடுதலை முழக்கத் தலைவன்! நான் ஒரு தலைவனை மீட்கிற தொண்டனாகப் புறப்படுகிறேனேயொழிய, கேவலம் அரும்பி மறையும் உறவுப் பாலத்தின் மீது நடந்து செல்ல விரும்பவில்லை. அதைரியப்படாதீர்கள். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணை எதுவோ அதுவே நிகழும். நிகழ்ச்சியில் நன்மை தீமை ஏற்படுவது அவன் கிழித்த கோடு.

மகனுடைய இந்தச் சாதுரியமான பதில், அன்னையுள்ளத்தைக் குளிரச் செய்கிறது.

அருகே இருந்த மகன் ஃபாத் ஹைதரைத் தூக்கி வாயார முத்தமிடுகிறான் திப்புசுல்தான். அவனுக்குத்தான் குழந்தைகள் மீது அபாரமான பிரியமாயிற்றே!

எதிரே நின்றிருந்த மனைவிமார்களைக் கவனித்துப் புன்முறுவல் பூக்கிறான். கர்ப்பவதியாய்க் காணப்பட்ட ருக்காய்யா பானுவிடம் சென்று, பெருமிதத்துடன், ''பானு! நீ எனது வெற்றி வருகையின் போது இன்னொரு நல்ல மகனைப் பரிசாக அளிப்பாய் என்று எதிர் பார்க்கிறேன்!'' என்று கூறுகிறபோது, அவனது தோள்கள் விம்மிப் பூரிக்கின்றன. அனைவரிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு வெளியே வருகிறான். அனைவரும் அவனைப் பின் தொடர்ந்து வருகின்றனர்.

லால்மகால் வாயிலில் நின்றிருந்த திவான்களுக்கும் பௌஜ்தார்களுக்கும் ஏனைய கில்லேதார், சுபேதார், சௌக்கிதார், பக்ஷி, குஷுன், சிதாபர், ருசால்தார், சரிசாக்ஷி, யாசக்தார், பிர்ஜதா ஆகிய அலுவலர்களுக்கும் நாட்டின் முக்கிய பாதுகாவலைப் பற்றிய எச்சரிக்கைகளை வழங்குகின்றான். குறிப்பாகத் திவான் பூரணய்யாவிடம் சற்று அதிகமாகவே பேசிவிட்டு, தொலைவில் மீசையை முறுக்கியவாறு இருந்த திவான் சாகிப் மீர் சாதிக்கிடம், ''எல்லாருமே ஆண்டவனுக்குப் பொதுவாகக் காரியங்களைக் கவனியுங்கள்!'' என்று சொன்னதுதான் அன்னை பெரிய சுல்தானா பேகத்துக்கு வருத்தமாகவும் வேதனையாகவும் இருந்தது. பிறகு, பொக்கிஷதாரர் கிருஷ்ணராவிடமும், அந்தரங்க அதிகாரிகளான

சீனிவாச ராவ், அப்பாஜி ராவிடமும், சிலவற்றை ரகசியமாகப் பேசி முடித்தான்.

அணிவகுத்து நின்ற ராணுவத்தினரிடையே அவன் நடந்து செல்கிறபோது அவன் அணிந்திருந்த பொன் ஜரிகையால் வேய்ந்த அங்கி பளபளக்கிறது. வீரர்கள் வெற்றி முழக்கமிடுகிறார்கள். அவர்களை வரிசைப்படுத்திக் கண்காணிக்கிறார்கள் உடன் புறப்படுகிற ராணுவத் தளபதிகளான ராஜாக்கானும், குலாம் உத்தீர்கானும்.

தொலைவில் பசவராஜ் வீறார்ந்த கோலத்துடன் உறையிலிட்ட வாளின் பிடி மீது இடக்கையூன்றி நின்றிருக்கிறான். அவனைக் காணுந்தோறும் ராஜாக்கானுக்கும் குலாம் உத்தீர்கானுக்கும் எரிச்சல் எரிச்சலாய் எழுகிறது. அதிலும் பசவராஜ் தனது சட்டையின் இடது மார்பில் திப்புவின் உருவம் பொறித்த சின்னம் அணிந்திருந்தது பெருத்த ஆச்சரியத்தை தந்தது. இதனை இவன் ஏன் அணிந்திருக்கிறான். இவ்விதம் அணிய இவனுக்கு என்ன யோக்கியதை? யாரிட்ட உத்தரவு இது? என்பன போன்ற பல கேள்விகளுக்கு விடை தெரியாமல் பலரும் விழிக்கின்றனர்.

ஆண்டவனை வணங்கியவாறு வெண் புரவியின் மீது அமர்க்களமாக ஆரோகணிக்கிறான் திப்புசுல்தான்.

யுத்த கால வாத்தியங்கள் முழங்குகின்றன.

தனது நண்பன் பசவராஜைக் கவனிக்கிறான். ரங்கநாயகியின் நினைவு வருகிறது.

''பசவராஜ்!''

ராஜ நண்பனின் அழைப்பைக் கேட்டு அருகே வந்து நிற்கிறான் பசவராஜ்.

குதிரை மிகவும் துடிப்புடன் இப்படியும் அப்படியுமாகத் திரும்பி, புறப்பாட்டுக்கான முழு வேகத்தில் காணப்படுகிறது. அதனின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து அடக்கிப் பின்னர் குனிந்து நிரம்பவும் ரகசியமாக, ''பசவராஜ்! ரங்கநாயகி விஷயத்தில் நான்



தீவிரமான ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அவளை இங்கு விட்டுச் சென்றால், தகுந்த பாதுகாவலாக உன்னையன்றி வேறுயாரும் இருக்க முடியாது. ஆகவே...'' என்று கூறி முடிக்காமல் நிறுத்துகிறான். பிறகு நண்பனைக் கூர்ந்து பரிசீலிக்கிறான்.

திப்புசுல்தான் மென்மையாகச் சிரித்துக் கொள்கிறான்.

''ஆகவே பசவராஜ், நீ உடனே சென்று எனது சாரட்டில் ரங்கநாயகியை அமர்த்திக் கொண்டு என்னுடன் புறப்படுகிறாய்!''

ஓர் ஆணையே போலக் கூறிய திப்புசுல்தானைத் தயக்கத்துடன் கவனிக்கிறான் பசவராஜ்.

''ஏன் தயங்குகிறாய் பசவராஜ்? நன்மையோ, தீமையோ... நான் ஆராய்ந்தே இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். சொன்னதைச் செய்!''

அடுத்த கணமே அந்த ராஜ உத்தரவைத் தாங்கிய பசவராஜ். தனது குதிரையில் தாவி ஏறி மிகுந்த வேகமாகப் புறப்படுகிறான். பலரும் காரணம் புரியாது விழிக்கின்றனர்.

ஒரு நிமிடத்துக்குள் பசவராஜ் எதை முன்னிட்டு விரைகிறான் என்கிற கசப்பான செய்தி பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் செவிகளுக்கு எட்டிவிடுகிறது.

அவள் விழித்தவாறு திவான் சாகிப் மீர்சாதிக்கைக் கவனிக்கிறாள். போட்ட திட்டம் ரகசியமானதாயிற்றே! இது திப்புவின் செவிகளுக்கு எட்ட நியாயமில்லையே? எப்படித் தெரிந்திருக்க முடியும்?

போர்ப் பயணத்துப் புறப்பாட்டுக்கான உத்தரவை அளிக்கிறான் திப்புசுல்தான். வீரர்கள் ஜயகோஷமிட்டுப் புறப்படுகிறார்கள்.

முன்னே காலாட்படை; பின்னே பெருவாரியான குதிரைப்படை; அதற்குப் பின்னே பத்துத் துப்பாக்கிகளைத் தாங்கிய வீரர்கள்; இரண்டு பீரங்கிகள்...

மைசூர் சேனை, காஞ்சிபுரத்துக்குப் பதினைந்து கல் தொலைவிலிருக்கும் பேரம்பாக்கம் நோக்கி, மகிஷபலம் கொண்டு செல்வதை ஸ்ரீரங்கப்பட்டினத்து மக்களும், அந்தத் தீவுக்கு

அப்பாலுமுள்ள ஜனங்களும் கண்டுகளித்து வழியேற நின்று வாழ்த்தி வழிகூட்டி யனுப்புகிறார்கள்.

சேனைகள் புறப்பட்ட சில நிமிடங்களுக்குள் லால்மகாலில் இருந்து ரகசியக் கடிதங்களைத் தாங்கிய சிப்பாய் ஒருவன் மிகவும் ஜாக்கிரதையுடன் குதிரையில் புறப்படுகிறான். சாமர்த்தியம் நிறைந்த அந்த இஸ்லாமியச் சிப்பாய், சேனைகளுடன் கலந்து கொள்கிறான். அவனது இடுப்பில், பெரிய சுல்தானா பேகமும், மீர்சாதிக்கும் ரகசியக் கடிதங்களின் மூலம் மறைந்திருக்கிற விஷயம், நம்புவதும் நம்பமுடியாததுமாக உலகின் பிரகிருதிகளுக்கிடையே பல்வேறு பாத்திரமேற்று நடித்து வருகிற விதிக்குத்தான் வெளிச்சம்!

கிருஷ்ணகிரியை அடைகிறபோது சூரியன் மேற்கே மறைந்து கொண்டிருக்கிறான்...

ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கும் காஞ்சீபுரத்துக்கும் குறுக்கு வழியே இடைப்பட்ட ஏறத்தாழ சமபாதி தூரத்தைக் கடந்து வந்துவிட்டார்கள். அன்றிரவு கிருஷ்ணகிரியிலேயே படைகளைத் தங்கச் செய்து இளைப்பாறக் கட்டளை பிறப்பித்திருந்தான் திப்புசுல்தான். ஓரிரவு விட்டு ஓரிரவு ஓய்வு கொடுத்துப் படைகளை நடத்திவந்தபோது இடையில் அவர்களுக்குத் தேவையான உணவுகளைத் தமிழ் மக்கள் வாரி வழங்குவதில் பின் வாங்காமல் தங்கள் தாராள மனத்தைத் திறந்து காட்டி மகிழ்ந்தனர். வாரி வழங்குவதிலும் வந்தவர் யாராயினும் வரவேற்பதிலும் ஏமாந்து ஏங்குவதிலும் தமிழர்கள் என்றைக்குப் பின் வாங்கியிருக்கிறார்கள்? மேலும் ஒரு சுதந்திர புருஷன்-தேச நலனுக்காக வெள்ளைக்காரனை வெளியேற்ற உரிமை முழக்கம் செய்து வரும் மக்கள் திலகமாயிற்றே திப்புசுல்தான்!

மாலைத் தொழுகையை முடித்துக்கொண்டு கூடாரத்துக்குத் திரும்புகிறான் திப்புசுல்தான். கூடாரத்தினுள்ளே ரங்கநாயகி மிகவும் பயந்த சுபாவத்துடன் அமர்ந்து எட்டிப் பார்க்கிறாள்.

வெளியே ஒரு மரத்தடியின் கீழ் கம்பளத்தை விரித்துப் போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கிறான் பசவராஜ். அவனுடன் ஏனைய தளபதிகள் - பௌஜ்தாரர்களான ராஜாக்கானும் குலாம் உத்தீர்கானும் அமர்ந்திருந்தனர். ஏனையவர்கள் தங்களுக்குத்



தேவையான இடங்களில் கூடாரங்களை அமைப்பதில் தீவிரமாக முனைந்திருந்தனர்.

விசாலமான அந்தப் பொட்டல் காடு, அதுவரை அனுபவித்தறியா வைபவத்தை அனுபவிப்பது கண்டு மக்கள் வியந்து கொண்டிருந்தனர். அவர்களின் ஆர்வம் நிறைந்த எதிர்பார்ப்பைக் கவனித்த திப்புசுல்தான், மனம் நிறைந்த தோற்றத்துடன் இருகரம் கூப்பி வணங்குகிறான்.

கூடியிருந்த அனைவரும் பெருமிதத்துடன் ‘சுல்தான் ராஜா வாழ்க’ என்றும் ‘நவாப் ராஜா வாழ்க’ என்றும் கோஷமெழுப்பிக் குதூகலிக்கின்றனர்.

அந்த நேரத்தில் யாருமே எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி மிகுந்த பரபரப்புடன் நிகழ்ந்தது.

ஓர் இளம்பெண், கையில் குழந்தையை ஏந்திக் கொண்டு பலரையும் மீறி ஓடிவந்தாள். அவளை யாரும் தடுத்து நிறுத்தவில்லை. திப்புவின் உத்திரவுக்கு மீறி ஒரு துரும்பும் அசையக்கூடாதே!

ஓடி வந்தவள் தனது கையிலிருந்த ஆடையற்ற குழந்தையைத் திப்புசுல்தான் பாதங்களில் வைத்து, ‘‘மகாராஜா! பசியால் தவிக்கும் இந்த ஏழையின் குழந்தைக்கு உங்கள் திருவாய் நிறையப் பெயர் வையுங்கள். இதுவாவது பிற்காலத்தில் உங்கள் ஆசீர்வாதத்தால் பசியற்று வாழட்டும்!’’ என்று கூறுகிறபோது...

அவள் விசும்பி விசும்பி அழுகிறாள்.

திப்புசுல்தான் உடம்பே புல்லரிப்புக் கண்டு, பல விநாடிகள் அந்தக் கிழிந்து ஒட்டு போட்டுத் தைத்திருந்த அழுக்கேறிய ஆடையுடைய பெண்ணைக் கவனிக்கிறான்...

‘‘சகோதரி நீ யார்? உனக்கென்ன குறை அதை முதலில் சொல்? குழந்தைக்குப் பெயர் வைப்பதைப் பின்னால் பார்க்கலாம்!’’

‘‘மகாராஜா! நான் ஓர் ஏழை விவசாயியின் மனைவி. என் பெயர் வசந்தி. என் புருஷன் குடும்பத்தைக் காப்பது கிடையாது. நான் உழைத்துச் சாப்பிட்டு இந்தக் குழந்தைக்குப் பால் தருகிறேன்!’’

‘‘ஏன்? உன் புருஷன் சம்பாதனை?’’

''அவர் ஒரு தொடுப்பு வைத்துக் கொண்டு வீட்டுக்கே வருவதில்லை.''

''யாரவள்?''

திப்புசுல்தான் கோபாவேசத்துடன் கேட்கிறான்.

வசந்தியோ, மிகவும் உக்கிரமுடன் திரும்பி, ''அதோ நிற்கிறாளே... அந்தத் தேவடியாள்தான்!'' என்று கூறுகிற போது, அவளது கண்களில் தெறித்த நியாயமான நெருப்புப் பொறிகளைத் திப்புவால் பூரணமாகக் கவனிக்க முடிகிறது.

''உன் புருஷனையும் அந்த வைப்பாட்டியையும் இப்படி அழைத்து வா!''

நடுநடுங்கிப் போன அவர்கள் - வசந்தியின் புருஷனும் அவனது வைப்பாட்டியும் அழைக்கு முன்னம் அவர்களாகவே அருகே வந்து நின்றனர். அவர்கள் எதிர்பாராதது, அவ்வாறு வரவில்லையென்றால் தண்டனை என்ன என்பது தேசப் பிரசித்தமாயிற்றே!

அருகே வந்து நின்ற அந்த வாலிபன் ஒரு கணம், ''தன்னை விசாரிக்க இவன் யார்?'' என்றும் எண்ணிப் பார்க்கிறான். அப்போதைய தமிழகத்தில் 'தலைவன்' என்ற சொல் அகராதியை விட்டு நழுவி விட்ட நேரம் அந்த இடத்தில் 'தண்டல்காரன்' என்ற சொல் இடம் பெற்று விட்ட காலம். ஆர்க்காட்டு நவாப் முகமதலிக்கு உட்படாதது கிருஷ்ணகிரியானாலும், ஹைதர் அலியின் பார்வையில் காஞ்சி வரை கலயம் ஏந்திக் கொண்டிருந்தது. அத்தனைப் பாளையக் காரர்களும் அவரது அடி பணியச் சித்தமாயிருந்தனர்.

அந்த வாலிபனை நோக்கிய திப்புசுல்தான் -

''இவள் உன் மனைவிதானே?'' என்று கேட்டான்.

அவனும் மௌனமாகவே தலையசைவின் மூலம் ஒப்புதல் தெரிவிக்கிறான்.

''இவள் உன் ஆசைநாயகியா?''



மீண்டும் அதே தலையசைவு.

''உனக்கு வெட்கமாக இல்லை?''

''இல்லை.''

''இல்லையா?''

''ஆமாம்; நவாப்! நீங்கள் மட்டும் நூற்றுக்கணக்கில் ஆசை நாயகிகளை வைத்துக் கொண்டிருக்கிறபோது, நான் ஒரே ஒருத்தியைத்தானே வைத்துக் கொண்டிருக்கிறேன்.''

திப்புசுல்தான் அதிர்ந்து போனான்.

'ஓகோ! தமிழன் பேசத் தெரிந்தவன்...'

-அடுத்த விநாடி, கடகடவென்று ராட்சஸத் தனமாகச் சிரிக்கிறான் திப்புசுல்தான்.

கூடியிருந்த அனைவருமே பயந்து விட்டனர். இவன் தலை உருளப் போகிறது...

''அச்சா...! ஏய்... உன் பெயர் என்ன?''

''சாத்தப்பன்!''

''சாத்தப்பன்! எனது எல்லைக்குள்ளிருந்து என்னையே எதிர்த்துப் பேசுகிற முட்டாளே! அந்தஸ்துள்ளவன் ஆயிரம் பேரை வைத்துக் கொள்ளலாம்! அவர்களுக்கு அவன் வயிற்றை நிரப்பி வாழ்வைக் கொடுக்க முடியும். ஆனால் தன் வயிற்றுக்குச் சோறு தேடிக் கொள்ளவே திறமையில்லாதவன் கல்யாணமே செய்து கொள்ளக் கூடாது. நீ உன் மனைவியின் வயிற்றுக்கே சரியாகச் சோறு போடவில்லை என்பது அவளது கழுத்தில் தொங்கும் வெறுங்கயிறே சாட்சியாக நிரூபிக்கிறது.''

அந்த வாலிபனோ தனது ஆபத்தான நிலைமை புரிந்து, வருகிற ஆபத்து வழியில் நிற்கப் போவதில்லை என்ற தீரத்துடன் ''அப்படியானால், அந்தஸ்துக்கு ஒரு நியாயம் அது அற்றவனுக்கு ஒரு நியாயமா ஹைதரின் ஆட்சியில்?'' என்றான்.

பயங்கரமான கேள்வி: ஆயினும் பளீரென்று பதில் சொன்னான் திப்புசுல்தான்.

''முட்டாள்! நான் சட்டத்தையும் மோகத்தையும் பற்றிப் பேசவில்லை. தருமத்தை எடுத்துச் சொல்கிறேன். சட்டம் ஒருவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தாரங்களை அனுமதிக்கலாம். ஆனால் அவர்களை வைத்துக் காப்பாற்ற அவனுக்குச் சக்தி இருக்க வேண்டாமா? சட்டம் உன்னை நிறையச் சம்பாதிக்கவும் அனுமதிக்கிறது. அதை நீ செய்யவில்லையே? முதலில் அதைச் செய்து விட்டுப் பிறகு இரண்டென்ன நாலு தாரங்களை வேணுமானாலும் வைத்துக் கொள்!''

திப்புசுல்தானின் அனல் பறக்கும் பார்வையும் பேச்சும் வசந்திக்கு நடுக்கம் தந்துவிட்டன. தனது புருஷனது தலை உருளப் போகிறது என்று தீர்க்கமாக முடிவு செய்து கொண்டாள். அடுத்து கொஞ்சமும் தாமதியாமல், திப்புசுல்தானின் முள் நிறைந்த பாதுகைகளை அணிந்த பாதங்களில் விழுந்து, ''மகாராஜா! என் புருஷன் விவஸ்தை கெட்டவர்; அதனால்தான் உங்களை எதிர்த்துப் பேசிவிட்டார்! அவரைச் சிரச்சேதம் செய்துவிடாதீர்கள்! உங்களைத் தரிசித்த என் தாலிக்கு அபகீர்த்தி ஏற்பட வேண்டாம். அது முதன் முறையாக ராஜ தரிசனம் கண்டிருக்கிறது. அந்தத் தரிசனம் புனர் ஜென்மம் அளிப்பதாக இருக்கட்டும்!'' என்று கூறி, 'கோ!' வென்று கதறத் தொடங்கி விட்டாள்.

அவளுடன் அவளது குழந்தையும் பயந்து வீறிட்டு அழத்தொடங்கி விட்ட காட்சி, பார்க்கப் பரிதாபமாக இருந்தது. பலருடைய கண்களைத் துடைக்கச் செய்து விட்டது.

கூடாரத்தின் இடைவெளியில் தெரிந்த துவாரத்தின் வழியாகக் கவனித்துக் கொண்டிருந்த ரங்கநாயகியின் கண்களில் நீர்த் தாரையிட்டது.

அழுதுகொண்டிருந்த குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டுத் தட்டினான் திப்புசுல்தான். அவனுக்குத்தான் குழந்தைகள் என்றால் எல்லை கடந்த பாசமாயிற்றே!



''சகோதரி! இந்தப் பெண்ணைப் பற்றியும் நான் தெரிந்து கொள்ளவேண்டும். இவள் யார்!''

''இவள் கட்டியவனை விட்டு ஓடிவந்து விட்டவள்...!''

''கட்டியவன் என்னவானான்?''

''அவமானம் தாங்காமல் தூக்கில் தொங்கிவிட்டான்!''

''புத்திசாலியானவன்! போகட்டும் குழந்தையைப் பிடி!'' என்று கூறிக் குழந்தையை வசந்தியிடம் கொடுத்த திப்புசுல்தான், தனது இருகரங்களிலிருந்த கனத்த பொற்கடையங்களைக் கழற்றி, குழந்தையின் கால்களில் நுழைத்து விட்டான். அது 'தொள தொள' வென்றிருந்ததால் கழன்று விழாமல் பிடித்துக் கொண்டாள் வசந்தி.

''இவனுக்கு பசவராஜ் என்று பெயர் வையம்மா! அத்துடன் இவன் வாலிபமடைந்ததும் எனது அரண்மனைக்கு அனுப்பிவை. இவன் எனது சொத்து!'' என்று கூறிச் சில விநாடிகள் நிறுத்திய பின்னர், தொலைவில் நின்றிருந்த தனது நண்பன் பசவராஜை நோக்கி, பசவராஜ்! எனது நண்பனே! இப்படி வா! உன் பெயர் கொண்ட இந்தக் குழந்தைக்குத் தந்தையான இந்த நிர்மூடனுக்கும், இவனைக் கெடுத்த என்று சொல்வதைவிட, தன்புருஷனைச் சாகடித்த இந்த ஓடுகாலிக்கும் நீயே தண்டனை வழங்குவாயாக!'' என்று பூதாகாரமாகச் சத்தமிட்டுக் கூறிய திப்புசுல்தானைக் காண...

பலருக்குத் திகைப்பு; சிலருக்கு வியப்பு; ரங்கநாயகிக்கோ மலைப்பு!

## 15

**ப**சவராஜின் நிலைத் தடுமாற்றம் சொல்லில் அடங்காது விரிகிறது...

அன்பின் அடித்தளத்தில் நிறுவப் பெற்ற நட்பின் துவஜஸ்தம்பம், ஏனைய பௌஜ்தார்களுக்குப் பளிச்சென்று தெரிகிறது! இந்தக் குழந்தைக்குத் தனது பெயரைச் சூட்டியதில் எதிரொலித்த

உள்ளடக்கமான தந்திரம் தெளிவாகவே விளங்குகிறதானாலும், தன்னையே அழைத்துத் தண்டனை வழங்குமாறும் இந்த இளைய சுல்தான் பணித்தவிதத்தில்தான் ஏதோ ஒரு நுட்பமான மர்மம் பதுங்கி இருப்பதாக நினைத்துப் பார்க்கிறான் பசவராஜ்.

அந்த ராஜ தந்திர நுட்பம் எதுவாக இருக்க முடியும்? தரவேண்டிய தண்டனையை இளைய சுல்தானே பிரகடனப்படுத்த வேண்டியதுதானே? அல்லது மன்னிக்க வேண்டியதுதானே? தனது தலையில் ஏற்றி ஒரு பாரமாக்கி பார்ப்பதில் என்ன லாப நஷ்டங்கள் வரவு செலவாகப் போகின்றன? இதில் தனது புத்தி சாதுரியம் என்ன என்பதைப் பரிசீலிக்க ஒரு முன்னேற்பாடா?

பசவராஜ் பெருத்த ஆலோசனையுடன் திப்புசுல்தான் முன் வந்து நின்று ஒரு நிமிஷம் அண்ணாந்து கவனிக்கிறான்...

இந்த நிலைமையில் எது குறித்தும் விளக்கம் கேட்டு விவாதிப்பதும் சரியாகாது. அவ்விதம் விவாதிப்பதே தனக்களிக்கப் பட்ட கௌரவத்தைத் தானே பாதிக்கச் செய்வதற்கு ஒப்பானது என்கிற தீர்வுடன் திரும்பி, வழக்குக்குரியவர்களைக் கூர்ந்தும், கடுமையாகவும் ஒரு சோதனையே போலக் கவனிக்கிறான்...

சுற்றிலும் சூழ்ந்திருந்த கிருஷ்ணகிரி வாழ் மக்கள் இந்தப் பிராதின் தீர்ப்பை அறிய நிரம்பவும் ஆவல் கொண்டிருக்கின்றனர் என்பதும் தெரிய வருகிறது. யாருமே எதிர்பாராத இந்த நிகழ்ச்சித் திருப்பம் கிருஷ்ணகிரி ஜனங்களுக்கு ஒரு நல்ல பாடமாக அமையட்டும் என்றும் சில விவஸ்தையுள்ள பெரியவர்கள் எண்ணியும் எதிர்பார்த்தும் கவனிக்கின்றனர். அருகருகே நின்றிருந்த பௌஜ்தார்களுக்கோ, என்னதான் நண்பனாக இருந்தாலும், இந்தப் பணியை பசவராஜிடமா ஒப்படைப்பது? அவ்வாறு ஒப்படைப்பதன் மூலம் தங்களையெல்லாம் இளைய சுல்தான் அவமதித்து விட்டாரே என்கிற கைத்த நினைப்புடனும் கடுகடுத்த முகத்துடனும் நெஞ்சுபிளக்கக் கவனிக்கின்றனர்.

ஒரு முறை தனது தொண்டையைச் செருமிக்கொண்ட பசவராஜுக்கு ஓரளவு தன்னை அழைத்துப் பணித்ததன் நோக்கம்



புரிகிறது. தனது மார்பிலிருக்கிற திப்புசுல்தான் உருவச் சின்னத்தைக் கவனிக்கிறான். இதயத்தே திப்புவின் பகிரங்கத் தோற்றம்! தனது வாக்கும் இப்போது திப்புவின் வாக்கைப் போன்றதே என்று தீர்க்கமாக முடிவு செய்து, எதிரே என்ன நடக்கப் போகிறதோ என்று பயந்து ஒடுங்கி நின்றுகொண்டிருந்த வசந்தியைக் கவனித்து, ''சகோதரி உன் புருஷன், இந்த ஓடுகாலியுடன் எவ்வளவு காலமாகத் தொடர்பு கொண்டிருக்கிறான்?'' என்று கேட்கிறபோது, ஏதோ அவனது குரலிலும் தோற்றத்திலும் திப்புசுல்தானின் கம்பீரமே குடிகொண்டு விட்டது போன்ற பிரமை மற்றவர்களுக்கு ஏற்பட்டது. ஏன் திப்புவே ஒரு விநாடி அதிர்ந்து மறுவிநாடி மகிழ்ந்து போனான்.

வசந்தியும் கண்களைத் துடைத்துக் கொண்டே பதில் சொன்னாள்: ''ஒன்றரை வருஷ காலமாகச் சாமீ!''

''ஒன்றரை வருஷம்! அதாவது பதினெட்டு மாதங்கள்!'' என்று தன்னுள் உரக்கவே சொல்லிக் கொண்ட பசவராஜ் பக்கத்தில் நின்றிருந்த திப்புசுல்தானின் மெய்க்காப்பாளனும் அப்போதைய சேனையின் உப தளபதியும், பசவராஜின் மீது எப்போதும் காய்ச்சலுடையவனுமான ராஜாக்கானை நோக்கினான்:

''ராஜாக்கான்! ஒன்றரை வருஷங்களுக்குரிய பதினெட்டு மாதங்களுக்கு, இந்த எதிர்த்துப் பேசிய நிர்மூடனுக்குப் பதினெட்டுக் கசையடிகள் கொடுக்கவும். புருஷனிருக்கிறான் என்றிருந்தும், கொழுப்பெடுத்துக் கள்ளத் தொடர்பு கொண்டு, கட்டியவனைத் துடிக்கத் துடிக்க மாளச் செய்து, இன்னொரு புருஷனின் மனைவியின் வயிற்றெரிச்சலையும் கொட்டிக் கொண்ட இந்தக் குடிகேடியை...''

ஒரு நிமிஷம் ஆலோசித்தவனாய் நிறுத்திய பசவராஜ், சுற்றிலுமிருந்த வீரர்களைப் பார்வையிடுகிறான்...

அவனது கண்களில் அந்தச் சிப்பாய் - ஸ்ரீரங்கப் பட்டினத்திலிருந்து ரகசியக் கடிதங்களை மடியில் சுமந்து வந்த சிப்பாய்தானா படவேண்டும்?

தொலைவில் மிகவும் பதவிசாக நின்றிருந்த அவனைச் சுட்டிக்காட்டி அருகே அழைக்கிறான்.

அந்தச் சிப்பாயோ அரண்டு மருண்டு போகிறான்...

இந்தப் பசவராஜுக்குத் தான் யார் என்பது புரிந்து விட்டதோ என்றும் சந்தேகப்படுகிறான். சே! தெரியக் காரணமே இல்லை என்றும் தெரிந்து கொள்கிறான். உண்மையிலும் பசவராஜுக்கு அவனது மர்மம் தெரிய நியாயமில்லை. ஏதோ விதிவசம் போலக் கண்ணில் பட்டிருக்கிறான்...

அருகே வந்த அந்தச் சிப்பாய் நடுக்கமுடன் நிற்கிறான்.

"நீ இவளை நமது மைசூருக்கு அழைத்துச் சென்று இவளைப் போன்றோருக்கு என்று ஏற்பட்ட வீதியில் விட்டுவிடு. இவளுக்கு அதுவே பொருத்தமான இடம். நீ ஸ்ரீரங்கப்பட்டினத்திலேயே தங்கிவிடு! வியாபார நிமித்தமாக இங்கிருந்து செல்கிற வண்டிச் சாத்துடன் இன்றிரவே நீ புறப்படுகிறாய்!"

பசவராஜின் இந்தத் தீர்ப்பைக் கேட்டுப் பெரிதாக அதிர்ந்துப் போனான் அந்தச் சிப்பாய்.

ஆ! பசவராஜா இவன்? ஒரு விவசாயியின் மகனா இவன்?

திப்புசுல்தான் உள்ளூறப் பெருமிதத்துடன் பூரிப்புக் கொள்கிறான்.

ராஜாக்கான் இந்தத் தீர்ப்புக்குப் பிறகும் சினம்கொண்ட சிலையாக நிற்பதைக் கண்ட திப்புசுல்தான். "ம்ம்! ஏன் நிற்கவேண்டும்? தண்டனையை நிறைவேற்ற வேண்டியதுதானே?" என்று கர்ஜித்த கர்ஜனை...

சுற்றியிருந்த அனைவரது குடல்களையும் கொக்கிபோட்டு வெளியே கொணர்வதாக இருந்தது.

கூட்டம் கலைந்து செல்கிறது...

ராஜாக்கான் தண்டனையை நிறைவேற்றப் புறப்படுகிறபோது, அவனது உள்ளம் வெகுவாகக் கறுவிக் கொள்கிறது.

திப்புசுல்தான் அனைவருக்கும் வணக்கம் செலுத்திக் கூடாரத்துள் பிரவேசித்து விட்டான்.



அதுவரையிலும் அந்தத் துகின் மனையின் துவாரத்து வழியாகக் கவனித்திருந்த ரங்கநாயகி, தனது காதலர் நுழைவதைக் கண்டு முறுவலுடன் நோக்கினாள்.

"அது பெண் குழந்தையாக இருந்திருந்தால் நிச்சயம் உன் பெயரைத்தான் வைத்திருப்பேன்; ரங்கநாயகி!" என்று கூறிச் சிரித்துக் கொண்டே ஆசனத்திலமர்ந்தான் திப்புசுல்தான்.

கீழே திண்டு திமாசுடன் விரிக்கப்பட்டிருந்த அவளது பஞ்சணையில் அமர்ந்து கொண்டாள் ரங்கநாயகி. அது அவளது துகின்மனை - கூடாரம்.

"ரங்கநாயகி! பசவராஜ் தீர்ப்பு எப்படி?"

திப்புவின் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்றே புரியாமல் திகைக்கிறாள் ரங்கநாயகி. அவளது திகைப்பைக் கண்டு அவன் நகைக்கிறான்.

"உனக்குப் புரிய நியாயமில்லை. உனக்கு ஸ்ரீரங்கநாதர் எப்படிப் பள்ளி கொண்டார்? ஏன் பள்ளி கொண்டார்? என்று கேட்டால், அகலிகையின் புருஷனான கௌதம முனிவன் நமது காவேரிக் கரையில் பர்ணசாலை அமைத்திருந்ததாகவும், ஒருநாள் காவிரி வெள்ளம் புரண்டு வந்ததாகவும், அதனால் பர்ண சாலையையும் தன்னையும் இந்தக் காவிரி வெள்ளம் அடித்துச் சென்று விடுமோ என்று பயந்து, அந்தப் பரந்தாமனான மகா விஷ்ணுவை அழைத்ததாகவும் அவரும் இருக்கிற வேலைகளை எல்லாம் விட்டு விட்டு ஓடோடி வந்து காவிரி வெள்ளத்துக்குக் குறுக்கே படுத்துக் கொண்டதாகவும் உடனே பர்ண சாலையும் கௌதமரும் காக்கப் பட்டனர் என்றும், ஆனால் ஸ்ரீரங்கநாதருடைய அணைத்தடுப்பால் காவிரி இரண்டாகப் பிரிந்து மறுபடியும் ஓரிடத்தில் ஒன்றாகக் கூடியதாகவும், அதனாலேயே ஸ்ரீரங்கப்பட்டினத்துக்குக் கௌதம க்ஷேத்திரம் என்கிற பெயருமுண்டு என்றும் கதைப்பாய்! நான் அந்தக் கதையை நம்ப மறுக்கிறேன் என்பதல்ல இதன் அர்த்தம்! இது உண்மையாகவும் இருக்கலாம். ஓர் எழுத்தாளனுடைய கற்பனையாகவு மிருக்கலாம். நான் சிருஷ்டி கர்த்தாக்களின் காப்பியங்களுக்கு

மதிப்பளிப்பவன். ஐந்தாண்டுகளுக்கு முன்புகூட சிவகங்கைச் சீமையிலிருந்து ஓர் எழுத்தாளர் என்னை நாடி வருகை தந்திருந்தார். மறவர் சீமையின் சுதந்திர வீராங்கனையான ராணி வேலு நாச்சியின் பாராட்டைப் பெற்றவர். பெயர் முத்துக் குட்டிப் புலவர். அவர் [1]'வசன சம்பிரதாயக் கதை' என்ற ஒரு நூலை எழுதியிருந்தார்! அதனை நமது அரண்மனைக்குக் கொண்டு வந்து படித்துக் காட்டினர். ஆ! என்ன நகைச்சுவை! அப்போது மைசூரில் மழையில்லை. அந்தக் கதையைப் படித்த பிறகு நிஜமாகவே மழை வந்தது. காரணம் அந்தக் கதையே மழையைப் பற்றியதுதான். நான் அந்தப் புலவருக்கு வெகுமதிகளையும் வழங்கியனுப்பி வைத்தேன்.''

ஒரு நிமிடம் தனது காதலியைக் கூர்ந்து நோக்கி மீண்டும் பேசத் தொடங்கினான் திப்புசுல்தான்.

''அது போகட்டும் எனது ரங்கநாயகி ஆன்மீக ரங்கநாயகியாக மட்டுமின்றி அரசியல் ரங்கநாயகியாகவும் விளங்க வேண்டும் என்பது என் ஆவல். எனது எதிர்கால ஆட்சிப் புத்தகமல்லவா நீ? ஆகவே உன்னை அரசியல் ஞானம் பெறச் செய்யவே என்னுடன் அழைத்து வந்தேன். நீ எனது ஞான வாசகமாக மட்டும் இருந்து பயனில்லை. இந்தத் தேசத்தின் ஞான பானுவாகவும் விளங்க வேண்டும்! எனது பட்டத்தரசியின் பெயரும் ருக்காய்யா பானு! நீயோ ரங்க பானு! பானு என்ற சொல்லின் பொருள் இருவருக்கும் இருவேறு பட்டதானாலும், பொதுவாகச் சூரியனைக் குறிக்கும். இருவருமே சூரியனைக் கிழக்கு மேற்காக வணங்குகிறவர்கள், புரிகிறதா?''

''இது எப்போதோ புரிந்த விஷயம்.''

மூச்சைப் பிடித்துப் பேசியது போல வியாக்கியானம் செய்த திப்புசுல்தான், ரங்கநாயகி ஒற்றை வரியில் சொன்ன பதிலைக் கேட்டு இமைக்க மறந்தான். அவனை மேலும் பேச விடாது ரங்கநாயகியே மேலும் அவனது பிரமிப்பை நோக்கி விளக்கினாள்: ''அதுதான் அரசியல்! அரசியலின் நுட்பமும் இதுதான்! நான் ஒற்றை வரியில் எல்லாமே புரிந்தது போலச் சொன்னேனே அந்தக் கம்பீர்யத்துக்குப் பெயர்தான் அரசியல். ஆமாம் அரசியல் என்பதுதான் என்ன?''

1. தமிழில் தோன்றிய முதல் நாவல். இந்த நாவல் இன்றும் இருக்கிறது.



ஓ... இவள் இப்போது ஒரு துணிச்சல் கொண்டு கேள்வி கேட்கிறாள்...

''நீயே பதில் சொல் ரங்கநாயகி! எனக்குத் தெரியாது என்றல்ல; நீ என்ன தெரிந்து கொண்டிருக்கிறாய் என்பதை அறிந்து கொள்வதற்காகத்தான்!''

''சுல்தான்! சங்கீதத்தில் நிபுணனாக வேண்டியவன் சாஸ்திர முறைப்படி சங்கீதத்தைத் தெரிந்து கொள்கிறான். ஞான பூர்வமாக முக்தியடைய விரும்புகிறவன் என்னைப் போல வேத சாஸ்திரங்களை அறிகிறான். வானத்துக் கோள்களை ஆராய்கிறவன் கணிப் பயிற்சி பெறுகிறான். மருத்துவன் வைத்திய சாஸ்திரத்தைத் தோண்டுகிறான். ஆனால் அரசியல் நடத்த வேண்டும் என்கிறவனோ சுயநலத்தை மட்டுமே கற்றுக் கொண்டால் போதும் என்பது போல இருக்கிறது இன்றைய நிலை! சொன்னால் நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. மாலிகாஃபூர், என்று தட்சிணப் பீடபூமியில் காலெடுத்து வைத்தாரோ அன்றே அரசியல் தலைகீழாய் விட்டது! இப்போது கும்பினிக்காரன் அதன் தலையைச் சீவிக் கொண்டிருக்கிறான். இந்த அரசியல் எனக்கு தேவைதானா?''

ரங்கநாயகி இம்மாதிரி தெளிவாகப் பேச அவன் எத்தனையோ முறை கண்டிருக்கிறான்; ஆனால் இது மாதிரியான எதிர் நீச்சலை கண்டதில்லை. அவளும் தனக்குள்ள தகுதியை நிர்ணயிக்கப் பேசியதுபோல அவளது தோற்றம் தெரிந்தது. திப்புசுல்தான் அதிர்ந்தே போனான்.

''என்னைச் சுயநலக்காரன் என்று சொல்லுகிறாயா ரங்கநாயகி?''

''சத்தியமாக இவ்வாறு நினைக்கக்கூட மாட்டேன். எனது வருங்கால நாயகர், இந்தச் சுயநலமான - பேராசை பிடித்த அரசியலுக்கு அப்பாற்பட்டு, மானுடத்துக்கும் மானுட சுதந்திரத்துக்கும் தலைவர் என்பதை நான் தீர்க்கமாக அறிவேன்! பொதுவான அரசியலுக்கு நான் வியாக்கியானம் செய்தேன்; அவ்வளவே!''

அவன் அவளையே மலைப்புக் கண்டவன் மாதிரி நோக்குகிறான்...

''ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்? இதில் ஏதும் புதிய அரசியல் இல்லையே?''

அவனும் 'இல்லை' என்பது மாதிரித் தலையசைக்கிறான்...

''ரங்கநாயகி! பசவராஜ் கூறிய தீர்ப்பைப் பற்றி நீ எதுவும் பதில் சொல்லவில்லையே?''

''நல்ல தீர்ப்பு; இதனை நீங்களே கூறியிருக்கலாம். அவரது நட்பின் பெருமை என்ன என்பதை மற்றவர் புரிந்து கொள்ள நீங்கள் ஆடிய நாடகம். இதற்குப் பெயரும் அரசியல்தான்! அன்றைக்கு வாட் போருக்கு அழைத்துப் பலப்பரீட்சை செய்தீர்களே அதற்குப் பெயரும் அரசியல்தான்! மேதைகள் கையில் கிடைக்கிற அரசியல் காப்பியமாகிறது. உங்கள் அரசியலும் ஒரு காவியம்தான்! போதுமா?''

ஓ...ரங்கநாயகி இப்போது முன்பு போட்ட எடையை விடக் கூடியிருக்கிறாள்...

''என்ன யோசனை?''

''நீ எடை கூடியிருக்கிறாய்?''

''இல்லையே! காதல் கவலையால் இளைத்து ரொம்பவும் பலவீனப்பட்டு இருக்கிறேன்!''

அவன், அவளது குறும்பை உள்ளுக்குள் செரிமானம் செய்து கொண்டு சிரிக்கிறான்.

அவளோ தலைகுனிந்து கொள்கிறாள்.

அவள் சிரிக்கிறபோது அவளது கன்னங்களில் விழுகிற குழிகளில் மட்டுமே அவன் மோக வலைப்பட்டு வீழ்ந்திருக்கிறான்...

பக்கத்திலிருந்த அறிவிப்பு மணியை ஓங்கியடித்து ஓசை யெழுப்புகிறான்...



வெளிவாசலில் காவல் நின்ற வீரனொருவன் ஓடிவந்து வணங்கி நிற்கிறான்.

''பசவராஜைக் கூப்பிடு!''

அவன், அந்த உத்தரவைச் சிரமேற்று விடைபெற்றுக் கொண்டு சென்று சில விநாடிகளுக்குள், பசவராஜ் அந்தக் கூடாரத்துக்குள் பிரவேசித்தான். அவனைக் கண்டதும் மரியாதைக்காக எழுந்து நின்றாள் ரங்கநாயகி. அவளது அந்த மரியாதை பாராட்டுக்குரியதாக இருந்தது.

''பசவராஜ்! உனது தீர்ப்புக் குறித்துத்தான் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். ரொம்பவும் புத்திசாலித்தனமாகத் தீர்ப்புக் கூறியிருக்கிறாய்!'' என்று தனது நண்பனை முகத்துக்கு நேரே பரந்த உள்ளத்துடன் பாராட்டினான் திப்புசுல்தான்.

''நானா தீர்ப்புக் கூறினேன்? யார் சொன்னது? தீர்ப்புக் கூறியவர் குமார சுல்தான்!''

''நானா?''

''ஆமாம்! எனது இதயத்தே உங்கள் உருவச் சின்னமிருக்கிறது. அதுவல்லவா தீர்ப்புக் கூறியது?''

'ஓகோ' வென்று பெருத்த நகைப்பொலியெழுப்பிச் சிரிக்கிறான் திப்புசுல்தான். ரங்கநாயகிக்குக்கூடப் பசவராஜின் பதில் இனிமை தருவதாக இருந்தது.

அன்றிரவு ரங்கநாயகிக்கும் பசவராஜுக்கும் உணவு வந்தது. இருவருமே சைவாம்சிகள் - சாக பட்சிணிகள்! எனவே அவர்களிருவருக்கும் உடனிருந்து உண்ணச் செய்து, பிறகு நண்பனோடு தனது கூடாரம் நோக்கிச் சென்றான் திப்புசுல்தான்.

ரங்கநாயகியின் கூடாரத்துக்கு மதில் சுவருக்கொப்ப திப்புவின் வீரர்களே சுற்றிலும் நின்று காவல் காத்தனர்.

**பொ**ல்லென்று விடிகிறது பொழுது.

கொல்லென்று ஆர்ப்பரித்துப் பறக்கின்றன புள்ளினங்கள்.

கொல்லென்று புறப்படுகிறான் எழு ஞாயிறு.

அந்த நேரத்தில் புறப்பட்ட திப்புசுல்தான் சேனைகள், காஞ்சீபுரத்தை அடைந்து கொண்டிருக்கின்றன.

ராஜாக்கான் மட்டும் மனநிம்மதியற்று மூளைக்குழப்பத்துடன் ஏதோ ஓர் உளைச்சலால் உந்தப்பட்டவன் மாதிரி காணப்படுகிறான்...

தன்னை ஒரு குற்றேவற்காரன் போல நினைத்துத் தண்டனையை நிறைவேற்ற ஆணையிட இந்தப் பசவராஜுக்கு என்ன கொழுப்பு இருக்க முடியும்?

ஆ! பதினெட்டுக் கசையடிகள்...

அவனது மனம் உறுமிக் கொள்ளுகிறது...

## 16

இரண்டாவது ஆங்கில, மைசூர் யுத்தம் என்று சரித்திரம் கூறும். இந்த யுத்தத்தைப் பற்றி, அதன் சம காலத்தில் வாழ்ந்த ஆங்கிலேயர்களும், இந்தியர்களும் தங்களுக்குத் தோன்றியவாறும், ஏற்றவாறும், தத்தம் நிலைகளுக்கு ஒப்பவும், கூட்டியும் குறைத்தும், முரண்பட்டும் பெருமை பேசியும், சிறுமை கூறியும் குறிப்புகள் எழுதுகின்றனர்...

காஞ்சீபுரத்துக்குப் பதினைந்தாவது கல் தொலைவிலிருந்த கிராமமான பேரம்பாக்கத்தில் மகா சுல்தான் ஹைதர் அலி, தமது குமாரன் திப்புசுல்தானை மிகவும் ஆவலுடன் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்த வண்ணமிருக்கிறார்...

ஸ்ரீரங்கப்பட்டினத்திலிருந்து சேனைகள் புறப்பட்டு விட்டன என்கிற செய்திமட்டும் முன்கூட்டியே கிடைத்து விட்டது. இன்றைக்கு எந்த நேரத்திலும் தமது வீரத் திருமகன் வந்துவிடலாம் என்கிற நம்பிக்கையுடன் காத்திருக்கிறார் ஹைதர்அலி. அவருடன் புறப்பட்ட தொண்ணூறாயிரம் படைவீரர்களுள் அவ்வளவாகச் சேதமில்லை யானாலும் பதினைந்து தினங்களுக்கு முன்பு அவருக்குக் கடுமையான முறையில் காய்ச்சல் கண்டு நிரம்பவும் திணறி விட்டார். இச்செய்தி



எதிரிகளான சென்னையின் [1]கும்பினி ஆளுநருக்கும் அவரது அவை (Council)-க்கும் தெரிந்து விடுமேயானால் மிகமிக எளிதாக ஹைதர் அலியை வீழ்த்தச் சதியாலோசனை நடத்தி விடுவார்கள்.

எனவே மைசூர்ப் படைகள், காஞ்சீபுரத்தைத் தாக்கி வெள்ளையரை விரட்டிய அளவோடு மேற்கொண்டு எந்தத் துரித முயற்சியிலும், துணிச்சலான செய்கைகளிலும் இறங்காமல் அமைதியாக மௌனம் சாதிப்பது போலவே பாவனை செய்தன.

தொலைவில் சேனைகள் வருகிற சத்தம் கேட்கிறது. மேற்கே சூரியன் விழுந்து கொண்டிருக்கிறான்...

ஹைதர் அலி தமது தொழுகையை முடித்துக்கொண்டு 'ஆ! எனது மகன் வருகிறான்...' என்று பெருமிதத்துடன் ஆனந்திக்கிறார்...

நேற்றைய முன் தினம்தான் உடம்பு ஓரளவு ஆரோக்கியம் கண்டிருந்தது. அரசாங்கத் தலைமை மருத்துவர் இமாம் பக்ஷிகுலாம் அகமது கூடியவரையில் ஹைதர் அலியின் உடலைத்தேற்ற இராப்பகலென முயன்று சாதித்து இருந்தார்.

திப்புசுல்தானுடன் புறப்பட்ட சேனைகள் பேரம்பாக்கத்தை அடைகின்றன...

சேனைகளுக்கான சௌகரியங்களைக் கவனிக்குமாறு தளபதி குலாம் உத்தீர்கானிடமும், உபதளபதி ராஜாக்கானிடமும், பொறுப்பை ஒப்படைத்துவிட்டுத் தனது காதலி ரங்கநாயகிக்கு ஒரு தனித்த இடத்தைச் சுட்டிக்காட்டி அங்கே பாதுகாப்புமிக்க கூடாரத்தை அமைக்க ஆணையிட்டு, அவளுக்கான நூறு காவலர்களை நியமித்த பிறகே நண்பன் பசவராஜை அழைத்துக் கொண்டு தந்தை ஹைதர் அலியைக்காண விரைகிறான் திப்புசுல்தான்.

வண்ணவண்ணமாக அமைக்கப் பெற்றிருந்த அந்த ராஜகூடாரத்துக்குள், மகாசுல்தான் ஹைதர் அலி பஞ்சனையில் சாய்ந்தவாறு படுத்துக் கொண்டிருக்கிறார். மருத்துவர் இமாம் பக்ஷிகுலாம் அகமது சற்றே தொலைவில் அமர்ந்து காணப்பட்டார்.

1. கம்பெனி என்ற ஆங்கிலச் சொல்தான் அக்காலத்தே கும்பினி என்றழைத்தனர். கிழக்கிந்தியக் கம்பெனி என்பது அவர்களது முகாமுக்குப் பெயர்.

திப்புசுல்தான் உள்ளே நுழைவதைக் கண்ட இமாம் பக்ஷிகுலாம் அகமது மரியாதைக்கு எழுந்து கொண்டார். பின்னே பசவராஜ் நுழைந்து கொண்டிருந்தான்.

தந்தையருகே சென்றமர்ந்தான் திப்புசுல்தான். பசவராஜும் ஹைதரின் அருகே வந்து மண்டியிட்டு வணங்கிய பிறகு எழுந்து சென்று தொலைவில் கைகட்டியவாறு அமைதியுடன் நின்று கொண்டான். அவன் இவ்விதம் மகா சுல்தான் ஹைதர் அலியின் நேர்பார்வைக்கு முன், மிக்க அருகில் தனித்து சந்திப்பது இது முதல் தடவை. ஆகவே அவனது நெஞ்சில் பெருமை மலையனைய தலைதூக்கி மகிழ்கிறது. மருத்துவரும் தமது வெள்ளிக்கம்பிகளாய் அடர்ந்திருந்த தாடியைத் தடவி விட்டுக் கொண்டே அமர்ந்தார்.

அருமை மகனைக் கண்டதும் ஹைதர் அலி, ''திப்பு என் மகனே! உன்னைக் கண்டதும் கொஞ்சம் நஞ்சமிருந்த எனது நோய் பறந்து விட்டது. ஸ்ரீரங்கப்பட்டினத்தில் அனைவரும் நலந்தானே?'' என்று ஒரு சக்கரவர்த்திக்குரிய பொது நோக்கு நிறைந்த கம்பீரியத்துடன் அவர் கேட்டமுறை, மிகுந்த ஆரோக்கியமுடையதாக இருந்தது.

தொலைவில் நின்றிருந்த பசவராஜைக் கவனிக்கிறார். அவருக்கு அவன் யார் என்பது புலனாகிறது. இடக்கை விரல்களை விரித்துத் தமது குறுந்தாடியின் கீழ்ப்புறத்திலிருந்து மேல்நோக்கித் தடவிக் கோதிவிட்டுக் கொள்கிறார்.

இளைத்திருந்த தந்தையாரைக் கண்ட திப்புசுல்தான், கலங்கிப் போனான். அவனது கண்களில் நீர் கரை தட்டியது. அவருக்கு அண்மையில் ஒரு மகத்தான கண்டம் இருப்பதாக ஜோதிடன் சொன்னது நினைவுக்கு வருகிறது...

''எல்லோருமே அல்லாஹ்வின் அருளால் நலந்தான் தந்தையே! உங்களுக்கு ஆபத்து என்றதும் நமது படைகள்தான் தோல்விகண்டு உங்களுக்கு ஏதோ என்னமோ என்று பதறிப்போய்ப் படைகளைத் திரட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டேன். விளக்கமாக எழுதக்கூடாதா?''



மகனுடைய இந்தப் பேச்சைக் கேட்டுப் புன்முறுவல் பூக்கிறார் ஹைதர் அலி. அவரது கனத்தடர்ந்த குறுந்தாடி மீசைக்கு நடுவே தெரிகிற புன்சிரிப்பு, அடர்ந்த புதருக்கு நடுவே எரிகிற ஓர் அகல் விளக்கைப் போல ராஜ தீபமாய்த் தெரிகிறது.

''முறைஜுரக் காய்ச்சல் வந்து பதினைந்து தினங்களுக்கு மேலாகிறது. பதறிப்போய் விட்டேன் திப்பு! இந்தச் செய்தி எதிரிகளான வெள்ளையர்களுக்கும் உடன் பிறந்தே கொல்கிற வியாதி மாதிரியான ஆர்க்காட்டு நவாப்புக்கும் தெரிந்துவிடுமேயானால், இதைவிட ஆபத்து என்ன இருக்க முடியும் என்று நீ நினைக்கிறாய்? அதனால்தான் நீ உடனடியாகத் தேவைப்பட்டாய்!''

மகனிடம் இந்தப் பதிலைக் கூறிய ஹைதர் அலியின் குறுகுறுத்த கண்கள், மீண்டும் பசவராஜை நோக்குகின்றன;

''யார் இந்தப் பிள்ளை?''

''இவனை உங்களுக்குத் தெரியாதா? என் ஆருயிர் நண்பன் பசவராஜ்!'' என்று கூறிக்கொண்டே திரும்பிப் பார்க்கிறான் திப்புசுல்தான்.

பசவராஜ்! மீண்டும் தலைகுனிந்து சலாமிடுகிறான்...

''ஓகோ! இவன்தானா அந்தப் பசவராஜ்? ஸ்ரீரங்கப் பட்டணத்தில் யுத்தத்துக்குப் புறப்படுகிறபோது பார்த்ததாக நினைவு! மறந்து போய்விட்டேன். இவனை எதற்காக வீணில் யுத்த களத்துக்குக் கொண்டு வந்தாய் திப்பு?''

மிகவும் ராஜதந்திரமான ஒரு பாவனையுடன் கேட்ட தந்தையைச் சற்று நேரம்வரை உற்றுப் பரிசீலித்த திப்புசுல்தான், ''எனது வருங்கால படை பௌஜ்தாராகப் போகிறவன், அப்பாஜான்! அவனை நீங்கள் ஆசிர்வதிக்க வேண்டும்'' என்றான்.

''அப்படியா? எனது ஆசீர்வாதம் அவ்வளவு சுலபமாக எல்லாருக்கும் கிடைத்துவிட முடியாது திப்பு! ஏனென்றால் நான் அல்லாஹ்வின் ஆசீர்வாதத்தால், குடிசையிலிருந்து கோபுரத்துக்கு உயர்த்தப்பட்டவன். நல்லது. இவனது சேவையைப் பொறுத்து, எனது ஆசீர்வாதத்தின் எழுத்துக்களைக் கூட்டுகிறேன்!''

மகாசுல்தான் ஹைதர் அலி இவ்வாறு கூறியது திப்பு சுல்தானுக்கே மனவேதனையாக இருந்தாலும், பசவராஜ் இது குறித்து எந்தவிதக் கிலேசமும் கொள்ளாது கவனித்தான்.

''திப்பு! நாளை நீ யுத்தகளத்துக்குத் தலைமை தாங்கிப் புறப்படுகிறாய்! வெள்ளைக் கும்பினித் தலைவர்களான கர்னல் பெய்லியும், ஹெக்டர் மன்ரோவும் எந்த நிமிடமும் நம்மீது பாயலாம் என்று ஒற்றர்கள் மூலம் செய்தி வந்திருக்கிறது. அவர்கள் பாய்வதற்கு முன், நமது பாய்ச்சல் அவர்களது குரல்வளைகளைப் பறிப்பதாக அமையவேண்டும். நீ புறப்படு. போய்த் தொழுகையை முடித்து ஓய்வெடுத்துக் கொள். நாளைக் காலையில் யுத்தக்களத்துக்குப் புறப்படுகிறோம்!''

அந்தக் குரலில்தான் சிங்கம் குடிகொண்டிருக்கிறதோ என்று நினைக்குமளவுக்கு அவர் பேசிய விதத்தைக் கண்டு வியந்து போனான் பசவராஜ்.

திப்புசுல்தான் எழுந்து கொண்டான்.

தந்தை நீட்டிய கரத்தைப்பற்றி முத்தமிட்ட திப்புசுல்தான், அருகே இருந்த மருத்துவர் இமாம் பக்ஷி குலாம் அகமதுவிடம், ''அப்பாவை ஜாக்கிரதையாகக் கவனியுங்கள் மருத்துவரே!'' என்றான்.

''உத்தரவு ஷாஹெ ஜாதா (இளவரசே)!'' என்றார் மருத்துவர்.

திப்புசுல்தான் புறப்பட்டான்.

பசவராஜும், மண்டியிட்டு ஹைதரைப் பணிந்து விடை பெற்றான்.

அவனைக் கவனித்த ஹைதர் அலியின் கண்கள் வெகுநேரம் கனத்து இமைக்க மறந்தன.

சிறிது நேரம் கழித்துத் தமது பக்கத்தில், இருபிறைபோல நிமிர்ந்த யானைத் தந்தத்துக்கிடையே வட்டமாய் அமைந்து தொங்கிய வெண்கலத் தட்டில், சின்னஞ்சிறு சுத்தியலைக் கொண்டு ஓசையெழுப்பினார். வெளியே நின்றிருந்த காவல் வீரர்களில் ஒருவன் ஓடோடி வந்து மண்டியிட்டு வணங்கினான்.





''உனது யுவராஜனோடு தலைமை தாங்கி வந்த பௌஜ்தாரை நான் உடனடியாக வரச் சொன்னதாக சொல். நான் சொன்னதோ, அவர் வருவதோ மிகவும் ரகசியமானது. ஜாக்கிரதை!'' என்று ஹைதர் அலி ஆணை பிறப்பிக்கிற போது, அவரது குரலில் பல மர்மங்கள் அடங்கி, எதிரொலிக்கின்றன...

காவல் வீரனும் மெத்த மரியாதையுடன் சலாமிட்டு விடைபெற்று விரைகிறான்...

தாமில்லாத போது ஸ்ரீரங்கப்பட்டினத்தில் என்னவெல்லாம் நடந்தது என்பதை அறியவும், பசவராஜ் ஏன் திப்புவுடன் வருகை தந்திருக்கிறான் என்பது குறித்துப் புலன் விசாரிக்கவும் அவரது மனம் காரண காரியங்களுடன் அலைந்தது.

பௌஜ்தார் குலாம் உத்தீர்கான் வந்து சென்றது முதற்கொண்டே மகாசுல்தான் ஹைதர் அலியின் கண்கள் கனன்று கொண்டிருந்தன. என்ன துணிவு இந்தத் திப்புசுல்தானுக்கு?

குறிப்பாக ரங்கநாயகியை யுத்தக் களத்துக்கே கொண்டு வந்திருப்பது அறிந்து அவரது மனம் வெகுவாகச் சிலாகித்துக் கொண்டது. இந்தப் பசவராஜை யுத்தக்களத்துக்குக் கொண்டு வர ஒரு பலப்பரீட்சையை ஏற்படுத்தினானாமே... நல்ல வேளையாக இவனும் தோல்வி கண்டது போல நடித்து இந்தப் பசவராஜுக்கு 'வீரப்புலி' விருதை வழங்காமல் போனேனே.

இடையே இளைய மகன் அப்துல் கரீம் பறங்கிப் பேட்டையை அடைந்திருப்பானா என்றும் எண்ணிப் பார்த்தார்.

அவரது கண்கள் அரைத் தூக்கத்தில் ஆழத் தொடங்கின.

விடியற்காலை நேரம்...

கூடாரத்தின் வாயிலில் யாரோ மெல்லிய குரலில் உருது மொழியில் விவாதித்து அடம் பிடிப்பது ஹைதர் அலியின், பாதி விழித்துக் கொண்டிருக்கும் செவிகளில் நுழைந்து கண்களை முழுமையாக விழிக்கச் செய்கிறது.

''என்ன விஷயம்? சத்தம் அங்கே?''

காலையில் இயல்பாகவே கனத்துக் கரகரத்து இருக்கும் குரலில் சத்தமிடுகிறார் ஹைதர் அலி?

உள்ளே ஒரு காவல் வீரன் விரைந்து வந்து மண்டியிட்டு, ''ஹுஸூர்! மதிப்புக்குரிய பேகம் சாஹிபா அனுப்பியதாகவும் தங்களைத் தனிமையில் காணவேண்டும் என்றும் ஒருவன் அடம் பிடிக்கிறான். நீங்கள் நித்திரை செய்வதாகக் கூறியும் கேட்கவில்லை.'' என்று கூறி நிமிர்ந்து எழுந்தான்.

''யாரவன்? உள்ளே அனுப்பிவை!''

ஹைதர் அலியிடமிருந்து அனுமதி பிறக்கிறது.

சற்றைக்கெல்லாம் அந்த ஸ்ரீரங்கப்பட்டினத்து ரகசியக் கடிதங்களைத் தாங்கிப் புறப்பட்டவனும், கிருஷ்ணகிரியில் மீண்டும் பசவராஜ் தீர்ப்பின் காரணமாக ஸ்ரீரங்கப்பட்டினம் நோக்கி அனுப்பப் பட்டவனுமான அந்தச் சிப்பாய் உள்ளே நுழைந்து தனது பணியை மண்டியிட்டுத் தெரிவித்துப் பின்னர் அந்த ரகசியக் கடிதங்களை மிகவும் மரியாதையாக மகாசுல்தான் ஹைதர் முன் சமர்ப்பித்தான்.

அவற்றைப் பெற்ற ஹைதர் அலி, பக்கத்தே இறக்கம் கண்ட நிலையில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியை ஏற்றிவிட்டு அந்த ரகசியக் கடிதங்களைக் கண்ணளவில் பார்வையிடத் தொடங்கினார். அவருக்குத்தான் படிக்கத் தெரியாதே! அதற்கென்றே தம்முடன் வைத்துக் கொண்டிருக்கும் அந்தரங்கச் செயலாளன் மூலம் அறிந்து கொள்ளலாம் என உணர்ந்து கடிதங்களை மடித்தார்.

பிறகு...

''நீ போகலாம்!''

ஹைதரின் உத்தரவுக்குப் பிறகு அந்தச் சிப்பாய் வெளியேறினான். அத்துடன் அவன் மேற்கொண்டு பேரம்பாக்கத்திலேயே மேலும் தங்கிச் சந்தேகத்தையுண்டு பண்ணக்கூடாது என்பதையுணர்ந்து, சற்று ஒரு மரத்தடியில் ஓய்வு கண்டு புறப்பட உத்தேசித்தான்.

ஹைதர் அறிவிப்பு மணியில் ஓசை யெழுப்புகிறார்.

காவல் வீரன் வந்து வணங்கி நிற்கிறான்.



அவனை அருகே சமிக்ஞையின்மூலம் அழைத்து அவனது காதில் ஏதோ மந்திரமாக - ரகசியமாக உபதேசிக்கிறார்.

அவனும் அந்த மந்திரத்துக்கு அடங்கிய யக்ஷனைப் போலச் சிலிர்த்து எழுந்து விடைபெற்றுச் செல்கிறான்.

**பொ**ழுது காஞ்சியின் பழம்பெருமைகளை விளக்குவது போலப் பிரகாசமாகப் புலருகிறது...

சேனைகள் மிகவும் சுறுசுறுப்பாக ஆயத்தமாகின்றன. எங்கும் பறவைகளின் ஓசை.

விழித்தெழுந்ததும் வேகமாகக் காலைக்கடனை முடித்துக் கொண்டு நேரே ரங்கநாயகியின் கூடாரம் நோக்கி விரைகிறான் திப்புசுல்தான். போர்ப்பயணம் முடிந்து திரும்ப ஓரிரு தினங்கள் அல்லது ஓரிரு வாரங்களானாலும் வியப்பதற்கு இல்லையே!

கூடாரத்தைச் சுற்றிலும் மதில் போலக் காவலிலிருந்த வீரர்கள், இளைய சுல்தானைக் கண்டதும் அனைவருமே மண்டியிட்டனர்.

''நீங்கள் நூறு பேரும் போர்க்களம் நோக்கிப் பயணப்பட அவசியமில்லை. இந்தக் கூடாரத்துக்கு நீங்கள் பலமான காவலாக இருக்க வேண்டும். பாதி பேர் பகலில் விழித்துக் காவல் புரியுங்கள். மறுபாதி பேர் இரவில் விழித்து ஜாக்கிரதையுடன் காவல் புரிய வேண்டும். உள்ளே இருப்பவள் உங்கள் தலைவி. அவளது ஆணைக்கும் நீங்கள் கட்டுப்பட்டவர்கள். அவளுக்கு ஒரு துரும்பளவு துன்பம் நேர்ந்தாலும் உங்கள் அனைவரையுமே தூக்கிலிட்டு விடுவேன்!''

உரக்கக் கூச்சலிட்டு இந்த ஆணையைப் பிரகடனப் படுத்துகிறான் திப்புசுல்தான். அவனது ஆண்மைமிகு கம்பீரமான குரல் கேட்டுக் கூடாரத்துக்குள் அப்போதுதான் விழித்தெழுந்து, முகம் கழுவிக்கொண்டு, குளிப்பதற்குத் தயாரான ரங்கநாயகி, ஓடோடி வந்து வெளியே எட்டிப் பார்க்கிறாள்...

சுற்றிலும் மண்டியிட்டு இருந்த வீரர்கள் அனைவரும் ஒருங்கே தலை நிமிர்ந்து எழுகிற காட்சி, ஒரு விசித்திரமாகத் தெரிந்தது ரங்கநாயகிக்கு!

மீண்டும் திப்புசுல்தானின் ஆணைப் பிரகடனம் ஒலிக்கிறது...

''ரங்கநாயகிக்கு யார் தீங்கு செய்ய விழைந்தாலும் அவர்களை இருதுண்டங்களாக நீங்கள் வெட்டியெறிய எனது அனுமதியை வழங்குகிறேன். எனது தந்தையார் தவிர வேறு யாரும் உங்கள் காவலுடன்தான் உள்ளே நுழைய வேண்டும். அவள் வெளியே காலாரநடந்து செல்வதானாலும் நீங்கள் நூறு பேர்களும் புடைசூழவே செல்ல வேண்டும். கேவலம் ஓர் ஈ, எறும்புகூட இந்தக் கூடாரத்துத் துவாரங்களில் உங்கள் பார்வையிலிருந்து தப்பி உள்ளே நுழையக் கூடாது. ஜாக்கிரதை!''

ரங்கநாயகி உள்ளூற மகிழ்ந்து பூரித்துப் போகிறாள்...

தனக்கு இவ்வளவு பெரிய ஆணைப் பிரகடனமா?

திப்புசுல்தான் இவ்வாறு தனது சர்வவல்லமை பொருந்திய ஆணையைப் பிரகடனப்படுத்தி விட்டுக் கூடாரத்துள் பிரவேசித்தான்.

''ரங்கநாயகி! இரவு நன்றாகத் தூங்கி இருக்க மாட்டாயே?'' என்றான்.

அவளும் தலையைக் குனிந்து கொண்டே, ''புது இடம், தூக்கம் வரச் சிரமமாக இருக்கிறது'' என்றாள்.

அவன், தனது தொண்டைக்குள் ரகசியமாகக் குலுங்கிச் சிரித்துக் கொண்டான். அவளும் அதுபோலவே குலுங்கி நகைத்தாள்.

''ரங்கநாயகி நேரமாகிறது. சேனைகள் தயாராகின்றன. தந்தையார் காத்துக் கொண்டிருப்பார். அவரிடம் சென்று நான் இன்னும் போர்முறைகளைப் பற்றிப் பேசவேண்டும். நீ தைரியமாக இருக்கலாம். ஒருகால் எனது தந்தையார் உன்னைத் தனித்துக் காண வந்தால் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக்கொள். அவருக்கு நீ உனது மதாச்சாரப்படியே வணக்கம் சொல். அதுதான் அவருக்கு ரொம்பவும் பிடிக்கும்.''

''உங்கள் தந்தையார் யுத்தத்துக்குப் புறப்படவில்லையா?''



''அவருக்கு உடல்நிலை சரியில்லை. நான் ஒருவாரத்துக்குள் திரும்பிவிடுவேன். உனக்கு இங்கே எல்லாவிதமான சௌகரியங்களுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். வெளியில் செல்வதானால் அதிக தூரம் செல்லாதே! கவனமாகவும் கவலையில்லாமலும் இருக்க வேண்டும்.''

உள்ளக் கண்கள் கலங்கினாலும், வெளியே அதனைக் காட்டிக் கொள்ளாதவாறு விடை தந்தாள் ரங்கநாயகி.

திப்புசுல்தானும் அவளைப் பற்றிய எந்தவிதப் பயமும் கொள்ளாமல், விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான். அங்கே பசவராஜ் நின்றிருக்கக்கண்டு, ''நீ இன்னுமா தயாராகவில்லை?'' என்று அதட்டிக் கடிந்து கொண்டான் திப்புசுல்தான்.

''குமாரசுல்தான்! நான் யுத்தத்துக்கு வரவில்லை.''

''வரவில்லையா? ஏன்?''

''எனக்கு அது அவசியமாகப் படவில்லை. அங்கே பல தளபதிகள் இருக்கிறார்கள். இங்கே யாருமே இல்லை. எனக்கேனோ மனம் பேதலிக்கிறது. ஏதோ ஓர் உற்பாதம் நிகழுமோ என்று என்னையறியாமல் - தேவையில்லாமல் அடிமனத்தில் கிலேசம் தட்டுகிறது. ஆகவே நான் உங்கள் காதல் கிழத்தியாருக்குக் காவல் புரிவதே பெருவீரம் என்று இப்போதைக்கு நம்புகிறேன்.''

''எண்ணித்தான் பேசுகிறாயா, பசவராஜ்?''

''எண்ணித் துணிந்த கருமம் இது!''

''அப்படியானால் நான் தடை சொல்லவில்லை?''

திப்புசுல்தான் இவ்வாறு கூறி முடித்து வாயைக்கூட மூடவில்லை. அதற்குள் தொலை தூரத்தில் ஒரு பெருத்த கலவரம் நிகழ்ந்தாற் போன்ற கூச்சல் கண்டு வீரர்கள் பலரும் ஓடினர்.

என்ன நடந்துவிட்டது என்று புரியாமல் திகைத்த திப்புசுல்தான் உடனடியாக விரைந்தோடிக் கவனிக்க முனைந்தான். அவனைப் பின்தொடர்ந்து பசவராஜும் விரைந்தான்.

அங்கே...

ரகசிய கடிதங்களைக் கொண்டு வந்த அந்தச் சிப்பாய் ஒரு மரத்தடியின் கீழ் அகோரமாய்க் கொலையுண்டு கிடந்தான். அவனைக் கவனித்த பசவராஜ், 'ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கு அனுப்பிய இவன் எதற்காக இங்கே-இவ்வளவு சீக்கிரத்தில் வந்தான்?' என்கிற பெருத்த குழப்பத்துடன் திப்புசுல்தானை நோக்கினான்.

## 17

**அ**ணிவகுத்து நின்ற சேனைகளைப் பார்வையிடுகிறான் திப்புசுல்தான்.

தேவையான அளவுக்கே காலாட்படைகளும், குதிரைப்படைகளும், பீரங்கிகளும், துப்பாக்கிகளும்...

ஓரளவு மனம் நிறைவு காண்கிறது...

தொலை தூரத்தில் நின்றிருந்த பசவராஜைக் கவனித்த திப்புசுல்தான், 'இவன் யுத்த களத்துக்கு வந்து தனது மாபெரும் வீரத்தை நிரூபிக்க முடியாமல் இவனே தடை விதித்துக் கொண்டானே' என்கிற ஏக்கப் பெருமூச்சுடன் அங்கே வந்தான்.

காலையில் நடந்த கொலை குறித்துப் பெரிதான சிந்தனையிலாழ்ந்த பசவராஜுக்கு ஏதோ ஒரு பலத்த சந்தேகம் குமிழியிட்டுக் கொண்டிருந்தது. இந்தச் சிப்பாய் இங்கே எதற்காகக் கொலை செய்யப்பட்டான்? யார் கொலை செய்தது?

எல்லாமே மர்மமாக இருப்பதே அவனது பலத்த சந்தேகத்துக்கு மூலகாரணமாக அமைந்து காணப்பட்டது. இதுகுறித்து மகாசுல்தான் ஹைதர் அலி கொஞ்சமும் பதற்றம் காணாததுதான் நலிவான ஆச்சரியமாக இருந்தது. இதில் ஏதோ ஒரு ரகசியம் பதுங்கி இருப்பது நிச்சயம்.

''பசவராஜ் நான் புறப்படுகிறேன்! எனது காதல் பொக்கிஷத்தை ஒரு நட்புப் பொக்கிஷத்தின் நலமர்ந்த பாதுகாவலில் விட்டுச்



செல்வதில் ஒரு நிறைவு காண்கிறேன். உனது சந்தேக ரேகை படர்ந்த, முகவாட்டத்தின் காரணம் புரியாது நானிருக்கிறேன் என்று எண்ணிவிடாதே! காலையில் நடந்த கொலை, ஒரு காரணம் பற்றியே நிகழ்ந்திருக்கிறது என்று நினைப்பதுபோல நான் நினைக்கவில்லை. உனது தீர்ப்பை ஏந்திச் சென்றவன் ஏன் மீண்டும் திரும்பினான் என்பதுதானே? அவன் அவ்வாறு திரும்பியதன் பயனே இக்கொலை! உனது தீர்ப்புக்கு அவன் மதிப்பளிக்கவில்லை என்பதால் நமது வீரர்கள் வெகுண்டு கேள்வி கேட்க, பதில்கள் தடித்ததால் கொலை செய்யப்பட்டான் என்று ராஜாக்கான் கூறிய விளக்கம் என்னால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே இருக்கிறது. வீணில் மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே! இந்தப் போர்ப் பயணத்துக்கான முதல் பலி இது என்றெண்ணி ஆறுதல் கொள்!''

திப்புசுல்தானின் இந்தச் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் பசவராஜ் இல்லை. ஆயினும் அவன் அது குறித்துச் சிந்திக்கவில்லை; சிந்திக்கவும் அது நேரமில்லை. யுத்த பயணத்துக்குரிய நேரமாகவே, முகத்தில் முறுவலை வலிந்து வரவழைத்துக்கொண்டு, ''சென்று வாருங்கள் குமார சுல்தான்; எதிரியை வென்று வாருங்கள்'' என்று கூறி விடை தந்தான்.

நண்பனது வலது தோளைப் பற்றிக் குலுக்கித் தனது பெருமிதமான அன்பினைத் தெரிவித்துவிட்டு நேரே தந்தையாரைக் காணப் புறப்பட்டான் திப்புசுல்தான்.

ராஜகூடாரத்தை நோக்கி விரைந்து, அதனுள் நுழைந்து பஞ்சணையில் சாய்ந்திருந்த மகாசுல்தான் ஹைதர் அலிக்குத் தனது பணிவைத் தெரிவிக்கிறான் திப்புசுல்தான்.

மனத்திலுள்ள வேதனைக்குரிய கோபதாபங்களை வெகுவாகப் புன்முறுவலால் மறைக்கமுயன்ற ஹைதர் அலி, ''திப்பு! சொல்ல வேண்டிய அனைத்தையும் நமது பௌஜ்தார் மகாமீர்ஜானிடம் சொல்லியிருக்கிறேன். வழியில் விளக்குவார். காலத்தைப்பொன் போல் மதிப்பவன் வரவர கால தாமதத்துக்குரியவனாகி வருகிறாய். நல்லது. கர்னல் பெய்லி என்பவன் போர்முறையில் தந்திரசாலி. யுத்தம் நடத்துவதில் வல்லவன். அவனை எப்படி வீழ்த்தவேண்டும்

என்பதுபற்றிதான் சொல்லியிருக்கிறேன். அவசியமானால் கேட்டுத் தெரிந்துகொள்! உன்னுடன் பௌஜ்தாரர்களான குலாம் உத்தீர்கானும், ராஜாக்கானும் வருகிறார்களா?'' என்று நிரம்பவும் அர்த்த பாவத்துடன் கேட்டார்.

ஆமாம்; ''அப்பாஜான்!''

''தேவையில்லையே! மகாமீர்ஜான் வருகிறபோது எதற்கு இவர்கள்? வேண்டுமானால் குலாம் உத்தீர்கானை அழைத்துச் செல்! ராஜாக்கான் எனக்குத் துணையாக இங்கு இருக்கட்டும்.''

ஒரு நிமிஷம் யோசித்த திப்புசுல்தான், ''ஆகட்டும்...!'' என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டுத் தந்தையின் கழல் பணிந்து விடைபெறுகிறான்.

**ஹெ**க்டர் மன்ரோ என்கிற ஆங்கிலக் கும்பினித் தளபதி கொண்ட சின்ன அலட்சியத்தின் காரணமாக அந்தப் போரில் ஒரு திருப்பம் நிகழ்ந்துவிட்டது...

ஹெக்டர் மன்ரோவின் அந்தச் சின்ன அலட்சியம் சோதிடம் பார்த்துப் புறப்பட்ட திப்புசுல்தானுக்கு சாதகமாக முடிந்தது.

சென்னையிலிருந்து உடனடியாக புறப்படவேண்டும் என்று தலைமைச் சபை அளித்த உத்தரவை அலட்சியம் செய்து நான்கு தினங்கள் கழித்தே அவன் புறப்பட்டான்.

25, ஆகஸ்டு 1780 அன்று அவன் காஞ்சீபுரத்தையடைந்தான்.

குண்டூரிலிருந்து புறப்பட்ட கர்னல் பெயிலின் சேனைகளுடன் கலந்து, ஹைதரை முறியடிக்க வேண்டும் என்பது மேலிடத்து உத்தரவு.

ஆனால், கர்னல் பெய்லி விஷயத்திலும் திப்புசுல்தானின் ஜயபேரிகையான ஜாதகம் அப்போது நன்றாகவே வேலை செய்தது.

கர்னல் பெய்லி எப்படியும் காஞ்சீபுரத்தை அடைந்து விடுவதென்று முயன்று தனது ராணுவத்தை வேகவேகமாக நடத்தி வந்தான். வழியில் குறுக்கிட்ட அந்தக் கொடிய ஆற்றின் கரையில் தங்கி அன்றிரவைக் கழித்து மறுநாள் புறப்பட உத்தேசித்தான்.



காலம் எதிர்பாராது கனிவதும் உண்டு; எதிர்பாராது வெம்பிவிடுவதும் உண்டு.

கர்னல் பெய்லிக்கு அது வெம்பி விட்டது.

அன்றிரவு அந்த ஆற்றில் கொடூரமான வெள்ளம் பெருக்கெடுத்து விடவே, திக்குமுக்காடி அதிர்ந்து போனான் கர்னல் பெய்லி.

செப்டம்பர் மூன்றாம் தேதிவரையில் அவனால் நகர முடியாது போகவே, இந்தச் சந்தர்ப்பம் ஹைதர் அலியின் நோய்ப் படுக்கைக்குச் சாதகமாய் விட்டது. ஆறாம் தேதியன்று ஒருவாறு சமாளித்து ஆற்றைக் கடக்க முயல்கிறபோது...

மறுகரையை அடைந்து விட்டன திப்புவின் சேனைகள்...

ஆ! ஹைதரை வீழ்த்திட முடியும் என்று ஊமைக்கனவு கண்டு கொண்டிருந்த கர்னல் பெய்லிக்கு, திப்புசுல்தானே வந்துவிட்டான் என்கிற கசப்பான செய்தி பேரிடியாக இருந்தது.

திப்புவின் சேனைகள் ஆற்றைக் கடக்கப் பெரிதும் முயல்கின்றன.

இவ்விதமே கும்பினிப் படைகளும் எதிர்த்து எதிர் நீச்சலிடுகின்றன.

இருவராலுமே இயலவில்லை.

மூன்றுமணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு, திப்புசுல்தான் படைகளில் 900 வீரர்களும், பெய்லியின் ராணுவத்தில் 254 சிப்பாய்களும் படுகாயமுற்றனர்.

கர்னல் பெய்லிக்கு என்ன செய்வதென்றே புரியாது, உடனடியாக ரகசிய வீரர்கள் மூலம் காஞ்சீபுரத்திலிருக்கும் மன்ரோவுக்குச் செய்தியனுப்பினான்.

இதனைக் கேள்வியுற்ற திப்புசுல்தானும் பௌஜ்தார் மகாமீர்ஸாகானைக் கலந்தாலோசித்து ஏதோ பெய்லி சூழ்ச்சி செய்கிறான் என்றுணர்ந்து மேலும் சேனைகளையனுப்பத் தந்தையார் ஹைதர் அலிக்குத் தகவல் அனுப்பினான்.

செப்டம்பர் ஒன்பதாம் தேதி காலையில் கர்னல் ஃப்ளெட்சர் தலைமையில் ஆயிரம் கும்பினி வீரர்கள் வந்து சேர்ந்தனர்.

திப்புசுல்தான் கொஞ்சமும் அயரவில்லை. மைசூர் சேனைகளும், கும்பினி ராணுவமும் மோதி முழக்குகின்றன... வாள்களில் மின்னல்... துப்பாக்கிகளில் நெருப்புப் பொறிகள்...

பீரங்கிகளில் வெடிமுழக்கம்...

குதிரைகள் பாய்கின்றனவா பறக்கின்றனவா என்று தெரியவில்லை.

ஒருபுறம் புலிக்கொடி வீரார்ந்த கோலமுடன் பறந்து மண்ணை மணக்கச் செய்கிறது.

இன்னொருபுறம் யூனியன் ஜாக் கொடி அதன் மண்ணின் பேராசை மணத்தைப் பரப்பிக் கபளீகர வாயைத் திறந்து பயமுறுத்திப் பறக்கிறது.

இரு தரப்பிலும் பெருத்த சேதத்துக்கிடையே, அன்றிரவு அமைதியாக நித்திரையில் ஆழத் தொடங்கியது.

கூடாரங்களில் விளக்குகள் மினுக்குகின்றன.

''கர்னல் பெய்லி! நாம் இரவை இங்குக் கழிப்பதைவிட எப்படியாவது முயன்று காஞ்சீபுரத்தை அடைந்துவிடுவது நல்லது'' என்று தனக்குள்ள செல்வாக்கைக் காட்டுபவன் போல் அபிப்பிராயத்தை எரிச்சலுடன் கூறுகிறான் கர்னல் ஃப்ளெட்சர்.

அவனது இந்த எரிச்சல் கர்னல் பெய்லியின் சுயகௌரவத்தைச் சாம்பலாக்குகிறது.

'இவன் கட்டளையிட்டு நாம் என்ன கேட்பது?' என்பது போல் கர்னல் பெய்லியும், ''ராணுவத்துக்கு இப்போது ஓய்வு தேவை. காலையில் பார்த்துக் கொள்ளலாம். மேலும் காஞ்சீபுரத்திலிருக்கிற ஹெக்டர் மன்ரோ காலையில் வந்து விடுவார். அவர் காஞ்சீபுரத்திலிருந்துகொண்டு என்ன செய்யப்போகிறார்?'' என்று கடுகடுப்புடன் மறுத்து விட்டான்.



அவனா மறுத்தான்?

வெம்பிய காலம் அவர்களுள் வேறுபாட்டை உண்டு பண்ணி மறுக்கிறது...

விடியற்காலை நான்குமணி...

ஓ... அதோ மகாசேனாதிபதியான - படே பௌஜ்தார் முகமது அலியின் தலைமையின்கீழ் புலிக்கொடி பறக்க ஹைதர் அலி அனுப்பிய சேனைகள் சமுத்திர அலைகளைப் போலப் பொங்கிப் பிரவகித்துப் பாய்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

கர்னல் பெய்லியும், ஃப்ளெட்சரும் பொறி கலங்கிச் செய்வதென்ன வென்று தோன்றாது, ஓய்வு கொண்ட ராணுவத்தை விரைந்து விழித்தெழுமாறு அவசரப்படுத்துகின்றனர்.

ஆங்கிலப் பட்டாளத்தை அடியோடு வீழ்த்துவது என்கிற முடிவோடு புறப்பட்டு வந்த மகா பௌஜ்தார் முகமது அலியைக் கண்ட திப்புசுல்தான், தனது தந்தையே வந்ததுபோல மகிழ்ந்து போகிறான்...

ஏறத்தாழ இருபத்தைந்து மணிநேரத்துக்குள் கும்பினிப் படைகள் குடைசாய்கிற நிலைமை கண்டன...

மறுநாள் காலை ஐந்துமணி...

கும்பினிப் படைகள் எவ்வகையிலேனும் தப்பி, காஞ்சீபுரத்தை யடையப் புறமுதுகிட்டு ஓடுகின்றன...

தொடர்ந்து துரத்தி வழிமடக்குகின்றான் திப்புசுல்தான்...

ஆறுகல் தொலைவுவரை துரத்திப் பிடித்துக் கும்பினிப் படையை மடக்கி நொறுக்குகிறான்...

அப்படியும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு ஓடிவந்த கும்பினி ராணுவம், காஞ்சீபுரத்துக்கு ஆறுகல் தொலைவிலிருந்த புள்ளலூரில் தங்கி ஓய்வு காண முனைந்தது. அங்கே அவர்களுக்கென அனுப்பப்பட்ட இன்னொரு பகுதி கும்பினிச் சிப்பாய்கள் பலர் அவர்களுடன் கலந்துகொள்ள நேர்ந்தது. அந்த ராணுவம் கேப்டன்

ரும்டிரி, கேப்டன் கௌடை ஆகியவர் தலைமையில் அனுப்பப் பட்டிருந்தன.

பேரம்பாக்கத்தில் இருக்கிற ஹைதர் அலியின் படைகளையே துவம்சம் செய்துவிட வேண்டும் என்று வஞ்சினம் கொண்டு புறப்பட்ட கும்பினிப் படைகளை, ஹதாகதம் செய்ய அதோ, மகாசுல்தான் ஹைதர்அலிகான் நவாப் பகதூரே தலைமை தாங்கி அனைத்துப் படைகளையும் திரட்டிக் கொண்டு புயலனையப் புறப்பட்டு வருகிறாரே.

பேரம்பாக்கத்தில் யார் இருக்கிறார்கள்?

ஆ! அங்கே பசவராஜ் இருக்கிறான்...

போதாக்குறைக்கு ஹைதர் அலியின் நண்பர்... ஹைதரைப் போலவே தோற்றம் கொண்ட நண்பர் - யாகின்கான் அந்த முகாமைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்! அவர் அங்கிருப்பது ஹைதர் இருப்பதற்குச் சமமாயிற்றே!

ஹைதரே போர்முகம் நோக்கிவந்து விட்டார் என்கிற சூறைச் செய்தியைக் கேள்விப்பட்ட சர் ஹெக்டர் மன்ரோ, காஞ்சியிலிருந்து தனது முழுப்படைகளையும் திரட்டிக் கொண்டு காற்றினும் கடிதாகப் புறப்பட்டுவிட்டான்...

ஆங்கில வெள்ளைக் கும்பினிக் கழுகுகளும் ஹைதர் அலியின் சுதந்திர தாகப் பறவைகளும் பொங்கிவந்த இரு சமுத்திரங்களைப் போலப் பயங்கரமாக மோதுகின்றன...

திப்புசுல்தான், புலியும் சிங்கமும் இணைந்து ஓரவதாரம் பூண்டதுபோலத் தோற்றம் தந்து பாய்கிற சீற்றத்தைக் கண்டு, புல்லரித்துப் போனார் புலிக்கொடிச் சுல்தானான மகா ஹைதர்.

இரு தரப்பிலும் பெருத்த சேதங்கள்...

கும்பினிச் சேனைகள் சரணடைகிற தருணம் வந்து விடவே, தப்பியோடினால் போதும் என்று முயல்கிற போது...

அனைவரையும் வளைத்துப் பிடித்துக் கைது செய்கின்றனர் மைசூர் வீரர்கள்...



ஆ! மகாவீரனான கர்னல் பெய்லி வீழ்ந்து பட்டான்; தலை தாழ்ந்து பட்டான்; அடுத்து கைவிலங்கிடப்பட்டான்.

கைது செய்து வந்த வெள்ளைக் கும்பினியர்களை ஹைதர் அலியின்முன் கொண்டு வந்து நிறுத்தினான் திப்புசுல்தான்.

அவர்களை மிகவும் மனிதத் தன்மையோடு நோக்குகிறார் ஹைதர் அலி.

''இவர்கள் அனைவருக்கும் வயிறு நிறையச் சாப்பாடு போட்டு, துணிகளை வழங்கி, [1]வழிச்செலவுக்கு ஆளுக்கு ஒரு இமாமி (ரூபாய்) கொடுத்து ஸ்ரீரங்கப்பட்டினத்துச் சிறைச்சாலைக்கும், தக்கோலத்துச் சிறைச்சாலைக்கும் அனுப்பி வையுங்கள். இவர்களை மனிதத்தன்மையுடன் நடத்த யாருமே தவறக்கூடாது, கவனம்.''

வெற்றி முழக்கம் அவரது நரம்புகளில் வீணையின் தந்திகளிலிருந்து தெறிக்கும் ஜங்கார நாதம் போல் எழுந்து இசைக்கிறது.

ஹைதர் அலி சேனைகள் பேரம்பாக்கத்தை நோக்கிப் பயணப்பட்டன.

மாலை இருட்டுவதற்குள் சேனைகள் பேரம்பாக்கத்தை அடைந்தன.

தொழுகையை முடித்துக்கொண்டு தந்தை ஹைதர் அலியைக் காணப் புறப்பட்டான் திப்புசுல்தான். உள்ளுக்குள் மட்டும் ரங்கநாயகியின் புன்னகை நிரம்பிய இளஞ்சிவப்பான முகம் ரோஜாவாக மலர்ந்து மணத்துக் கொண்டிருக்கிறது...

ராஜகூடாரத்துக்குள் பலரும் அமர்ந்திருந்தனர். திப்புசுல்தான் நுழைவதைக் கண்டு அனைவரும் எழுந்து மரியாதை செய்து வணங்குகின்றனர். ஆனால் யாகின்கான் மட்டும் அவ்வாறு எழவில்லை. அவனுக்குள்ள ஹைதர் செல்வாக்கு அத்தகையது.

1. Hamid Khan - ff 30A, 31B.

திப்புசுல்தானும் அவ்வாறே சென்று அமர்ந்து அனைவரையும் நோக்கினான். குறிப்பாக யாகின்கானை அவனது கண்கள் பொருட் செறிவுடன் பரிசீலித்தன.

அனைத்துப் பௌஜ்தார்களும் அமர்ந்தனர்.

ராஜாக்கான் ஒரு மாறுபட்ட முகபாவத்துடன் இருப்பதைத் திப்புசுல்தான் கவனித்தானில்லை.

"திப்பு! அடுத்து என்ன செய்யப்போவதாக உத்தேசம்?"

ஹைதர் அலி இவ்விதமாகக் கேட்கிறபோது அதனுள் அடங்கியிருந்த பல பதில்களைத் திப்புசுல்தானால் உணர முடிகிறது...

"நீங்கள் என்ன செய்யப்போகிறீர்களோ, அதன் நியாயத்தைப் புரிந்து நடக்கச் சித்தமாயிருக்கிறேன் தந்தையே!"

ஓ... திப்புவும் தனது பதிலில் பல கேள்விகளை நுழைத்துச் சொன்னது ஹைதருக்கு வியப்பாக இருந்தது - அதன் நியாயத்தைப் புரிந்து...

இவன் நன்றாகவே படித்திருக்கிறான்; 'நியாயமாகவே' சிந்திக்கிறான்...

"நல்லது திப்பு! அடுத்து ஆர்க்காட்டு நவாப்பைப் பதம் பார்க்க வேண்டும். இந்த உடன்பிறந்து கொல்கிற வியாதி மாதிரியானவன், நம்மை அடிமைப்படுத்த வந்த வெள்ளைக் கழுகுகளுடன் சேர்ந்து கொண்டு, கொஞ்சமும் சுதந்திர வேட்கை - தன்மான உணர்ச்சி-சுயத்துவமின்றி உண்ட கலயத்தையே தூக்கிப் போட்டு உடைத்து வருகிறான். அவனை விரட்டிப் பாடம் கற்பிப்பதன் மூலம் நமது தேசம் சுதந்திரமாக இயங்க, ஏனைய துரோகிகளுக்கும் இனம் புரியும்; மனம் புரியும்! நமது தேசம் வெள்ளையனிடமிருந்து விடுதலையடைய வேண்டும். அதற்குப் பாதகமாக இருக்கிற ஆர்க்காட்டைக் கைப்பற்றி, அந்த நவாப் பட்டத்தை நீ சூட்டிக்கொள்ள நான் பார்த்து மகிழ வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இதனை முடித்து விட்டு நீ ஸ்ரீரங்கப்பட்டினம் நோக்கிப் பயணமாகலாம். அடுத்து நான் ஆம்பூர், சிதம்பரம், அன்னக்குடி, பறங்கிப் பேட்டை (புத்தந்துறை)



சோளிங்கபுரம், திரிசலூர், ஆரணி ஆகிய இடங்களிலுள்ள கும்பினி முகாம்களை விரட்டிப் பிடித்து, வளைக்க வேண்டும். இது எனது திட்டம். உனது 'நியாயம்' இது பற்றி என்ன சொல்லுகிறதோ?"

நியாயம் என்ற சொல்லை ஹைதர் மிகவும் அழுத்தமாகவும், அர்த்த கனத்துடனும் உச்சரிப்பு...

திப்புசுல்தான் ஒருகணம் மௌனமாகச் சிந்திக்கிறான்...

"எனது தந்தையே ஒரு நியாயம்! எனவே அவரது நியாயத்துக்கு எனது நியாயம் புறம்பாக முடியுமா?"

நியாயத்துக்குத்தான் எத்தனை நியாயமான கனங்கள்...

'ஓகோ' வென்று கனத்தகுரலில் பெருத்த நகைப்பொலி எழுப்பினார் ஹைதர் அலி.

தம்மை நன்றாகவே தந்தையார் புரிந்து கொண்டார் என்றுணர்ந்த திப்புசுல்தான், பெருமிதத்துடன் தலைகுனிந்து கொண்டான்.

சில விநாடிகளை அமைதி சூன்யமாகப் புசிக்கத் தொடங்கியது.

அருகில் அமர்ந்திருந்த யாகின்கானை நோக்கிய ஹைதர் அலி, "யாகின்! நீ நமது பௌஜ்தார்களை அழைத்துக் கொண்டு புறப்படு. சேனைகளுக்கான எல்லா நலன்களையும் கவனி. அனைவரும் புறப்படலாம். எப்படியும் இருதின ஓய்வுக்குப் பிறகே என் அரும் புதல்வன் திப்புவுடன் ஆர்க்காட்டை நோக்கிப் பயணமாகிறீர்கள். அது வரை அமைதியாக ஓய்வெடுங்கள்!"

ஹைதர் அலியின் உத்தரவுக்குப் பிறகு அனைவருமே மண்டியிட்டு வணங்கிப் புறப்பட்டனர்.

விளக்கு வெளிச்சத்தின் முன்புறமாகத் தலையைமறைத்து அமர்ந்திருந்த திப்புசுல்தானின் முகம் இருட்டாகத் தெரிந்தது.

"ரங்கநாயகியைப் பார்க்கவில்லை என்று சொல்கிறதே முகம்! யுத்தத்திலிருந்து திரும்பியதும் நேரே என்னைப் பார்க்க வந்தது கண்டு பெருமையுடன் மகிழ்கிறேன் திப்பு!"

தந்தையார் முதல் தடவையாக ரங்கநாயகி பற்றிய பேச்சை எடுத்தது திப்புசுல்தானுக்குக் குதூகலமாக இருந்தது.

''திப்பு! கொஞ்சம் விலகியிரு! விளக்கிலிருந்து விலகியிரு என்கிறேன். முகத்துக்குப் பின்புறமாக விளக்கு இருப்பதால் முகம் இருட்டாகத் தெரிகிறது.''

தந்தையார் ஹைதர் அலி மிகுந்த மதி நுட்பத்துடனும், கூர்மையாகவும் பேசுகிறார். இந்தக் கூர்மையில் நாம் கவனமாக இருக்க வேண்டுமென்று உணர்ந்து சற்றே தள்ளி அமர்ந்து கொண்டான்.

''பார்த்தாயா! இப்போது எவ்வளவு பிரகாசமாயிருக்கிறாய்! நல்லது திப்பு! ரங்கநாயகியை அழைத்து வருமாறு ஆளையனுப்பி இருக்கிறேன்.''

பெரிதாக அதிர்ந்து போனான் திப்பு.

''உங்களைத் தவிர வேறு யார் சென்றாலும் காவல் வீரர்கள் அனுமதிக்க மாட்டார்கள்'' என்றான் திப்புசுல்தான்.

''ஓ... நான் தந்தையல்லவா? அதனால்தான் அனுமதி வழங்கியிருக்கிறாய்! நான் அப்படியொன்றும் புரியாத ஆளையனுப்பி வைக்கவில்லையே! பசவராஜைத்தான் அனுப்பி வைத்திருக்கிறேன். அவன் உனது ஆருயிர் நண்பன்; சகல அனுமதிகளையும் பெற்றவன். அவன்தான் அழைத்து வருகிறான்!''

ஹைதர் அலி இவ்வாறு கூறி முடிப்பதற்குள் அந்த ராஜ கூடாரத்துக்குள் பசவராஜ் முன்னே வர பின்னே ரங்கநாயகி தொடர்ந்து வந்து கொண்டிருந்தாள்.

## 18

**ப**லப்பல அர்த்தங்களைப் பேதாபேதமுடனும், ஆரோகண அவரோகணமாகவும் ஆரோக்கியமாக அங்கீகரித்தும் ஆரோகிய மற்று நிராகரித்தும், விழுங்கியும், ஏப்பம் விட்டும் அனுபவம் கண்ட



ஹைதர் அலிகான் நவாப் பகதூரின் கண்கள், சற்றே அகன்று விரிந்து ரங்கநாயகியை நோக்குகின்றன. ரங்கநாயகியின் பூஞ்சைக் கண்களோ அலமரல் நிலைகண்டு பயத்துடன் இமைக்கின்றன. முதன் முதலாக நான்கு கண்களும் நான்கு விதமான சிந்தனைகளுடன் நோக்கி அடுத்த நிமிஷத்தை ஆனந்தமாகவோ அல்லது அவலமாகவோ எதிர்பார்க்கின்றன.

மகாசுல்தான் ஹைதர் அலிகான் நவாப் பகதூரைக் கண்ட பசவராஜ், மண்டியிட்டுத் தனது மிகச் சிறந்த தேசத்தலைவனுக்கு - சுதந்திர நாயகனுக்கு - மக்கள் திலகத்துக்கு மரியாதை செய்வதைக் கண்ட ரங்கநாயகி, தானும் அவ்வாறே பின்பற்றி அந்த அரசமரியாதையை எதிரொலிக்கிறாள்.

ஆயிரமாயிரம் ராஜ தந்திரங்களை ஆவாகனம் செய்தும் ஆகுதிசெய்தும், அரங்கேற்றியும், புறங்கண்டும் கர்ஜித்த ஹைதர் அலிக்கு, ரங்கநாயகி விஷயத்தில் என்ன செய்வதென்றே புரியாது ஒரு வலிப்புக் கண்ட விழிப்புக் கண்டு தடுமாறுகிறார்...

ஸ்ரீரங்கப்பட்டினத்திலிருந்து வந்த, இரக்கமற்ற கொடூரமான ரகசியக் கடிதங்கள்வேறு அவரைத் திசை மாற்றி நிரம்பவும் குழப்பிக் கொண்டிருக்கின்றன.

இந்தக் குரூரம் நிறைந்த வக்கிரமான விஷயத்தை எப்படித் தீர்ப்பது? அல்லது எவ்வாறு தீர்த்துக் கட்டுவது? நெற்றிப் பொட்டு விண்ணென்று தெறிக்கக் கவனிக்கிறார் ஹைதர் அலி.

''அப்படி உட்காரலாமே...!'' என்று கூறிய அவரது குரலில், போலியான அன்பு எதிரொலித்தாலும் அதனில் வெடித்த அலட்சியத்தை யாரும் ஒரு குற்றமனோபாவத்துடன் எண்ணவில்லை; ஏற்றுக் கொள்ளவுமில்லை. அது அவரது சுபாவம்! ஒருவித கர்ஜனை!

ரங்கநாயகியும் பசவராஜும் மரியாதைக்குரிய ஒரு மாமனிதர் முன்னிருக்கிறோம் என்றெண்ணி, அந்த மரியாதைக்கே ஒரு மரியாதை தருபவர்களைப் போன்று அடக்க ஒடுக்கத்துடன் இன்னமும் நின்று கொண்டே இருந்தனர்.

''ம்ம்...! உட்காருவதற்கு என்ன?''

எத்துணை கலங்கடிக்கும் கம்பீரமான அதட்டல்?

ரங்கநாயகி ஒருவிநாடி பொறி கலங்கிப் போனாள்.

நிலைமையை நன்றாகவே யூகித்துத் தன்னுள் புரிந்து கொள்கிறாள்...

அதற்காகத் தன்னைத் தயார் செய்து கொள்ளவும் முனைகிறாள்...

''பரவாயில்லை ஜஹாம்பனா! நின்று கொண்டிருப்பதுதான் மரியாதை'' என்று ஒரு வேதப்பணிவே போலக் கூறிய ரங்கநாயகியின் குரலைப் பின்பற்றி, ஹைதர் அலியின் சிம்மக்குரல் ஒரு ராஜரிகத் தோரணையில் கணீரென்று ஒலிக்கிறது...

''நீங்கள் நிற்பதுதான் எனக்கு மரியாதைக் குறைவாகத் தெரிகிறது. நான் உங்களை நோக்கி அனாவசியமாக அண்ணாந்து பேசுவதே ஓர் அவமரியாதை! உங்களைப் பொறுத்தவரையில் நான் இந்தப் புதிய கௌரவ நிலையிலிருந்து பரீட்சிக்கிறேன்!''

இந்த உள்ளடக்க வாசகத்தின் உட்பொருளைத் துருவிப் பார்க்க முடியாமல், அயர்ந்து போகிறான் திப்புசுல்தான். அப்பாஜானுக்கு என்ன வந்து விட்டது?

இவர் இவ்விதமாக இது குறித்து நடந்து கொள்ளுகிற உள்ளப்பாங்கில் ஏதோ ஓர் அர்த்தானுபவம் பொய்முகத்துடன் பதுங்கிக் கிடப்பதாக உணருகிறார்கள் பசவராஜும் ரங்கநாயகியும். ஒருகால் மகாசுல்தான் தமது அன்பு நிறைந்த போர்வையை அலட்சிய மனோபாவத்துடன் போர்த்திக்கொண்டு தமக்கே உரிய சுபாவமாக ஆசீர்வதிக்கிறாரா?

இருவரும் மிக்கவும் பவ்வியத்துடன் எதிரே அடக்கமாக அமருகின்றனர்.

பசவராஜை வெளியில் அனுப்பிவிட்டுக் கேள்விகளை ரங்கநாயகியிடம் கேட்கலாமா என்றும் சிலவிநாடிகள் எண்ணிப் பார்க்கிறார் ஹைதர் அலி.



சீ...இது அவசியமில்லை. பசவராஜை வைத்துக் கொண்டே கேட்பதில்தான் தமது மர்மமான திட்டத்தை ஒரு சாட்சி பூர்வமாகப் பிரதிபலிக்க முடியும்!... திப்பு வேறு இருக்கிறானே...

''உனக்கு ஏன் திப்புவைக் காதலிக்க வேண்டும் என்கிற அநியாய ஆசை பிறந்தது ரங்கநாயகி!''

ஓ எடுத்த எடுப்பில் ஈட்டி முனைமாதிரி இப்படியா கேள்வி கேட்பது ஹைதர் அலி?

திப்புசுல்தான் திகைத்து அயர்ந்து போகிறான்...

ஆனால் அனைவருமே மின்னலைக் கண்டு அதிருவதுபோலப் பதிலைக் கூறினாள் ரங்கநாயகி; ''கேள்வி சரியில்லை மகாராஜா! குமார சுல்தான் அவர்களுக்கு என் மீது காதல் கொள்ளவேண்டிய நிலைமை அல்லது நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது என்பதுதான், இதுகாறும் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது!''

மூன்றிணைக் கண்கள் முவ்வித கோணத்தில் முறுகியும் மறுகியும் மிறைகியும் மோதுகின்றன. அங்கே இடிமுழக்கமிடுகிறது...

''ஓகோ! இப்போது நீயாக அவனை விரும்பவில்லை, என்கிறாயா? இது ஒரு பலாத்காரக் காதல் என்கிறாயா?''

ஹைதர் அலி தமது சமத்காரப் பாவத்துடன் உடலை நெளித்து, நிமிர்ந்து இவ்விதமாகச் சொற்களால் அவளை வசமாக வளைத்துச் சிறைப்படுத்த முயல்கிறார்...

ரங்கநாயகி கொஞ்சமும் அதனைப் பெரிதுபடுத்திக் கொள்ளாமல் தனது மென்குரலில் நிரம்பவும் துணிவாகவே சிரிக்கிறாள்...

ஆயினும் அந்தச் சிரிப்பில் அடக்கமிருந்தது; ஆரோக்கியம் இருந்தது.

''மகாராஜா! தெய்வமாகப் பார்த்து ஒரு பக்தையை ஆட்கொள்கிறபோது, அந்தப் பக்தை தெய்வத்திடம் சரணாகதி யடைந்து விடுவதைவிட மிகப்பெரிய பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்? நான் சொல்கிற சரணாகதியை விட விரும்பத்தக்க பதில் வேறு

எதுவும் இருக்க முடியாது. பாக்கியம் வேறு; பலாத்காரம் வேறு! பாக்கியம் என்கிற அந்தப் பவித்திரமான வார்த்தையைவிட வேறு எதுவும் இருக்க முடியாது! பக்தியில் இருவிதமுண்டு. தெய்வத்தைத் தேடியலைகிற பக்தியும் உண்டு. தெய்வமே தேடிப்பிடிக்கிற பக்தியு முண்டு. நான் இரண்டாவது ரகத்தைச் சார்ந்தவள். பக்தி என்ற சொல்லுக்கு நீங்கள் எவ்வாறு அர்த்தம் பண்ணிக் கொள்ளுகிறீர்களோ! என்னைப் பொறுத்தவரையில் அது ஒரு தவமிருந்து பெற்ற ஜென்ம சொந்தம்!... நீங்கள் குறிப்பிட்டது போல நான் அவரைப் பலாத்காரமாக விரும்பவில்லை; அவரும் என்னை அவ்விதமாக விரும்புவதாகத் தெரியவில்லை. விருப்பம் என்ற வார்த்தையானது நீங்களே என்னை விரும்பி அழைத்தது போலவே, அல்லது நான் உங்கள் அழைப்பை ஏற்று வந்ததுபோலவோ நினைக்கக் கூடிய மிகமிகச் சாதாரண வார்த்தை! அவர் - குமாரசுல்தான் என்னை விரும்பியது ஒரு பிரசன்னம்! நான் அவரை விரும்பி ஏற்றது ஒரு தவம்! எங்கள் காதல் சென்ற பிறவியின் ஒரு மகாயக்ஞம்...!''

தந்தை ஹைதர் அலி மட்டும் இல்லையென்றால், ரங்கநாயகியின் இந்த விளக்கத்துக்கு அந்த கூடாரமே அதிர்ந்து சாய்வதுபோலக் குரல்விட்டுச் சிரித்திருப்பான் திப்புசுல்தான். அவன் அடைந்த குதூகலம் அத்தகையதாக இருந்தது. ஆ! ரங்கநாயகி ஓர் ஆட்சிப் புத்தகம்!

ஹைதர் அலி, அரண்டு மருண்டுபோன தமது பலவீனத்தை அதிர்ச்சி கண்ட தயக்கத்தின் மூலம் வெளியே காட்டிக்கொள்ள நினையாது மிகவும் சமத்காரமாக, ''புரியவில்லை'' என்றார்.

''புரியாமல் இருப்பதும் புரிந்துகொள்ள முடியாததுமாக இருப்பது தெய்வம். எங்கள் காதல் அதுபோன்றது. உங்களுக்கு மட்டுமல்ல மகாராஜா! யாருக்குமே புரியாது.''

ஏதோ கன்னத்தில் அறைபடுவது போலப் பேசுகிற ரங்கநாயகியைக் காணும்தோறும் உள்ளூரப் பொறுமல் தீ மூட்டியது. ஆயினும் அதனை உள்ளிழுத்த காற்றால் அடக்கிக் கொண்டு குமாரனையும், பசவராஜையும், ரங்கநாயகியையும் மாறி மாறிக் கவனிக்கிறார்...



''நான் ரொம்பவும் கவலைப்படுகிறேன், ரங்கநாயகி!''

''அவசியமே இல்லை மகாராஜா! கவலை என்பது கண்ணீரின் பரிபாஷை! நாங்கள் பன்னீர்மலர்கள்; எங்களுக்கு வாசனையின் பரிபாஷையே புரியும்.''

''என்னுள் சர்வ வல்லமை பொருந்திய மகாசுல்தான், ஹைதர் அலிகான் நவாப்பகதூர் பெற்றெடுத்த வீர, தீர, ராஜகர்ஜனைக்குரிய இஸ்லாமிய சிங்கம் திப்புசுல்தான் இருக்கிறார்! பேசுவது நானல்ல; அவர், ஜஹாம்பனா!''

எவ்வளவு தைரியமாகப் பெயர்களை அடுக்குகிறாள் இவள்!... களங்கமின்மையை அவளது குரலும் மனமும் பகிரங்கமாகவே நிரூபித்துப் பிரகடனப்படுத்துகின்றன...

ஹைதர் அலி ஒரு கணம் அயர்ந்து போகிறார்... ஓ... அதிகமான அறிவு விஷத்தைச் சிருஷ்டிக்கும் விஷயத்தையும் முறிக்கும்...

''நன்றாகச் சிந்தித்துத்தான் பேசுகிறாயா ரங்கநாயகி?''

''சிறைபிடிக்க முடியாதது சிந்தனை ஒன்றுதான், ஜஹாம்பனா, ஆகவே நான் இப்போது அளவுக்கு மீறியே சிந்திக்கிறேன்.''

''நமது மதங்களையும் அவற்றின் கோட்பாடுகளையும் அறிவாயல்லவா?''

''நன்றாகவே அறிவேன் மகாராஜா! ஆண்டவன் மனிதனைப் படைத்தான். மனிதன் மதங்களைப் படைத்தான். ஆறாத புண்களை மூடி வைப்பது எப்படிப் போலித்தனமானதோ, அப்படித்தான் மனித சமுதாயமும் அழுகிக் கொண்டிருக்கிறது; அதனால் அழுது கொண்டும் இருக்கிறது.''

''நீ உண்மையை மறைத்துப் பேசுகிறாயா? அல்லது மறந்து பேசுகிறாயா?''

''உண்மையை மறக்க முடியாது; ஏனென்றால், அது நிர்வாணமானது. எப்படி மறந்துவிட முடியும்? நான் என்ன நிரீச்சுரவாதியா?''

''ஆபத்து புரியாது பேசுகிறாய்!''

''ஆபத்துக்கு அஞ்சாமல் இருப்பதுதான் ஆபத்தைக் கடக்க உதவும் மகாராஜா!''

''ஒரு மகாராஜாவின் முன் பேசுபவளைப் போலவா பேசுகிறாய் நீ?''

''நான் மகாராஜா முன் பேசினாலும், ஒரு மாமனார் முன்பு பேசுவதாகவே நினைக்கிறேன். அக்பர் பாதுஷா ஒரு இந்து மனைவியை அடைந்து பெருமை கொண்டார். நீங்கள் ஓர் இந்து மருமகளையடைந்து பெருமையடையப் போகிறவர் என்ற மகிழ்ச்சியால் இவ்வாறு தாராளமாகவும் சரளமாகவும் பேசுகிற தைரியத்தை எனக்கு அல்லாஹ் வழங்கியிருக்கிறார்!''

''அல்லாஹ்?''

''என்னைப் பொறுத்தவரையில் அரங்கநாதனும் ஒன்றுதான்; அல்லாஹ்வும் ஒன்றுதான்! 'ஆண்களானாலும் பெண்களானாலும் யார் உண்மையில் விசுவாசம் கொண்டு நல்ல கருமங்களை ஆற்றுகிறார்களோ, அவர்கள்தான் சுவனபதி செல்லக் கூடியவர்கள். அவர்களுக்குக் கொஞ்சமும் அநீதி இழைக்கக்கூடாது' [1] என்கிற திருக்குர் ஆன் வாசகத்தின்படி எங்கள் காதலுக்கு மகாமேதையான நீங்கள் அநீதி இழைக்க மாட்டீர்கள் என்று பரிபூரணமாக நம்புகிறேன், மகாராஜா!''

இதுவரை மிகவும் துணிவாகப் பேசிவந்த ரங்கநாயகி, இக் கட்டத்தில் தன்னை மறந்து தனது பெண்மையை நிரூபிப்பதுபோலக் கலகலவென்று கண்ணீர் உகுக்கத் தொடங்கி விட்டாள்.

அவளது இந்தத் தைரியம் குலைந்த சுபாவமான பெண்மை நிலையைக் கண்டு, தம்முள் வெடித்துக் கொண்டிருந்த பொருமலை யமுத்தி, ஒரு போலியான புன்னகையையும் உதிர்த்து, அவளது பெண்மைக்கு இரங்குபவரே போல் பாவனை செய்து, ''ரங்கநாயகி! நீ புறப்படலாம். உனது மன நிலையை அறியத்தான் அழைத்தேன். நான் அக்பர் பாதுஷாவாக முடியவில்லையானாலும், ஹைதர் பாதுஷாவாக முயற்சி செய்து வருகிறேன்'' என்று மிடுக்கான மெய்ப்பாட்டுடன் கூறிவிட்டுப் பக்கத்திலிருந்த பசவராஜை வெறுப்பார்ந்த பாவனையுடன் நோக்கினார்:

1. 4, 124.



''பசவராஜ்! நீ இவளை 'உன்னுடன்' அழைத்துச் செல்லலாம்.'' 'உன்னுடன்' - என்ற வார்த்தைக்கு ஓர் அழுத்தம் கொடுத்துக் கூறிய ஹைதர் அலி, தமது குறுந்தாடியை மிகுந்த யோசனையுடன் தடவி விட்டுக் கொள்ளுகிறார்...

பசவராஜும், ரங்கநாயகியும் எழுந்து அடக்கம் நிறைந்த பணிவுடன் மண்டியிட்டு நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டனர். புறப்படுகிற அந்த ஒரு கணத்தில் ரங்கநாயகியின் நீள்விழிகள், திப்புசுல்தானின் முகத்தடாகத்தில் சற்றே நீந்தி விளையாடி மறைகின்றன.

அவர்கள் சென்று சில விநாடிகள் வரை ஒருவித கௌரவமான அமைதி அந்தக் கூடாரத்துக்குள் நிலவுகிறது.

''நானும் புறப்படுகிறேன் அப்பாஜான்!'' என்று கூறியவாறு எழுந்து நின்றான் திப்புசுல்தான்.

அவனது அந்த அவசர நிலைமை கண்டு அண்ணாந்து கவனித்த ஹைதர் அலி, ''ஓ... நீ என்னிலும் சற்று உயரமாகவே காணப்படுகிறாய் திப்பு! அதற்காக நான் மகிழ்கிறேன். ஆனாலும் ஒன்றைச் சொல்வேன். அக்பர் பாதுஷா ஓர் இந்துப் பெண்ணை மணந்தது குறித்து தில்லிமாநகரம் சம்மதம் தெரிவித்திருக்கலாம். தென்னகத்தின் நிலைவேறு. இது சரியானதுதான் என்று உனக்குப் படுமானால் நான் குறுக்கே நிற்கவில்லை. மேலும் ஒன்றை நினைவு படுத்துவேன்; பசவராஜை நீ அதிகப்படியாக எல்லா விஷயத்திலும் நம்பி இருப்பதுதான் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனக்கென்னமோ அவன்மீது நம்பிக்கையில்லை. இது எனது தவறான அனுமானமாகவுமிருக்கலாம். இவை யாவும் உனது சொந்த விஷயங்கள். நான் தலையிடுவது நாகரிகமில்லையானாலும் எடுத்துச் சொல்ல வேண்டியது எனது கடமை. நீ புறப்படலாம். ஆர்க்காட்டு யுத்தத்துக்குப் பிறகு எனது முடிவைச் சொல்லுகிறேன்'' என்று

கூறிவிட்டுத் தமது மகனுடைய முகபாவனைகளைக் கூர்ந்து பரிசீலித்தார்.

திப்புசுல்தான், ஒன்றையும் மறுத்துக் கூறாது தலை குனிந்தவாறு இருந்தான். தந்தையின் ஒவ்வொரு வார்த்தையும் அவனுக்கு முரண்பாடேயானாலும் அது குறித்து அப்போதைக்கு எதிர்ப்பதோ, மறுப்பதோ பயன்தராது என்று உணர்ந்து, வருத்தமுற்றான். விவரிக்க அது நேரமில்லை. பசவராஜ் விஷயத்தில் அவர் கோடிட்டுக் காட்டியது எதைக் கண்டு? ஏன் இவ்வாறு வெறுக்கிறார் என்பது புரியாமல் தவித்துச் சிந்திக்கிறான்...

அவன் மௌனமே அவனை உயர்த்திக் காட்டுவது போல ஹைதர் அலிக்குப் புரிபட்டு, மீண்டும் குறுந்தாடியைத் தடவி விட்டுக் கொண்டு, மகன் சென்ற திசை நோக்கிக் கவனித்து முறுவலித்துக் கொள்கிறார்...

பிறகு தமது தலையணைக் கடியிலிருந்து அந்த ரகசியக் கடிதங்களை எடுத்து அருகிலிருந்த விளக்கில் காட்டி எரித்துக் கருகச் செய்தார்.

## 19

**கூ**டாரத்தை அடைந்த ரங்கநாயகி, கீழே விரிக்கப்பட்டிருந்த மஞ்சத்தில் அமர்ந்து அதுவரை மகாசுல்தான் ஹைதர் அலியுடன் பேசிய பேச்சுக்களைத் திரட்டி அசைபோடுகிறாள்...

தான் பேசியது சரியா? ஏதேனும் முரண்பாடாகப் பேசிவிட்டோமோ?

சிந்திக்கிறாள்...

பசவராஜ் விடைபெற்றுச் சென்றதுகூட அவளுக்குத் தெரியாது. அவளது சிந்தனை இன்னமும் ஹைதரின் கூடாரத்தையே அன்வயப்படுத்தி வட்டமிடுகிறது...



மதில்போலச் சுற்றியிருந்த காவல் வீரர்கள் மண்டியிட்டு வணங்க, உள்ளே திப்புசுல்தான் நுழைகிறான்...

ஆழ்ந்த சிந்தனையுடன் காணப்பட்ட ரங்கநாயகியை நோக்கித் தொண்டை குலுங்கக் குரல் கொடுக்கிறான் திப்புசுல்தான். குரல் கேட்டுச் சிந்தனையிலிருந்து விடுபட்டு நிலைக்கு வந்த ரங்கநாயகி, ஒருகணம் பதற்றம் கண்டு எழுந்து மரியாதை செய்கிறாள்.

மஞ்சத்தில் வந்து அமர்ந்த திப்புசுல்தான், கால்களை மடக்கிப் போட்டமர்ந்து, இடக்கையை மஞ்சத்தில் ஊன்றியவாறு, ரங்கநாயகியின் முகத்தைக் கூர்ந்து கவனிக்கிறான்...

அவனது தலைக்கு மேலே கூடாரத்தின் பிளவு வழியாக நிலாத்துண்டு பிரகாசமாகத் தெரிகிறது. அதன் ஒளியைக் காட்டிலும் தனது காதலியின் முகவிலாசம் மிகவும் ஒளிபடர்ந்து ஒரு தனியான சோபையைத் தருவதாக உணர்கிறான்...

''ரங்கநாயகி! இன்று நீ ரொம்பவும் பிரமாதமாகப் பேசிவிட்டாய்! நான் எதிர்பார்க்கவே இல்லை. அக்பர் பாதுஷா உதாரணம் அப்பாவை அதிகமாகவே மயக்கியிருக்கிறது!'' என்றான் திப்புசுல்தான்.

''மகாசுல்தான் ஒப்புக் கொண்டாரா?'' எதிர்பார்ப்பு நிறைந்த துடிப்புடன் கேட்டாள் ரங்கநாயகி.

''ஒப்புக் கொண்ட மாதிரிதான் என்று நினைக்கிறேன். ஆர்க்காட்டு யுத்தம் முடிந்ததும் முடிவு கூறுவதாகச் சொன்னார். முடிவு எதுவானாலும் நமது காதலை எவராலும் பிரித்து வேடிக்கை பார்க்க முடியாது. திருமணத்தை நிறுத்தி வேதனைப்படுத்தவும் முடியாது. இந்த ராஜநாகத்தின் சீற்றம் எத்தகையது என்பது பலர் அறிந்தது.''

திப்பு சுல்தான் இவ்வாறு ஒரு சீற்றம் நிறைந்த தோற்றத்துடன் கூறிக்கொண்டிருந்த போது, நிஜமாகவே ஒரு நாகப்பாம்பு அந்தக் கூடாரத்துச் சந்தின் வழியாக நுழைந்து கொண்டிருந்தது.

ரங்கநாயகி அதனைக் கவனித்து, அதிரும்படியான பதற்றத்துடன் எழுந்து கைகூப்பி வணங்கத் தொடங்கிவிட்டாள்...

திரும்பிப் பார்த்தான் திப்புசுல்தான். அடுத்த விநாடியே துடித்தெழுந்து வாளை உருவினான்.

ஏதோ தனக்கே ஆபத்து நேர்ந்து விட்டது மாதிரி அலறிய ரங்கநாயகி, ''அதையொன்றும் செய்யாதீர்கள்; தயவு செய்து எனக்காக விட்டுவிடுங்கள்!'' என்று வேண்டிக்கொண்ட விதத்தைக் கவனித்து ஒரு நிமிடம் ஓங்கிய வாளை ஓங்கியபடி நிலைத்து நின்று விட்டான் திப்புசுல்தான்.

உள்ளே நுழைந்து சீற்றத்துடன் உயரமான அளவுக்குத் தலைதூக்கிப் படம் விரித்து இடம் வலமாக ஆடியது அந்த ராஜ நாகம்.

''ரங்கநாயகி! இது ராஜ நாகம்!''

''புரிகிறது குமார சுல்தான்! அதனால் நான் இதனை மரியாதை கொடுத்து வழிகாட்ட வேண்டுகிறேன்!''

''மரியாதை...?''

''ம்ம்...! ஒரு ராஜகர்ஜனை ஒரு ராஜ சீற்றத்துக்குக் கொடுக்கிற கௌரவமான மரியாதை!''

''இது கொடிய விஷம் நிறைந்த ஜந்து!''

''இதனினும் நம்மில் கொடிய விஷமுடைய ஜடங்கள் இருக்கின்றன!''

''நீ ஒரு இந்துப்பெண்! அதனால் இந்தப் பாதகம் நிறைந்த பாம்புக்குப் பரிந்துரைக்கிறாய்!''

''நீங்களா இவ்விதம் பேசுகிறீர்கள்? மதங்களையெல்லாம் கடந்த ஒரு மானுஷ்ய சிம்ஹத்தைக் காதலிக்கிறோம் என்று மதம் கொண்டேனே... நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? நான் ஒரு வருங்கால இஸ்லாமிய ராணி! ஆனால் இந்து மதத்தின் பிரதிநிதி! இருதரப்புச் சாங்கியங்களுக்கும் சமத்துவமளித்துப் பரிசீலிக்கிற எனது குமார சுல்தானும் ஒரு ராஜநாகம்தானே? நல்லவர்களுக்கு ராஜன், பொல்லாதவர்களுக்கு நாகம்!''



''ஓகோ'' வென்று இடிமுழக்கம் போலக் கர்ஜனை நகைபுரிகிறான் திப்புசுல்தான்...

எத்தனை சமநோக்கோடு சம்பாஷிக்கிறாள் இந்த நாமதேவதை...

அவன் அவளது நெற்றியைப் பார்க்கிறான்... பிறகு நாகத்தின் படத்தை நோக்குகிறான்...

அவன் என்ன ஒப்புவமை கருதினானோ... மீண்டும் நகை முழக்கம்...

திப்புவின் இடிகுரல் கேட்டும் அந்த நாகம் அடங்கவில்லை...

இடியோசை கேட்டு அடங்குகிற சாதாரண நாகமா அது?

ராஜநாகம்...

அது மேலும் நிமிர்ந்து படம் விரித்து இப்படியும் அப்படியுமாக அசைந்து, தரையில் ஓங்கி அடிக்கிறது...

''பார்த்தீர்களா? நான் உங்களை ஒன்றும் செய்யமாட்டேன் என்று சத்தியம் வைக்கிறது!''

பரிந்துரைக்கிறாள் ரங்கநாயகி.

''சீ, சீ! நீயா நானா? வா ஒருகை பார்க்கலாம் என்று இது சவாலுக்கு அழைக்கிறது.''

திப்புசுல்தான் மீண்டும் இடிநகை புரிகிறான்...

வெளியில் காவல் காத்திருந்த வீரர்களுக்குச் செய்தி தெரிந்து, ஈட்டியும் வாளுமாக உள்ளே நுழைந்து, தங்கள் சுல்தானுடைய ஆணைக்கு எதிர்பார்ப்பவர்களே போலத் துடிப்புடன் காத்து நிற்கின்றனர்.

கூடாரத்துள் பிரவேசித்த பசவராஜும், யாகின் கானும் இப்படி ராஜநாகத்தைப் படம் விரிக்க விட்டு வேடிக்கை பார்க்கிறார்களே என்று அதிர்ச்சியுற்றனர்.

''திப்பு! இதில் வேடிக்கை என்ன? கண்டதுண்டமாக வெட்டி எறியவேண்டியதுதானே?''

யாகின்கான் குரல் பதற்றமுடன் ஒலிக்கிறது.

அந்தப் புதிய உருவத்தை அதுவரையிலும் பார்த்தறியாத ரங்கநாயகி, தனது மாமனார் ஹைதர் அலி வந்திருக்கிறார் என்றறிந்து மண்டியிட்டாள். அவளது அந்தச் செய்கையைக் கண்டு திப்புசுல்தான் ஒரு நகைச்சுவையை ரசிப்பது மாதிரி சிரித்தான்.

''ரங்கநாயகி! நீ எப்படி இந்தப் போலித்தன நாகத்துக்கு ராஜ அந்தஸ்து கொடுத்துக் கெஞ்சுகிறாயோ அப்படியே இந்த யாகின்கானுக்கும் மரியாதை செலுத்தி இருக்கிறாய்! இவர் எந்த விதத்தில் எனது தந்தையின் உருவம் மாதிரியே அமைந்தார் என்பதுதான் பலருக்குப் புரியாத புதிர். இவர் என் தந்தையின் நண்பர், எனக்குப் பசவராஜைப்போல! ஆனால் பசவராஜ் நல்ல வேளையாக எனது உருவத்தைக் கொண்டில்லை, ஆனால் என் உள்ளத்தைக் கொண்டிருக்கிறான்!''

திப்புசுல்தானின் இந்த விளக்கத்தைக் கேட்டுப் பெரிதாக வியந்து போனாள் ரங்கநாயகி. ஆ! அப்படியே ஹைதர் அலி மாதிரி இருக்கிறாரே... எவ்வாறு அடையாளம் கண்டு கொள்கிறார்கள்? எல்லாம் பழக்கம்தான்...

''குமார சுல்தான்! பாம்போடு விளையாடுவது நல்லதல்ல!'' என்றான் பசவராஜ்.

''நண்பா! நானே ஒரு ராஜநாகம்! இது என்னோடு விளையாடுகிறது. பாம்பைக் கண்டால் படைகள் நடுங்கும். ஆனால் திப்புவைக் கண்டால் பாம்புகளே நடுங்கும் என்ற உண்மையைப் பிரத்தியட்சமாகப் பார்க்க வேண்டாமா! இதோ பார்...'' என்று முழங்கிய திப்புசுல்தான், அடுத்து தனது உருவிய வாளை உறையிலிட்டு, எதிரே நின்றிருந்த வீரர்களிடமிருந்த ஈட்டிகள் இரண்டைப் பிடுங்கி, அவற்றைத் தலைகீழாக நிறுத்தி, கூரற்ற பாகங்களைக் கிட்டி போலச் செய்து, நிமிர்ந்து அசைந்தாடிக் கொண்டிருந்த ராஜநாகத்தை நோக்கிப் பாய்ந்தான்...



''ஐயோ! அதைக் கொன்று விடாதீர்கள்'' என்றலறியவாறு முகத்தை மூடிக்கொண்டாள் ரங்கநாயகி.

சீற்றமுடன் பாய்ந்த ராஜநாகத்தின் கழுத்தைக் கிட்டியால் மடக்கிப் பிடித்துக் கொண்டான் திப்புசுல்தான். ராஜநாகத்தின் சீற்றோசை புயலாகப் பறிகிறது... உடலை பலம் கொண்ட மட்டும் நெளித்தும் விடுபட முடியாமல், அந்த ஈட்டிகளிலே படர்ந்து வளைந்து சுருட்டிக் கொள்கிறது...

ஈட்டிகளின் கிட்டியில் ராஜநாகத்தின் தலையை அழுத்தி கொண்ட திப்புசுல்தான், மிகவும் துணிச்சலாகத் தனது இடக்கரத்தால் அதனைத் தாவிப்பிடித்துப் பெருவிரலால் அதன் வாயின் அடிப்பாகத்தை அழுத்தப்பற்றி, வலக்கரத்தில் பிடித்திருந்த ஈட்டிகளைத் தூரே தூக்கி எறிந்தான்.

இவனைக் கண்டதும் ராஜநாகமே நடுங்கி அவனது கைகளில் படர்ந்து சுருட்டிக் கொள்கிறதென்றால்...

வேறு நாகங்கள் பயப்பட என்ன ஆச்சரியமிருக்க முடியும்?

ராஜநாகம், திப்புவின் பிடியிலிருந்து விடுபடத் தனது பலம் முழுவதையும் திரட்டி முனைகிறது...

திப்பு, நீட்டிய கை நீட்டியபடி நிறுத்தி அதன் வேதனையை ரசிக்கிறான்...

தனது இரு கைகளாலும் மூடியிருந்த முகத்தை விலக்கிப் பார்க்கிறாள் ரங்கநாயகி. அடுத்த கணம் 'வீல்' என்று கூச்சலிடுகிறாள்...

பசவராஜ் திப்புவின் பராக்கிரமத்தையும் விஷத் துணிச்சலையும் கண்டு அதிசயிக்கிறான்... இவன் இதயம் நிறைந்த மானுட ராட்சஸனோ?

''குமார சுல்தான்! தயவுசெய்து இந்த ராஜநாகத்தைக் கொன்ற பாவத்தைச் சுமக்க வேண்டாம். விட்டு விடுங்கள்.''

- ரங்கநாயகி, 'ஓ' என்று அலறுகிறாள்...

அவளது மனநிலையில் மாறுபட்டிருக்கிற சிவந்த முகத்தைக் கவனித்த திப்புசுல்தான், ''ரங்கநாயகி! இதனைக் கொல்லமாட்டேன். பயப்படாதே! விடுதலை செய்கிறேன். வேறு எந்தக் காரணத்துக்காகவுமல்ல. உன்னை மாதிரியே அழகாக இருக்கிறது...'' என்று கூறி முடிப்பதற்குள் குறுக்கிட்ட ரங்கநாயகி, ''என்னை மாதிரியே விஷமுடையது அல்லவா?'' என்றாள்.

ஒரு விநாடி அதிர்ந்து போனான் திப்புசுல்தான்.

''விஷம்?''

''இம்ம்! அழகும் அறிவுமுள்ள எந்த இடத்திலும் விஷமுண்டு என்பது பெரிய தத்துவம். அந்த விஷம் பல ரூபத்தில் வித்தியாசப்படுகிறது. அந்த விஷத்தை ஆராதித்தால் அதுவே மாணிக்கமாகிறது!''

''புரியவில்லை.''

''புரிய வைக்கிற நேரம் இதுவல்ல. ஆயிரம் பக்கங்கள் எழுதக்கூடிய பெரிய விஷயம் என்பதிலேயே விஷம் உண்டு. யகரத்தை அடித்துவிட்டால்... யகாரம் என்பது... இப்போது எதற்கு? தயவுசெய்து விட்டு விடுங்கள்.''

காதலியின் அற்புதமான - அபாரமான ஞான வாசகத்தைக் கேட்ட திப்புசுல்தான், பெரிதாக மகிழ்ந்து போய்க் கையில் நெளிந்து கொண்டிருந்த ராஜநாகத்தை அதனை ஒரு கணம் உற்று நோக்கி, மறுகணம் இதனை வெளியே கொண்டு போய், சுருட்டிக் கொண்டிருந்த அதனை நீக்கி ஒரு பிரிமணை போலச் செய்து, பலம் கொண்ட மட்டும் தூக்கி எறிகிறான்.

கண்டவரனைவரும் கதிகலங்கிப்போய், திப்புசுல்தானின் வீரத் துணிச்சலை நெஞ்சிலே படரவிட்டுப் பயந்து, நடுங்கிப் பிரமிக்கின்றனர்.

யாகின்கானோ பொறி கலங்கி அயர்ந்து போனான்!

''குமார சுல்தான்! ராஜநாகம் வஞ்ச நெஞ்சமுடையது. காரம் உடையது'' என்றான் பசவராஜ்.



''நான் அதற்கு எந்தத் தீங்கும் செய்யவில்லையே பசவராஜ்! இந்த மண்ணில் பிறந்த விஷமுடையதானாலும் அதுவும் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற நோக்கில்தானே பரந்த வெளியில் தூக்கி எறிந்தேன்! ஏன் தெரியுமா? அது இந்தத் தேசத்தை அடிமைப் படுத்தவந்த வெள்ளைப் பறங்கியரைத் துரத்தித் துரத்திக் கொத்தட்டும் என்பதற்காக! அல்லது தன்னிலும் சீற்றமுடைய திப்புசுல்தான், அடிமைப்படுத்த வந்த வெள்ளையரை அடித்துத் துரத்துவான் என்கிற ராஜ விசுவாசத்தை இந்த ராஜநாகம் தனது இனத்துக்குப் போய்ப் பறைசாற்றட்டும் என்பதற்காகத்தான்! புரிகிறதா?''

திப்புவின் ஓங்கி ஒலித்த குரல் கேட்டு, வியந்து, பயந்து, வியர்த்துப் போன ரங்கநாயகிக்கு அப்போதுதான் சுகமாக மூச்சு பிறந்தது.

''ரங்கநாயகி! இது எனக்கு ஒரு நிகழ்ச்சித் திருப்பம். திப்புசுல்தான் யார் என்பதை ஏனையவர் புரிந்து கொள்ள -தெரிந்து கொள்ள ஏற்பட்ட அல்லது ஏற்படுத்திக் கொண்ட விஷப்பரீட்சை! அந்த ராஜநாகத்தை நான் வாழ்த்துகிறேன்!'' என்று முழங்கிய திப்புசுல்தானின் கண்கள் யாகின்கானை நோக்கின. அந்த நேரத்தில் அடங்கிய உள்ளடக்கப் பிரகடனம் ஒருவாறு ஒரு சிலருக்கு உணர்ந்தது.

இந்த ராஜநாகப் பிரகடனத்தைச் செவிமடுத்த மகாசுல்தான் ஹைதர் அலிகூட வெகுநேரம் சுழிமுனையதிர்ச்சி கண்டு பிரமித்துப்போய், அதுகுறித்து அதிகமாகவே அலசி ஆலோசிக்கலானார்...

இரு தினங்கள் கண்ட ஓய்வுக்குப் பிறகு, ஹைதர் சேனைகள் ஆர்க்காட்டை நோக்கிப் பயணமாக அணிவகுத்து யுத்த கோஷமிடுகின்றன...

அருமைக்காதலி ரங்கநாயகியிடம் அன்புடன் உரையாடி, ஆனந்தப் புன்னகையுடன் ''ஆர்க்காட்டை வென்று, நவாப் முகமதலியை விரட்டி, அந்த நவாப் விருதை நான் பெறுகிற கோலாகலம் நிறைந்த குதூகலக்காட்சியை நீ கண்டு ரசித்துப்

பெருமைப்பட்ட பிறகு, நாம் ஸ்ரீரங்கப்பட்டினம் நோக்கித் திருமணத் தம்பதிகளாய் மகிழ்ச்சியுடன் பயணமாகிறோம்! அதுவரை சந்தோஷமாகவும் தைரியமாகவும் இரு! பசவராஜ் உனது நலனில் கண்ணுங் கருத்துமாக இருப்பான்'' என்று கூறி விடை பெற்றுக் கொண்டு தலைமை நாயகனாகச் சேனைக் கடலுடன் பிரவேசிக்கிறபோது...

சமுத்திர கோஷமென வெற்றி முழக்கம் வான் முகட்டைத் தொட்டுப் பூமிக்கு எதிரொலிக்கிறது...

பேராரவாரத்துடன் அணிவகுத்தும் புலிச்சின்னம் பொறித்த வட்டுடையணிந்தும் புலிக்கொடிகளைத் தாங்கியும் நின்ற சேனாசமுத்திரத்தை அதிகார பலம் பொருந்திய அதிபதியின் காபீரியத்துடன் நின்று பார்வையிடுகிறார் மகாசுல்தான் ஹைதர் அலிகான் நவாப் பகதூர்!

அவருக்கு நேர் எதிரே, போராபரணம் பூண்டு, வெண்புரவியில் ஆரோகணித்துத் தனது அருமைத் தந்தையாரின் உத்தரவுக்காகக் காத்திருப்பவன்போலக் குதிரையின் சேணங்களைப் பற்றிக்கொண்டு அதன் துடிப்பசைவைக் கட்டுப்படுத்திக் காணப்படுகிறான் திப்பு சுல்தான்.

மகா சேனாபதியான படே பௌஜ்தார் முகமதலியும், குலாம் உத்தீர்கானும், மகாமீர்ஜாகானும் படைகளின் அணிவகுப்பைப் பார்வையிட்டவண்ணம் ஆங்காங்கே தயாராக நின்றனர்.

ஹைதர் அலி உரக்கச் சத்தமிட்டு உத்தரவு பிறப்பிக்கிறார்...

துடிப்பினால் அடிபோட்டுக் கொண்டு அசைந்து கொண்டிருந்த குதிரைகளின் குளம்புச் சத்தம் தவிர மற்றபடி எங்குமே நிசப்தம்...

''திப்பு, எனதருமைச் செல்வனே! ஆர்க்காட்டு நவாபை வீழ்த்த வேண்டும் என்கிற சபத முழக்கத்துடன் சிங்கத்தின் பிடரி சிலிர்த்தது போல சிலிர்ப்புகண்டும், நமது புலியின் சீற்றம் நிறைந்த பாய்ச்சலுடன் உக்கிரம் கண்டும் நீ வீறுகொண்டு எதிர்பார்ப்பதை நானுணர்கிறேன். பெய்லியையும் மன்ரோவையும் வீழ்த்தியது போல் ஆர்க்காட்டு





நவாப் முகமது அலியை வெற்றி காண முடியும் என்று யாரும் எளிதாக நினைத்துவிட வேண்டாம். அவன் ஒரு குள்ள நரி! நமது புனிதமான இசுலாத்தை மறந்து பறங்கியர்பால் மயக்கம் கொண்டு - அடிமை கொண்டு ஆனந்த சுகபோக வாழ்க்கைக்காக இந்தத் தேசத்துச் சுதந்திர உணர்விழந்து அல்லது மறந்து வாழ்கிற சுகபோகச் சுயநலமி! அவன் எதற்கும் துணிவான்! எதற்குமே அஞ்ச மாட்டான்! சுயநலமிகளுக்கு ஆத்மா என்பது நாற்றமடிக்கிற சாக்கடைக்கு அல்லது அழுகிப் போன பிணத்துக்கு ஒப்பானது. அதுகள் சைத்தான்களின் பிரதிநிதிகள்! எனவே, அந்த ஆர்க்காட்டு நவாப்புக்கு உறுதுணையாக நிற்பவர்கள், சர்வ வல்லமை மிக்க யூனியன் ஜாக்கொடி வெறியர்களான - குடிவெறியர்களான சர் அயர் கூட் என்பவனும், கேப்டன் ஹம்பர் ஸ்டோன் என்பானும், ஜெனரல் மத்யூஸ் என்பானும் ஆவார்கள். ஆகவேதான் நான் பிறகு பொறுத்திருந்து புறப்பட்டுப் பின்தொடர நினைக்கிறேன். இது எனது தனிப்பட்ட போர் முறைத் தந்திரம்! ஆர்க்காட்டை வளைக்க வேண்டுமானால் நீங்கள் பாலாற்றங்கரையின் தென்கரையில் முகாமிட வேண்டும். நமது குதிரைப்படைகளைக் கலசபாக்கத்தையொட்டி வரிசைப்படுத்த வேண்டும். நான் சுற்று வழியானாலும் வேலூர் மார்க்கமாக வந்து விஷாரத்தில் முகாமிடுவேன். ஆகவே தாக்குகிறபோது அவர்கள் சிதறியோடாதவாறு நாம் கவனமாக வியூகித்து வளைத்துச் சரணடையச் செய்ய வேண்டும். ஆர்க்காட்டு நவாப் முகமதலி தப்பியோட வழிவகுத்து விடாமல் சர்வ ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளவேண்டும். கூடுமானவரையில் எதிரிகளின் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் பறிமுதல் செய்வதில் உங்கள் தந்திரம் செயல்பட வேண்டும். ஏனென்றால் ஆர்க்காட்டு நவாப் பீரங்கி பலம் பொருந்தியவன்.''

ஹைதர் அலியின் இந்தப் போர்ப் பிரகடனம் நிரம்பவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

ஒரு கணம் வானத்தை அண்ணாந்து கவனிக்கிறார்...

''யா... அல்லாஹ்...

அவரது நெஞ்சு முனகி வழிபடுகிறது. அதிலே ஒரு பிராயச்சித்தமும் தனது ராஜ நலம் கருதி - ராஜதந்திரமென்கிற புனித நீரால் கழுவப்பட்டுப் பாவக்கறை போக்க வேண்டி ஊசலாடுகிறது...

மீண்டும் தன்னிலைக்கு வந்து குமாரன் திப்புசுல்தானை நோக்கி, "சேனைகள் புறப்படலாம்!" என்று ஆணை பிறப்பிக்கிறார்.

ஜோதிடர் சொன்ன நீலக்கல் மோதிரம் அணிந்து கொண்டிருந்த திப்புசுல்தான், ஒரு கணம் ஆண்டவனை வழிபட்டு, மறுகணம் நீலக்கல் மோதிரத்தைக் கவனித்து வாளை உருவி இரண்டாம் ஆணையாக அவனது நாவிலிருந்து உத்தரவு பிறக்கிறது.

தொடர்ந்து பீரங்கி முழங்குகிறது...

போர் முரசம் ஆர்க்கிறது...

சேனைகள் ஆர்க்காட்டை நோக்கிப் பயணமாகின்றன.

தொலைவிலிருந்து கவனித்த ரங்கநாயகி, ஏனோ கண்கள் கலங்கக் கவனிக்கிறாள். அவளது வலது கண்ணும், வலது தோளும் துடிக்கின்றன.

ஏதோ ஒரு துன்பத்தின் அறிகுறி போலத் தோன்றுகின்றன.

யுத்தத்தில் கலந்து கொண்டு தனது வீரம் நிறைந்த ஆற்றலை வெளிப்படுத்த முடியவில்லையே என்ற வேதனையுடன் கூடாரத்தை நோக்கி நடக்கிறான் பசவராஜ்.

கூடாரத்துள் நுழைந்த ஹைதர் அலி, தம்மைத் தொடர்ந்து வந்த ராஜாக்கானைக் கூர்ந்து கவனிக்கிறார். அந்தக் கவனிப்பில் பல ரகசியங்கள் தொக்கி நின்றன. அவற்றுக்காகத்தானே அவனைத் தம்முடன் அழைத்துச் செல்ல நிறுத்திக் கொண்டதே!

"ராஜாக்கான்! இன்றிரவு நமது திட்டப்படி பசவராஜையும் ரங்கநாயகியையும் எனது நகரான [1]ஹைதர் நகருக்குக் கொண்டு போய் மிகவும் ரகசியமாகச் சிறைவைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்! நீயும்

1. பேடனூர்.



புறப்பட்டுப் போய்விடப் போகிறாய்! அது சந்தேகத்தை உண்டு பண்ணும். இது பரம ரகசியமானது."

- ஹைதர் அலியின் குரல் காற்றோடு காற்றாக ஒலிக்கிறது.

"ஹுஸூர்! சிறையிலடைப்பதைக் காட்டிலும் தீர்த்துக் கட்டிப் புதைத்துவிடுவது நல்லது என்று நேற்றிரவு ஆலோசிக்கப்பட்டதே!"

தனது காழ்ப்பை நிறைவேற்றிக் கொள்ளவும் அதே நேரத்தில் மகா சுல்தானுக்கு எரிச்சல் காணக்கூடாது என்றும் உணர்ந்து, மிகுந்த மரியாதையுடனும் ரகசியமாகவும் மறந்துவிட்டதை வெளிப்படுத்து பவன் போலச் சொன்னான் ராஜாக்கான்.

ஹைதர் அலியும், குறுந்தாடியைக் கீழிருந்து தடவிக் கொண்டே, "அப்படித்தான் முதலில் நினைத்தேன். இதில் பல தொல்லைகள் முளைக்கலாம். நமது திட்டப்படி பரப்ப இருக்கும் பிரசாரத்தின் மூலம் திப்புவின் எதிருணர்வு என்ன என்பதையறிந்து, பிறகு, இந்தத் திட்டத்தை ஹைதர் நகரிலேயே நிறைவேற்றிவிடலாம். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள். எனது உத்தரவின்றி அவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்பட்டு விடக்கூடாது. இது ராஜநாகமான திப்புவின் பிரச்னை! பிறகு தேசத்தின் பிரச்னையாகி விடக்கூடாது. ஒரு நன்மையை உத்தேசித்துச் செய்யப்போகிற இக் காரியம், பல தீமைகளையுண்டு பண்ணி விஷமாகி விடக்கூடாது. ரங்கநாயகியை அரசியாருக்குப் பிடிக்கவில்லை. பசவராஜை அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை. இதனை ரொம்பவும் கத்திமேல் நடப்பது போலச் செய்து முடிக்க வேண்டும். மகாராஜதந்திரியான யாகின்கானைக் கலந்து ஆலோசித்துச் செய்து முடி! ஜாக்கிரதை!" என்று கூறுகிறபோது அவரது உள்மனம் வெகுவாக அலைமோதியது. அவருக்கும்கூட இந்த ரங்கநாயகி, பசவராஜ் விஷயம் எரிச்சலையுண்டு பண்ணிக் கொண்டுதானிருந்தது.

மகாசுல்தான் ஹைதர் அலியின் இந்த ஆணையைத் தலைவணங்கி ஏற்ற ராஜாக்கானின் உள்ளமோ...!

ஆ...! அந்தப் பதினெட்டுக் கசையடிகளை எண்ணிக் கொண்டிருந்தது.

# 20

இரவு நடுநிசி மௌனத் தவம் புரிகிறது...

காற்று 'சோ'வென்று வீசுகிறது...

சுற்றிலுமாக இருந்த கூடாரங்களுள் எங்கோ சிலவற்றுள் விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருக்கிறது. நடுவே நடப்பட்டிருந்த நீண்ட கம்பத்தில் பெரிதான, தீவட்டிவிளக்கு நன்றாக ஒளி உமிழ்ந்து கொண்டிருக்கின்றன.

இராப் பறவைகளின் கோஷங்கள் அவ்வப்போது ஆனந்தமாகவும், அவலமாகவும் ஒலிக்கின்றன.

வழக்கத்திற்கு மாறாகக் காவல் வீரர்கள், மிகவும் குறைந்து காணப்படுகிறார்கள்.

உக்காவை மனம் துய்க்கும் மட்டும் இழுத்துப் புகைத்துவிட்டு வெளியே வந்து, உடம்பை ஒரு முறுக்கு முறுக்கி நிறுத்தி, நின்று கவனிக்கிறார் ஹைதர் அலிகான். வலக்கரத்தின் ஆள்காட்டி விரலால் மூக்கைத் தேய்த்துக்கொண்டே கருநீலப் போர்வையுடன் காணப்பட்ட வானத்தை அண்ணாந்து கவனிக்கிறார்...

குரூரமாக ஆணையிட்ட தமது செயல், எவ்வளவு பவித்திரமற்றது: பரிதாபத்துக்குரியது என்பது அவருக்குப் புரியாமலா இருக்கிறது? ஆயினும் ஒரு தேசநலனை உத்தேசித்து, அரசியல் கட்டுப்பாட்டை எண்ணிச் சிலபல சூதுவாதுகளைச் செய்வதும் அதனதன் பார்வையில், அதனதன் உத்தேசத்தில் அதனதன் பாவபுண்ணியங்களை ஒரு தருமத்தை அடிப்படையாகக்கொண்டு நிர்ணயித்துக் கொள்வதாகிறது என்பதை அனுபவரீதியாக - முற்றுமாக உணர்ந்தவராயிற்றே ஹைதர் அலி! அப்படிப் பார்த்திருந்தால், அவர் மைசூர் மகாராஜா கிருஷ்ண மகாராஜா உடையார் குடும்பத்துக்கு இன்னமும் சலாம் வைத்துக் கொண்டிருக்கிற பௌஜ்தாராகத்தானே இருந்திருக்க முடியும்?

ரங்கநாயகி விஷயமாக, ஸ்ரீரங்கப்பட்டினத்து அரண்மனையில் என்னவெல்லாம் நடந்திருக்கிறது, நடக்கப் போகிறது என்பதை



நினைக்க நினைக்க அவருக்கு மூக்கு சிவந்து கொண்டிருந்தது. இதனால் அவரது சுதந்திரப் பிரதட்சணத்துக்கே மாசு கண்டு, ஆட்டம் கண்டுவிடுமோ என்றும் அஞ்சினார். அஞ்சுவதற்கே அஞ்சியது அந்த அரிமா.

வானத்திலிருந்து பிரமை போலச் சில சொற்கள் எதிரொலிப்பன மாதிரி கேட்கின்றன:

'ஆபத்துக்கு அஞ்சாமல் இருப்பதுதான் ஆபத்தைக் கடப்பது...

இரு தினங்களுக்கு முன், ரங்கநாயகி சொன்ன வாசகம்.

ஞான வாசகமோ? அஞ்ஞான வாசகமோ?

அது குறித்து அசைபோட இதுவல்ல நேரம்...

அவளது வாசகம் இப்போது அவளுக்கே ஆபத்தை உண்டு பண்ணியது.

'அவளது வாசகத்தை அவளிடமே திருப்பித் தந்து விட்டேன்!' என்று மனத்துள் முனகியவாறு பின்னங்கை கட்டிக் கொண்டு நடக்கிறார் ஹைதர் அலி.

வெகுதூரம் நடந்த பிறகு ஒரு மருங்கே தனித்திருந்த கூடாரத்துள் நுழைகிறார்...

அங்கே...

இன்னொரு ஹைதர் அலி யுருவம் அமர்ந்து அதுவரை நடந்த நிகழ்ச்சிகளின் மேடு பள்ளங்களிலிருந்த பாவ புண்ணியங்களை ஆராய்ந்து கொண்டிருந்தது...

''யாகின்...!''

- ஹைதர் அலியின் கம்பீரக் குரல்!

ஆலோசனையிலிருந்து விடுபட்ட யாகின்கான், அலறியடித்துக் கொண்டு எழுந்து நின்று...

''ஹுஸுர்! நானே அங்கு வரலாம் என்றிருந்தேன்!'' என்று கூறி மரியாதை நிறைந்த 'சலாம்' இடுகிறான்...

அருகே இருந்த ஆசனமொன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார் ஹைதர் அலி. யாகின்கான் நின்று கொண்டே இருந்தான்.

''யாகின்கான்! ராஜாக்கானிடம் சொல்லி அனுப்பிய ஏற்பாடுகளை எவ்வாறு முடித்தாய் என்பதையறிய, காலைவரை என்னால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அதனால்தான் இந்தப் பாதி ராத்திரி வேளையில் செய்தியறிய இங்கே வந்தேன். ஆளையனுப்பி உன்னை அழைத்திருக்கலாம். ஆனால் இந்த ரகசியத்தில் நீயும் சம்பந்தப்பட்டிருக்கிறாய் என்பது பின்னால் சந்தேகத்துக்கு இடம் வைத்துவிடக்கூடாது. எதையும் நானே தாங்கிக் கொள்வது என்ற முடிவுடன் இந்த காரியத்தில் இறங்கி இருப்பதால் நானே வரவேண்டியதாய் விட்டது. என்றுமே அஞ்சியறியாத எனது மனம் இது பற்றியதில் ரொம்பவும் அலைமோதுகிறது. திப்புசுல்தான் என்கிற கர்ஜனை, இந்தத் தென்னகத்தை மட்டும் பயமுறுத்தி வருகிறது. இப்போது என்னையே அது பயமுறுத்தத் தொடங்கி விட்டது. ஆகவே, காரியத்தை நீயும் ராஜாக்கானுமாகச் சேர்ந்து எப்படி முடித்தீர்கள்? விளக்கமாக சொல்! சர்வ ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டிய விஷயம் இது!''

ஆ! ஹைதர் அலியே இது குறித்து நடுநடுங்குகிறாரே...

அதுவரை அச்செயலை ஒரு சுண்டைக்காயை உருட்டுவது போல் என்று உணர்ந்து முள்கிரீடம் சூட்டியனுப்பி வைத்த யாகின்கான், இப்போது உண்மையிலேயே அதிர்ச்சி கண்டான். திப்பு சுல்தான் என்கிற வீர நாமதேயம், அவனது பிடரியில் கைவைத்து வியர்வையைத் துடைக்கச் செய்தது.

அவன் மெல்ல விளக்கினான்:

''ஹுஸூர் என்னுடன் தங்கியிருந்த பசவராஜைக் கட்டிப் போட எனக்குப் பிரமாதமாகத் தெரியவில்லை. அவன் தூங்கிக் கொண்டிருந்த போது, சுருக்குக் கயிற்றால் பின்னி, வாயில் துணி புதைத்துச் சாரட்டில் கொண்டுபோய்ப் போட்டு விட்டோம். ஆனால் மதில் சுவர் போலக் காவலுக்குள்ளிருந்த அந்த ரங்கநாயகியை அழைத்து வரத்தான் வெகுநேரம் யோசிக்க வேண்டியதாய் விட்டது. பிறகுதான் - உங்களைப் போலவே அமைந்த எனதுருவம் நினைவுக்கு வந்தது.



உங்களை மாதிரியே அலங்காரம் செய்துகொண்டு ரங்கநாயகி கூடாரம் நோக்கி நானே சென்றேன். காவலர்கள் உங்களுக்குத் தரவேண்டிய மரியாதையை எனக்குத் தந்தார்கள். ரங்கநாயகியும் நம்பிவிட்டாள்.''

''நம்பித்தானே ஆகவேண்டும்? நீ என்னை மாதிரியும் பேசி நடிப்பாயே!''

''உண்மைதான் மகாசுல்தான்! முதலில் 'நீங்கள் மகாசுல்தானா? அவரது நண்பரா?' என்று எடுத்த எடுப்பில் ரங்கநாயகி கேட்டதும், ஒரு நிமிஷம் அயர்ந்து போனேன். பிறகுதான் உங்களுக்கே உரிய நிமிரல் பார்வையில் தோளையசைத்து, தாடியைத் தடவி, ஓர் உறுமலுடன், 'நீ எனது குமாரனின் காதலியானதால் இவ்வாறு கேட்டதற்கு மன்னிக்க நேர்ந்தது. என்னுடன் புறப்படு! என்னை மாதிரியே உருவத்தால் ஒத்திருக்கும் அந்த யாகின்கானை நீ சரியாகக் கவனிக்கவில்லை. ஆகையால் வித்தியாசத்தை உன்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. அதையும் அறிந்து கொள்ளலாம். அத்துடன் என்னையும் புரிந்து கொள்ளலாம்! எனது குமாரன் விவகாரமாக நிறையப் பேசவேண்டியிருக்கிறது. அங்கேதான் பசவராஜும் இருக்கிறான். அவனுடனும் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறது. புறப்படு ரங்கநாயகி!'' என்று போடு போட்டேன்.''

''பேஷ்! இங்கே அழைத்து வந்ததும் சந்தடி செய்யாமல் கட்டிப்போட்டு அனுப்பி விட்டாய்! இல்லையா?''

''ஆமாம். ஹுஸூர்! இருவரையுமே கட்டிப்போட்டு வாயில் புதைத்துச் சாரட்டில் அமர்த்தித் தக்க பாதுகாவலுடன் ரகசியமாகப் பேடனூருக்கு அனுப்பி வைத்துவிட்டேன்.''

''பேடனூரல்ல, ஹைதர் நகர்!''

''மன்னிக்கவும் மகாசுல்தான்!''

''ராஜாக்கான் எங்கே?''

''கொஞ்சதூரம்வரையில் கூடவே சென்று வழிகூட்டி விட்டு வருவதாகச் சொல்லிப் புறப்பட்டு சென்றிருக்கிறான்.''

''எத்தனை வீரர்களையனுப்பி இருக்கிறாய்?''

''மொத்தம் இருபத்தோரு வீரர்கள். ஒரு ராஜலாஞ்சனையை (முத்திரை மோதிரம்) கொடுத்து அனுப்பியிருக்கிறேன். இவர்களில் பதினெட்டுப் பேர்களை ஹைதர் நகரிலேயே சிறை வைத்துவிட்டு, சாரட்டை ஓட்டிச் சென்றவனும் இரண்டு சுபேதார்களும் இங்கு திரும்புவார்கள். அவர்களை நான் இங்கு தீர்த்துக் கட்ட யுத்தகளம் இருக்கிறது. ஆக இந்த ரகசியம் உங்களுக்கும் எனக்கும், ராஜாக்கானுக்கும் தவிர வேறு யாருக்கும் தெரிய, எங்கும் பரவக் காரணமே இல்லை.''

''சபாஷ், யாகின்கான்! சபாஷ்! உண்மையில் நீ ஒரு ராஜ தந்திரியே! ஒப்புக் கொள்கிறேன். அதற்காக ராஜாக்கானையும் தீர்த்துக் கட்டிவிடப் போகிறாய்!'' என்று குறும்பாகச் சிரித்துக்கொண்டே ஹைதர் அலி கூறுகிறபோது, அவரது குரலில் தொனித்த ராஜதந்திரத்தை ஒருவாறு யாகின்கானால் புரிந்து கொள்ள முடிந்தது.

**பே**ரம்பாக்கத்திலிருந்து வேகமாகப் புறப்பட்ட அந்தச் சாரட்டைப் பின் தொடர்ந்து வெகுதூரம்வரை புரவியில் சென்று கொண்டிருந்தான் ராஜாக்கான். ஏறத்தாழ ஐந்து காவதத் தூரத்துக்கு மேலே அவன் சென்றிருப்பான். அவ்விதம் அவன் செல்லக் காரணமே இல்லை. அவனது கடமை சாரட்டை ரகசியப் பாதுகாப்புடன் அனுப்பி வைப்பதோடு முடிந்து விட்டது. ஆனால் கறுவிக் கொண்டிருந்த அவனது நெஞ்சில் வஞ்சம் விஷப்பாம்பாய் புரண்டு கொண்டிருக்கிறதே...

என்ன திமிர் இருந்தால், வருகிறபோது வழியில் - கிருஷ்ணகிரியில் அந்த வசந்திபால் தொடர்பு கொண்டவனுக்குக் கசையடி கொடுக்கத் தன்னைத் தேர்ந்தெடுத்து அழைத்திருப்பான் இந்தப் பசவராஜ்...

நெஞ்சில் புரண்ட விஷப்பாம்பு, நெளிவதைவிட்டு நிமிர்ந்து படம் எடுக்கிறது...

''ஏய், சாரட்டை நிறுத்து!''



பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ராஜாக்கான் இரைகிறான்...

அவனது குரல் கேட்டு, முன்னே சென்று கொண்டிருந்த சிப்பாய்கள் சத்தமிட, அது அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தவர்களுடைய காதுகளில் மோத, அவர்கள் தங்கள் குதிரைகளின் லகான்களைப் பற்றி இழுத்துத் திரும்பி சமிக்ஞை செய்ய-

சாரட்டும் ஒரு குலுங்கு குலுங்கி நிற்கிறது.

நட்ட நடுக்காடு. மரங்களை விழுங்கிய இருளின் அடர்த்தி களுக்கு நடுவே வளைந்து செல்லும் அந்தச் செம்மண் பாதையில் சாரட்டு நிற்பதைக் கண்டு ஒன்றுமே புரியாது பசவராஜும் ரங்கநாயகியும் ஒருவரையொருவர் பார்க்க முயலுகின்றனர். அந்த கன்னங் கரேலென்றிருந்த இருட்டில், அவர்களது கண்கள் எதையும் பார்க்க முடியவில்லை. எதையுமே உணர்ந்து கொள்ளவும் முடியவில்லை. வாயைத் துணியால் அடைத்திருந்ததால் வார்த்தைகள் சிறைபட்டிருந்தன. மூக்கு வழியாகச் சுவாசிக்க ரங்கநாயகி திணறிப்போனாள்.

முன்னே வழிப்பாதை சரியாக இருக்கிறதா என்று கவனிக்கத் தீப்பந்தத்தை ஏந்திக் கொண்டு தொலைதூரத்தில் நின்று கொண்டிருந்தவனை நோக்கிய ராஜாக்கான் ''ஏய், அமீர்! தீப்பந்தத்தை இப்படி எடுத்துக் கொண்டு வா!'' என்று எரிச்சலுடன் ஆணையிட்டுக் கத்தினான்.

சற்றைக்கெல்லாம் தீப்பந்தம் அருகில் வந்தது. அதன் வெளிச்சத்தில் சாரட்டுக்குள்ளிருந்த பசவராஜை மிகவும் குரூரமாகக் கவனிக்கிறான் ராஜாக்கான்.

ரங்கநாயகி தலைகுனிந்து கொள்கிறாள்; அவளது கண்களில் நாணம் வேதனையோடமர்ந்து மேனியைப் பறித்துத் தின்கிறது.

பசவராஜின் கண்களில் மட்டும் தீப்பந்தம் குடியேறி, செவ்வொளிப் பிழம்பாய்த் தெறிக்கிறது.

ஒருகணம் அந்த வெளிச்சத்தில் அவர்கள் இருவரும் - எதிரும் புதிருமாக அமர்ந்திருந்த ரங்கநாயகியும் பசவராஜூம் நோக்கிக் கொள்கின்றனர். என்ன திட்டத்தின் கீழ் எங்கு தங்களை இவ்விதம் கொடுமைப்படுத்தி அழைத்துச் செல்கிறார்கள் என்பதே அவர்களுக்குப் புரியவில்லை. இவ்விதமாகக் கட்டளை பிறப்பித்தவர்கள் யாராக இருக்க முடியும் என்று அந்த ஒரு கணத்து நோக்கில் அவர்கள் மௌனமாய்ப் புரிந்து மருளுகின்றனர். ஆ! திப்புசுல்தானுக்குத் தெரியாமல் தங்களைச் சூழ்ந்து ஒரு சதியே உருவாகியிருக்கிறது என்பது மட்டும் திண்ணமாகத் தெரிகிறது.

ராஜாக்கான் இரைந்து சொன்னான்:

''இந்த பசவராஜ் நாயைக் கீழே இறக்குங்கள்!''

பசவராஜின் நரம்புகளெல்லாம் புடைத்துப் படபடக்கின்றன. இந்தக் கால்களிலும் கைகளிலும் இருக்கிற கட்டுக்கள், ஒரு சித்து மந்திரம் மாதிரி அறுபடாதா? என்று பிரார்த்திக்கிறான்... அவ்வாறு மட்டும் அறுபட்டு விடுமேயானால்...

ராஜாக்கானை நார் உரித்து விடுவானே...

நான்கு வீரர்கள் முன்னே வந்து பசவராஜைப் பிடித்திழுத்து இறக்க முயல்கின்றனர், அவர்களைப் பசவராஜ் பார்த்த பார்வை...

எட்டுக் கரங்களும் நடுங்குகின்றது என்பதைப் பிடித்த பிடியிலிருந்து உணர்ந்து கொண்ட பசவராஜ், ''பாவம் இவர்கள்! வெறும் ஏவலர்கள்! இட்ட பணியைச் செய்து முடிக்கிற கூலிகள்!'' என்று மனத்துள் முனகிக் கொண்டான். அவன் அமைதியாகவே அவர்களது பிடிக்குக் கட்டுப்பட்டான்.

கீழே இறங்கிய பசவராஜை நடுப்பாதையில் நிறுத்தினர்.

கால்கட்டும் கைகட்டுமாக நின்றுகொண்டிருந்த பசவராஜை, சாரட்டுக்குள்ளிருந்து கவனித்த ரங்கநாயகியின் மருண்ட நயனங்களிலிருந்து நீர் மாலை மாலையாக வழிந்தது.

ஒருவேளை இருவரையும் இங்கேயே கொலை செய்து போட்டுவிடுமாறு ஹைதர் அலி ஆணையிட்டு இருப்பாரோ?



அவரைத் தவிர வேறு யாருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது? அவர்தானே தன்னை வந்து அழைத்துச் சென்றார்!- ரங்கநாயகியின் மன அரங்கில் எழுந்த புயலுக்கு மத்தியில் மௌனமாய் வார்த்தைகள் சிதறுகின்றன.

ராஜாக்கான் என்னமோ பேசுகிறான்...

புயலை அமர்த்திக் கூர்ந்து கவனிக்கிறாள் ரங்கநாயகி.

''பசவராஜ்! வருகிற வழியில் - கிருஷ்ணகிரியில் தவறு செய்த குடியானவனுக்குக் கசையடி கொடுக்க நானா கிடைத்தேன்? ஒரு சாதாரணச் சிப்பாய் செய்திருப்பானே அந்தக் காரியத்தை. என் மீதிருந்த வஞ்சத்தை - பொறாமையை, உனக்குச் செல்வாக்குக் கிடைத்தபோது பயன்படுத்தித் தீர்த்துக் கொண்டாய்! இப்போது எனக்குச் செல்வாக்குக் கிடைத்திருக்கிறது!'' என்று கூறிக்கொண்டே குதிரையிலிருந்து மூர்க்கத்தனமாகக் குதித்தான் ராஜாக்கான்.

தயாராகக் கொண்டுவந்த கசையை எடுத்து, ஒரு பயங்கரப் பார்வை- பயங்கர உறுமலுடன், ''எண்ணிக்கொள்!'' என்று மிகுந்த வெறியுடன் கூறி, அரக்கத்தனமாகச் 'சுரீர், சுரீர்' என்று அடிக்கிறபோது...

ரங்கநாயகி வாயற்றுக்கேவுகிறாள். வாயுள்ள ஏனையவர்களோ, 'இதன்பின் விளைவு என்னாகுமோ?' என்று அஞ்சிவாளாயிருந்து கவனிக்கின்றனர்.

பதினெட்டு முறை அடித்து ஓய்ந்த ராஜாக்கான், மூச்சு வாங்க பசவராஜைக் கவனிக்கிறான்... அவனது கண்களில் தீப்பந்தங்கள் எரிகின்றன...

பசவராஜ் சுருண்டு கீழே விழுந்து கிடக்கிறான். அவனது வாயில் அடைபட்டிருந்த துணி அப்போதுதான் நழுவி மண்ணில் விழுந்து கிடந்தது.

''இந்த நாயைச் சாரட்டுக்குள் எடுத்துப் போட்டுக் கொண்டு புறப்படுங்கள். வழிமுறைகளை நான் எச்சரித்தது போலச் செயல்படுத்த வேண்டும். ராஜலாஞ்சனையை (முத்திரை மோதிரம்)

பத்திரமாகக் கொண்டுவந்து யாகின்கான் அவர்களிடம் சேர்க்கவேண்டும். ஜாக்கிரதை!'' என்று சத்தமிட்டுக் கூறிய ராஜாக்கான், ஒருமுறை கீழே விழுந்து கிடந்த பசவராஜை, பழிவாங்கிக் கொண்ட ராட்சஸனைப் போலக் கவனித்துவிட்டு, அடுத்து சாரட்டுக்குள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த பூஞ்சையான ரங்கநாயகியை ஏளனமாக ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தனது புரவியில் தாவி ஏறி அமர்ந்து தட்டிவிட்டான்.

புரவி, பேரம்பாக்கத்தை நோக்கி அலறிப் புடைத்துக் கொண்டு ஓடியது.

பசவராஜைத் தூக்கிச் சாரட்டுக்குள் போட்டனர் சிப்பாய்கள், ஆனால் வாயை அடைக்கவேண்டிய துணியை மண்ணிலிருந்து எடுக்க மறந்து போயினரோ? ஒருவேளை அதற்கு அவசியமில்லை என்று உணர்ந்து விட்டுவிட்டனரோ?

சாரட்டு ஹைதர் நகரை நோக்கி மிகுந்த வேகத்துடன் பறந்தது.

## 21

அமைதியாக ஒரு நிம்மதி தேடி நிதானத்துடன் சுழலும் என்று படைத்த பூமியில், யுத்தம் யுத்தம் என்கிற முரட்டு ஆர்ப்பாட்டமுடன் இந்த மனிதர்கள் தங்கள் தினவெடுத்த -திமிரெடுத்த தோள்களைத் தட்டுவதில்தான் மிகச் சிறந்த நாகரிகமானது தனது பொற்சிறகை விரித்து வானில் பறப்பதாக எண்ணுகிற மடத்தனம் உருவாகிவிட்டதே என்கிற வேதனையுடன் ஞாயிறு உதயமாகிறான்...

உத்திராயணம் என்று தட்சிணாயனம் என்று இடம் பெயர்ந்து உதயமாகி இந்தப் பூமியை மட்டும் ஒரு குறிக்கோளாகக் கொண்டு கவனிப்பவனைப்போல இயற்கையின் விசித்திர விநோதங்கள் பலவற்றைக் கொட்டிப் படைத்துக் கெக்கலி கொட்டி ஒளிச்சிரிப்புச் சிரித்துப் பார்க்கிறான்...

தனது அறிவு ஜோதியால் பல அறிவு ஜீவிகளைச் சிருஷ்டித்தோமே... அவர்கள் என்ன செய்கிறார்கள்?



'ம்ஹூம்! இந்த மனிதர்கள் சத்தியமாகத் திருந்தவே மாட்டார்கள்' என்கிற முடிவுடன் சினந்து, இப்போது மிகமிக அருகே வரத் தொடங்கி, வெய்யிலை வாரிவாரிக் கொட்டிச் சுட்டுப் பொசுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டானோ?

என்றோ ஒரு நாள்...

சூரியன் தனது எல்லைக் கோட்டைத் தாண்டிவந்து இந்த உலகைப் பார்க்கிற போது, அவனது கோபாக்கினி தாளாது, இந்த உலகம் உருகி வழிந்து அழுகிவிடப் போகிறது...

ஆகவே, மானுடர்காள்! யுத்தத்தை நிறுத்துங்கள்! யுத்தத்தை நிறுத்துங்கள்! அமைதி தேவை! அமைதி தேவை!...

போர்முகத்தை நேரில் கண்ட ரங்கநாயகி, இவ்விதமாக ஓர் அற்புதச் சிந்தனையைக் கற்பிதம் செய்து தனக்குத் தெரிந்த கனிரசக் கன்னட பாஷையின் ஆழத்தில் நீந்தி, இலக்கணப் பிழைகளுக்கு மீறிய ஒரு புதியபாணியில் கவிதையாக இயற்றி வைத்திருந்த அந்தக் காகிதத் துண்டை எடுத்து மீண்டும் பக்கத்திலிருந்த ஒரு கன்னடவீரன் மூலமாகப் படிக்கச் சொல்லிப் பார்க்கிறார் நவாப் ஹைதர் அலி.

அவருக்கு அந்தக் கவிதையின் அர்த்தம் புரிந்த அளவுக்கு ஆழம் புரியவில்லை.

...ஓ இவள் மனிதர்களைக் கோழையாக்குகிறாள்...

யுத்தமாகிய சிறந்த நாகரிகத்தை இந்த நாரீமணி சாடுகிறாள்...

ஆ! இவளுக்கு அளித்த தண்டனை சரியானதே! இவளை மேலும் விட்டு வைத்திருந்தால்...

இந்த இந்திய மண்டலத்தின் சரித்திர நாயகனாகப் போகிறவனை - திப்பு சுல்தானை - தனது அருமைக் குமாரனை அசல் கோழையாக்க முயன்றிருப்பாள்...

ராஜ கோஷமிடும் சிங்கத்தை முயலாக ஆக்கியிருப்பாள்...

அவரது மனம் குமைந்து முனகுகிறது...

கையிலிருந்த அந்தக் கவிதைக் காகிதத் துண்டைக் கசக்கிக் காலடியில் போட்டு மிதித்துத் தேய்த்துத் தேற்றி எறிந்து விட்டு வெளியே வருகிறார்.

ரங்கநாயகி அதுவரை வசித்துவந்த அந்தக் கூடாரத்தையே எரித்து விட்டால் என்ன என்றும் ஆத்திரமடைகிறார்! அவரது எரிச்சல் கண்களில் ஜுவாலையாக வெளிவருகிறது...

கிழக்கு முகத்தை நோக்குகிறார்...

சூரியன் பிரகாசக் கவிதையை வானப்பலகையில் எழுதியவாறு பயணமாகிக் கொண்டிருக்கிறான்.

சுற்றிலும்' ரங்கநாயகியின் காவலுக்காக அமர்த்தப்பட்ட வீரர்களை நோட்டம் விடுகிறார்.

''நீங்கள் இனி இங்கு காவல் புரியவேண்டிய அவசியத்தை இதுவரை நீங்கள் காவல் காத்த ரங்கநாயகி வைக்கவில்லை. ஆகவே நீங்கள் சென்று ஓய்வு கொள்ளலாம்.''

எரிச்சலோடு கத்துகிறார் ஹைதர் அலி.

ஒன்றும் புரியாத - புரிந்து கொள்ள முடியாத காவல் வீரர்கள் மௌனமாய்க் கலைந்து செல்கின்றனர்.

தமது கூடாரத்தையடைந்த ஹைதர் அலி, ரங்கநாயகி பற்றியதில் தாம் நடந்து கொண்டது சரியானதா என்று தம்முள் ஒரு நியாயம் கற்பித்துப் பெருமூச்சு விடுகிறார்.

திப்புவுக்கு இவ்விஷயம் தெரிகிறபோது கற்பிக்கப்போகிற நியாயங்கள் என்ன?

இன்னமும் அவருக்குப் புரியவில்லை.

**க**திரவன் எத்தனையோ இளங்காலைப் போதுகளை முத்ததுட்டு, முதியமாலைகளை அணிந்து, இந்த உலகின் நித்தியா நித்தியங்களைப் போதிக்கிறான்!

இன்னமும் ஆர்க்காட்டு யுத்தம் ஓயவில்லையே என்று பெரிதும் கவலை கொண்ட ஹைதர் அலி, அன்றே படைகளுடன் புறப்படலாமா



என்று உத்தேசித்து, பிறகு அந்தப் பரிசீலனையைக் கலைத்துக் கொள்கிறார்.

நாம் ஆர்க்காட்டுக்குச் சென்றால், ரங்கநாயகியைக் காண வருவான் திப்புசுல்தான். இது விஷயத்தை அப்போதைக்கு அவிழ்த்து விட்டால், யுத்த பேரிகை முழங்குவதற்குப் பதிலாக அது கிழிபட்டு அவமானத்தை யுண்டுபண்ணுமானால்...

ஓ...ஆர்க்காட்டு நவாப்பு முகமதலிக்குப் போயும் போயும் சரணடைவதா? அந்நியர்பால் சேர்ந்து மண்ணைப் பேடிமையாக்கும் அவனிடம் எனது குமாரன் திப்புசுல்தான் பின் வாங்க நேருவதாவது...

பேரம்பாக்கத்திலேயே காத்திருக்க முடிவு செய்கிறார் ஹைதர் அலி.

ஏறத்தாழ ஐம்பது தினங்களாகியும் இன்னமும் ஆர்க்காட்டு நவாப்பை வெற்றிக் கொள்ள முடியாது திப்பு போராடுகிறானே என்று மனம் வருந்திக் கொண்டிருக்கையில்...

ஆ! திப்புசுல்தான் ஆர்க்காட்டை வீழ்த்தி விட்டான் என்கிற இனிப்புக்கு இனிப்பு தருகிற செய்தி கிடைத்தது. அவரது மகிழ்ச்சி அளவுகளையெல்லாம் கடந்து விரிகிறது...

'எனது மகன் இந்தப் பூமியின் வீர நாயகன்' என்று தம்முள் முனகிப் பூரித்துப் பெருமிதம் கண்ட அடுத்த விநாடி...

படைகளைக் கிளப்பிக் கொண்டு ஆர்க்காட்டை நோக்கிப் பயணப்பட்டார்.

வெற்றிச் செய்தி கொண்டு வந்த வீரர்கள் மூலம் ஆர்க்காட்டு யுத்தத்தின் முழுச் செய்தியையும் வழிநெடுகத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார் ஹைதர் அலி.

ஆர்க்காட்டு நவாப்-வெள்ளையர்களின் வழித் துணைவன். திப்புவின் பாஷையில் சொல்ல வேண்டுமானால் சுதந்திர வேட்கையற்ற சுயநலக்கிருமி - வீழ்ந்துபட்டதில் பெரு மகிழ்ச்சியடைகிறார் ஹைதர் அலி. வெள்ளைக் கும்பினியில்

சூத்திரதாரியான சர் அயர்கூட் என்பவனே வீழ்ந்துபட்டதுபோல அவரது மனம் குதூகலிக்கிறது.

இந்த ஆர்க்காட்டு யுத்தத்தில் முழுக்கவனம் செலுத்திப் போராடிய கர்னல் காஸ்பி, கேப்டன் கீட்டிங், கேப்டன் ஸ்பின்ட் போன்ற வெள்ளைக் கும்பினிக் கழுகுகளிடமிருந்து தப்பி ஆர்க்காட்டை வீழ்த்தியது மிகப்பெரிய சாதனையாக எண்ணி இறுமாந்தார் ஹைதர் அலி.

நல்ல மாலைப் போதில் ஆர்க்காட்டை அடைந்த ஹைதர் அலியை, அன்புடன் வரவேற்று மகிழ்கிறான் திப்புசுல்தான். அபரிமிதமாக ஆண்டு அனுபவித்து அகமகிழ்ந்து பலப்பல கிரீடைகளை நிகழ்த்திய நவாப் முகமதலியின் அரண்மனை மாளிகைக்கு அழைத்து செல்கிறான்.

அடடா! அரண்மனையா அது? ஒரு குட்டிச் சொர்க்கத்தையே அதனுள் மிகவும் கலைநுணுக்கத்துடன் கூடிய போகாலயமாக நிர்மானித்துத் துய்த்து வந்திருக்கானே இந்த ஆர்க்காட்டு நவாப்! மக்கள் படுகிற துயரம், பாதிக்கப்பட்ட தொழில்கள், பரிதவிக்கும் ஏழைகள், வெள்ளைப் பறங்கியர் மெல்ல மெல்ல அடிமையாக்கி வருகிற இந்தத் தேசம் - இவையாவும் கண்களில் படக் காரணமே இல்லாத முதலீடு போல விளங்கியிருந்த அந்த அரண்மனையைச் சுற்றிக் கவனிக்கிறார் ஹைதர் அலி.

'திப்பு! வெற்றிப் பூரிப்பின் இந்த நல்ல நாளிலேயே - இன்றே - இப்பொழுதே இந்த ஆர்க்காட்டு நவாப்பின் அரியணையில் உன்னை அமர்த்தி அழகு பார்க்க ஆசைப்படுகிறேன். தந்தை சொல் தட்டாது உடன்பட்டு ஆவனவற்றைக் கவனி?'' என்று அசைக்க முடியாத-அழுத்தமான தொனியில் ஆணையிடுகிறார் ஹைதர் அலி.

எதிர்பாராத இந்தச் சுந்தரக் கனவில் ஒரு விநாடி கழித்து நிலைத்துப்போன திப்புசுல்தான், மகிழ்ச்சிப் பெருக்குடன், தந்தையின் பாதங்களைத் தொட்டுத் தனது மரியாதையை ஒரு ராஜ விசுவாசத்துடன் கூடிய புல்லரிப்புடன் செலுத்தி, மறுகணம் சற்றே தயங்கி, ''உங்கள் வார்த்தைக்கு மீறிய வார்த்தை இந்த



தட்சிணத்திலேயே இருக்கக்கூடாது என்று வெற்றிமுழக்கம் செய்கிறவன் உங்கள் மகன் திப்பு; அவனா மறுக்கப் போகிறான்? ஆனால்...'' என்று வார்த்தைகளை முடிக்க முடியாது திணறிச் சுற்றும் முற்றும் கவனிக்கிறான்.

''என்ன திப்பு? யாரைத் தேடுகிறாய்?''

-இவ்விதம் ஹைதர் அலி கேட்கிறபோது, தமது குமாரன் யாரைத் தேடுவான் என்பதைத் தெரிந்து கொண்டே பாவனை செய்கிறார். அந்தப் பாவனையில் பல விதமான கேள்விக் குறிகள் உள்ளடக்கமாய் கொக்கியாகிக் குத்துகின்றன; ஆ! அந்தப் பயங்கர விஷயத்தை - சுமத்தப் போகிற பழியை இந்த அரியணை விழாவுக்குப் பிறகு வைத்துக்கொள்ளலாம் என்ற முடிவின் கீழ்தானே வெற்றி விழாவை இன்றே - இப்போதே என்று ஆணை பிறப்பித்து இருக்கிறார்...

அந்தச் செய்தியை முன்கூட்டியே வெளிப்படுத்தி விட்டால்...

திப்புவின் உள்ளம் சமுத்திரமாகக் கொந்தளிக்குமோ? எரிமலையாய் வெடிக்குமோ? பூமியைப் பிளக்குமோ?

தந்தையின் தயக்கத்தைக் கண்ட திப்புசுல்தான், ''பசவராஜும் ரங்கநாயகியும் வரவில்லையா?'' என்று கேட்கிறபோது, அவனது குரலில் 'உடனடியாக அவர்களைப் பார்க்க வேண்டும்' என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது...

மிகவும் கூர்மையாகத் தமது குமாரனைப் பரிசீலிக்கிறார் ஹைதர் அலி.

''அவர்கள் பேரம்பாக்கத்திலேயே இருக்கிறார்கள். நான்தான் அவர்களை அவ்வாறு இருக்குமாறு தக்க பாதுகாப்புடன் விட்டு வந்திருக்கிறேன். இது ஆர்க்காடு நவாப்பின் ஆள்கள் கண்களில் ரங்கநாயகியின் பேரழகு படுவதை நான் விரும்பவில்லை.''

ஹைதர் அலி இவ்வாறு நிரம்பவும் சிந்தித்தே பொய் சொல்கிறார். அவரது குரலோ மேலும் இது குறித்துப் பேசாதே என்பது போல ஒலிக்கிறது.

ஒரு நிமிஷம் யோசித்த திப்புசுல்தான், ''இந்த விழாவுக்கு அவர்களிருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்!'' என்று கூறுகிறபோது சொற்களில் ஒருவிதப் பிடிவாதம் கனத்திருந்தது.

இனியும் தனது முரட்டுச் சுபாவத்தைப் பயன்படுத்தாவிட்டால், திப்பு மேலும் பேசப் போய், உண்மை வெடிபட்டால், விழா தடைபட்டு, தனது ஆசை - மகனுக்கு நவாப் பட்டம் சூட்டி அழகு பார்க்க நினைத்த ஆசை - பொடிப்பட்டு விடுமோ என்று புரிந்த ஹைதர் அலி, ''திப்பு இந்த விழா இக்கணமே நடந்தாக வேண்டும் என்பது உனது தந்தை ஹைதர் அலியின் அவா! இதற்கான ஏற்பாடுகளுக்கு ஆணை பிறப்பித்தாய் விட்டது. இனி எதைப் பற்றியும் யோசிக்க நேரமில்லை. நீயோ அல்லது நானோ சென்று உத்தரவிட்டாலொழிய ரங்கநாயகி அங்கிருந்து புறப்பட முடியாது. எனது கடுமையான ஆணை அவ்வாறானது. இது, இந்த ஹைதர் அலி ஒருவன் மட்டுமே கண்டு களிக்க ஏற்பாடு செய்கிற விழா! விழா முடிந்ததும் நாளை நீயே சென்று அவர்களை அழைத்து வரலாம்!'' என்று உரக்கச் சத்தமிட்டு அந்தப் பேச்சுக்கே ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.

எங்கே இந்த விழா நடைபெறாமல் போய்விடுமோ என்கிற ஆதங்கம் அவரது நெஞ்சுக்குழியில் உருண்டது; ஒரு புகழ்பெற்ற நவாப் அரண்மனையிலே தமது குமாரனுக்கு 'நவாப்' விருது வழங்கவிருந்த நிகழ்ச்சியை விட்டு விடுவாரா ஹைதர்அலி?

தந்தையை எதிர்த்துப் பேசமுடியாத திப்புசுல்தான், ஒரு தர்மத்தின் அடிமைபோல மௌனமானான்.

**அ**ன்றிரவு, ஆர்க்காட்டு நவாப்பின் போகாலயம் போன்று விளங்கிய சொர்க்காலய அரண்மனையில், தமது குமாரனின் வெற்றிவிழாவை மிகவும் கோலாகலமாக ஏற்பாடு செய்து நடத்தி வைக்கிறார் ஹைதர்அலி.

தமது நீண்ட நாளைய ஆசையை அரங்கேற்றுவது போலவும், மைசூரில் இருக்கிற ஒரு சிலருக்குப் பாடம் கற்பிப்பது போலவும், தாம் ஸ்ரீரங்கப்பட்டினத்திலிருந்து போர்ப்பயணம் நடத்திய



தினத்தன்று செய்த ராஜப் பிரகடனத்தை விடவும் இங்கே இந்த மகோன்னத செயலைச் செய்து முடிக்கிறார்.

அதுதான்...

பாலரறிய - பாரறிய ஒரு கீர்த்தி வாய்ந்த சிங்கத்தின் ராஜகர்ஜனையை போன்று கணீரென்று முழங்கிய, அந்த முழக்கத்தில் தமது குமாரனின் வீரப்பிரதாபங்களைப் புகழ் முரசு கொட்டிப் பின்னர்; 'நவாப்' என்கிற விருதுவை தமது ஜயக்கொடியின் கீழ் நின்று பெருமையுடன் வழங்கினார் ஹைதர் அலிகான் நவாப் பகதூர்!

சபை முழுவதும் ஒரே வீரகோஷம்...

''நவாப் திப்புசுல்தான் வாழ்க!''

மண்டபமே அதிரும்படி கிடுகிடுக்கிறது...

பூரித்துப் போகிறார் ஹைதர் அலி.

அந்தப் பூரிப்புடன், ''இன்றைக்கு அளிக்கப்பட்ட நவாப் விருது சாதாரணம். எனக்களிக்கப்பட்ட பகதூர் பட்டத்தை விரைவில் எனது குமாரன் பெறுவானாக! அதனினும் மேம்பட்ட - நான் அடைய வேண்டாம் என்று கருதிக் கொண்டாடுகிற அசாதாரணமான பட்டம் பாதுஷா! இதனை விரைவில் ஸ்ரீரங்கப்பட்டினம் கண்டு களிக்குமாக! இவ்விதம் பெற்று இந்தத் தென்புலமும் வடபுலமும் அவனது ஒரு குடையின் கீழ் இயங்க எல்லாம் வல்ல சர்வ வல்லமை பொருந்திய நமது அல்லாஹ்வின் திருநாமத்தை மனப்பூர்வமாக வணங்கித் தொழுவோமாக!'' என்று பாசத்தின் பாற்பட்ட வெறியுணர்வுடன் முழங்கியபோது, சபையில் எழுந்த ஆரவாரம் அடங்கப் பல நிமிஷங்கள் கரைந்தன.

அன்றைய விழா இனிது நிறைந்ததும், இரவு விருந்து அமோகமாகத் தடபுடலாக நடந்தது. ஆர்க்காட்டு மக்கள் அந்த விழாவுக்குத் தங்களால் முடிந்த அளவுக்கு உறுதுணை புரிந்து சிறப்பித்தார்கள். வெள்ளையருக்கு கையாளாகவும், வேடிக்கைக்கு லோலனாகவும், விபரீதங்களுக்கு ரசிகனாகவும் இருந்த ஆர்க்காட்டு நவாப்பு முகமதலியின் ஆட்சி முடிந்து, ஒரு சுதந்திரச் சூரியனின்-

புரட்சித் தலைவனின் உதயத்தால் கண்ட பிரகாசத்தில் அவர்கள் வெகுவாக மெய்மறந்து போனதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லாமலிருந்தது. விஷாரத்துப் பெருங்குடி இஸ்லாமியர்கள் அனைவருமே, ஹைதர் அலியின் வருகையை எண்ணிப் பூரித்துப் போய் துணை நின்று உதவி, தங்கள் குதூகலத்தை வெளிப்படுத்தி மெய்ப்பித்தனர்.

## 22

**பொ**ழுது பொன்னாகப் புலர்ந்து கொண்டிருக்கிறது.

உதயம் கண்ட கதிரவனைக் காணக் காண ஹைதர் அலிக்கு, ரங்கநாயகி எழுதிவைத்த யுத்தக் கவிதையே நினைவுக்கு வருகிறது...

அந்தச் சமயத்தில்...

அலங்கார ரூபனாக அந்த அறையில் நுழைந்து கொண்டிருந்தான் நவாப் திப்பு சுல்தான்!

சாளரத்து வழியாகக் கிழக்கு முகத்தைப் பார்த்தவாறு நின்றிருந்த ஹைதர் அலி திரும்பிப் பார்க்கிறார்...

குமாரன் திப்புசுல்தான் எதற்காக வந்திருக்கிறான் என்பது புலனாகிறது...

ஓ...

சமுத்திரம் கொந்தளிக்குமோ?

எரிமலை வெடிக்குமோ?

பூமிதான் பிளவு படுமோ?

''வா, திப்பு. உட்கார்! அலங்காரத்தைப் பார்த்தால் இவ்வளவு காலையில் எங்கோ புறப்பட்டு விட்டாய் என்று நினைக்கிறேன்!''

ஹைதர் அலி இவ்வாறு கூறிக்கொண்டே தமதாசனத்தில் அமர்கிறார். ''இந்த ஆர்க்காட்டு முகமதலி ரொம்பவும் சிற்றின்ப



ரசிகனாக இருந்தாலும், கலாரசிகனாகவும் இருந்திருக்கிறான். எவ்வளவு அழகாக அரண்மனையை வைத்திருக்கிறான்.''

அவர் தம்முள் நகைத்துக் கொள்கிறார்...

திப்புசுல்தான் அமரவில்லை. ''நமது தாரியா தவுலத்துக்கு மிஞ்சி இங்கே அப்படி என்ன அழகு கொட்டியிருக்கிறது?'' என்று கேட்கத்தான் அவன் நினைத்தான். அதற்கு அவசியமில்லை என்று தனது அவசரத்தை யுணர்ந்து ''அப்பாஜான்! நான் பேரம்பாக்கம் புறப்படுகிறேன்!'' என்றான்.

ஆ! எரிமலை ஆரம்பிக்கிறது...

''அதற்கு அவசியமே இல்லை...''

-ஹைதர் அலி சற்றும் தயங்காமல், இனி தயங்கக் காரணமே இல்லை என்பதுபோல, நேரிடையான பதிலுக்குத் தயாராகி விட்டார்.

சில விநாடிகள் புரியாது மலைத்துப் போன திப்புசுல்தான், ''அவசியமில்லை என்றால்?'' என்று கூறுகிற போது அவனது கண்கள்...

மெல்லிய பெருமூச்சு ஹைதர் அலியின் நாசியிலிருந்து வெளிப்படுகிறது...

''நீ நினைப்பது போல பசவராஜ் உயிரான நண்பனுமல்ல; ரங்கநாயகியும் உயிரான காதலியுமல்ல!''

''அப்பா...''

அலறித் துடித்த அந்த அழைப்பு, திப்புவின், நெஞ்சிலிருந்து கொந்தளிக்கிறது...

''பதறாமல் கேள் குமரா! நான் உனது தந்தை; உனது எதிர்கால நன்மையில் கனவு கண்டு கொண்டிருப்பவன்! நான் சொல்லுவது உண்மையோ, பொய்யோ... நேரில் பார்த்தவர்கள் சொன்னார்கள். பசவராஜும் ரங்கநாயகியும் உனக்குத் துரோகம் செய்து விட்டார்கள்!''

''அப்பா...!''

அந்த அறையே இடுபடுகிற மாதிரி கத்துகிறான் திப்புசுல்தான்...

"அவர்களிருவரும் சொல்லாமல் கொள்ளாமல் சென்ற வாரத்தில் ஒரு நள்ளிரவில் ஓடிவிட்டார்கள்!"

ஹைதர் அலி இவ்வாறு கூறி நிறுத்தியதும்...

'ஓ' என்று பூதாகரமாக அலறுகிறான் திப்புசுல்தான்...

எரிமலை வெடிக்கிறது...

சமுத்திரம் கொந்தளிக்கிறது...

பூமி அதிருகிறது...

அந்த மாளிகையே இருபிளவாகப் பிளக்கிறது...

பெரிதாக அதிர்ந்து, அந்த அதிர்ச்சியிலும் நம்பிக்கை இம்மியும் கலவாது கூச்சலிட்ட தமது குமாரனின் வெறிகொண்ட தோரணையைக் கண்டு கொஞ்சமும் மாறுதலின்றி அமைதியாகக் கவனிக்கிறார் மகா சுல்தான் ஹைதர் அலி.

"நீங்கள் சொல்வதை உண்மை என்று நிரூபிக்கச் சாட்சி பூர்வமாக..." - திப்புசுல்தான் ஏதோ ஒரு வேகச்சுழிப்பு முனையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கூறி முடிப்பதற்குள், அவனை அவ்வாறு கூறிமுடிக்கவிடச் செய்வது சரியல்ல என்று உணர்ந்த ஹைதர் அலி, "நானே நிற்கிறேன்!" என்று திடகாத்திரமாகக் கூறிக் கண்களை உருட்டி, மார்பை நிமிர்த்திக் கீழுதட்டின் அடிப்பாகத்தைத் தமது இடக்கையின் ஆள்காட்டி விரலால் உரசிக் கொண்டே கவனிக்கிறார்...

திப்புசுல்தானுக்கு மேற்கொண்டு அடித்துத் திருத்தி எழுதுவதுபோல என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. அதற்கு உரிய பதிலே இல்லை என்பது போல அவனுக்குத் தெரிகிறது.

சிறிதுநேரம்வரை ஆவேச உணர்வின் நிலையாகி, பிறகு அமைதி காக்கும் சிலையாகி, முடிவில் துன்பியலின் வலையாகித் துடித்தடங்கிய திப்புசுல்தான், அடுத்துக் கொஞ்சமும் தயங்காது, "அப்பா! நான் உடனடியாக ஸ்ரீரங்கப்பட்டினத்துக்குப் புறப்பட்டாக வேண்டும்!" என்று கூறியது, சம்பந்தமில்லாத - ஹைதர் அலியே



எதிர்பாராத - ஒரு திசை திருப்பமே போல் இருந்தது. அவனது இந்த மாறுதலான பதிலைக் கேட்டு ஒரு கணம் அதிர்ந்து போனார் ஹைதர் அலி.

"ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கா? எதற்காக? ஏன்?"

சொற்கள் அழுத்தம் நிறைந்த கனத்துடன் வெளிவருகின்றன.

"நீங்கள் சொன்ன செய்தியை என்னால் நம்ப முடியவில்லை. இது குறித்து நான் ஆராயவேண்டும்."

"எனது வார்த்தைக்கு நீ அளிக்கிற மரியாதை இதுதானா!"

"உங்கள் திவ்வியமான வார்த்தைக்கு நான் என்றுமே மரியாதை தரக் கடமைப்படுகிறவன். இதுபோலவே எனது புனிதமான நட்புக்கும் தூயதான காதலுக்கும் அசைக்க முடியாத கௌரவத்தைச் செலுத்துகிறவன் நான்! ஆகவே அந்த நட்பும் காதலும் எந்த விதமாக எனக்குத் துரோகம் செய்திருக்கின்றன; அதன் அடிப்படை என்ன என்பது குறித்து நான் பரிசீலிக்க வேண்டாமா?"

"அப்படிப் பரிசீலித்து நான் சொன்னது உண்மைதான் என்பது தெரிய வருமேயானால்?"

"நிச்சயமாக அவர்கள் இருவரையும் தோலுரித்துத் தொங்க விடுவேன்! பொய்யென்று தெரியுமானால்..."

திப்புவின் முகம் விகாரமாகிறது...

ஹைதரின் முகமோ வினாக் குறியாகிறது...

"தெரியுமானால்...?"

"என்னை நானே தோலுரித்துக் கொள்வேன்!"

"நான் சொல்வது பொய் என்று நினைக்கிறாய்... இல்லையா?"

"நீங்கள்தான் பார்க்கவில்லையே! கேள்விப்பட்டதுதானே!"

"சொன்னவர்கள் அற்ப சொற்பமானவர்களல்ல...!"

"யார் அவர்கள்?"

''உனக்கு அது இப்போதைக்கு அவசியமில்லை. சந்தர்ப்பம் வருகிறபோது நானே நிரூபிப்பேன்!''

''இனிமேல் ஒரு சந்தர்ப்பம் வரவேண்டுமா...?''

''நான் எதிர்ப்பார்க்கிறேன்.''

''அவ்வாறானால் நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டே இருங்கள். நான் அதற்குமுன் முடிவை அறிந்து கொள்கிறேன்.''

''திப்பு...

''மன்னிக்கவும் அப்பாஜான்! நான் இப்போதே புறப்பட்டாக வேண்டும்.''

''இப்போதே புறப்பட்டாக வேண்டுமா? இருக்கிற யுத்த நிலையில் என்னை விட்டுச் செல்ல உனக்கு மனம் வருகிறதா? என்னை இழக்க நீ தீர்மானித்து விட்டாயா? சர் அயர்கூட் என்கிற பயங்கரப் பறங்கிய ராஜ தந்திரி நம்மை வீழ்த்தக் கணத்துக்குக் கணம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறான். பறங்கிப்பேட்டையில் உனது தம்பி அப்துல் கரீம் கர்னல் பிரெய்த் வெயிட் சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிறானாம். இந்த நிலையில் நீ ஸ்ரீரங்கப்பட்டணம் நோக்கிச் செல்வது உசிதமானால் நான் தடுக்கவில்லை. ஒரு தந்தையின் வீர முழக்கத்தை விட ஒரு துரோகமான நட்பும் துச்சமான காதலும்தான் சிறந்ததானால், நான் உன்னைத் தடுக்கவில்லை. நீ இப்போதே புறப்படலாம்!''

-ஹைதர் அலி மேலும் பேசவிரும்பாது, வெறுப்பார்ந்த நிலையில் திரும்பி நடந்து சாளரத்தண்டையில் சென்று, துக்கித்த கண்களை ஒரு கணம் மூடி, பிறகு திறந்து எங்கோ செலுத்திச் சூன்யத்துள் ஐக்கியமானவர் போல் அமைதியாக நின்றுவிடுகிறார்.

ஓரிரு நிமிடங்கள் வரை நின்று யோசித்த திப்புசுல்தான், என்ன நினைத்துக் கொண்டானோ, பேச வார்த்தைகள் கிடைக்காமலோ அல்லது பேசுவதால் பயனில்லை என்று புரிந்து கொண்டதாலோ தனது அறையை நோக்கி விறுவிறுவென்று நடந்தான்.



முள் தைத்து உறுத்துகிற நெஞ்சோடு திரும்பிப் பார்த்த ஹைதர் அலி, மகனுடைய கைத்துப்போன உள்ளுணர்வைப் புரிந்தவரே போன்று கலங்கி நிற்கிறார்.

கண்களில் இரு துளிநீர் அரும்பி வெடிக்கிறது...

நாட்டின் நலனுக்காகவும் எதிர்காலத் தென்னகத்துக்காகவும், தாம் செய்த இந்த ராஜதந்திரச் செயல், நன்மையாகவே முடிய வேண்டும் என்றும், இதனால் தமது அருமந்த புதல்வனுக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்றும் கனத்துள் பிரார்த்தித்துக் கொள்கிறார்.

தனது அறையில் தனிமையை நாடிச்சென்று ஆரோக்கியமற்ற சுவாசத்துடன் மஞ்சத்தில் அமர்ந்திருந்தான் திப்புசுல்தான். மனம் பலவாறாக அலைந்து, முட்டி, மோதிப் போராடுகிறது...

'அவர்கள் இவ்வாறு, தனக்கு துரோகம் செய்திருப்பார்களா?'- என்று கேட்கிறது வெளி மனம்.

'சீ! நிச்சயம் அவ்வாறு இருக்காது' என்றது உள்மனம்.

'ஏனிருக்காது?' என்கிறது துர்மனம்!

எப்படியெல்லாமோ சிந்தித்துப் பார்த்ததில் அவனுக்கு அவர்கள் மீது பரிபூரண நம்பிக்கையே விசுவரூபமாக எழுந்து தெரிகிறது...

சிந்திக்கிறான்... சிந்திக்கிறான்... சிந்திக்கிறான்...

ஒரு முடிவுக்கு வந்த அவன், தந்தையின் கட்டளைக்கு மதிப்பு தந்து தஞ்சை நோக்கி யுத்தப் பயணம் செய்யத் தீர்மானித்தான். தந்தையிட்ட அனைத்துக் கட்டளைகளையும் யுத்த களத்தில் விதைத்து, வெற்றிகளை அறுவடை செய்து குவிக்கிறான் திப்புசுல்தான். அவனது அந்தச் சுதந்திர முழக்கம் தென்னகத்துச் செவிகளைக் குளிரச் செய்கிறது!

**ஸ்ரீ**ரங்கப்பட்டினத்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து யுத்தம், யுத்தம், யுத்தம்.

ஓ... என்ன யுத்தமோ? என்ன வெற்றியோ? என்ன மனிதர்களோ?

தஞ்சை முதலான இடங்களை வெற்றி கண்டு வீரகர்ஜனையாய் ஸ்ரீரங்கப்பட்டினம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த திப்புசுல்தானுடைய நெஞ்சில் எத்தனைவிதமான எண்ணங்கள் எத்தனை விதமான கோணங்களில் எழுந்து அலைமோதுகின்றன...

ஆ! ரங்கநாயகியும் பசவராஜும்...

இந்த மன உளைச்சலூடே கும்பினிப் பட்டாளத்தை வென்று வீரமுழக்கமிட்டதை நினைக்குந்தோறும் அவனுக்கே ஓர் ஆச்சரியம்...

என்னதான் பிரெஞ்சு ராணுவ உதவியிருந்தாலும் படை நடத்துவதில் ஒரு ராஜதந்திரம் அவசியமாகிறதே! கும்பினியின் முரட்டு ராணுவத் தளபதிகளுள் ஒருவனான கர்னல் பிரெய்த் வெய்ட்டை வெல்லுவது ஓர் அசாத்தியமான காரியமாயிற்றே! ஆ! அந்தப் பிரெய்த் வெய்ட், திப்புவை எப்படியெல்லாம் அலைக்கழித்துப் போரில் ஆட்டிப் படைத்தான்; பிறகு தோற்றான்; ஓடிச்சென்று மறைந்தான்...

இப்போது நினைத்தாலும் நெஞ்சு வெடிக்கிற மாதிரி...

அவனை எப்படிப்பழி தீர்ப்பது என்பதில் திப்புசுல்தானின் மனம் பெரிதாகச் சிந்தித்தது.

சேனைகளுடன் ஸ்ரீரங்கப்பட்டினத்தை அடைகிறான்.

ஜயப்பதாகையுடன் திரும்புகிற திப்புசுல்தானை, ஸ்ரீரங்கப் பட்டினமே திரண்டு வரவேற்று மகிழ்கிறது...

அதிர்வேட்டுக்கள்...

திப்புவின் வயதை எண்ணுவது போலப் பீரங்கிகள் முப்பத் திரண்டு முறை முழங்குகின்றன.

லால்மகாலின் வெளிவாசலில் நின்று, அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா அன்புடன் முக மலர்ந்து மகனை வரவேற்கிறாள்...



அன்னையின் கால்களில் பணிந்தெழுந்த திப்புசுல்தான், எந்த எதிருணர்வான முகபாவங்களையும் எடுத்த எடுப்பில் காட்டிக் கொள்ளாமல், தன்னைச் சூழ்ந்து நின்ற அனைவரையும், உதட்டைக் கடித்து நெற்றிச் சுருங்கக் கண்களை மேலே உயர்த்தி மௌனமாக நோட்டம் விடுகிறான்...

அவனது அந்த அமைதியே - மௌனமே அனைவருக்கும் ஒருவித அதிர்ச்சி கலந்த பயத்தை உண்டுபண்ணுகின்றன...

இத்தனைக்கும் அவர்களுக்கு என்ன நடந்ததென்றே உள் மறைவு தெரியாதெனினும் 'பசவராஜ், ரங்கநாயகியை இழுத்துக் கொண்டு ஓடிவிட்டான்' என்று பரவிய செய்தி தெரிந்திருந்தது. அது எப்படி? எவ்வாறு? என்பன குறித்து அவர்களாகவே யூகித்துக் கொண்டவை ஆயிரம்!

அருகில் நின்றிருந்த தனது சுல்தானாக்களைக் கவனிக்கிறான் திப்புசுல்தான்.

ருக்காய்யா பானுவின் இடக்கையில் அழகுருவாய்க் குத்திக் கொண்டிருந்த குழந்தையின் மழலை முகம்...

ஆண் குழந்தை...

ஓ... இவன் குட்டிச் சுல்தானல்லவா!

ஸ்ரீரங்கப்பட்டினத்திலிருந்து புறப்படுகிறபோது, திப்புசுல்தான் தனது பட்டத்தரசி ருக்காய்யா பானுவிடம் பேசிய பேச்சுக்கள் நினைவை முற்றுகையிடுகின்றன...

தனது பிள்ளைகளிடம் இயற்கையாகவே பாசமுடைய திப்புசுல்தான், ருக்காய்யா பானுவிடம் ஒட்டிக் கொண்டிருந்த வாரிசை- குழந்தையை ஆவல் மீறிய வேகத்துடன் அருகே சென்று பற்றித் தூக்கியபோது...

ஒன்றரை வயதைத் தாண்டிய குட்டி சுல்தான் வீறிட்டு அலறுகிறான்...

பாசம் என்பதும் பழக்கத்தால் தான் வருவதுபோலும் என்று உணர்ந்த திப்புசுல்தான், குழந்தையை ருக்காய்யா பானுவிடமே

கொடுத்துவிட்டு அரண்மனையுள் பிரவேசிக்கிறான். தனது அறையை நாடிச் சென்ற திப்புசுல்தான் அன்றைக்கு முழுதுமே பலத்த யோசனையில் ஆழ்ந்து கிடந்தான்.

**பொ**ழுது பலபலவென்று விடிகிறது-அதிகாலை நேரத்தில் பெரிய சுல்தானாவுக்கு வந்திருந்த கடிதம் அவளை வெகுவாகப் பிரமிக்கச் செய்திருந்தது. செய்தியில் பல விஷயங்கள் இருந்தன. ஆனால் பசவராஜ், ரங்கநாயகி என்ன ஆனார்கள்? உண்மையிலே அவர்கள் ஓடிவிட்டவர்கள்தாமா? என்பன போன்ற விஷயங்கள் செய்தியில் குறிப்பிடவில்லை. அவர்களைத் தீர்த்துக் கட்டி விடுமாறுதான் முன்னம் கடிதம் அனுப்பியிருந்தாள். ஆனால், பரவிய செய்தி மாறுபட்டிருந்தது. அது அவளைக் குழப்பிக்கொண்டிருந்தது. இதுபற்றியதில் தானே அறிய அவள் ஆவல் கொண்டிருந்தாள்...

உண்மையிலும் அந்தச் செய்தியில் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் ஹைதருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பிறரைக் கொண்டுதான் இதனை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். ஆகவே இந்த ரகசியச் செய்தியை அவர் நெஞ்சோடு பூட்டி வைத்துக் கொண்டிருக்கலாம் என்பதை யோசித்துப் பார்க்க முடியாது போய்விட்டது பெரிய சுல்தானா பேகத்துக்கு!

மகாலின் பிரதான கூடத்தை நாடிச் செல்கிறபோது அங்கே திவான் பூரணய்யா, மகா சுல்தானா பேகம் பக்ருன்ஷாவுக்காகக் காத்திருக்கிறார்.

திவான் பூரணய்யா மிகவும் மரியாதையுடன் எழுந்து வணக்கம் போக்கினார்.

கம்பீரமாக நடந்துவந்துகொண்டிருந்த பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா, ''அமருங்கள் திவான் ஐயா!'' என்று கூறியவாறு தனது ஆசனத்தில் அமர்ந்தாள்.

''திவானய்யா! நியாயப்படி நான் எல்லோரையும் அழைத்து வைத்துக் கொண்டு ஆலோசிக்கவேண்டிய விஷயம் இது. ஆயினும் ஒரு முன்னாலோசனைக்காக உங்களை அழைத்தேன். திப்புவின் திடீர் வருகை ஏதோ ஒரு கலக்கத்துக்குரிய சூழலை உண்டுபண்ணி



யிருக்கிறது. இந்த நிலையில் நமது மகாசுல்தான் கடிதம் அனுப்பியிருக்கிறார். இன்று காலையில்தான் அது எனக்குக் கிடைத்தது'' என்று கூறிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா, சுற்றுமுற்றும் நிரம்பவும் கவனத்துடன் கண்களை ஓட்டுகிறாள்...

''கடிதத்தில் பல விஷயங்களை எழுதியிருக்கிறார். அது இரகசியமானதும்கூட, ஏனோ காரணமில்லாமல் திவான்களையும் சில அதிகாரிகளையும் உடனடியாக அவரது பாசறைக்கு அனுப்பி வைக்கும்படி எழுதியிருக்கிறார். அதுதான் எனக்குப் புரிபடவில்லை.''

சிறிதுநேரம் மௌனமாக யோசித்துப் பார்த்த திவான் பூரணய்யா, ''பேகம் சாகிபா! மகாசுல்தானின் ஆணை அதுவானால், இதில் ஏதோ ஒரு மூலகாரணம் அடங்கி இருக்கும். மகா ராஜதந்திரியான அவரது இந்த முடிவை நீங்களும் நாங்களும் ஏற்றுத்தான் தீரவேண்டும்.''

''காரணம் என்னவென்றுதான் புரியவில்லை.'' என்று கூறிய பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் குரலைத் தொடர்ந்து -

''நான் சொல்லுகிறேன்!'' என்று திப்புவின் காம்பீரியக் குரல் எதிரொலிக்கிறது...

துயில் கலைந்து எழுந்து வந்த திப்புசுல்தான், அதுவரையில் அங்கு நடந்த உரையாடல்களைச் செவிமடுத்து இடைபுகுந்தான்.

திவான் பூரணய்யா, அதிர்ச்சியுடன் எழுந்து நின்று சலாமிட்டார்.

அருகே வந்த திப்புசுல்தான், அன்னையையும் அமைச்சரையும் உற்றுக் கவனிக்கிறான்.

அவன் அமரவில்லை. கண்கள் சிவந்து நெருப்புத் துண்டங்களைப் போலக் காணப்படுகின்றன. ஒரு கையை இடுப்பில் வைத்து, இன்னொரு கையைத் தொங்கவிட்டு, வலது காலை ஒருக்களித்து நின்று கவனித்த அவனது தோரணை அச்சத்தைத் தரக்கூடியதாக இருந்தது.

''என்ன காரணம் மகனே?''

திப்புவின் உதடுகளில் அலட்சிய நெளியல்.

''இங்கே நான் எதற்காக வந்தேன்? ஏன் வந்தேன்? என்கிற காரணம் எனதருமை தந்தையார்க்கு நன்றாகவே தெரியும். ரங்கநாயகியை இழுத்துக் கொண்டு பசவராஜ்தான் ஓடினானா? அல்லது ஓட விட்டார்களா என்பது இன்னமும் சந்தேகத்துக் குரியதாகவே இருக்கிறது. இதனால் எத்தனை அசம்பாவிதங்கள் நிகழுமோ? அல்லது இதனில் சம்பந்தப்பட்ட எத்தனை அதிகாரிகள் தோலுரிக்கப்படுவரோ? என்கிற ஐயம் தந்தையார்க்கு ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் திவான்களையும் அதிகாரிகளையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு கடிதம் எழுதியிருக்கிறார், அம்மாஜான்! அந்தக் கடிதத்தை நான் பார்க்கலாமா?''

''அது எனக்கே எழுதியது, அதனை நீ பார்க்க வேண்டும் என்று விரும்புவது தேவையற்றது?''

''ஓகோ! உண்மைதான்! நான் ஏன் அதனைப் பார்க்க வேண்டும்? இது குறித்து என்னைக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இன்றே எல்லோரையும் அனுப்பி வைக்கலாம்! அதற்கு முன்னால், இந்த நவாப் திப்புசுல்தான் ஓர் ஆணையிடுகிறான்!''

அவன் ஒருகணம் நிறுத்திக் கவனிக்கிறான்.

என்ன ஆணை பிறக்கப்போகிறதோ என்று மகாசுல்தானா பேகம் பக்ருன்ஷாவே ஒரு கணம் அதிர்ந்து போனாள்.

திப்புசுல்தானின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

''பசவராஜின் காதலி - அந்தப் பேரழகி மஞ்சுளா தேவியைச் சிறையெடுத்து வந்து எனது ஜனானாவில் அடைக்க வேண்டும். இதனைத் திவான் பூரணய்யாவின் பொறுப்பில் விடுகிறேன்!''

ஆ...

பசவராஜின் காதலி பேரழகி மஞ்சுளாதேவியை திப்புவின் ஜனானாவில் அடைக்க வேண்டுமா?

எத்தனை பயங்கரமான ஆணை!



திப்புசுல்தான் அதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாமல் வேகமாக நடக்கிறான்.

''திப்பு...

அன்னையின் ஆவேசம் நிறைந்த அழைப்பு.

திப்புசுல்தான் ஒரு விநாடி மலைத்து நின்று திரும்புகிறான்.

''இது என்ன அநாகரிகமான செயல்?''

''என் காதலியை அபகரித்துக் கொண்டு போனது பசவராஜுக்கு நாகரிகமான செயலானால், இதுவும் நாகரிகமானதே!''

''சரியான காரணம் தேவை!''

''நீங்கள் கடிதத்தை என்னிடம் காட்டக் கூடாது என்பதற்கு என்ன சரியான காரணமோ அதே சரியான காரணமேதான் இதற்கும் பொருந்தும்! திவானய்யா? எனது இந்த உத்தரவை யாராவது மீறினால்...''

நான்கு கண்கள் இமைக்க மறக்கின்றன.

''திப்புவின் கோபத்தால் இந்த ஸ்ரீரங்கப்பட்டினமே அழிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.''

பூகம்பமே போல் வெடித்த அவனது குரலில் எதிரொலி, அந்த மகாலை விட்டு நீங்கு முன்னம் புயலைப்போல விரைந்து சென்று மறைந்தான் நவாப் திப்புசுல்தான்!

ஆ! முதல் தடவையாக அன்றைக்கு மீறிய ஆவேச உணர்வுடன் நடந்து கொண்டிருக்கிறான்...

இதன் எதிருணர்வுகள்...

## 23

மண்ணில் சூரிய மணம் ஒளியாய்க் கமழ்ந்து கொண்டிருக்கிறது.

பசவராஜ் குடியிருக்கும் அந்த வீதிக்கே ஒரு தனியான பெருமை சில காலமாகவே மணத்துக் கொண்டிருந்தது. அப்பேர்ப்பட்ட பெருமையைக் குலைத்துப் பக்கம் தலைநீட்டுகிற மாதிரி அடிபட்ட செய்திகள்...

அப்பப்பா...

'திப்புசுல்தான் காதலியை-பேரழகி ரங்கநாயகியை இந்த நட்புத் துரோகி பசவராஜ், பெண்டாளுகிற மோகத்தின் வெறிகொண்டு பலவந்தமாக இழுத்துக்கொண்டு ஓடிவிட்டான்.

இந்தக் கசப்பான செய்தி பரவாத மூலை முடுக்குகள்- பட்டி தொட்டிகள்- அந்த மைசூர் ராஜ்யத்திலேயே இல்லையென்றுதான் சொல்லவேண்டும். இதன் அபசுருதி நிறைந்த எதிரொலியால் இப்போது அந்த வீதியில் - பசவராஜ் குடியிருக்கும் அந்த வீதியில் முன்பிருந்த ஒரு மேலான கௌரவம் கேவலமான கந்தலாய்ப் பிய்ந்து கொண்டிருந்தது. கங்கம்மாளும் மஞ்சுளா தேவியும் வெளியில் தலைநீட்டவே நாணினர். ஆ! அவர்களடைந்த அவமானத்துக்குரிய வேதனைகளுக்கும் அலட்சியத்துக்குரிய விம்மல்களுக்கும் எந்தப் பாஷையிலும் எந்தச் சொற்களையும் ஈடுகட்டி விளக்க முடியாது. ஆனாலும் அவர்கள் அந்தக் கசப்பான செய்தியை இது பரியந்தம் முற்றுமாக நம்ப மறுத்தனர். தாய்க்கு மகன் மீதும், காதலிக்கு முறைக் காதலன் மீதும் இன்னமும் ஆரோக்கியமான நம்பிக்கை அழியாமல் ஆரோகணித்திருந்தது.

ஆனால், ஊரும் மக்களும்...

கண்ணும் மூக்கும் காதும் வைத்து...

அடடா! எத்தனை விசித்திரமான உருவங்களைத் தீட்டி வருகிறார்கள்...

இதோ, இப்போது அந்த வீதியே தலை குனிகிற மாதிரி புலிக்கொடி ஏந்திய வீரர்கள் பதின்மர் குதிரைப் பிரசன்னர்களாய் நுழைகிறார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒரு மதிப்புமிகு முத்துப் பல்லக்கை எண்மர் சுமந்து வருகிறார்கள்.





பசவராஜ் வீட்டு வாசற்படியில் அந்த முத்துப் பல்லக்கு இறக்கப்படுகிறது...

வீரர்கள் அனைவருமே பசவராஜின் வீட்டுக்கு மரியாதை செலுத்துவது போல அல்லது அவ்வாறு செலுத்த வேண்டும் என்கிற திப்பு சுல்தானது ஆணையைச் சிரமேல் தாங்கியவர்களைப்போல குதிரைகளின் மீதிருந்து இறங்கிக் கொள்கின்றனர். அவர்களுள் தலையான இருவர் மட்டும் வீட்டினுள் தலை குனிந்து நுழைகின்றனர்.

இதற்குள் அந்த வீதியே தொலைவில் நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கி விடுகிறது.

வீரர்களிருவர் நுழைவதைக் கண்டு பெரிதாகப் பயந்து போனார்கள் கங்கம்மாளும் மஞ்சுளா தேவியும்.

அவர்களருகே சென்ற அந்தத் தலையான வீரர்கள் இருவரும் தலைப்பாகையைக் கழற்றித் தலை வணங்கினர்.

ஒருவன் வாய் திறந்தான்:

''அம்மா, என் பெயர் சிவராம். நான் நவாப் திப்புசுல்தான் மகாராஜாவின் தூதுவர்களில் ஒருவன். மஞ்சுளா தேவியம்மாளை எங்கள் சுல்தான் மிக்க மரியாதையுடன் அழைத்து வர சொல்லியிருக்கிறார்.''

இப்போது மஞ்சுளா தேவி அதிகப்படியாகவே அரண்டு மருண்டு, அதிர்ந்து போனாள்.

கங்கம்மாள் கேட்டாள்: ''ஏன்?''

''ஏன், எதற்கு? என்கிற காரணம் எங்களுக்குத் தெரியாது. அழைத்துவரச் சொல்லி ஆணை!''

அங்கம் முழுவதும் பங்கப்படுவதுபோல அதிர்ந்துபோன மஞ்சுளாதேவி, சற்றே துணிவை வரவழைத்துச் சொன்னாள்:

''மறுத்தால்...?''

அவளது குரலில் வெம்பி வெடித்த வேதனை பீறிடுகிறது...

சிவராம் பதிலளித்தான். ''சிறையெடுக்க நேரிடும். கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டு மறுக்காமல் - நாலுபேர் சிரிக்காமல் புறப்படுவீர்கள் என்று நம்புகிறோம்.''

பயந்து, நடுங்கி, ஒடுங்கிப் போன கங்கம்மாள், ''நானும் கூட வருகிறேன்!'' என்றாள்.

''மஞ்சுளா தேவியை மட்டும் அழைத்து வரவேண்டும் என்பது எங்கள் சுல்தானின் ஆணை!''

சிவராம்தான் எவ்வளவு பணிவாகப் பேசுகிறான்...

அவனது குரலிலும் வார்த்தைகளிலும் கன்னட மொழிக்கே உரிய தனிச்சிறப்பான பதமும் இதமும் வெளிப்படுகின்றன.

வேதனையால் ஏற்பட்ட விம்மலை வெளிக்காட்ட முடியாது குமுங்குகிறாள் மஞ்சுளா தேவி. அன்றொரு நாள் கம்பங் கூழையும் திண்டுக்கல் வெங்காயத்தையும் உண்டு ரசித்த திப்புசுல்தானது முகம் நினைவுக்கு வருகிறது! ஆ! அவரது அன்றைய பேச்சு ஒரு நடிப்பு மாதிரிதானோ?

வந்தவர்களுடன் எந்தவித வாதத்தையும் வைத்துக் கொள்ள விரும்பாது - அவ்விதம் வைத்துக் கொள்வதால் வரப்போகிற பயனும் நன்மை விளைவிக்காது என்றுணர்ந்த மஞ்சுளாதேவி, மௌனமாகப் புறப்பட்டாள்.

கங்கம்மாள் 'கோ' வென்றழத் தொடங்கி விட்டாள். அது மஞ்சுளாவுக்குத் தலை வேதனையாக இருந்தது.

''மாமீ! ஏதோ ஒரு விசாரணையை முன்னிட்டு சுல்தான் என்னை அழைத்திருக்க வேண்டும். எதற்காக இந்த அழுகை? வீதியில் பார்ப்பவர்கள் வேறுவிதமாக நினைக்கலாம். எனக்கு எந்தவித அவமரியாதையும் மானக்கேடும் நிகழாது. சுல்தானை நான் நன்றாகவே அறிவேன். தைரியமாக இருங்கள்.''

பொங்கி வந்த துக்கத்தை அடக்க முடியாமல் அடக்கப் பார்க்கிறாள் கங்கம்மாள்.



வெளியே வந்த மஞ்சுளா தேவி, பல்லக்கைக் கவனிக்கிறாள்... எவ்வளவு உயர்தரமான முத்துப் பல்லக்கு...

சுற்றிக் குழுமியிருந்த வீதி மக்களை நோக்குகிறாள்.

'எத்தனை கௌரவமாக என்னை சுல்தான் அழைக்கிறார் பார்த்தீர்களா?' என்பது போலக் கண்களில் பாளையைத் தேக்கிக் கவனிக்கிறாள்...

அமைதியாகப் பல்லக்குள் நுழைந்து அமருகிறபோது, தனது மாமியை நோக்குகிறாள். கண்களின் மூலம் 'அழுது வீதிக்கு அறிவித்து விட வேண்டாம்' என்று சமிக்ஞை செய்தாளேயொழிய, அவளுள் பொங்கிவந்த கண்ணீரை அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

பல்லக்குப் புறப்பட்டது. முன்னும் பின்னும் குதிரைகளில் ஆரோகணித்த வீரர்கள் ஓர் இளவரசியை அழைத்துச் செல்வதுபோல் ஆயுதங்களைத் தாங்கிப் புறப்பட்டனர். வேடிக்கை பார்த்த மக்கள் தங்களுக்குள் புரிந்த தகவல்களை வைத்துத் தாறுமாறாகக் கிழித்தும் ஒட்டியும் விவாதித்துக் கொண்டனர்.

வீட்டினுள் சென்ற கங்கம்மாளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அரசியல் நட்பு வேண்டாம் என்று பன்னிப்பன்னி கூறியும் கேட்காமல் போய்விட்டானே பசவராஜ் என்று தன்னுள் சிலாகித்துக் கொண்டாள்.

லால் மகால் தர்பாரில் வீறுகொண்ட பாவனையுடன் அமர்ந்திருந்த நவாப் திப்புசுல்தானுடைய தோரணையே ஒரு புதிய பாங்கில் காணப்படுகிறது...

வழக்கத்துக்கு மாறாகப் பார்வையும் அசைவுகளும் தென்படுகின்றன. அன்றைய தர்பாருக்கு அனைவரும் வருகை தந்திருந்தனர். மகா சுல்தான் ஹைதர் அலியின் ஆணைப்படி திவான்களும், சாமா ஐயங்கார் போன்ற அதிகாரிகளும் எந்த நிமிடத்திலும் புறப்பட இருந்தனர்.

இத்தனை மாதங்களாக வந்து குவிந்திருந்த முக்கியச் செய்திகளையும், நடந்த நிர்வாகத்தையும், பார்வையிட்டு முடிந்த

பின்னர், தர்பார் கலைய வேண்டியதுதானே? அதை விட்டு வேறு விவகாரங்களைப் பற்றிப் பேசி வீணே காலத்தை கடத்துவதன் உட்பொருள் பெரியசுல்தானாபேகம் பக்ருன்னிஸாவுக்குப் புரிகிறது.

அவன் எதிர்பார்ப்பது மஞ்சுளா தேவியை...!

இதன் மூலம் என்னென்ன உற்பாதங்கள், அசம்பாவிதங்களாக நிகழப் போகின்றனவோ என்கிற கவலை நியாயமாக திவான் பூரணய்யாவுக்கு, பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவுக்கும் ஏற்பட்டது.

திப்புவின் சுல்தானாக்கள் வெறும் பதுமைகளாகத் திரை மறைவிலிருந்து கவனிக்கின்றனர். அவர்களால் அதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? இது தர்பார்; ஜனானா அல்லவே!

சற்றைக்கெல்லாம் மஞ்சுளாதேவியைத் தனது வீரர்கள் அழைத்து வந்துவிட்ட செய்தி தர்பாருக்கு எட்டுகிறது. அவரவர் விழித்த விழிப்பிலும், விளங்கிக்கொண்ட எண்ணத்திலும், உடல்களை அசைத்துக் கொண்ட அசைவுகளிலும்தாம் எத்தனை எத்தனை அர்த்தங்கள் நிறைந்த வித்தியாசங்கள்...

முன்னே இரு வீரர்கள் வர, நடுவே மஞ்சுளாதேவி சொர்ண விக்ரகம் ஒன்று உயிர் பெற்று வருவதுபோல் நடந்து வர, பின்னே இரு வீரர்கள் பாதுகாப்புடன் வருகின்றனர்.

ஒரு கட்டத்துக்கு வந்ததும் வீரர்கள் மண்டியிட்டு மரியாதை செய்து, பின்னர் எழுந்து நின்றனர். மஞ்சுளாதேவியும் நின்றாளே யொழிய, வணங்க வேண்டும் என்கிற நிலை மறந்து சிலையாகிப் போனாள்.

'ஓகோ' வென்றிருந்த அபரிமிதமான வண்ண கோலங்கள் பூண்ட தர்பாரை முதன்முறையாகப் பார்வையிட்டதன் பேரில் பிரமிப்புக்கண்டாளோ? திப்புசுல்தான் அமர்ந்திருக்கும் விலைமதிக்க முடியாத தங்காசனமான - தட்டையாகப் பலகைபோல அகன்று, அதன் ஒவ்வொரு முனைகளிலும் புலித் தலைகளின் கண்களில் வைரத்தை இழைத்துப் பிரகாசிக்கும் புதுவிதமான புலியாசனப் பீடத்தைக் கண்டு வியந்து போனாளோ? அல்லது திப்புவின் தலையில்



அணிந்திருந்த விசித்திரத் தலைப்பாகையின் மேலே நீண்டு வளைந்து நவரத்தினங்களைக் கொண்டு ஜொலிக்கும் 'கல்கிதுர்ரா' என்கிற ஆபரணத்தைக் கண்டு விதிர்த்துப் போனாளோ?

''சாந்தே மெஹத்தாப்...'' என்று தன்னுள் சற்று உரத்த குரலிலேயே புகழ்ந்து வருணித்துக் கொள்கிறான் மூக்கில் வியர்த்த திவான் சாகிப் மீர்சாதிக்.

இதனைச் செவி சாய்த்த மஞ்சுளாதேவி, இதன் அர்த்தம் புரிந்து அசூயை கலந்த வெருண்ட பார்வையுடன், 'நிலவைப் போன்ற முகலாவண்யம்' என்று அடுத்தவளை வருணிக்கிற 'இந்தச் சைத்தான் யார்?' என்பது போல் எரிச்சலுடன் நோக்குகிறாள். அவளுக்குத்தான் உருது தெரியுமே!

திப்புசுல்தானுக்கே அந்த வருணனை மிகவும் அருவருப்பைத் தூண்டியது.

''திவான் மீர்சாதிக்! அடுத்தவன் மனைவியை வருணிப்பது அநாகரிகம்!'' என்று திப்புசுல்தான் கூறியதும், ஏதோ விவகாரம் முற்றுகிறது என்ற அளவில் பயந்துபோனாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா.

பலர் சூழ்ந்த தர்பாரில் தன்னை அவமதிப்பதுபோல இவ்வாறு எரிச்சலுடன் திப்புசுல்தான் கேட்டது, அவமானம் மாதிரிப்படவே, ''நான் அடுத்தவன் மனைவியை வருணிக்கவில்லையே! பொதுவாக ஒரு பெண்ணின் முகத்தைப் பாராட்டினேன்'' என்று வெட்டித் துண்டிப்பது போலப் பதிலளித்தான் திவான் சாகிப் மீர்சாதிக்.

''இவள் பசவராஜின் காதலி! மனத்தால் புருஷனாக வரித்துக் கொண்டவள்!''

''இவள் நல்ல ஒரு புருஷனை வரித்துக் கொண்டிருந்தால் நான் இவளை ரசித்து இருக்கமாட்டேன். எங்கள் சுல்தானின் காதலியை அபகரித்துக் கொண்டோடிய துரோகியின் காதலி!''

தர்பாரில் சிறு நகைப்பொலியிழைந்த சலசலப்பு...

''மூடுங்கள் வாயை!''

என்று இரைகிறான் திப்புசுல்தான். தர்பார் ஊசி விழுந்தால் ஓசை கேட்கிற அளவுக்கு அமைதியில் ஸ்தம்பிக்கிறது...

திப்புவின் குரல் நெருப்பாய் ஒலிக்கிறது.

''துரோகி என்பது யாராலும் பூரணமாக நிரூபிக்கப்படவில்லை. இங்கே இவ்வாறு யாராவது சாட்சிபூதமாக நிரூபிக்க முடியுமா? அப்படி நிரூபிக்காத வரை இவளையோ, இவளது காதலன்-அதாவது எனது நண்பனையோ அநாகரிகமாகவோ, அவதூறாகவோ பேச யாருக்கும் அருகதை கிடையாது; அதிகாரமும் கிடையாது. பிறர் மனைவியை அல்லது காதலியை இவ்விதம் தர்பாரில் அநாகரிகமாக வருணித்ததற்காக அவளிடம் மன்னிப்புக் கேளுங்கள் திவான் மீர்சாதிக்!''

திவான் சாகிப் மீர்சாதிக் மௌனம் சாதிக்கிறான்...

''ம்ம்! மன்னிப்பு கேளுங்கள் மீர்சாதிக்!''

மௌனம்...

''திப்பு! இது அவசியந்தானா!'' என்று இடைபுகுந்தாள், எங்கே! நிலைமை மோசமாகி விடுமோ என்று பயந்த பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா.

''அவசியந்தான் அம்மாஜான்! ஓர் இந்துப் பெண்ணை, ஓர் இசுலாமிய ராஜகுமாரன் தனது தர்பாருக்கு அழைத்து வந்து இழிவுபடுத்தினான் என்கிற அபவாதம் சரித்திரத்தின் எந்தப் பக்கத்திலும் ஏற நான் சம்மதியேன்! இதே நேரத்தில் ஓர் இசுலாமியப் பெண்ணை ஓர் இந்து கேலிசெய்து தரக்குறைவாக நடந்து கொள்வானேயானால் அவனைத் தோலுரித்துத் தொங்கப் போடவும் தயங்கேன். மீண்டும் சொல்லுகிறேன்; எனது ஒரு கண் இசுலாமியர் என்றால், மறுகண் இந்து! இந்தப் பரந்த மண்ணை இந்த இரண்டு மதங்கள்தாம் கடைசிவரையிலும் காக்க முடியும்? எனவே, மதத்தால் வேறுபட்டாலும், மானுஷ்யத்தால் ஒன்றுபட்டவர்கள் நாம் என்பதைத் திப்புசுல்தான் நிரூபித்தே தனது கதையை முடித்துக் கொள்வான்! அதே நேரத்தில் அந்நிய இனம் குமரிமுதல் இமயம்வரை நுழைய இந்தத் திப்புசுல்தான் சாகிறவரையில் சம்மதிக்க மாட்டான். எனது நண்பனின்



காதலி என்பதற்காக இவளிடம் மன்னிப்புக் கேட்கச் சொல்லவில்லை. புனிதமான இந்துமதத்துக்குரிய பெண்ணைத் தரக்குறைவாக வருணித்ததால் மன்னிப்புக் கேட்கச் சொல்லுகிறேன். திவான் மீர்சாதிக் மன்னிப்புக் கேட்பது நமது மதப்பண்புக்குப் பெருமை தரும்!''

திப்புவின் இந்த நீண்ட பண்பாட்டுப் பிரகடனத்தைக் கேட்டுத் தர்பாரே ஒரு கொலுப் பொம்மைக் காட்சி போல் ஸ்தம்பித்துக் காணப்பட்டது.

பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா அந்த அமைதியைக் கலைத்தாள்:

''திப்பு! உனது இந்தப் பண்பாட்டுப் பிரகடனம் மகிழ்ச்சியே தருகிறது! ஆனால் நீ மட்டும் இவளைச் சிறையெடுத்து வரலாமா? இது மட்டும் புனிதமானதாகுமா? நியாயமானதாகுமா? தர்மமான தாகுமா?''

அன்னையை அர்த்த பூர்வமாகக் கூர்ந்து கவனிக்கிறான் திப்புசுல்தான். திவான் மீர்சாதிக் மீசையை முறுக்கிவிட்டுக் கொள்கிறான்.

திப்புசுல்தான் பதிலளித்தான். ''ஏன் இவளைச் சிறையெடுப்பு என்ற பெயரால் இங்கு அழைத்து வரச்செய்திருக்கிறேன் என்பது உங்களில் யாருக்காவது தெரியுமா?''

''ஏன், மகனே?''

''திவான் மீர்சாதிக் மன்னிப்புக் கேட்கட்டும்; விளக்குகிறேன்!''

வேறு வழியே தெரியாது விழித்த பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா, திவான் சாகிப் மீர்சாதிக்கை நோக்கி ''தயவுசெய்து மன்னிப்புக் கேட்டு விடுங்கள் திவான் சாகிப் மீர்சாதிக்!'' என்றாள். அவளது குரலில் 'மறுக்க வேண்டாம்' என்பது அழுத்தமாக எதிரொலிக்கிறது.

திவான் சாகிப் மீர்சாதிக்கின் மீசை குமுறலுடன் துடிக்கிறது. அவனது நாவசைந்தது:

"ஒரு விஷயத்தை இங்கு யாரும் கவனிக்கவில்லை. நமது சுல்தானைக் கண்ட இவள் மரியாதை செலுத்தாது நின்றாள். மரியாதை தெரியாத இவளிடம் நான் மன்னிப்புக் கேட்பது என்ன நியாயம்?"

ஏதோ அடிவேரான ஒன்றை பற்றி உலுக்குவது போல எண்ணிய திவான் சாகிப் மீர்சாதிக் மீசையைத் திருகிக் கொள்கிறான், மஞ்சுளா தேவி வருகிறபோது, வீரர்கள் மரியாதை செய்தபோது இவள் மமகாரமாக நின்றதை மிகவும் சமத்காரமாகச் சுட்டிக் காட்டி விட்டதாக ஒரு நிமிர்வு காண்கிறான்.

திப்புசுல்தான் கூட ஒருகணம் அந்த விஷயத்தில் தயங்கி போனான். ஆயினும் சமத்காரத்துக்கே ஒரு சண்டமாருதன் போலப் பதில் சொன்னான்:

"உடன்பிறந்த தங்கையானவள் அண்ணனை வணங்கினாலும் ஒன்றுதான்; வணங்காவிட்டாலும் ஒன்றுதான்! இது ஒரு பெரிய விஷயமாகாது. இதை நான் எதிர்பார்க்கவுமில்லை."

பாசத்தின் பாற்பட்ட ஒரு வேகச் சுழிப்புடன் நவாப் திப்புசுல்தான் இவ்விதமாகக் கூறிமுடித்த மறுகணம்...

தன்னை மறந்த புளகப் புல்லரிப்புடன் சாஷ்டாங்கமாக... அட்டங்கமும் நெட்டங்கமுமாகத் தரையில்பட "அண்ணா" என்று அழைத்து, அவ்வாறு அழைத்த குரலில் காதலனைப் பிரிந்த குமுறலைத் தேக்கிக் கண்ணீர் மல்க விழுந்து, வணங்கி மரியாதை செலுத்துகிறாள் மஞ்சுளா தேவி.

இது தர்பார் என்றும் நினையாத திப்புசுல்தானின் துக்கம் கவிந்த கண்களில் நீர் திரையிடுகிறது...

## 24

**த**ன்னையறியாமலும் பிறர்க்குப் புரியாமலும் கலங்கிய கண்களில் நீரை, தர்பாரில் பிறர் அறியத் துடைத்துக் கொள்வதே தனது ராஜரிகமான தோரணைக்கு ஓர் அவமானம் போலக் கருதி, இமைகளாலேயே அந்த நீர்த் திரையை ஒற்றி விலக்கி ஒன்றுமே



ஏற்படாதது மாதிரி காட்டிப் பொய்யான பாவனையுடன் உதடுகளை நீவிவிட்டு, ஒரு நடிகனைபோலத் தன்னை முன்னிருந்த மெய்ப்பாட்டுக்கு ஆயத்தமாக்கிக் கொள்கிறான் திப்புசுல்தான். தனது மகாலில் ஆடல் பாடல்களை நேமித்து அவற்றை ரசிப்பதிலும் ஆர்வம் காட்டுவதிலும் அவன் ஒரு மகாகலைஞனாயிற்றே! குறிப்பாக நாடகமென்றால், அதற்காக அவன் காட்டுகிற ஆதரவு, பெரிய சுல்தானா பேகத்துக்கே பல சமயங்களில் எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. பல நடிகர்களும் கலாமேதைகளும் அவனால் நிறைவுகண்டு வாழ்ந்து வருகிறார்கள் என்றால் இந்தக் கண்ணீர் நாடகத்தை அவன் தனது பொய்யான பாவனையில் மறைத்ததில் வியப்பொன்றுமில்லை.

எதிரே சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கும் மஞ்சுளாதேவியைப் பலரும் பல கணங்களேனும் கவனிக்கட்டுமே என்று மௌனமாகச் சோதிக்கிறான். ஆ! இந்த மஞ்சுளாதேவியின் மனக்குமுறல் எத்தகையது என்று எண்ணிப் பார்க்கிறான்; தர்பாரையும் எண்ணிப் பார்க்க அவகாசம் கொடுக்கிறான்...

பொதுவாகவே காதலானது...

பரிசுத்தமான பொய்கையின் தண்ணீரில் அரும்பி, பவித்திரமான உறவின் கண்ணீரில் மலர்ந்து, பலவிதமான தொல்லைகளுக்குட்பட்டுத் துன்பியலாய் முடிந்து, பன்னீர் மணக்க அமரத்துவமடைவதுதானே காவியக் காதல்...

காதலித்தவர்களுக்குத்தான் அதன் சூத்திரம் தெரியும்; வெறும் சோபனத்துக்காகக் கடிமணம் புரிந்து கொள்பவர்களுக்கு இதன் பதவுரை பொழிப்புரை தெரிய நியாயமில்லை.

ஒரு விநாடி ரங்கநாயகியை நினைத்துப் பார்க்கிறான்...

அடுத்த விநாடி, தரையில் விழுந்து நமஸ்கரித்துக் கொண்டிருந்த மஞ்சுளா தேவியை நோக்கி, "போதும் எழுந்திரு மஞ்சு!" என்கிறான்.

ஒருவித உணர்வில் தோய்ந்த பாசத்தின்பாற்பட்ட நிலையில் தனது துன்பியல் பாவனையைப் புதைத்து, அதை மீண்டும் உயிர் பெறச் செய்து தன்னிலையடைந்து எழுந்து கொள்கிறாள்

மஞ்சுளாதேவி. கலங்கிக் குளமாயிருந்த கண்களை இடது கரத்தின் புறப்பாகத்தால் துடைத்துக் கொள்கிற போது, அவளது உள்ளக் கேவலைத் தனதாக்கிக் கொண்டனபோல் வளையல்கள் குலுங்கி அழுகின்றன.

''மஞ்சு! உன்னை ஏன் இங்கு அழைத்துவரச் செய்தேன் தெரியுமா?'' என்று கூறி, எதை நினைத்தோ சற்றே தயங்கி, முதலில் திவான் சாகிப் மீர்சாதிக்கை நோக்கிப் பின்னர் சபையில் உள்ளவர்களைக் கவனிக்கிறான். சொல்லவந்ததைச் சொல்லி முடித்த பிறகு, இந்தத் திவான் சாகிப் மீர்சாதிக் மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டால்...

மறுக்குமளவுக்கு அவ்வளவு தைரியம் வந்துவிடப் போகிறதா? அதையும் பரிசீலித்துப் பார்த்துவிடலாமே என்கிற தீர்க்கமான முனைப்புடன் சொல்ல வந்ததைச் சொல்லியே முடிக்கத் தொடர்ந்தான்:

''மஞ்சு, என் அருமை சகோதரி! உன் காதலன் பசவராஜ் எனது காதலியை - ரங்கநாயகியை பலாத்காரமாக அபகரித்துக் கொண்டு போனான் என்பதற்காக பழிக்குப் பழிவாங்க உன்னை சிறையெடுத்து வரவில்லை. பாதுகாக்கவே உன்னை அழைத்து வரச் சொன்னேன். உன் காதலன் பசவராஜ் என்றைக்கு ஸ்ரீரங்கபட்டினத்துக்குத் திரும்புகிறானோ, அன்றைக்கு அவனிடம் உன்னைப் பத்திரமாக - ஒரு பொக்கிஷமே போல ஒப்படைப்பேன்! உன்னைத் தனியே விட்டு வைத்தால், எனது ரங்கநாயகிக்கு வந்த ஆபத்து உனக்கு வரும் என்பது திவான் மீர்சாதிக் உன்னை வருணித்ததிலிருந்தே புரிந்து கொண்டேன் என்பதல்ல; ஆர்க்காட்டை விட்டுப் புறப்படுகிறபோதே புரிந்துகொண்ட விஷயம் இது. இக்கண முதல் நீ எனது அந்தரங்கத்துக்குரிய ஜனானாவில் தக்க பாதுகாவலுடன் சௌக்கியமாக இருப்பாயாக! உனக்கான சகல வசதிகளும் செய்து தர ஆணையிடுவேன். உனது சைவ உணவுக்கு எந்தவித பங்கமும் நேரிடாது. இந்த லால் மகாலில் எவராவது உனக்குத் தீங்கு செய்ய நினைத்தால், அவரது நினைத்த நெஞ்சுக்குள் எனது வாள் சத்தியமாக நுழைந்துவிடும்! நினைத்தால் இப்படி; தீங்கே செய்து விடுவார்களே யானால் இந்த லால்மகாலையே துகளாக்கி, உன்னைப் போட்டுப் புதைப்பேன்! இந்த எனது ராஜபிரகடனத்தை உனது முன்னிலையில் பறைசாற்றவே உன்னை இந்தத் தர்பாருக்கு வரவழைத்தேன்!''



மஞ்சுளாதேவி மெய்மறந்து கண்களை மூடிக் கரம் கூப்புகிறாள். அவளது இமை மூடிய கண்களில் நீர்முத்துக்கள் வரிசை கட்டிச் சிந்துகின்றன.

நவாப் திப்புசுல்தானின் இந்தப் பிரகடனத்தைக் கேட்டு அந்த லால் மகாலின் சுவர்களும், தூண்களும் கூட நடுநடுங்கிப் போயினவென்றால்...

மீண்டும் திப்புசுல்தானின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

''திவான் மீர்சாதிக்! நோக்கத்தை விளக்கிய பிறகாவது நுட்பத்தை உணருவீர்கள் என்று கருதுகிறேன். மன்னிப்புக் கேளுங்கள்.''

அடுத்த விநாடியே...

எழுந்து நின்ற திவான் சாகிப் மீர்சாதிக், கொஞ்சமும் தயங்காது பயத்தின் காரணமாகவே அல்லது பதுங்கிப் பாய்கிற புலியின் தந்திர பாவனையின் காரணமாகவே ''மஞ்சுளாதேவி! என்னை மன்னிக்கவும்!'' என்று கூறி அமருகிற போது, பெருமிதத்துடன் கவனிக்கிறான் நவாப் திப்புசுல்தான்.

''மகிழ்ச்சி, திவான் மீர்சாதிக்! தந்தையார் உத்தரவுப்படி யார் யாரைக் கூப்பிட்டு எழுதியிருக்கிறாரோ, அவர்கள் என்றைக்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் புறப்படலாம். இந்த உத்தரவு எனக்குத் தேவையற்றது என்று நான் முதலில் நினைத்தாலும், அது தேவையே என்று நீங்கள் எதிர்பார்த்ததால் அளிக்கிறேன். நீங்கள் அனைவருமே புறப்படுவதால் ஸ்ரீரங்கப் பட்டினத்துக்கு எந்தவித அபாயமும் நெருங்கிவிடப் போவதில்லை. இந்தத் திப்புசுல்தான் ஒருவனே போதும்! அவனை அசைத்துப் பார்க்கிற வல்லாதி வல்லவன் இன்னும் பிறக்கவில்லை என்று எனது நண்பன் பசவராஜ் எப்போதோ கூறியதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்; நினைவுப் படுத்துகிறேன்.''

நவாப் திப்புசுல்தானின் குரலில் ஒரு நியாயமான - தன்னிறைவு புரிந்த சுயம்புவான அகங்காரம் ஒரு தன்னம்பிக்கையே போன்று எதிரொலிக்கிறது...

அரியணையிலிருந்து எழுந்து நடந்து வந்து, மஞ்சுளா தேவியை ஒருமுறை நோக்கி, ''எந்தவித பயமோ, தயக்கமோ இன்றி இங்கே நீ தைரியமாக ஒரு மகாராணிபோல உலவி வரலாம். உனது சுதந்திரத்துக்கு இங்கே ஊர்ந்து செல்லும் சிற்றெரும்புகூடப் பங்கம் விளைவிக்க நினைக்காது; நினைக்கவும் கூடாது'' என்று கூறுகிறபோது, ஆ! இவன்தான் திப்புசுல்தானோ என்று சில நெஞ்சங்கள் நினைத்துப் பெருமிதப்படத்தான் செய்தன.

கொஞ்ச நேரம் தயங்கி நின்ற மஞ்சுளாதேவி, ''நான் உங்களை ஒன்று கேட்கலாமா அண்ணா!'' என்றாள்.

''தாராளமாகக் கேள் மஞ்சு!''

''அவரை-உங்கள் நண்பரை நீங்களும் சந்தேகிக்கிறீர்களா என்பது உங்கள் பேச்சிலிருந்து என்னால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.''

சில விநாடிகள் வரை உற்றுக் கவனித்த திப்புசுல்தான், ''சத்தியமாகச் சந்தேகிக்கவில்லை சகோதரி! எனது காதலியை நானறிவேன்; அவளைவிட எனது ஆருயிர் நண்பனை மிக மிக நன்றாக அறிவேன்!'' என்று கூறுகிறபோது, அவனது கண்கள் நன்றாகவே கலங்கிவிட்டன. ஆனால் அந்த வார்த்தைகளைத் தொலைவிலிருந்தும் மறைவிலிருந்தும் செவிமடுத்த ஓரிருவர்...

கதி கலக்கம் கண்டு பீதியடைந்தனர்.

**அ**ன்றையப் பகல் உணவை வழக்கம் போலவே அறிவு ஜீவிகளுடன் கலந்துண்டான் திப்புசுல்தான். பக்கத்தில் பெரிய குமாரனையும், மடியில் இரண்டாவதாகப் பிறந்த - ருக்காய்யா பானு பெற்றெடுத்த சிறிய குமாரனையும் அமர்த்திக் கொண்டு அவன் உணவு உண்ணுவதைத் தொலைவிலிருந்து பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவும், ஏனைய ருக்காய்யா பானு, ரோஷனா பேகம், பேகம் சுல்தானா ஆகிய மனைவிமார்களும் கவனித்து மகிழ்ந்தனர்.



ஓ... திப்பு தனது கவலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடுகிறான்; போகப் போகச் சரியாய் போய்விடும் என்று நிறைவு கொள்கிறாள் அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா.

உணவு முடிந்ததும் நேரே ஜனானாவை நோக்கி நடந்தான் நவாப் திப்புசுல்தான். வழக்கமாக உண்டதும் ஓய்வு கொள்வது அல்லது உறக்கம் கொள்வது அவனது பழக்கம். அதற்கு முரண்பட்டு ஜனானாவை நோக்கிச் சென்றது பலருக்கும் விழி பிதுங்கும் ஆச்சரியத்தை விளைவித்தது.

நவாப் திப்புசுல்தான் வருவதையறிந்த ஜனானா, அமைதி கண்டு, ஒதுங்கிப் பதுங்கிப் பார்வையிடுகிறது...

போகிற வழியிலேயே பணிப்பெண்களிடம் மஞ்சுளா தேவியைக் குறித்துக் கேட்டுத் தெரிந்து கொள்கிறான். அவனது கண்காணிப்பின் ஆரம்பமாக அது தெரிகிறது...

தனக்கென அளிக்கப்பட்ட அறையில் அதுவரை குப்புறப் படுத்துக்கொண்டு கண் கலங்கியவாறிருந்த மஞ்சுளாதேவி, திப்புவின் வருகையறிந்து, கண்களைத் துடைத்துக்கொண்டு எப்போதும் போல இருப்பவள் மாதிரி பாவனை செய்தாள். திப்புசுல்தான் உள்ளே நுழைந்ததும் எழுந்து நின்றாள்.

எதிரே இருந்த ஆசனத்தில் அமர்ந்த திப்பு, மஞ்சுவைக் கூர்ந்து ஆழத்துடன் பரிசீலித்து, ''மஞ்சூ! சாப்பிடவில்லையாமே! ஏன்?'' என்று கேட்கிறபோது, அவனது குரலில் வெளிப்பட்ட கரிசனம், அன்பிலிருந்து பிரிந்த கிளை போலத் துளிர்க்கிறது...

''சாப்பாடு பிடிக்கவில்லை'' - மஞ்சுளாதேவி தனது தலையை நிமிர்த்தாமலேயே மெல்லிதான குரலில் இவ்விதம் கூறியதும், அவளைத் தொடர்ந்து திப்புசுல்தான் பேசினான்:

''காதலனுடைய பிரிவால் இந்த உண்ணாவிரதம் என்று என்னால் சொல்ல முடியாது. ஏனென்றால் அந்தச் செய்தி, பரவி, ஆறு மாதங்களுக்கு மேலாகிறது! ஆகவே, உனது உண்ணாவிரதத்துக்கு வேறு காரணம் இருக்க வேண்டும்!''

இப்போதுதான் நிமிர்ந்து நோக்கிக் கவனிக்கிறாள் மஞ்சுளாதேவி.

''என்னைவிடவா நீ காதலில் துன்பப்படுகிறாய் மஞ்சு! நீ வெளியில் காட்டிக்கொள்கிறாய்; நான் உள்ளூர ரகசியமாகக் குமுங்கிக் கண்ணீர் மல்குகிறேன்! எனது ரங்கநாயகி இல்லாத ஒவ்வொரு கணமும் நான் அணு அணுவாக எவ்வளவு சித்திரவதைப்படுகிறேன் தெரியுமா.''

திப்புசுல்தான் தனது கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொள்வதைக் கவனித்த மஞ்சுளாதேவி, தனது துயரங்களெல்லாம் வெடிப்பன போல விசும்பியழத் தொடங்கி விட்டாள்.

'ஆ! கொஞ்ச நேரத்தில் எவ்வளவு பலவீனனாய் விட்டேன்?' என்று எண்ணிப் பார்த்த திப்புசுல்தான், ''மஞ்சு, விரைவில் நான் எனது காதலியை அடைகிறேனோ இல்லையோ? உனது காதலனை எப்படியும் கண்டுபிடித்துக் கொண்டுவந்து அவனுக்குப் பல ஜாகீர்களை வழங்கி இந்த எனது ஆட்சியின் புதிய திவானாக்கி, உன்னை மணம் செய்வித்து ஆசீர்வதிப்பேன்! இது என் ஆண்டவன் மீது சத்தியம்! இனியும் நீ சாப்பிட மறுப்பாயேயானால், நீ என்னை அவமானப்படுத்துவதற்கு ஒப்பாகும். உனக்காகவே தனியான இடத்தில் பிராமணர்களைக்கொண்டு சமைத்து, ஒருவரை ருசி பார்க்கச் செய்து, அது தீங்கற்ற உணவுதான் என்று பரிசீலித்து, பின்னர்தான் கொண்டு வரவேண்டும் என்று ஆணை பிறப்பித்த இந்தச் சகோதரன், உனது நலனில் எத்தனை அக்கறை கொண்டிருக்கிறான்! போய்ச் சாப்பிடு மஞ்சு!''

மஞ்சுளாதேவி தனது சேலைத் தலைப்பில் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.

''பசவராஜின் தாயைப்பற்றி உன்னைவிட எனக்கு அக்கறை அதிகம். வேண்டிய காவலையும் சௌகரியங்களையும் செய்து தந்திருக்கிறேன்.''

ஓ... திப்புசுல்தானின் செயல், மானுஷ்யத்தின் எல்லையில் நிற்கிறது...



மஞ்சுளாதேவிக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. அவள் இரு கரம் கூப்பி வணங்குகிறாள்.

மெல்லத் தன்னுணர்வடைந்து, தன்னிறைவு கண்டு, தன்னுள் ஒரு தீர்மானத்துடன் சாப்பிடச் சென்றாள் மஞ்சுளா தேவி. திப்புசுல்தானிடம் அவளுக்குப் பரிபூரண நம்பிக்கை விழுதுவிட்டுப் பூமியைத் தொட்டது.

**மா**லைவரை ஓரளவு ஓய்வு கண்ட பின்னர், நவாப் திப்பு சுல்தான், தொழுகையை இனிது முடித்துத் தனது திடகாத்திரமான வெண்புரவியில் ஆரோகணித்துப் புறப்படுகிறான். அவன் அவ்விதம் துணையின்றிப் புறப்படுவது சரியில்லை என்பதை உணர்ந்த அவனது அந்தரங்கச் செயலாளன் ஹபிபுல்லா, மிகவும் ரகசியமாகத் தன்னுடன் சில வீரர்களை அழைத்துக் கொண்டு பின் தொடர்ந்தான். திப்புவின்பால் அன்பு கொண்ட எவரும் ராஜ விசுவாசத்தின் அர்த்தங்களாய்த் திகழ்ந்தனர். சற்று நேரத்தில் திவான்களும் சில அதிகாரிகளும் ஹைதர் அலியின் படைமுகாம் நோக்கிப் புறப்பட விருக்கிறார்கள் என்பது பற்றிக்கூட அக்கறை கொள்ளாமல், இளைய சுல்தான் எங்கு புறப்பட்டுச் செல்கிறார் என்பதில் மிகவும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருந்தான் ஹபிபுல்லா.

வெண்புரவியை வேகமாகச் செலுத்திச் சென்ற திப்புசுல்தான், நேரே அந்தப் பாழடைந்த மண்டபத்தை நாடிச் சென்று, பல நிமிடங்கள் வரை அப்படியே மலைத்துக் கவனிக்கிறான்.

இடிந்துபோன தூண்கள்; ஓரியாக நின்றபாவை விளக்கு; மூளியாகிப்போனது போன்ற பின்னணி...

தனது இதயமாகிய மண்டபம் ஆர்க்காட்டிலேயே சிதிலமாகி விட்டதையுணர்கிறபோது அவனது கண்கள் பனிக்கின்றன.

குதிரையை விட்டிறங்கி மண்டபத்தை நோக்கி நடக்கிறான், பற்பல நினைவுகள்...

பாவை விளக்கை ஏற்றலாமா என்று அருகில் சென்று கவனிக்கிறான்...

காய்ந்து கருகிப் போன திரிதானிருக்கிறது...

ரங்கநாயகி அந்தத் திரிமுனையில் ஒளிச்சுடராய் நின்று சிரிக்கிறாள்...

எங்கிருந்தோ சிரிப்பொலி கேட்கிறது...

கூர்ந்து கவனிக்கிறான்...

மீண்டும் அதே சுநாதம் நிறைந்த ரங்கநாயகியின் சிரிப்பொலி...

அந்தச் சிரிப்பொலியினூடே அவள் அடிக்கடி அன்பால் அழைக்கும் 'மன்மத சாகிப்' என்ற சொல், ரதிசுல்தானா குரல் போலக் காதுகளில் ரீங்கரிக்கின்றன...

ஓ... எல்லாமே வெறுமை பிரமை...

அந்த மண்டபத்தில் அவர்கள் பேசிய பேச்சுக்கள், செய்து மகிழ்ந்த மாசற்ற குறும்புகள், குதூகலித்த சிரிப்பொலிகள், நையாண்டி நிகழ்ச்சிகள்...

கண்முன் கனவாய், கவிதையாய், கவின்மிகு சித்திரமாய் விரிகின்றன...

"ஓ... ரங்கநாயகி!" என்று ஓங்கி வானை முட்டுமளவுக்கு இரையலாமா என்றும் பைத்தியம் பிடித்தவன் மாதிரி நினைத்துப் பார்க்கிறான்...

கத்திப் பார்த்தால்தான் என்ன?

அப்போதாவது மனப்பாரம் - தாங்க முடியாத சுமை - காதலின் பளு சற்றேனும் குறையாதா என்கிற ஏக்கம்; எதிர்பார்ப்பு...

அவன் அவ்வாறு அவளது திருநாமத்தைச் சத்தமிட்டு முழங்க எண்ணுகிற போது...

ஸ்ரீரங்கநாதர் கோயிலின் அந்தி காலப் பூஜையின் மணியோசை...

டாங், டாங், டாங்...



## 25

**பே**டனூர் என்றும் மூங்கில் நகர் என்றும் காலம் மாறுபாட்டுக் கேற்பவும் காவலர் வேறுபாட்டுக் கேற்பவும் அழைக்கப்பட்ட அழகு வாய்ந்த ஹைதர் நகர், ஒரு சரித்திரப் பெருமை வாய்ந்ததேயாகும். இல்லையென்றால், ஒரு காலத்தில் ஹைதர் அலி, இந்நகரையே தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்த விழைந்திருப்பாரா? அதற்கான காரணங்கள் வேறு! கதையே வேறு!

சுருங்கச் சொன்னால் ஹைதர் அலியின் சுதந்திர சாம்ராஜ்யக் கனவுக்கே அழுத்தமாக ஓர் அஸ்திவாரமிட்டது இந்தப் பேடனூர் வெற்றிதான்! ஓர் இருபதாண்டு கால இடைவெளியில் மலர்ந்த ஜயபுஷ்பம்தான் இந்த ஹைதர் நகர். பேடனூரை நாயக்கவமிசம் மூங்கில் நகராக்கியது. இஸ்லாமிய வமிசம் ஹைதர் நகராக்கியது. இந்த ஜயக் கொடியின்கீழ் குவிந்த செல்வமான ஒன்னறைக்கோடி பொன்தான் ஹைதர் அலியை மிகுந்த துணிச்சலுடன் தலைநிமிரச் செய்தது.

வலி மிகுந்த கோட்டை பலம்; வனப்பு மிகுந்த அரண்மனை; வாயைப் பிளக்க வைக்கும் வெடிமருந்துச் சாலை; வாழ்வைச் சொர்க்கமாக்கும் நாணயத் தம்பட்டசாலை போன்ற இன்னும் பல எத்தனையோ சிறப்புகளைக் கொண்ட அந்தப் பகுதி, வீரமிக்க மலைஜாதி மக்களால் - வேட்டுவர்களால் சூழப்பட்டது. இப்பேர்ப்பட்ட இயற்கை எழில்மிக்க மலரை, தமது தலைப்பாகையின் முன்பகுதியில் செருகிக் கொள்ள ஹைதர் விழைந்ததில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?

ஆயினும் ஸ்ரீரங்கப்பட்டினத்தையே தலைநகராகக் கொண்டார். ஏன்?... மைசூர் உடையார் வமிசம் எந்த வினாடியிலும் தலைதூக்கலாம். மகாராஜ தந்திரியான திருமலைராவிடம் இருந்த பயம், ஹைதரை ஸ்ரீரங்கப்பட்டினத்திலேயே தங்க வைத்தது. ஹைதர் நகர் பிற்காலத்தில் ஓய்வு கொள்ள உதவும் என்று மேலும் அழகுபடுத்தியதோடல்லாது தனிப்பட்ட இரகசியங்களைப் பாதுகாக்கவும் அந்த நகரைத் தமது நேரடிப் பார்வையில் பராமரித்து வந்தார்.

ஹைதர் நகரின் பெயர் போன சிறைக்கூடத்தின் ஒவ்வொரு வரிசையும் மிகவும் ரகசியமானவை. ஹைதர் அலியைத் தவிர்த்து வேறு எவருமே நுழைந்து துணிச்சலுடன் ரகசியங்களை ஆராய முடியாது. சின்ன வயதில் திப்புசுல்தான் இந்நகருக்கு வந்திருக்கிறான். அதுவும் எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டிப் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவையும் திப்புசுல்தானையும் இங்கே அனுப்பி வைக்க நேர்ந்தபோது! அப்போது திப்பு சிறுவன். அதன்பிறகு ஹைதரே இரண்டொரு முறைதான் வருகை தந்திருக்கிறார்.

பேடனூரைச் சார்ந்த சுற்றுவட்டத்திலுள்ள கோட்டைகள் யாவும் ஹைதர் அலிபால் மண்டியிட்டுச் சரணடைந்தவையே! அத்தனைக்கும் தனிப்பெரும் ஆளுநராக நேமிக்கப்பட்டிருந்தான் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஷேக் அயாஸ்கான். அவனது வலிமை மிக்க கரங்களின் பத்துவிரல்களுக்குள்ளே பத்துக் கோட்டைகள் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தன.

அந்தி சாயும் நேரத்தில் ஆளுநர் அயாஸ்கான், சிறைக் கூடத்தைப் பார்வையிடப் புறப்பட்டான். பசவராஜ், ரங்கநாயகியின் வருகைக்குப் பிறகே இந்தச் சிறைக்கூடத்துக்கு அயாஸ்கானே நேரில் வந்து கவனிக்கிற பெருமை ஏற்பட்டது. அவனது அக்கறையில் ஹைதரின் சிம்மசொப்பனம் கர்ஜித்துக் கொண்டிருந்தது.

பணியாளர்கள் விரைந்து விளக்குகளை ஏற்றிக்கொண்டிருக் கிறார்கள். ஆளுநர் புறப்பட்டு விட்டார் என்கிற செய்தி அவர்களுக்கு எட்டி விட்டது. இதற்கு முன்னே சோம்பேறிகளாய் இருந்து விட்டவர்கள். அந்தச் சிறைக் கூடத்தின் துர்நாற்றமும், இரவு வந்ததும் கரிய இருட்பயமும்...

ஆ! எத்தனை கைதிகள் தைரியமற்றும், முடைநாற்றம் தாங்க முடியாமலும் நெஞ்சு வெடித்தும் தற்கொலை செய்து கொண்டும் இறந்திருக்கிறார்கள்...

இப்போது அந்த இரண்டும் - துர்நாற்றமும் இருட்பயமும் அங்கே இல்லாமை கண்டு கைதிகள், ஓரளவு மகிழ்ந்தனர். வருகை



தந்திருந்த பசவராஜையும் ரங்கநாயகியையும் வாழ்த்திக் கொண்டனர். இவர்கள் காலம் முழுதும் இங்கே இருந்து விடமாட்டார்களா என்றும் ஏங்கினர். இவர்களால்தாமே ஆளுநரே இங்கு வந்து நேரடிப் பார்வையில் கவனிக்கிற வாய்ப்பு ஏற்பட்டது; வசதிகள் கண் விழிக்கலாயின...

சிறைக்கோட்டத்தில் தீப்பந்தங்கள் ஒளி உமிழ்ந்து கொண்டிருந்தன.

தனது முக்கிய அலுவலர்களுடன் புறப்பட்டு வந்த அயாஸ்கான், ஓரிடத்துக்கு வந்ததும் அலுவலர்களைத் தங்கச் செய்து தனித்துப் புறப்பட்டு நடந்தான். அவனது கால்கள் பசவராஜ், ரங்கநாயகி அடைபட்டிருந்த சிறை அறையின் அருகே சென்று நின்றன.

சிறைப் பறவைகளாய் ஒரே கூண்டில் - சிறையில் அடைப்பட்டிருந்த பசவராஜூம் ரங்கநாயகியும், அபாஸ்கான் வருகைக்காகக் கொஞ்சமும் மதியாது எப்போது போலவே தனித்தனியாக அமர்ந்து காணப்பட்டனர்.

அந்தச் சுவரோரத்தில் அவனும், இந்தச் சுவரோரத்தில் அவளுமாக அமர்ந்து, ஏதோ பைத்தியமான நிலைக்குத் தங்களை உட்படுத்தி ஆட்கொண்டவர்களே போலக் காணப்படுவதைக் கவனிக்கிறான் அயாஸ்கான்...

சிறையில் அடைப்பட்ட நாள் முதற் கொண்டே அயாஸ்கான், இவர்கள் மீது ஒரு தனியான அக்கறை செலுத்தியதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு.

பசவராஜ் பற்றிய வீரப் பிரதாபங்களை அயாஸ்கான் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறான். திப்புவின் அத்யந்த நண்பனான இவனால் பின்னாளில் தனது கீர்த்திக்கு ஏதும் அபகீர்த்தி நிகழ்ந்து விடக்கூடாது என்பது ஒரு புறமானாலும் தனது அப்போதைய வஞ்சக நோக்குக்கு இவனைத் தன்வயப்படுத்த முடியுமா என்றும் எதிர்பார்த்துச் சௌகரியங்களைத் தனது நேர்ப்பார்வையில் கவனித்தான்.

ரங்கநாயகியின் அபரிமிதமான பேரழகு ஓர் உருதுக் கவிதையைப் போல் மயக்கியது. அவன் கேரளவாசியானாலும் அங்கும் இம்மாதிரி திங்கள் முகத்தைத் தரிசித்தானில்லை. ஓ... பாரசீகத்து ரோஜா மாதிரி மலர்ந்து மணக்கிறாளே...! திப்புவின் மயக்கமும் அவனது தந்தையின் தயக்கமும் இப்போதல்லவா புரிபடுகிறது!

சற்று நேரம் வரை நின்று கவனித்து யோசித்த அயாஸ்கான், ''உங்களுக்கு ஏதேனும் சௌகரியக் குறைவுகள் இருக்கின்றனவா?'' என்றான்.

குத்தங்காலிட்டு, அதன் மீது கைகளை மடித்துப் போட்டுத் தலையையூன்றி எங்கோ கவனித்துக் கொண்டிருந்த பசவராஜ், மெல்லத் தலையைத் தூக்கி, ''சிறையில் இருக்கிறோமே என்கிறதைத் தவிர வேறெந்த அசௌகரியமும் இல்லை. சிறையிலடைத்த ஹைதர் அலியைவிட, சௌகரியங்களைக் கவனிக்கும் நீங்கள் ரொம்ப நல்லவராகத் தெரிகிறீர்கள்...'' என்று கூறி, அர்த்தங்களடங்கிய உதட்டுப்பிதுக்கத்துடன் கண்களைச் சிமிட்டி ஒரு வெறுமையான பாவனையைக் காட்டினான்.

''ஒரு மாவீரனை ஹைதர் இப்படிச் சிறையில் அடைத்திருக்கக் கூடாது'' என்றான் அயாஸ்கான். அவன் மகாசுல்தானை வெறும் ஹைதர் என்று குறிப்பிடுகிற போதே, சிறையில் இங்குமங்குமாக அடிபட்ட செய்திகளைக் கூட்டிக் கழித்து ஊர்ஜிதப்படுத்திப் பார்க்கிறான் பசவராஜ். ''அப்படியென்றால் திப்புவின் காதலியைச் சிறையிலடைத்தது சரியென்று நீங்கள் கருதுகிறீர்களா?''

''அதுவும் சரியில்லை; ஏதோ ஒரு ராஜதந்திரம் இதில் அடங்கியிருக்க வேண்டும்.''

ரங்கநாயகி இப்போது அயாஸ்கானைக் கூர்ந்து பரிசீலிக்கிறாள்.

''ராஜ தந்திரமாவது? தமக்குப் பிடிக்காத எதையும் வேரோடு கெல்லி எறிவது மகாசுல்தான் ஹைதருடைய மூர்க்கமான முடிவு. இன்று நீங்கள் ஆளுநராக உயர்ந்தது அவரால்தான்; நாளை மீண்டும் அதே அடிமையாக்கிச் சிறையிலடைத்தாலும் வியப்பதற்கில்லை



யல்லவா? மகாசுல்தான் போக்கை இளைய சுல்தானாலேயே அறிய முடியவில்லை.''

பசவராஜ் பல பொருள்கள் அடங்கிய பாவனை நிரம்பிய சொற்களை மிகவும் சமத்காரமாகப் பொழிந்து, அயாஸ்கானை உற்றுக் கவனிக்கிறான்...

ஒரு கணம் அதிர்ந்து போனான் அயாஸ்கான்.

எதையோ மனத்தில் தீர்மானித்து இவ்விதமாகப் பசவராஜ் கொக்கியைப் போடப் போய், அதுவே அயாஸ்கானுடைய நெஞ்சில் விகற்பமான வித்தினை ஊன்றி விட்டது.

'இதே ஹைதர் அலி தன்னையும் சிறையில் தள்ள எத்தனை நேரம் பிடிக்கும்? தனது ரகசிய உடன்படிக்கைகளின் சிறு பொறி பசவராஜின் காதுகளில் மோதியிருக்குமோ?'

தன்னுள் எண்ணிப்பார்க்கிறான் அயாஸ்கான். அவனது பேராசைகள் விசுவரூபம் எடுக்கின்றன.

''பசவராஜ்! உன்னை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் நீ அந்தரங்கமாகக் குறிப்பிட்ட வார்த்தைகளின் உள்ளடக்கமும் ஒருவாறு புரிகிறது. நான் இது குறித்து யோசித்துப் பார்க்கிறேன். எனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாயா?''

அயாஸ்கான் கண்களை மிகவும் கூர்தீட்டி, அந்த அரைகுறை வெளிச்சத்தில் பசவராஜைப் பரிசீலிக்கிறான்.

பசவராஜ் தன்னுள், தானூன்றிய விதை சரியான - சாதகமான இடத்தில்தான் பதிந்திருக்கிறது என்று நினைத்து எந்தவிதச் சலனமின்றித் தோற்றம் தருகிறான்.

'ஓ... பசவராஜ் என்கிற மாவீரத் துணைவன் மட்டும் கிடைத்து விட்டால்...' அயாஸ்கான் ஒருகணம் கனவு காண்கிறான்... 'ஸ்ரீரங்கப் பட்டினத்தையே ஒரே விழுங்கில் ஜீரணித்து விடலாமே...!'

''உதவி, எது குறித்து என்பதை விளக்கலாமே!''

பசவராஜ், மெதுவாகக் கேட்டான்.

சில கணங்கள் வரை சிந்தித்த அயாஸ்கான், ''இதுபற்றி யோசிக்க எனக்கு அவகாசம் கொடு பசவராஜ்'' என்றான்.

''நன்றாக யோசியுங்கள்! திப்புவின் அத்யந்த நண்பனான இவனை நம்புவதா? நம்பாமல் விடுவதா? என்று தீர்க்கமாக யோசியுங்கள்.''

பசவராஜ் இவ்விதம் கூறியதும், புறப்பட நினைத்த அயாஸ்கான், ஒரு விநாடி ரங்கநாயகியை நோக்குகிறான்...

போதை தரவல்ல அவளது அழகு அயாஸ்கானின் கண்களைக் கிறங்கச் செய்கிறது...

பேடனூரைத் தனது வசப்படுத்திவிட்ட பிறகு இங்குள்ள அனைத்துமே தனது சொத்துரிமைக்குரியதாமே என்று மதியீனமாக நினைத்து, ''பசவராஜ்! நானும் ஒருத்தியைக் காதலிக்கிறேன்!'' என்றான். இவ்வாறு சொல்ல வேண்டியதில்லை. இதில் ஏதோ ஒரு சோதனையிருப்பதாக நினைத்து அயாஸ்கான் தனது கருத்தை விளையாட்டாக வெளியிட்டான்.

பசவராஜும், ''இந்த வயதிலா ஹுசூர்?'' என்றான்.

அதுவரை சாம்பிச்சங்கடத்துள்ளாழ்ந்திருந்த ரங்கநாயகியும் கூட, பசவராஜின் பதிலைக் கேட்டுத் தன்னை மறந்து 'களுக்'கென்று சிரித்து விட்டாள்.

அயாஸ்கான் இதனைப் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. பொருட்படுத்தவுமில்லை.

''காதலுக்கு வயசில்லை. ஆத்மாவுக்குச் சலிப்புமில்லை. நீங்கள் சின்னப்பிள்ளைகள்'' என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றான் அயாஸ்கான்.

சிறைக் கோட்டத்தின் தலைவாயிலை அடைந்த அயாஸ்கான், கோட்டை அதிகாரி அப்துல் ரஹ்மானை அழைத்து, ''நான் குறிப்பிட்ட நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்தாயா?'' என்று நிரம்பவும் மெல்லிதான குரலில் வினவினான்.



''ஹுசூர்! பல தடவை, பல இரவுகளில் பல சந்தர்ப்பங்களில் நான் அவர்களை நோட்டம் விட்டுப் பார்த்தேன். பார்க்கும்படியாகப் பலரை நேமித்துமிருந்தேன். ரங்கநாயகிக்கும் பசவராஜுக்கும் அப்படி ஒரு கள்ளத் தொடர்பு இருக்கிற மாதிரி தெரியவில்லை. அந்தப் பெண்ணை அவன் தன் கூடப்பிறந்த சகோதரியினும் மேலாகப் பாவிக்கிறான். சகோதரத்துவம் தொட்டுப் பழக இடம் தருமே! பசவராஜ் அந்தப் பெண்ணை ஒரு தெய்வ நிலையிலிருந்து கடமைகளைச் செய்கிறான்!''

அப்துல் ரஹ்மானின் இந்த விளக்கத்தால் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனான் அயாஸ்கான். இப்படியும் ஒரு நட்பா?

''அச்சா!'' என்று கூறிய அயாஸ்கான், அதற்குமேல் அங்கு நிற்காமல், தனது குதிரையில் ஆரோகணித்து அரண்மனையை நோக்கி விரைந்தான். உடன் வந்தவர்கள் அவனைப் பின் தொடர்ந்தனர்.

வழக்கம்போல வந்த சைவ உணவை பசவராஜும், ரங்கநாயகியும் சிறைச் சாளரத்து வழியாகப் பெற்றுக்கொண்டு உண்டனர். அவர்களுக்கு அது மாதிரியான விஷயங்களில் எந்த விதச் சௌகரியக் குறைவையும் தமது மேலுத்தரவு வருகிறவரைக்கும் வைக்கக்கூடாது என்று கண்டிப்பாக ஆணைக்கடிதம் அனுப்பி இருந்தார் ஹைதர் அலி.

இரவில் அவர்கள் வேளையோடு என்றைக்கு உறங்கியிருக்கிறார்கள்? மனத்தில் வேதனையாய் அரிக்கும் துன்பங்களையும் மீறி இமைகள் தழுவுகிறபோது ஏதோ நித்திரை என்கிற பெயரால் சில கனவுகளைக் காண்பர்.

திப்புசுல்தான் அவளுக்கும், மஞ்சுளாதேவி அவனுக்குமாகக் கண்முன் நின்று கவலைகளுக்குத் தீமூட்டுவர். விடிகிறபோது மீண்டும் அதே கவலைகள் இருளாய்ச் சூழ்ந்துவிடும்...

ரங்கநாயகி எதையோ நினைத்து மீண்டும் முறுவலித்துக் கொள்கிறாள்...

இத்தனை நாட்களுக்குப் பிறகு அவளது முகத்தில் இரண்டாவது தடவையாக முறுவல் பூக்க அவன் காணுகிறான்...

''என்ன ரங்கநாயகி? ஏன் சிரிக்கிறாய்?''

பசவராஜை நோக்கிய ரங்கநாயகி, ''ஒன்றுமில்லை இந்த அயாஸ்கான் காதலை நினைத்து!'' என்றாள்.

''அதுவா? அதிலுள்ள அர்த்தம் உனக்குப் புரியாது. புரியவும் வேண்டாம். போகட்டும்; இன்றாவது வேளையோடு தூங்கு! துக்கத்தாலும் தூக்கமின்மையாலும் உடல் பாதியாய் இளைத்து விட்டாய். நான் ரங்கநாயகியை ஓர் எலும்புக்கூடாய் எனது நண்பனிடம் ஒப்படைக்க விரும்பவில்லை.''

''ஒப்படைக்க முடியும் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

''நிச்சயமாக ஒப்படைப்பேன்! அதற்கான வழிமுறைகளைத் தான் தேடிக் கொண்டிருக்கிறேன்!''

பசவராஜின் இந்த உறுதிமிக்க வாசகம் ரங்கநாயகியின் உடலில் ஒரு புதுத் தென்பினை ஏற்றியது. ''அது சரி! இந்தக் கோட்டைத் தலைவன் அயாஸ்கான் ஒரு மலையாளியா?''

''ஆமாம்! [1]சீரக்கல் பகுதியைச் சார்ந்த நாயர் வகுப்பைச் சார்ந்தவன் இவன். பதினேழு ஆண்டுகளுக்கு முன் மலபாரில் நடந்த யுத்தத்தின்போது, கைது செய்து அனுப்பப்பட்ட அடிமைகளுள் இவனும் ஒருவன். ஆனால் திறமைமிக்க மாவீரன்! பின்னால் இவனது வீரத்தைக் கண்டு மகாசுல்தான் ஹைதர் அலி இவனுக்குப் பதவி வழங்கினார். இவனும் மகாசுல்தானின் அன்பைக் கவர இஸ்லாமிய மதத்தில் சேர்ந்து தனது பெயரை அயாஸ்கான் என்று வைத்துக் கொண்டான். பிறகு 'அஸாத்-இ-இலாஹி' என்ற வீரக் குழுவில் இடம் பெற்றான். பதின்மூன்று ஆண்டு சேவைக்குப் பிறகு இந்தப் பேடனூர் பகுதிக்குத் தலைவனாக நேமிக்கப்பட்டுள்ளான். சொல்லப்போனால் இவனுக்கு இருக்கிற அதிகாரம், மகாசுல்தான் ஹைதர் அலியின் தத்துப்பிள்ளை போன்ற அதிகாரம். அவ்வளவுக்குச் செல்வாக்கு மிக்கவன்.''

''ஓகோ! இவன் பேச்சு ஏதோ மாதிரியாக இருக்கிறதே!''

1. Nishan-1 Haider R. A. S. M. S. No. 200 and Notes From Wilks.



''நானும்தான் கவனித்தேன். இந்தப் பேடனூரையும் இதைச் சார்ந்த கோட்டைகளையும் சுவீகாரம் செய்து கொள்ளக் கொஞ்ச நாள்களாகவே முனைந்து வருகிறான். இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தித் தப்பிக்க முடியுமா என்றுதான் நானும் ஒரு தினுசாகப் பேசி வித்தூன்றி இருக்கிறேன். பயப்படாதே ரங்கநாயகி! எப்படியும் தப்பிக்கச் சாமுண்டீஸ்வரி அருள்பாலிப்பாள்!''

''ஸ்ரீ ரங்கநாதா...!''

ரங்கநாயகி கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்...

அந்தச் சமயத்தில் யாரோ சுவரோரமாகப் பதுங்கி வருகிற நிழலோட்டம் தெரிகிறது...

பசவராஜ் மிகவும் உஷாராக எழுந்து நின்று கவனிக்கிறான்...

வந்தவன் சிறைக் கம்பிகளின் பக்கத்தே ஒட்டிக் கொண்டாற் போல நின்று கொண்டு ''பசவராஜ் சாகேப்! பயப்படாதீர்கள். உங்களைப் பேரம்பாக்கத்திலிருந்து கடத்தி வந்தபோது, உடன்வந்த வீரர்களுள் நானும் ஒருவன். உடன் வந்த எல்லா வீரர்களையுமே இங்கே திறந்த வெளிச் சிறைமதிலுள் அடைத்துவிட்டார்கள். இரகசியம் தெரிந்து விடக்கூடாது என்று அந்தச் சைத்தான் ராஜாக்கான் எல்லாரையும் பழி வாங்கிவிட்டான். நாங்கள் அனைவருமே உங்களிருவரையும் விடுவிக்கிற கால நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்!'' என்று கூறினான். அவனது பேச்சு முகபாவனையிலிருந்து அவன் ஒரு பரிசுத்தமான முசல்மான் என்பது தெரியவந்தது.

பசவராஜ் சில விநாடிகள் வரை யோசித்துவிட்டு ''நீங்கள் எங்களைக் காப்பாற்ற முயல்வதைவிட, உங்களில் யாராவது ஒருவர் எப்படியாவது தப்பிச் சென்று நமது யுவராஜா திப்புசுல்தானுக்கு விவரம் தெரிவித்தால், இந்தத் தேசத்துக்கு நீங்கள் செய்கிற பெரிய உபகாரம்'' என்றான். ''இன்னொன்றும் எதிர்பார்க்கிறேன். எப்படியாவது ஒரு வாளை முயன்று கொண்டுவந்து எனக்குத் தரமுடியுமா?''

''முயற்சி செய்கிறேன் பசவராஜ் சாகேப்!''

''சரி, சரி, யாராவது கவனித்துவிடப் போகிறார்கள். நீ போ!'' என்று விரட்டினான் பசவராஜ். இவையனைத்தையும் கேட்க கேட்க ரங்கநாயகிக்கு ஒரு புதிய நம்பிக்கை உதயம் கண்டது. உள்ளுக்குள் பிரகாசம் தெரிந்தது.

சிறைக் கோட்டத்துக்கு வெளியே 'பாரா உஷார்' என்கிற காவலர்களின் காட்டுக் கூச்சல், மெல்லியதாகக் கேட்கிறது.

வந்தவன் மெல்ல பதுங்கி அந்த இடத்தை விட்டு அகன்று சென்று கொண்டிருந்தான்.

## 26

**ஓ**... ரங்கநாயகி

திப்புசுல்தானின் சோர்ந்துபட்ட மனம், ஒரு பித்தனின் வீழ்ந்துபட்ட புலன்களைப் போலப் பெரிதாகக் கூவி அரற்றிக் கொள்கிறது...

அவளது பூவான சிரிப்பு, பூத்துக் குலுங்கும் யௌவனம்; பூரிக்கும் கண்கள்; பூஞ்சையான மனம்...

ஆ! இவள் திப்புவின் ஆட்சியைப் பூலோக சொர்க்கமாக்க அந்த வானுலக சொர்க்கத்திலிருந்து வழி தப்பி வந்து விட்டவள்தானோ என்று எண்ணி, இறுமாந்து, ஏமமுற்ற நாள்கள்தாம் எத்தனை, எத்தனை...

அந்தத் துள்ளத் தெரியாத மீன் விழியில் கண்ட கள்ளத்தனமற்ற மான் மருளல்...

ஓ... உலகிலேயே இரண்டே காவியங்கள்தாம் உயர்ந்தன என்று அறிதியிட்டுக் கூறுவதானால் அவை, ரங்கநாயகியின் இரு கரிய பெரிய சுரும்பனைய விழிகள்...

மறக்க முடியவில்லை.

உருதுக் கவிதைக்குள் ஓடி வந்த உயிரோவியம்!



உணர்வு அழுகிறது...

எனது காதல்வானின் ஜோதிக்கீற்று...

தேயாத தேனிலவு...

எனக்கென்றே ஆண்டவன் அனுப்பி வைத்த பூங்காற்று...

அதற்கு மொழியேது? மதமேது? எதுதான் ஏது?

எனது இதய அரங்கில் பொன் மயிலாய், புது மயிலாய், தோகை கொண்ட மயிலாய் ஆடுகிறாள்...

ரங்கநாயகீ-

உனது ஆட்டம் எங்கே?

ஒளி எங்கே?

உணர்வுகள் எங்கே?

அதோ! மைசூர் மலைச் சிகரங்களில் வண்ண வண்ண மேகங்கள் வருவனவும் போவனவுமாயிருக்கின்றன...

ஓ... மேகங்களே!

ரங்கநாயகி எங்கிருக்கிறாள்?

உங்களுக்குத் தெரிந்தால் தூது சென்று எனது கைத்த நிலையை-கண்ணீர்க் கவிதையை அவளுக்கு அறிவித்துப் படித்துப் படித்துச் சொல்லுங்கள்...

அவளது பூமழையில் நனைந்த பிறகு, புதைகுழியில் இறங்குகிற நாள்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன்...

எனது கனிந்த சொற்களைச் சாறு பிழிந்து அவளது மலர்விழிக் கவிதைகளை மரணத்தின் கதவுகளில் எழுதிக் கொண்டிருக்கிறேன்...

ஓ... ரங்கநாயகி நீ எங்கிருக்கிறாய்?

திப்புசுல்தானின் இந்தப் பேதலித்த நிலை, லால்மகாலின் ஒவ்வொரு திசைகளிலும் எதிரொலித்தது...!

ஒவ்வொரு நாளும் திப்புசுல்தான், நனைந்த கண்களும் வறண்ட நாவுமாக இருந்த நிலைகண்டு வருந்தினாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. உண்மையில் ரங்கநாயகி இருக்கும் இடம் அவளுக்கும் தெரியாது. தெரிந்தாலும் சொல்லப் போவதில்லை. ஆனாலும் தெரியாது. இந்தப் பிரிவாற்றாமையின் கொடிய நிலைக்கே பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாதானே மூலக்காரணம்? அவள் தூபம் போடவில்லையென்றால் ஹைதர் அலிக்கு உடனடியாக இந்த அவசர முடிவெடுக்கக் காரணமே இல்லை!

அருமை மகனது வீர வாளை எதிர்பார்த்து இந்தத் தேசத்துச் சுதந்திரமே காத்துக் கொண்டிருக்கிறபோது, இப்படி ஒரு ரங்கநாயகியின் குறுக்கீடு, அவர் மட்டுமின்றி அனைவருமே விரும்பாது போகவே, இந்த மூர்க்கமான முடிவுக்கு வர நேர்ந்தது.

பத்தோடு பதினொன்று; அதோடு இது ஒன்று என்றிருந்தால் யார் குறுக்கிடப் போகிறார்கள்? அவளே ஆட்சியின் பொக்கிஷமாகத் திகழப் போகிறவள் என்கிற கசப்பான ரகசியம் பரவப் போய்த்தானே இந்தக் கடினமான முடிவு அரும்பலாயிற்று!

அவள்தான் அப்படி...

பசவராஜ் என்ன பாவம் செய்தான்?

அவனது நட்பால் பல அதிகாரிகளின் முகத்திரை கிழிபட இருந்தது. ஆனபடியால் அதிகாரிகள் அவனை விரும்பவில்லை. தீர்த்துக் கட்ட முடிவு செய்தனர். இரண்டும் ஒன்று சேர்ந்து பேரம்பாக்கத்தில் வசதியாகக் கிடைத்துவிடவே, ஹைதர் தமது ராஜதந்திரப் பிரயோகத்தைப் பயன்படுத்தி விட்டார். இதன் எதிரொலி என்னவாயிருக்கும் என்று யாரும் எதிர்பார்க்காவிட்டாலும், ஹைதர் எதிர்பார்த்தார். இல்லையென்றால் அவர்களை ஹைதர் நகரில் சிறை வைப்பானேன்? காஞ்சிபுரத்து மண்ணிலேயே புதைத்து இருக்கலாமே!

மனநிலையை ஒருவாறு சமணப்படுத்திக் கொள்ள முயல்கிறான் திப்புசுல்தான். முடியவில்லையே!

அந்த லால்மகாலை வெறிக்க வெறிக்கப் பார்க்கிறான், அப்போதைய நிலையில் ஆட்சிப் பொறுப்பு கனமாகவும்,



கவனமாகவும் அழுத்தமாகவும் அவனது பிடரியில் வந்து குந்தவில்லையானாலும், நாளை அது பிடரியைச் சீவி அழகு பார்ப்பதற்குப் பதிலாகச் சிரைத்து விடக்கூடாதே என்பதில் மிகவும் கவனமாக இருந்தான்; இருக்கச்செய்தது ரங்கநாயகி, பசவராஜ் மறைவு!

நேரமாய் விட்டதை நினைத்துப் பார்க்கிறான். ஆ! ஸ்ரீரங்கப் பட்டினத்து ஆளுநர் சையத் முகமதுவை வரச்சொல்லிவிட்டு, மறந்தே போனோமே! காதல் வயப்பட்ட எவனுக்கும் கவன மறதி இயல்பே போலும்!

நேரே பிரதான கூடத்தை நாடி விரைந்தான் திப்புசுல்தான்.

அம்மாவும், சையத் முகமதுவும் ஏதோ மெல்லிய குரலில் மிகவும் ரகசியமாக அங்கே பேசிக் கொண்டிருப்பதைக் கவனிக்கிறான். அவனது செவி மடல்கள் நன்றாக விரிந்து கூர் தீட்டிக் கவனிக்கின்றன. பசவராஜ், ரங்கநாயகி பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றனவா என்பதில் அவனது ஆர்வம் தலை தூக்கி நிற்கிறது. ஆயினும் அவர்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியாமல் போகவே, மறைவிலிருந்து வெளிப்பட்டு வருகை தந்தான். அவனைக் கண்டதும் ஆளுநர் சையத் முகமது எழுந்து நின்று சலாமிட்டார். இடக்கையை நீட்டி 'அமருங்கள்' என்ற சமிக்ஞையுடன் அருகே வந்து அமர்ந்தான் திப்புசுல்தான்.

''திப்பு! நமது பேரதிகாரியை வரச் சொல்லிவிட்டு இவ்வளவு காலதாமதமாகவா வரவேண்டும்? நான் இந்தப் பக்கம் வர நேர்ந்ததோ, அவரது தனிமைக்குப் பேச்சுக் கொடுக்க நேர்ந்தது!'' என்றாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா.

திப்புசுல்தானின் அறத்துன்பம் அவனது முகத்தில் பிரதிபலித்தது.

''திப்பு, ஏதேனும் ரகசியமாகப் பேச அழைத்திருந்தால் நான் புறப்படுகிறேன். இது உனது உரிமை. நான் இருப்பது நாகரிகமாகாது!'' என்று நிரம்பவும் ராஜதந்திரமாகப் பேசி எழுந்து கொண்டாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. அவளது இம்மாதிரியான சமத்காரங்கள்

ஸ்ரீரங்கப்பட்டினத்திலேயே பிரசித்தமானவை. அவளது விரல் அசைவில்தான் அன்றைய ஆட்சியே விடிந்து கொண்டிருப்பதைக் குமாரன் திப்புசுல்தான் அறியாமலில்லை. எத்தனை புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தியவள் இந்த மகா சுல்தானா பேகம்...

ஆளுநர் சையத் முகம்மது கூர்ந்து கவனிக்கிறார்.

மகா சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் பகிரங்கமான ஆட்சித் திறனும் பவித்திரமான இல்வாழ்வின் ஒழுக்கமும் இஸ்லாமிய வரலாற்றில் ஒரு கல்கி துர்ரா-மகுடமணி! இல்லையென்றால் [1]பத்தினி விரதத்தில் பல யோக்யதாம்சங்களைக் கொண்ட ஹைதர் அலி, ஆட்சியின் அதிகாரங்களை மனமுவந்து தமது பட்டத்தரசிக்கு வழங்கி இருப்பாரா?

அன்னை எழுந்து கொண்டதைத் தொடர்ந்து, "நீங்கள் உடன் இருக்கலாம் அம்மாஜான்! நான் என்ன சதித்திட்டமா தீட்டப் போகிறேன்? எவரையாவது வெட்டிப் புதைக்கவோ, அல்லது மறைத்து வைத்துப் பழிவாங்கவோ ஆணையிடப் போவதில் லையே!"

ஓ... இவன் ஹைதரின் மகன் திப்புசுல்தான்! ஒரு ராஜகர்ஜனையின் அசல் வித்து! பதினாறடி தாண்டிவிட்டானே என்று மலைத்துப் போனார் சையத் முகமது!

மகா சுல்தானா பேகம் பக்ருன்ஷாவும் பொருட் செறிவு நிறைந்த புன்முறுவலுடன், "நீ என் மகன்! ஹைதரின் ரத்தம்! உனக்கு நல்லதைத் தவிர, தீமை செய்யத் தெரியாதே!" என்றாள்.

அன்னையின் சொடுக்கு...

மெல்லியதாகத் திப்புவின் முதுகில் சுரீலிடுகிறது.

1. பக்ருன்ஷா, இரண்டாவது மனைவியானாலும் முதல் மனைவி உடல் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவளது கட்டாயத்தின் பேரில் சந்தித்தாகவேண்டி இரண்டாம் மனைவியை மனம் ஒருப்படாது மணந்து கொண்டார் ஹைதர் அலி. மனைவி இறந்த பிறகு பக்ருன்ஷாவிடம் அவரது மனம் ஒன்றியது.



"அம்மா! நமது ஆட்சியில் சில சீர்திருத்தங்களைக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். தந்தையார் காலத்திலேயே எனது இந்தச் சீர்திருத்தங்கள் பிரகடனப்படுத்த வேண்டும் என்பது என் அவா. ஒருகால் தந்தையார் மறுப்பாரேயானால் அவர் காலத்துக்குப் பிறகாவது அவை கட்டாயம் பிரகடனப் படுத்தப்படவேண்டியவை. எனது இந்தச் சீர்திருத்தங்கள் மனிதர்களுடைய அந்தராத்மாவுக்குத் திருப்தி தருவனவாக இருக்கவேண்டும். ஆகவேதான் நமது பேரதிகாரியுடன் கலந்தாலோசிக்க அவரை வரச் செய்தேன்!"

தான் இதற்கு அவசியமில்லை என்று கருதுகிறானோ திப்புசுல்தான் என்றும் ஒருகணம் எண்ணிப் பார்க்கிறாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. ஆயினும் அது குறித்துப் பலத்த விவாதங்களை ஏற்படுத்த விரும்பாது "சொல் மகனே! நானும் செவிமடுத்து முடியுமானால் ஆவண செய்கிறேன்!" என்று கூறுகிறபோது வார்த்தைகளில் பக்குவமான அரசியல் பொறுமை குடிகொண்டிருந்தது.

சையத் முகமதுவை நோக்கி திப்புசுல்தான் பேச்சைத் தொடங்கினான்: "நான் ஒரு யந்திரப் புலியைச் செய்யப் போகிறேன்!"

ஒரு கணம் நான்கு கண்களும் வியக்க மலருகின்றன. யந்திரப் புலியா?

"யந்திரப் புலி என்றால்? மைசூர் காடுகளில் நிஜப்புலிகளுக்கா பஞ்சம், திப்பு?" என்று கேட்டாள் பக்ருன்ஷா.

"அவை, நாம் நினைக்கும் போதெல்லாம் பலர் பார்த்து பிரமிக்க- பாடம் கற்க எனது பரம வைரியான கர்னல் பிரெய்த் வெயிட்டைப் பிராண்டுக் கொண்டிருக்க முடியா! அந்தப் பாதகன் பிரெய்த் என்னை எப்படியெல்லாம் அலைக்கழித்தான்! அவனைப் பழிவாங்க இந்தத் திட்டம். அவனைப் போலவே உருவம் செய்து, அவனைப் படுக்க வைத்து நான் உருவாக்கும் [1]யந்திரப்புலி சாவி கொடுக்கிற போதெல்லாம் விசை மூலம் பிராண்டி ரத்தம் பீறிடச்

1. இன்றைக்கு அந்த யந்திரப்புலி விக்டோரியா அண்டு ஆல்பர்டு மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

செய்ய வேண்டும். பிரெய்த் துடிப்பான்! இதைக் கண்டு ஒவ்வோர் அந்நியனும் துடிக்க வேண்டும்!''

''இது முடிகிற காரியந்தானா குமார சுல்தான்! இதனை யார் உருவாக்குவது?''

''நானே கண்டுபிடிக்கப் போகிறேன். அதற்கான கண்டுபிடிப்புத் திட்டங்களை ஆய்ந்து வருகிறேன்!''

''அடுத்து என்ன செய்யப் போகிறாய் மகனே?''

''நமது ராஜ்யத்தில் [1]பூரண மதுவிலக்கு கொண்டு வரப் போகிறேன்!''

''பூரண மதுவிலக்கா?''

''ஆமாம்! மதுவால் மனிதர்கள் தங்களின் மிக உயர்ந்த படைப்பை மறந்து மதியிலிகளாய்த் திரிகிறார்கள்!''

''எதிர்ப்பு உருவாகும் திப்பு!''

''எதிர்ப்பு வரத்தான் செய்யும்! ஒரு நன்மையை உத்தேசித்துப் பல தீமைகளை நாம் சுமந்துதான் தீர வேண்டும்!''

திப்புசுல்தான் சொன்ன இந்தச் சொற்களைக் கெட்டியாகப் பற்றி மனத்தில் எழுதி வைத்துக்கொண்டாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்னிஷா.

பசவராஜ், ரங்கநாயகி நினைவு வருகிறது...

ஒரு காலத்தில் இந்த வார்த்தைகள் பயன்படலாமல்லவா?

''என்ன சொன்னாய் திப்பு? ஒரு நன்மையை உத்தேசித்து பல தீமைகளை நாம் சுமந்துதான் தீரவேண்டுமா? வருகிற அரசியல் விருந்தாளிகளுக்கும் சில முக்கிய விசேஷங்களுக்கும் மது தேவைப்படுமானால்?''

[2]அனுமதிப் பத்திர முறையை அமுல்படுத்தப்போகிறேன். இந்த மதுபானக் கடையை எனது விசுவாசத்துக்குரிய பிரெஞ்சு ராணுவத்

1. History of Tippu - Hasan.

2. Permit.





தலைவன் லாலி என்பானுக்கு வழங்கப் போகிறேன். யுத்தத்துக்கு அவன் எனக்குச் செய்த உதவிக்கு நான் செய்யப் போகிற கைம்மாறு. எனது உத்திரவுக்கு உட்பட்டவர்களே மதுவருந்தலாம். நானும் தேவை என்று தெரிந்தாலொழிய உத்தரவு வழங்க மாட்டேன்.''

ஆளுநர் சையத் முகமது அயர்ந்து போனார். திப்புவின் புதிய ஆட்சியில் இந்த தென்னகம் ஒரு புதிய சரித்திரத்தையே காணப்போகிறது என்று மகிழ்ந்து கொண்டார். திப்புசுல்தான் நிஜமாகவே ஒரு புரட்சி நிறைந்த [1]மக்கள் தலைவன்- மானுடதிலகம்!

''அடுத்து?'' அவரே விழைந்து கேட்டார்.

திப்பு பதில் சொன்னான்: ''நமது ஆட்சியின் கீழிருக்கும் இருபத்தேழு ஜில்லாக்களும், ஆயிரத்து இருபத்து நான்கு தாலுக்காக்களும் மதக்கோட்பாட்டில் தனிச் சுதந்திரம் பெறவேண்டும். எங்கும் மதப்பூசல் தலை நீட்டக்கூடாது. இந்து முஸ்லீம்கள் யுகயுகாந்திரத்துக்கு ஒன்றுபட்டு, ஒருவரையொருவர் சகோதர நெஞ்சுடன் தழுவிக் கொண்டு வாழச் சட்டம் வகுப்பேன்! ஆனால், வெள்ளைப் பறங்கியன் தனது மதத்துக்காக ஆள்களைப் பிடித்துக் கூடி கொடுப்பதை அறவே கண்டிப்பேன், தண்டிப்பேன்!''

''இவ்வளவுதானா ஹுசூர்?''

''இன்னும் எவ்வளவோ இருக்கின்றன, சட்ட திட்டங்களையே மாற்றப்போகிறேன். அவற்றை இப்போதைக்குக் கூறி நேரத்தைக் கடத்துவானேன்? பொதுவாக விவசாயிகள் பற்றியதில் கருணைகாட்ட என்னாலான முயற்சிகளை மேற்கொள்ளப் போகிறேன். தொழிற் கூடங்களை ஸ்தாபிக்கப் போகிறேன். பிரெஞ்சு அரசாங்கத்துடன் இணைந்து [2]கடிகாரத் தொழிற்சாலையும் காகித ஆலையையும் தோற்றுவிக்க முடிவு செய்திருக்கிறேன். விபசாரத்தை ஒழிக்கப் போகிறேன். விபசாரிகளுக்குத் தூக்குத் தண்டனை வரை வழங்கலாம் என்று சட்டத்தைத் திருத்தப் போகிறேன்...''

1. யாரும் இன்றைய கண்கொண்டு பார்க்கவேண்டாம், இவையாவும் அன்றைய திப்புசுல்தான் அமுல்படுத்திய திட்டங்களே!

2. இன்றைய பெங்களூர் செழிப்புக்கு அன்றே திப்புசுல்தான் முனைந்திருக்கிறான்.

திப்புசுல்தான் முடிக்கவில்லை. அப்போது மிகவும் அவசரமாக உள்ளே நுழைந்து கொண்டிருந்தான் அந்தரங்கப் பணியாளன் ஹபிபுல்லா. இவனுடைய கையில் புலி முத்திரையிட்ட முடங்கல் இருந்தது.

அதனை நிரம்பவும் பவ்யமாகப் பெரிய சுல்தானா பேகத்திடம் நீட்டினான் ஹபிபுல்லா.

முத்திரையிலிருந்து அது மகாசுல்தான் ஹைதர் அலியிடமிருந்து வந்திருக்கிறது என்பது புரிய வந்தது.

முடங்கலைப் பிரித்து மௌனமாய்ப் படித்து முடித்தாள் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா. அவளது முக பாவனையில் அதிர்ச்சி நிழலாடியது. அதனை மௌனமாகவே தனது குமாரனிடம் நீட்டினாள்.

ஆவலுடன் அதனைப் பெற்றுக்கொண்ட திப்புசுல்தான், வேகமாகப் படித்தான். அவனது கண்கள் எங்கோ சில விநாடிகள் நிலைக்குத்தி நிற்கின்றன. என்ன நினைத்துக் கொண்டு தந்தையார் இவ்விதம் பிள்ளை விளையாட்டு விளையாடுகிறார்?

விவரம் புரியாது தவித்த ஆளுநர் சையத் முகமதுவைக் குறிப்பாலுணர்ந்து கொண்ட திப்புசுல்தான், ''நீங்களும் இதனைப் படியுங்கள். இன்றைய ஸ்ரீரங்கப்பட்டினம் இருக்கிற நிலையில் என்னைக்கூட இங்கு தங்கவிடாமல் விரட்டுகிறார் மகாசுல்தான். நல்லது; இதில் யோசிக்க ஒன்றுமே இல்லை. தந்தையார் உத்தரவுபடி இன்று மாலையே நான் மலபார் கடற்கரை நோக்கிப் பயணமாவேன். தலைநகரின் காவலைவிட, மகாசுல்தானுக்கு, மலபாரும் அதன் வெற்றியும் முக்கியமாய் விட்டன. அந்தப் பறங்கிய மூர்க்கன் ஹம்பர்ஸ்டோனின் கொட்டத்தை எப்போது வேண்டுமானாலும் அடக்கிக் கொள்ளலாமே! ஸ்ரீரங்கப்பட்டினத்து எல்லா முக்கிய அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டார். நான் மட்டும் ஏன் இங்கு இருக்கவேண்டும் என்று எண்ணி விட்டார் போலும்!'' என்று கூறி நிறுத்திவிட்டுப் பின்னர் அன்னையை கவனித்து, ''இது எந்த உற்பாதத்தை நோக்கிப் பயணமாகிறதோ?'' என்று சொல்லிக் கொண்டே தனது வலதுகாலை உட்கார்ந்திருந்த ஆசனத்து முன்னங்காலில் பிணைத்துத் தொடையை ஆட்டிக்கொண்டே



சிந்தனை வயப்பட்டிருந்த திப்புசுல்தான், திடுமென்று தன்னை மறந்து எழவே, ஆசனத்து மரக்கால் இடறி, கீழே விழுகிறமாதிரி தெத்திய மகனைக் கண்டு அரண்டுபோன பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா ''திப்பு'' என்று அலறி விட்டாள்.

தொடர்ந்து ஒரு துள்ளுத் துள்ளி எழுந்த ஆளுநர் சையத் முகமது எட்டிப் பிடித்துக் கொண்டார் திப்புவை.

பல கணங்கள் வரை பொறி கலங்கிப் போனான் திப்புசுல்தான்.

கால் இடறிய இந்தச் சம்பவம் எதைக் குறித்து இப்படி ஒரு சகுணமாகக் காட்டியதோ?

தென்னாட்டு மண்வாடையில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்ட அவர்கள், எவ்விதமாக நினைத்தார்களோ...

திப்புசுல்தான் அது குறித்துப் பெரிதும் வேதனைப்பட்டுக் கொண்டான். ஜோதிடத்தில் அசாத்திய நம்பிக்கை கொண்டவனாயிற்றே அவன்! இந்தத் தென்திசை மண்ணுக்கே உரியவன். இங்குள்ள அனைத்துக் கலாச்சாரங்களும் அவன் மீது பழுதறப்படிந்து கிடந்தன. தென்புலத்துத் தண்ணீருக்கே ஒரு தனிப்பெரும் நாகரிகப் பண்பாட்டு மகத்துவம் இருப்பதாக நம்புகிறவன்! கங்கையிலும் புனிதமான காவிரி உதயம் கண்ட இடத்தில் உதயமானவனாயிற்றே!

மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்ட திப்புசுல்தான் நேரே தன்னறை நாடிச் சென்று தனிமையில் வெகுநேரம் ஓய்வெடுத்துக் கொண்டான்.

## 27

**வ**ழக்கம் போலப் பகலுணவை அறிவு ஜீவிகளுடனும் தனது குழந்தைகளுடனும் உண்டு முடித்தான். தந்தையார் இவ்விதம் அதிகாரிகளைத் தம்முடன் அழைத்துக் கொண்ட தோடல்லாது தன்னையும் மலபார் கடற்கரை நோக்கி விரட்டுகிறாரே என்கிற புரிந்து கொள்ள முடியாத சிந்தனை அவனுள் அரித்துக் கொண்டிருந்தது. நானும் புறப்பட்டு விட்டால், எந்த நேரத்தில் தீங்கு விளைவிக்கலாம்

என்று எதிர்ப்பார்க்கிற உள்நாட்டு விரோதிகளால் ஸ்ரீரங்கப்பட்டினம் என்னாகுமோ என்கிற கவலை அவனுள் அலை மோதியது.

நல்ல நெய்யால் மணக்க வறுத்த மாமிசமும், 'ஷாஜிரா' விதையும், புதினா தழையுமாகச் சேர்ந்து மணக்கும் பிரியாணி - ஆண்டுக் கணக்கில் பழையதான மெல்லிய அரிசியால் சமைத்த பிரியாணி உணவாக இருந்தும் அவனால் ரசித்து உண்ண முடியவில்லை. தயிரில் தோய்ந்து கிடந்த வட்ட வட்டமாக அரிந்து போட்ட நீளநீள வெங்காயச் சதைகளை மட்டும் ருசி பார்த்துக் கொண்டே அறிவு ஜீவிகளுடன், தனது மனக்குழப்பத்தைப் பகிர்ந்து கொண்டிருந்தான்.

ஒருவாறு பகலுணவை முடித்துக் கொண்டு தனது அறை நாடிச் சென்று உறங்கினால் தாழ்விலை என்றுணர்ந்து மஞ்சத்தில் சாய்ந்தான். உறங்கவும் செய்தான். அவ்விதம் உறங்குகிற போது ரங்கநாயகியின் அல்லிமுகம் அவனது நினைவுக் கண்களில் சித்திரமாக நின்று கனவுக் கண்களில் விசித்திர ஜாலம் புரிந்தது. இத்தனை நாள்களாக அவளும் பலமுறை கனவில் வந்துவிட்டாள்! இராக்கனவில் மட்டுமல்லாது பகற்கனவிலும் திருவிளையாடல் புரிந்தாள்! ஆனால்...

ஒரு நாளில் ஒரு முறையேனும்...

தொட்டு,

முகர்ந்து,

பதிந்து,

ஓ...

கனவிலும் அவர்கள் தூயதான காதலர்களாகவே பரிமளித்து-விலகியிருந்து விளையாடிய பாங்கு...

இது ஒரு முன் பிறவி பந்தமோ? சொந்தமோ?

திப்புவால் புரிந்து கொள்ள முடியவில்லை. உதடுகள் பிதுங்க, கண்ணிமைகள் படபடக்க, முகச் சதைகள் துன்பியலாய்த் துடிக்க, அவன் தன்னைச் சமாளித்துத் தேற்றிக் கொள்கிறான்...



மாலை வருகிற போதெல்லாம் நவாப் திப்புசுல்தானுக்கு ஒருவித இனந்தெரியாத மயக்கமும் உடன் வந்து மல்லு கொடுக்கிறது...

அவனது மன்மதக் காவியத்தின் கதாநாயகியின் மான் மதச்சாந்து மணக்கிற நினைவு...

அந்த நினைவுகளினூடே, 'டாங் டாங்' கென்று கேட்கிற, ஸ்ரீரங்கநாதம்...

ஓ...ரங்கநாயகீ!

கண்களில் உருண்டு திரண்ட நீர்த் திவலைகளைச் சுண்டு விரலால் நீக்கிச் சுண்டுகிறான்...

லால் மகாலின் விளக்குகள் ஒளிப்பிரச்சாரம் பண்ணுகின்றன.

நேரே அந்தப்புரம் நாடிச் சென்று விடிகிற வரையிலும் தனது மன உளைச்சல்களையும் எரிச்சல்களையும் அடக்கிக் கொள்ள வெறிகொள்கிறான். இரவு முழுவதுமாகக் கண்விழித்துத் தனது அரிப்புகளைச் சுல்தானாக்களிடமோ அல்லது [1]சுகந்தானாக்களிடமோ பகிர்ந்துகொள்ள அவன் நினைக்கிற நினைப்பு...

ஆ! அவனது மனநிலை அடர்த்தியான காடு ஒன்று எரிவது போலப் பயங்கரத் தீச்சுவாலையால் தாக்குண்டு தவிக்கிறது...

அவனது கால்கள் விறைப்புக்கண்டு விரைகின்றன.

அலங்கார ரூபனாக வரும் அவனது தோற்றம் அந்த ஜனானாவில் ஒருத்தியைத் தவிர மற்ற அனைவருக்குமே மெல்லிய நீர் அருவி சலசலப்பது போன்ற ஒரு கிளு கிளுப்பை ஏற்படுத்திக் கிறங்கச் செய்கிறது...

"தனது அறையினுள் நுழைய மாட்டாரா?" என்று தன்னிறைவு காணும் தன்னிலை மறந்து தாவிப் பறந்த மனங்கள் பல...

அங்கீகரிக்கப்பட்ட பதுமைகளோடு அரசுரிமைக்குரிய சுல்தானாக்களும் முன் வந்து வரவேற்றனர். அப்போது...

1. ஆசைநாயகிகளாக அடைந்து கிடக்கிற போகப் பதுமைகள் என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளுங்கள்.

தொலைவில்...

"ஒருத்தியைத் தவிர" என்று மேலே குறிப்பிட்ட அந்த 'ஒருத்தி'- மஞ்சுளாதேவி நின்று கவனிப்பதைக் கண்ணுறுகிறான் திப்புசுல்தான்...

'ஆ! படபடவென்று வெடித்த அடர்ந்த காட்டின் தீ எங்கே?'

அரிப்பு எங்கே?

எரிச்சல் எங்கே?

வெறி எங்கே?

விறைப்புத்தான் எங்கே?

அவள்-மஞ்சுளா தேவி சாதாரணமாக - எப்போதும் போலவே சாதாரணமாகவே காணப்பட்டாள். அந்தத் தோற்றம் அசாதாரணமாகவே தென்படுகிறது.

காட்டின் தீ மெல்ல மெல்ல அடங்குகிறது...

ஜனானாவில் மஞ்சுளாதேவி இருக்கிறாள்...

அவளை அங்கே வைத்துக் கொண்டு...

சகல புலன்களுக்கும் அருகதையுடைய அவளை அங்கே வைத்துக் கொண்டு...

ஜீவநாடியான காதலனைத் துறந்து ஒரு சிறைவாசமே போலத் துடிக்கும் ஒரு ஜீவனை எதிரே வைத்துக்கொண்டு...

ஓ...திப்பு!... எவ்வளவு பெரிய தவறு செய்து கொண்டிருக்கிறாய்...!

அக்கினியடங்கிச் சாம்பராகித் தூசாய்ப் பறக்கிறது...

கண்களில் நீர் மல்க நின்று கொண்டிருந்த மஞ்சுளா தேவியை நாடி நடக்கிறான்.

அந்த நடையில் முன்பு காணப்பட்ட வேகமில்லை, விறைப்பும் இல்லை.



ஒரு தெய்வத்தை நாடிச் செல்லும் பக்தனின் அடக்கம்- பதவிசு- பயம் இருந்தது.

மஞ்சுளாதேவி தன்னறையுள் நுழைந்து கொண்டாள். அறையினுள் நுழைந்த திப்பு சுல்தானை இரு கரம் கூப்பி "வாருங்கள் அண்ணா!" என்று அழைக்கிறாள்...

சுல்தானாக்களும் சுகந்தானாக்களும் நெளிந்தும் ஒளிந்தும் உறுமியும் முனகியும் கொள்கின்றனர். பேச முடியுமா? மூச்! துணிச்சல் காரியான ரோஷனா பேகம் கூட மஞ்சுளா தேவி விஷயத்தில் மருட்சி கண்டிருந்தாள், "உட்காருங்கள் அண்ணா!"

அவன் அமரவில்லை. நிலப்படியின் மேல் சட்டத்தைப் பிடித்துக் கொண்டே நின்று கவனிக்கிறான்; இரவின் பொல்லாப்புக்களை யோசிக்கிறான்...

அவளது நீல நயனங்களில் நீர்ச்சரம் கோக்கிறது...

விழிகளைப் பிசைந்து கொண்டே தரையை நோக்குகிறாள்...

இரு முத்துக்கள் தரையில் விழுந்து தெறிக்கின்றன...

"அவர்களைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா, அண்ணா?"

'அவர்களைப் பற்றி' - ரங்கநாயகியையும் சேர்த்துக் கேட்கிற அவளது மனநிலையை அளவிடுகிறான் திப்புசுல்தான்...

"தகவல் எப்படியும் கிடைக்கும் என்று நம்பி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், மஞ்சு!"

"நாளைக்கு நீங்கள் யுத்தகளம் நோக்கிப் பயணமாகப் போகிறீர்களாமே!"

"ஆமாம். கேரளாவை நோக்கி!"

"எதற்காக இந்த யுத்தம் அண்ணா?"

"இதனால் உண்மையிலேயே மனிதர்களுக்கு நாகரிகம் ஏற்படுகிறதா அண்ணா?"

யுத்தத்தின் சகல வீர தீரப் பராக்கிரமசாலியான திப்புசுல்தான் பதில் சொல்ல முடியாமல் அதிர்ந்து போகிறான். பதில் சொல்ல வேண்டித் தன்னை வருங்கால அமைதியின் தூதுவனே போலத் தயார் செய்து கொண்டு, ''சென்ற கால யுத்தங்கள் அந்த மனிதர்களுக்கு எந்தவிதமான நாகரிகத்தை கற்பித்ததோ, நானறியேன்! நமது காலத்தில் நம்மை அடிமைப்படுத்த வந்த அந்நியர்களான கும்பினிக்காரர்களை விரட்டியதும் இனி யுத்தம் வராது என்று எதிர்பார்க்கிறேன். வரவிடாது முயல்வேன் என்று நம்புகிறேன்! யுத்தம் என்பது உண்மையிலேயே ஓர் அநாகரிகமாகவே சில காலமாக எனக்குத் தெரிகிறது!'' என்றான். அவனது நாசியில் ஒரு நிறைவான பெருமூச்சு பறிகிறது.

''நாளை நீங்கள் புறப்பட்ட பிறகு எனக்கு ஏதும் உற்பாதங்கள் நிகழாதே?''

இந்தப் பேச்சைக் கேட்டதும் திப்புசுல்தான், ''மஞ்சு!'' என்று இரைகிறான். அந்தக் கோபாவேசக் கர்ஜனையால் ஜனானாவே கிடுகிடுக்கிறது! சுற்று முற்றும் கவனிக்கிறான்...

சுல்தானாக்களும், சுகந்தானாக்களும், அலங்கரித்த ரதங்களைப் போல, ஆங்காங்கே நின்று அசைந்து கொண்டிருக்கிறார்கள்...

திப்புசுல்தானின் காம்பீரியமானகுரல் ஓங்கி ஒலிக்கிறது...

''மஞ்சு! இந்த லால் மகால் மட்டுமேயல்லாது இந்த ஸ்ரீரங்கப் பட்டினமே உன் விஷயத்தில் அதிர்ச்சி கண்டு பயந்து நடுங்கி ஒடுங்கி இருக்கிறது என்பதை நீ இன்னுமா உணராது இருக்கிறாய்? நான் யுத்தத்துக்குச் சென்று திரும்புகிறவரை உனக்கு என் சுல்தானாக்கள் பாதுகாப்பைக் கொடுப்பார்கள். உனக்காகவே ஹபிபுல்லாவை நேமித்து விட்டு புறப்படுகிறேன். அவன் எனது நம்பிக்கையுள்ள விசுவாசி. ஒரு விஷயத்தை நீ பரிபூரணமாக நம்பலாம். உனது அங்கத்தில் எவரேனும் ஓர் எறும்பைப் பிடித்துப் போட்டாலும், அந்த எறும்பு உன் அங்கத்தில் எந்த பகுதியில் ஊர்கிறதோ, அதே பகுதி அதனைப் பிடித்து எறிந்தவர்களிடமிருந்து வெட்டி எறியப்படும்! உனது உயிருக்கே தீங்கு ஏற்படுமானால்...''



ஒரு சிங்கம் போலப் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு அண்ணாந்து கவனிக்கிறான். கண்கள் இங்குமங்குமாக அசைகின்றன. மஞ்சுளாதேவியே அந்தக் குரலையும், அவனது முகபாவனை களையும் கவனித்து மருண்டு போகிறாள்.

திப்புவின் குரல் பலர் காதுகளில் நுழையுமளவுக்கு ஒலிக்கிறது; 'எனது நண்பனுக்குப் பதில் சொல்ல முடியாத இந்த லால்மகால் இருந்தென்ன, இடிந்தென்ன என்று இடித்து நிரவி உன்னைப் புதைத்துச் சமாதியாக்கி விடுவேன் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன்! மஞ்சு! நான் திரும்புகிறபோது எனது காதலியுடன் வருகிறேனோ இல்லையோ, அருமை நண்பன் பசவராஜுடன் நிச்சயம் திரும்புவேன்!''

அவன் மனிதாந்தமாய்ச் சிரிக்கிறான்...

அந்தச் சிரிப்பினூடே வெளியேறுகிறான். ஜனானாவுக்குள் எதற்காக நுழைந்தானோ அதை எரித்துச் சாம்பலாக்கி நடக்கிறான். அவனது காலடியில் மன்மத சுல்தான் மிதிபட்டு நாணி, நசுங்கி மறைகிறான்...

'ஓ... திப்பு! இஸ்லாமிய மதத்தில் உதித்த ஓர் உலகமானுடன் என்பதைப் பரிசுத்தமாக நிரூபித்துச் செல்கிறார்...' என்றுணர்ந்து நம்பிக்கையுடன் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள் மஞ்சுளாதேவி.

இரவு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகக் கரைந்தது.

நவாப் திப்புசுல்தானின் புகழொளியே போல, கீழ்த்திசையில் எழு ஞாயிறு உதயம் காண்கிறான்...

பீரங்கிகள் முழங்குகின்றன...

''அம்மா! ஸ்ரீரங்கப்பட்டினத்தை உங்களிடம் ஒப்படைத்துச் செல்கிறேன். சர்வ வல்லமை பொருந்திய அல்லாஹ் காப்பாராக?''

அன்னை பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவின் பேராசி பெற்றுப் படைகளுடன் கேரளக் கடற்கரை நோக்கிப் புறப்பட்டான் திப்புசுல்தான்.

ஹைதர் அலியின் நீடுபுகழ், உலகம் முழுவதுமாகப் பரவியதென்றால், அதில் ஓர் உண்மையான நியாயமும், உருப்படியான தருமமும் இருந்தன.

ஓர் அசோக மகா சக்கரவர்த்தியையோ, அக்பர் பாதுஷாவையோ, சேரன் செங்குட்டுவ மன்னவனையோ, கிருஷ்ணதேவராய நாயக்க பூபதியையோ போற்றிப் புகழ்வது நமது நாகரிகத்தின் சரித்திரப் பெருமையாகும். எல்லாருமே தங்களின் சுகமிக்க சுயநலங்களுக்காகவும் சோபன சொர்க்கங்களுக்காகவும், மதக்கோட்பாடுகளுக்காகவும் பிறரையும் வென்று, தங்களுக்குள்ளும் அடித்துக்கொண்டு ஜெயகொடி நாட்டி வாழ்ந்தனர். மறையா மறைவைத் தேடிக் கொண்டனர்; ஆனால் ஹைதர் அலி...

அவர், இந்த ஸ்ரீரங்கப்பட்டினத்தில் மட்டும் வெள்ளைக் கும்பினியன் புகாமல் பார்த்துக்கொண்டிருக்கலாமே! அல்லது மைசூரை மட்டும் காத்திருக்கலாமே! அதைவிட்டுத் தமிழகத்திலும், ஆந்திரத்திலும், கேரளத்திலுமாக நுழைந்த அந்நியக் கும்பினியனை விரட்டியடித்தும், அவர்களுக்கு உதவிசெய்கிற தமது மதத்தினரைத் தண்டித்தும் சுதந்திரக் கொடியைப் பறக்க விடுவானேன்? ஆ! நமது மக்கள் அநியாயமாகப் பறங்கியரிடத்தில் அடிமை பூண்டு கைக்கூலியாகிறார்களே என்கிற தேசிய உணர்வுடன் முழக்கமிடும் ஹைதர் அலிகான் நவாப் பகதூரை அன்றைய தென்னகத்து மக்கள் இவ்விதமாக எண்ணியும் விமர்சித்தும் மகிழ்ந்தனர்.

கேரளாவில், ஹைதரின் சுதந்திரப் புலிக் கொடியை நாட்ட முதலில் சர்தார்கானை அனுப்பி வைத்தார், மேஜர் அபிங்கடன் என்பவன். சர்தார்கானைச் சகலவித மசாலாவும் போட்டுச் சாப்பிட்டு விட்டான். வெருண்டு போன ஹைதர் அலி, மகதூம் அலி என்பவனுடன் படைகளை ஏவினார்.

7-4-1782-ல் அவனும் தோல்வி கண்டான். வெள்ளைப் பறங்கிய ராணுவத் தலைவன் வீரமிகு கர்னல் ஹம்பர்ஸ்டோன், மகதூம் அலியை ஓடஓட விரட்டியடித்தான். பிறகு, சில நாள்கள்வரை இதுபற்றிய சிந்தனையைத் தவிர்த்து வாளாவிருந்தார் தென்னகத்துப் போர்வாள் என்று அழைக்கப்பட்ட ஹைதர் அலி. அவரை



எதிர்பார்த்திருந்த யுத்தங்கள் அநேகம். எனவே கேரள விஷயத்தில் உடன் முடிவுக்கு வர முடியவில்லை.

பிறகுதான், நிலைமை மோசமாகிவிடவே அதுவரை தமது கையிலிருந்த மேற்குக் கடற்கரை மலபார் பிரதேசம் வீழ்ந்து படவே உடனடியாகக் குமாரன் திப்புசுல்தானை புறப்பட்டுச் செல்லும்படியாக ஆணை பிறப்பித்தார். முன்னே பிறப்பித்த ஆணைதான். ஆனாலும், மதியற்று ஸ்ரீரங்கப்பட்டினம் நோக்கிச் சென்று விட்டானே திப்பு சுல்தான்! இப்போதும் அவ்வாறு இருக்கிறானா என்பதையறியவே இவ்விதம் மறு ஆணை பிறப்பித்தார். ஆணையைச் சிரமீது தாங்கிப் புறப்பட்ட செய்தியறிந்த பின்னரே ஹைதர் அலி சமாதானம் அடைந்தார்.

**மா**வீரன் திப்புசுல்தானின் வருகைகேட்டு, கர்னல் ஹம்பர் ஸ்டோனும், மேஜர் அபிங்கடனும் கதிகலங்கி, மதிகலங்கி, பலரும் புன்னகை கலங்கிப் போயினர்.

பாலக்காட்டு ஜில்லாவின் துறைமுகப் பட்டினமான பொன்னணையில் அவர்களைச் சந்தித்துப் போரிட முனைந்தான், போருக்கென்றும், வெற்றிக்கென்றுமே பிறந்த ஜயபுருஷன் திப்புசுல்தான்.

யுத்தம் என்கிற கொடிய ராட்சஸன், நாள்களை விழுங்கிக் கொண்டே இருந்தான்.

"கேரள மண்ணில் திப்புசுல்தான் கண்ட விநோதங்கள் பல; புரிந்த விந்தைகள் பல; ஏற்பட்ட விபரீதங்கள் பலப்பல...

கேரள நாகரிகத்தின் ஒரு பகுதி சுல்தானுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. குறிப்பாகப் பெண்கள் மேலாடையின்றி வெறும் ரவிக்கைகளுடன் திரிந்து காட்சி தருவதை அவன் அநாகரிகமாகக் கருதினான். தான் வென்று வந்த அத்தனை பகுதிகளிலும் கடுமையான ஆணைகளைப் பிறப்பித்தான். பெண்கள் மேலாடையின்றி வெறும் ரவிக்கைகளுடன் திரிவது மானுட முறைகேடுகளுக்கு வித்திடுவதாகும். எனவே அவ்விதம் திரிந்தால் தண்டிக்கப்படுவர்

1. History of Tippu Sultan.

என்று தண்டோரா போட்டான். கண்டிக்கவும் செய்தான். கேரளத்தின் வறுமையைப் பயன்படுத்திக் கொண்டு மக்களை மதம் மாற்றம் செய்த வெள்ளைக் கும்பினியரை அதாகதம் செய்தான். வெள்ளையர்களுக்குத் துணையிருந்துதான் தீருவோம் என்று அடம்பிடித்த கேரளத்தவர்களைப் பிடித்து வேண்டுமென்றே இஸ்லாமியர்களாக்கினான். அப்போதாவது தனது பார்வையில் இவர்கள் இயங்க மாட்டார்களா என்று முடிவு செய்து ஏங்கினான். கேரளத்தவரின் அபரிமிதமான அழகை-திங்கள் முகம் கொண்ட பெண்களின் அழகைப் பறங்கியர்கள், போட்டி போட்டுப் பொருளையிறைத்துக் கூறு போட்டு, அபகரித்தும், அசிங்கப்படுத்தியும் அநாகரிகமாக்கியதை அடியோடு தவிர்க்க முயன்றான்.

யுத்தம் நாளுக்கு நாள் நீடித்ததே யொழிய முற்றுப் பெறவில்லை. ஏனைய பகுதிகளைக் காட்டிலும் கேரளத்தில் கும்பினியர் அதிகமாகவே குவிந்து கிடந்தனர். வளமிக்க மண்; வனப்புமிக்க மண்; வடிவழகுமிக்க மண்ணாயிற்றே!

[1]திப்புசுல்தான் தனது நண்பர்களான பிரெஞ்சுக்காரர்களுக்குக் கடிதம் எழுதினான்.

பிரெஞ்சுக்காரர்களும் அந்நியர்களேயானாலும், அவர்கள் நடந்து கொள்கிற விதங்கள் அவனுக்குப் பிடித்திருந்தன. மண்ணை விழுங்குகிற நோக்கமில்லாது ஒரு நேசபாவத்துடன் வியாபார நிமித்தமாக வந்தவர்களாகவே அவர்களை அவன் ஆய்ந்து முடிவு செய்திருந்தான். எனவே, பலம் பொருந்திய ஒரு நேசநாட்டு உதவியை அவன் தனது கைக்குள் வைத்திருக்க ஆசைப்பட்டதில் தவறில்லை என்றே ஹைதர் அலியும் அனுமதித்தார். அடிமைப்படுத்த நினைப்பவனைவிட அன்பனாக - நண்பனாகப் பழகுகிறவன் மேலானவன் என்பது திப்புவின் தீர்ப்பு.

பிரெஞ்சுக்காரர் உதவியுடன் யுத்தம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம்...

1. பின்னாளில் இவன் நெப்போலியனுக்கே கடிதம் எழுதியவன். அது வழியிலேயே கும்பினியர்களிடம் சிக்கிக் கொண்டது. அது மட்டும் நெப்போலியனுக்குக் கிடைத்திருக்குமாயின் சரித்திரமே மாறுபட்டிருக்கும் என்கிறார்கள்.



நாளைய யுத்தத்தில் ஹம்பர்ஸ்டோன் நிச்சயமாக வீழ்ந்துபடுவான் என்று கணித்துக் கொண்டிருந்த நேரம்...

பௌஜ்தார் மகா மீர்ஸாகான் மிகவும் சோகமான ஒரு செய்தியைக் கொண்டு வந்திருந்தான்...

அது...

மகாசுல்தான் ஹைதர் அலி, தமது முதுகில் ஏற்பட்ட ராஜப் பிளவைப் புற்று நோயால் உயிரோடு மன்றாடிக் கொண்டிருக்கிறார். எந்த நிமிஷத்திலும் உயிர் பிரியலாம். உடனடியாகக் குமாரனைப் பார்க்க வேண்டுமாம்...

இந்த அதிர்ச்சி மிக்க பயங்கரச் செய்தி கேட்டு, நெஞ்சு பிளக்க இரு கன்னங்களிலும் கைவைத்துத் தலையை மேலே தூக்கி "அல்லாஹ்!" என்று பெருத்த கூச்சலிட்டான் திப்புசுல்தான்.

## 28

இன்றைக்குச் சரியாக நூற்றுத்தொண்ணூற்றாறு ஆண்டுகட்கு முன்...

[1]7-12-1782....

காலைப்போது மிகப் பெரிய சரித்திரத்தின் ஒரு பொன்னேடு போல மலருகிறது...

சித்தூர் வட்டத்தைச் சேர்ந்த நரசிங்கராயன் பேட்டையில் சுதந்திரப் போராட்டத்தின் தனிப்பெருந்தலைவரான நவாப் ஹைதர் அலிகான் பகதூர் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார்...

தமது வலிமைமிக்க சிறகுகளில் பீரங்கிகளைச் சுமந்து கொண்டு யுத்தம்... யுத்தம்... யுத்தம்...

இந்த யுத்தப் பிரகடனத்தால் அதிர்ந்து போன, அழிந்து போன, ஆங்கிலக் கும்பினியர்கள்... ஆ! அவர்களுக்கு இந்த இந்திய

1. இந்த அத்தியாயத்தை எழுதிய நாளும் 7-12-1987. அது இயல்பாகவே அமைந்ததாகும்.

மண்ணிலே ஒரு சிம்ம சொப்பனமாக இருந்தவர் ஹைதர் அலி; இருந்து கொண்டிருப்பவன் திப்புசுல்தான்...

ஒரு ராணி வேலுநாச்சியார், தமிழகத்தின் முதல் சுதந்திரப் போர் முழக்கத்தைக் கொட்டியவள்தான்.

ஒரு வீரப் பாண்டியக் கட்டபொம்மன் சுதந்திர முழக்கமாகக் கர்ஜித்தான்...

மருது சகோதரர்களோ சமர் புரிந்தும் சௌகரியத்துக் கேற்றவாறு சந்து செய்து கொண்டும் உயிர் இழந்தவர்கள்தாம்...

ஆனால் ஒரு சீற்றம் நிறைந்த பொது நோக்குடைய சிம்ம சொப்பனமாகவோ, ராஜகர்ஜனையாகவோ அவர்களது முழக்கம் இந்தத் தென்னகம் முழுவதுமாக ஒலிக்கவில்லையே...!

மகா சுல்தான் ஹைதர் அலிகான் நவாப் பகதூரின் சீற்றம் நிறைந்த ராஜகர்ஜனை இந்தத் தென்னகத்தின் முழுவதுமாக- எந்தெந்த மூலை முடுக்குகளிலெல்லாம் வெள்ளைப் பறங்கியக் கும்பினியரின் 'மார்ச்' என்ற ஆங்கில வீரகோஷம் கேட்கிறதோ, அங்கெல்லாம் வெற்றிச் சத்தமாக 'மார்' என்கிற உருது கோஷம் கேட்குமே! அவரது அருமந்த புதல்வன் திப்புசுல்தானோ, தென்னகம் மட்டுமல்லாது பின்னாளில் வடபுலம் வரை சென்று கும்பினியர்களை விரட்ட முனைந்த - முனையப் போகிற நிஜமான வேங்கையின் மைந்தனாயிற்றே! அப்பேர்ப்பட்ட வெற்றித் திருமகனை ஹைதர் அலி - சுதந்திரப் பிரகடனத்தின் உரிமைக் குரல்- இந்தத் தென்னகத்தின் தேசிய ராஜகர்ஜனை-இப்போது மரணத்தோடு யுத்தம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறது...

நிச்சயமாக மரணத்தின் ஜயக்கொடியை யாரும் வீழ்த்த முடியாது!

ஆ! மரணம் எவ்வளவு கொடியது...

''திப்பு வந்து விட்டானோ?''

-நேற்றைய முதற்கொண்டே, மகா சுல்தான் ஹைதர் அலி தமது குமாரனை எதிர்பார்க்கிறார்...



எப்படியும் சாகும் முன்னம் மகனைக் கண்டு சிலபல விஷயங்கள் குறித்து ஆத்மார்த்தமாகவும், பிராயச்சித்தமாகவும் பேச வேண்டும் என்பது அவரது அவா...

குப்புறப் படுத்துக் கொண்டிருந்தவர், மெல்ல ஒருக்களிக்க முயல்கிறார். முதுகில் பலமான கட்டு இருக்கிறது. ராஜப் பிளவைக் கட்டி என்பது புற்றுநோய் மாதிரியானதாயிற்றே!

மகா மருத்துவ மேதையான இமாம் பக்ஷ் குலாம் அகமது எவ்வளவோ முயன்று பார்த்தாய் விட்டது. தொடக்க காலத்தில் இது தெரிந்திருந்தால், ஸ்ரீரங்கப்பட்டினத்திலேயே வைத்து ராஜ வைத்தியம் பார்த்திருக்கலாம். இந்தச் சுதந்திரப் பூமியில் வெள்ளை நாரைகளாய் வந்திறங்கிய ஆங்கிலக் கும்பினியர்கள், எங்கே முன்னேறி இந்தத் தென்னகத்தை கபளீகரம் செய்து விடுவார்களோ அவர்களை முளையிலேயே கிள்ளி எறியவேண்டுமே என்று எண்ணினாரேயொழிய, தமது இந்த நோயை முளையில் கிள்ளி எறிய முனைந்தாரில்லை. அலட்சியமாக விட்டதன் போக்கு, இப்போது ஆபத்தாக வந்து முடிந்து விட்டது.

''திப்பு வந்து விட்டானோ?''

''வந்து விடுவார் ஹுசூர்!''

எத்தனை முறைதான் கேட்பார்; எத்தனை முறைதான் பதில் சொல்வது?

திவான் பூரணய்யா தமக்கேற்பட்ட மனக் கலக்கத்தில் வழிந்த கண்ணீருடன் தமது மகாசுல்தானைத் தேற்றப் பெரிதும் முனைந்து கொண்டிருந்தார்.

திப்புசுல்தானுக்கு அனுப்பிய செய்தி, இந்த யுத்த நெருக்கடியில் உருப்படியாகப் போய்ச் சேர வேண்டுமே என்று பலர் பிரார்த்தனை புரிந்தனர்.

தொலைவில் அமர்ந்திருந்த திவான் சாகிப் மீர்சாதிக் இந்த நேரத்திலுமா மீசையை முறுக்கி விட்டுக் கொள்ள வேண்டும்? அது கொஞ்சம் தாழ்ந்து அனுதாபத்துடன்தான் அரைக்கம்பத்தில்

பறக்கட்டுமே என்ற நினைவு வேண்டாமா? என்று மனத்துள் கசந்து கொண்டனர், கிருஷ்ணாராவும் சாமா ஐயங்காரும்!

தலைமாட்டுப் பக்கமாக யாகின்கானும், அபூமுகமதுவும், முகமது அலியும், பாதர்-உஸ்-ஸாமன்கானும், காஸிகானும், ராஜாக்கானும் மற்றும் ராணுவத் தூதர்களும் நின்றிருந்தனர்.

திவான் சாகிப் மீர்சாதிக் இந்த நேரத்தில் தன்னுள் உருவாக்கிக் கொண்டிருந்த சதித் திட்டம் மிக முக்கியமான ஒரு சிலருக்கு ஐயத்தின் காரணமாகப் புரிபடுகிறது. உண்மையிலும் மகா மீர்ஸாகான் மூலம் திப்புவுக்குச் செய்தி பறந்ததும், தொடர்ந்து திவான் சாகிப் மீர்சாதிக்கின் இரு கடிதங்கள் இரு வேறு திசை நோக்கிப் பறந்தன. ஒன்று சின்ன சுல்தான் அப்துல் கரீமுக்கு; மற்றொன்று ஹைதர் நகர் ஆளுநர் அயாஸ்கானுக்கு!

ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கு ஆபத்து முளைக்கிறது என்பது மட்டும் திவான் பூரணய்யாவுக்கு நன்றாகவே விளங்குகிறது. அந்த நேரத்தில் அவரால் எதையும் துணிந்து செய்ய முடியவில்லை. ஹைதரின் மரண அவஸ்தை அவரின் கைகளைக் கட்டிப் போட்டிருந்தது. எதையும் தெளிவாக ஆராய்ந்து உண்மையென்று நிரூபித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமே! சதித்திட்டம் செய்பவன் வருவாய்த் துறை சம்பந்தப் பட்ட திவான் சாகிப் பட்டத்துக்குரியவனாயிற்றே! தன்னிலும் ஒரு படி மீறிய அதிகாரமுடையவனாயிற்றே!

''திப்பு வந்து விட்டானா?''

ஹைதர் அலியின் துடிப்பு- விநாடிக்கு விநாடி அதிகரிக்கிறது. மருத்துவர் இமாம் பக்ஷி குலாம் அகமது ஒரு பொற்குவளை யிலிருந்து, தேனில் குழைத்திருந்த மருந்தினைச் சின்னப் பொற்கரண்டி கொண்டு எடுத்து வாய் வழியே செலுத்துகிறார்...

முதுகிலிருந்த புற்றுக் கட்டியிலிருந்து மீண்டும் வலி தெறிக்கிறது...

'ஆ...ஊ... என்று ஹைதர் அலி, அவலமாக முனகிச் சத்தமிடுகிற கோரக் காட்சியைத் திப்புசுல்தான் மட்டும், நேரிலிருந்து பார்த்திருப்பானேயாகில்...



'சீ, யுத்தமாவது... வெற்றியாவது!' என்று எண்ணி எல்லாமே முடிவில் மரணத்தில் துடிப்பதுதான் என்கிற பிரத்யட்சமான முடிவைக் கண்டு, அதன் பிறகு அவனும் ஒரு திப்பு மஸ்தானாகி விட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பது போலிருந்தது மகா சுல்தான் ஹைதர் அலியின் மரண யுத்தம்...

ஓ... என்று ஒருமுறை அலறி, பிறகு ஒருவாறு தம்மையடக்கிச் சமாளித்துக் கொண்டு உதடுகளை அழுந்தக் கடித்து அண்ணாந்து கவனிக்கிறார்...

எதிரே திவான் பூரணய்யா இருக்கக் கண்டு அருகே சமிக்ஞையின் மூலம் அழைக்கிறார்.

அருகே வந்து நின்ற திவான் பூரணய்யா, குனிந்து மூக்கின் மீது விரல் நுனிபட சொல்லுங்கள் மகாசுல்தான், என்பது போல நோக்குகிறார்.

''திவான்! திப்பு வந்து விடுவானா?''

''நிச்சயம் வந்துவிடுவார் மகாசுல்தான்! போர் நெருக்கடி எப்படியோ?''

''என்னுயிர் அதற்குள் பிரிந்துவிடும் போலிருக்கிறது. ஒருகால் அவ்விதம் நேருமாயின், உங்கள் அனைவருக்குமே ஒன்றைச் சொல்வேன்! என்னிடம் நீங்கள் அனைவரும் எவ்விதம் மிக்க விசுவாசத்துடன் நடந்துகொண்டீர்களோ, அவ்விதமே அவனிடமும் நடந்து கொள்வதாக ஆண்டவன் மீது சத்தியம் வையுங்கள்!''

அவ்வாறே அனைவருடைய சத்தியக் குரல்களும் எழுகின்றன. திவான் மீர்சாதிக்கும் ஏதோ முணுமுணுக்கிறான். அவ்வளவே!

ஹைதர் அலியின் குரல் நிரம்பவும் பலவீனமாக ஒலிக்கிறது;

''பூரணய்யா! இந்தத் தேசத்தை யாரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வெள்ளைக் கும்பினியனுக்கு அடிமைப்படுத்தி விடாதீர்கள். யாரும் அடிமையாகவும் நினைக்கக்கூடாது. அது இந்த

மண்ணுக்குச் செய்கிற மாபாவம்! பிறகு நமது நாகரிகம், கலாசாரம், மொழிகள், பண்பாடு, எல்லாமே அழிந்துபோகும். பாரத தேசம் பழம் பெரும் தேசம்!''

மூச்சு திணறுகிறது; சொற்கள் திக்கித் திக்கி வெளிவருகின்றன.

''ஒரு ரகசியத்தைச் சொல்கிறேன். திப்புவின் காதலால் நமது சுதந்திர முழக்கம் பங்கப்பட்டுவிடுமோ என்று நான் அஞ்சினேன். ஆனாலும் அந்தக் காதலை நான் பிரிக்க நினைக்கவில்லை. இதுபோலவே, பசவராஜ் ஒரு நல்ல வீரன். அவனது சேர்க்கையை நமது பெரும்பாலான அரசாங்க அதிகாரிகள் விரும்பவில்லை. அதிகாரிகளும், அரண்மனைச் சுல்தானாக்களுமாகச் சேர்ந்து எனக்குக் கடிதம் எழுதியதன் பேரில்... அந்தப் பரிசுத்தமான பிராமணப் பெண்ணுக்கும், அந்தப் பவித்திரமான நண்பனுக்கும் துரோகம் செய்து விட்டேன்... அதன் பயனை இப்போது அனுபவிக்கிறேன்...''

மீண்டும் மூச்சு வாங்குகிறது...

அதுவரை அசட்டையாக இருந்த திவான்சாகிப் மீர்சாதிக், மேற்கொண்டு வருகிற செய்திக்காகத் தனது செவிமடல்களை விரித்துக் கூர்மையாகக் கவனிக்கிறான்.

ஹைதர் அலியின் நாவிலிருந்து வார்த்தைகள் ஈனசுரத்தில், தெத்தியும், திக்கியும் இடையிடையே தொய்ந்தும் ஒலிக்கின்றன...

''அந்த இருவரையும் பழி பாவத்துக்கு ஆளாக்கினேனே யொழிய ஏனையவர் விரும்பியது போலக் கொன்று விடவில்லை. அந்த மட்டில் அல்லாஹ் என்னை நிதானமிழக்க விடவில்லை. அந்த இருவரையும் எனது ஹைதர் நகரத்து சிறைக் கூடத்தில் அடைத்து வைத்திருக்கிறேன். அவர்களை மீட்டுத் திப்புவிடம் ஒப்படைத்து விடுங்கள். ரங்கநாயகியின் காதலில் யாருமே குறுக்கிடாதீர்கள். பசவராஜ் நட்பில் யாரும் பொறாமைப்படாதீர்கள். இதுவே எனது கடைசிக் காலப் பிராய...''

ஓ...



மாவீர மகாசுல்தான் நவாப் ஹைதர் அலியின் பகதூர் ([1]ஜங்) அவர்களின் உயிர்ப் பறவை - மிகச் சிறந்த ஆத்மப் பறவை பிரிந்து எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பாதங்களை நாடிப் பறக்கிறது...

சரித்திரத்துக்குரிய அந்த உடல், ஜடமாகிச் 'சில்'லிடுகிறது...

எல்லாக் கண்களையுமே துன்பத்தின் நீர்த் திரைகள் மூடுகின்றன...

மூன்றாம் நாள் - 9-12-1782...

இன்னமும் திப்புசுல்தானுக்காகக் காத்திருக்க முடியாது என்று அனைவருமாக ஒரு முடிவின் கீழ் வருகின்றனர்...

இந்த மூன்று நாள் காலதாமதம் திவான் சாகிப் மீர்சாதிக் தீட்டிய திட்டத்துக்குச் சாதகமாக அமைந்து விட்டது. இது குறித்து அவன் உள்ளூற மகிழ்ந்து கொண்டான்...

ஹைதர் அலியின் மரணச்செய்தியை மிகவும் ரகசியமாகப் பாதுகாக்க வேண்டும் என்று அனைவருமே ஒருமுகமாக முடிவு எடுத்தனர். எதிரிகளுக்குத் தெரியுமேயானால் எந்த நிமிடத்திலும் எதுவும் பறி போகலாம் என்பது எல்லோருடைய ஏகோபித்த முடிவு. எனவே, ஹைதர் அலியின் உடலை ஒரு பெட்டியில் வைத்து, ஆடை அணிகலன்களைத் தூக்கிச் செல்வது மாதிரி பாவனை காட்டி ஸ்ரீரங்கப் பட்டினத்துக்குக் கொண்டு செல்ல முனைந்தனர். அதுவரை கொஞ்சம் படைகளுடன், ஹைதரைப் போலவே உருவ ஒற்றுமையமைந்த யாகின்கானை அங்கேயே நிறுத்திவைக்க ஏற்பாடு செய்தனர். யாகின்கானுக்கும் ஒரு நிறைவு! ஹைதர் அலி உயிரோடு இருந்தபோது, 'என்றைக்காவது உன்னை என் ஸ்தானத்தில் வைத்து ஒரு நாள் ராஜாவாகவேனும் ஆக்குவேன்!' என்று சொன்ன சொல் இப்போது பலிக்கிறது.

அவன் எதுவரினும் வரட்டும் என்கிற தியாக மனப்பான் மையுடன் ஒப்புக் கொண்டான். ஆ! இந்த யாகின்கானுடைய கதையும் இத்துடன் முடிந்து விட்டது என்று மனத்தில் நினைத்துக் கொண்டான்

1. 'ஜங்' என்ற சொல்லை ஹைதர் விரும்பவில்லை. எனவே அந்த விருதை அவர் உயிருள்ளவரை சேர்த்துக்கொள்ள நாணப்பட்டார் என்று ஒரு சரித்திரம் கூறுகிறது.

திவான் சாகிப் மீர்சாதிக். தனது சதித் திட்டத்துக்கு முன் கூட்டியே இவனது உருவ ஒற்றுமையை அளித்திருந்தால் இந்த நேரம் எத்தனை பேர் கதை எத்தனை விதமாக மாறியிருக்கும்! உடன்பட மறுத்து விட்டானே! தொலையட்டும்... திவான் மீர்சாதிக்கின் பற்கள் நறநறக்கின்றன...

சில துணிமணிகளை வெளியில் தெரியுமாறு பெட்டியைச் சுமந்து சென்றனர். பார்ப்பதற்கு அது ஒரு சாதாரணப் பெட்டி என்பது மற்றவர்க்குப் புரிய வேண்டுமே!

எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு வேகமாக அனைவருமே ஸ்ரீரங்கப்பட்டினத்தை நோக்கி விரைந்தனர்.

தங்க வயலான கோலாரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

அதோ, திப்புசுல்தான் புயலனைய வேகத்துடன், மகா மீர்ஸாக்கானுடன் பறந்து வருகிறான். பின்னே படைவீரர்கள்...

அவனது ஆவேச வருகையைக் கண்டு அனைவருமே பிரமித்துப் போய் நின்றுவிட்டனர். பெட்டியை ஒருமருங்கே இறக்கி வைத்தனர்.

அருகே வந்த திப்புசுல்தான், தனது புரவியைப் பலம் கொண்ட மட்டும் லகான்களை இழுத்து நிறுத்த முயல்கிறான். வந்த வேகத்தின் காரணமாக அந்தப் புரவி நிற்க முடியாது மூன்று முறை சுற்றித் துடிப்பின் காரணமாக நுரை தள்ளிய வாயுடன் முன்னங் கால்களைத் தூக்கிக் கனைக்கிறது.

புரவியைவிட்டு இறங்கினானோ அல்லது துள்ளிப் பாய்ந்தோடி வருகிறானா என்பதே புரியவில்லை. திப்புசுல்தான் இந்த உலகமே அஸ்தமித்து விட்டது போன்ற பாசத்தின் துடிப்பால் ஓடிவருகிறான். பின்னாலே மகாமீர்ஸா கானும் ஓடிவந்தான். தொலைவில் அவனுடன் வந்த படைகள் துக்கத்தின் காரணமாக பெருங்கூச்சலுடனும் நிற்கின்றன.

திறந்துவிட்ட பெட்டியில் மீளா நித்திரை செய்து கொண்டிருந்த தனதருமை வீரமிகு தந்தையைப் பார்க்குந்தோறும் உலகிலுள்ள



அனைத்துத் துயரங்களும் பொங்கிப் பிரவகிக்க மலைத்து, சிலைத்து நிற்கிறான் திப்புசுல்தான்.

‘‘அப்பா ஜான்...!’’

அந்தப் பிராந்தியமே நடுநடுங்குகிற அளவுக்கு மிகப் பெருஞ் சத்தம்...

அதுவும் ஒரு ராஜகர்ஜனையோ?

ஹைதர் என்கிற மகா ராஜகர்ஜனையும் அவனுள் புகுந்து இருமடங்கு உயர்ந்து விட்டதோ என்று பலரும் பொறி கலங்கிப் போயினர். அவனது முகம் சிவந்த பயங்கரத் தோற்றம், திவான் சாகிப் மீர்சாதிக்குக்கும் நடுக்கம் தந்தது என்றால்...

திப்புசுல்தான் குரல் அதற்குமேலே ஒலிக்கவில்லை. அந்தச் சிங்கம் வேதனையால் கண்ணீரில் குளிக்கிறது.

மிகவும் துணிவாக அருகே சென்ற திவான் பூரணய்யா, திப்புசுல்தானைத் தேற்றுகிறார். மகாசுல்தான் ஹைதர் அலி கூறிய அனைத்தையும் எப்படிச் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொல்ல வேண்டுமோ, அப்படி எடுத்துக் கூறினார் திவான் பூரணய்யா.

ரங்கநாயகியைப் பற்றியும், பசவராஜ் பற்றியும் செய்தியறிந்த திப்புசுல்தான், பல கணங்கள் மருண்டுபோய் மலைக்கிறான்.

அவர்களைச் சிறையிலடைத்த காரணங்களைப் பகிரங்கமாகவும் அதேநேரத்தில் தந்தையாரின் சுதந்திர முழக்கத்துக்குப் பங்கம் ஏற்பட்டு விடுமோ என்கிற காரணத்தைப் பக்குவமாகவும் பிட்டு வைத்தார் திவான் பூரணய்யா.

திப்புசுல்தானின் கண்கள் மிகவும் கொடூரமாக அனைவரையுமே நோக்கின. அவனது பார்வை யார் மீதும் குறிப்பாக விழுகிற அளவுக்கு நடந்து கொள்ளாது, அதிலும் ஓர் அரச தந்திரம் இருக்கிற மாதிரி காட்டிக் கொண்டதைக் கண்டு வியந்து போனார் திவான் பூரணய்யா.

அந்தத் தருணத்தில் -

தொலைவில் பதின்மர் புரவிகளில் வாயு வேகம் மனோ வேகமாக வந்து கொண்டிருப்பதைக் கவனித்தனர்.

அருகே வந்த அவர்கள் குதிரையை விட்டிறங்கி ஓடோடி வருகிறார்கள். திப்புசுல்தானே அங்கிருப்பதைக் கவனித்து ஒரு நிறைவு கண்டு, மண்டியிட்டு வணங்கி எழுந்து, வந்த களைப்பையும் பொருட்படுத்தாது. ''ஹுசூர்! நமது மகாசுல்தான் யுத்த களத்தில் இறந்து விட்டதாகச் செய்தி பரவியிருக்கிறது. மைசூர் ராஜ்யமே அல்லோல கல்லோலப்படுகிறது. அதன் காரணமாக நமது சின்ன சுல்தான் வருகை தந்து, எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு, ஆட்சிப் பீடத்தை கைப்பற்ற முயன்று கொண்டிருக்கிறார். மறுப்புத் தெரிவித்துப் போராடிக் கொண்டிருக்கிற நமது பெரிய சுல்தானா பேகம் அவர்களை எந்த நேரத்திலும் சிறையிலடைக்கலாம். இதனால் உள்நாட்டுக் குழப்பம் தலைதூக்கி இருக்கிறது. நமது சின்ன சுல்தானுக்கு உடந்தையாக மகாசுல்தான் நகர் (ஹைதர் நகர்) அதிகாரி அயாஸ்கான், கர்னல் வில்க்ஸுடன் கூடிக்கொண்டு தனிக்கொடி ஸ்தாபித்து விட்டார். தங்களுக்காக மலபார் நோக்கியும் ஆட்கள் பறந்திருக்கிறார்கள். தங்களை வழியில் சந்தித்தது ஸ்ரீரங்கப்பட்டினம் செய்த மகாபாக்கியம்!'' என்று அவர்கள் கூறி முடிக்கிறவரை, எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்த நவாப் திப்புசுல்தான்...

மீசை துடிக்க, தோள்கள் விம்ம, ''கரீம்!'' என்று அழுத்தமாகக் கூறுகிறபோது, அந்த வார்த்தை அவனது பற்களில் அறைபட்டு வெளி வந்தது. அக்கினிக் கோபம் ஜுவாலையாய் எழுந்தது.

தொலைவிலிருந்த திவான் சாகிப் மீர்சாதிக் தனது பொறிகள் நெருப்பாகிப் பற்றிக்கொண்டிருக்கின்றன என்பதில் அமைதி கண்டான். அவனை மிகவும் அர்த்தத்துடன் கவனிக்கிறார் திவான் பூரணய்யா.

''குமார சுல்தான்! மௌனம் சாதிக்க இது நேரமில்லை. தந்தையாரைக் கோலாரிலேயே இப்போதைக்கு அடக்கம் செய்வோம். உங்கள் பாட்டனாரை அடக்கம் செய்த இடத்திலேயே தந்தையாரையும் அடக்கம் செய்வது நல்லதாகும். நாம் சென்று ஆவனவற்றைக் கவனித்த பின்னர், தந்தையாரின் பூத உடலை



எடுத்துச் சென்று ஸ்ரீரங்கப்பட்டினத்தில் முறைப்படி தக்க அரச மரியாதையுடன் அடக்கம் செய்து கௌரவிப்போம்'' என்று திவான் பூரணய்யா கூறியதே சாலப் பொருத்தமென்பதை உணர்ந்து, செயல் படத் தொடங்கினான் திப்புசுல்தான். அவனது நினைவில் ஒருபுறம் ஸ்ரீரங்கப்பட்டினம், மறுபுறம் மங்சுளாதேவி, பசவராஜ், ரங்கநாயகி...

அன்னை பெரிய சுல்தானா பேகத்தின் அவல நிலை...

எது, எவ்விதம் நிகழ்ந்துபடுமோ என்கிற மனக்கொதிப்புடன் செயல்களை விரைந்து முடித்துப் படைகளுடன் ஸ்ரீரங்கப்பட்டினத்தை நோக்கிப் பயணமானான் சீற்றமிகு ராஜநாகமாய்ப் படம்விரித்துப் பற்களைக் கூர் தீட்டிக் கொண்டிருந்த போற்றுதலுக்குரிய மாவீரச் சுதந்திரச் செல்வன் திப்புசுல்தான்.

## 29

**மா**வீர ஹைதர் அலிகான் நவாப் பகதூரின் இரங்கல் மிக்க மறைவுச் செய்தி அதற்குள் ஹைதர் நகர் வரை எட்டி, அதற்கப்பாலும் இப்பாலுமாக நிறைந்திருந்த கோட்டைகளிலும் எதிரொலித்து, எத்தனையோ லட்சோப லட்சக் கண்களில் எத்தனையோ ஆயிரமாயிரம் உணர்ச்சிகளை விதவிதமாகவும், வித்தியாசமாகவும் பிரதிபலிக்கச் செய்து கொண்டிருக்கிறது...

ஆளுநர் அயாஸ்கானுக்கு இச்செய்தி, சென்ற வாரத்திலேயே கிடைத்துவிட்டது. ஆ! அதன் பிறகு அவன் செயல்படத் தொடங்கிய பயங்கரச் சதித் திட்டங்களின் பாதிப்புகள்தாம் ஸ்ரீரங்கப்பட்டினம் வரை நிம்மதியற்றுக் குழப்பத்தில் மூழ்கடித்தன. பெருமைமிக்க லால்மகாலே பேரவதிக்குட்பட்டு விட்டது.

அயாஸ்கான் தனது நீண்ட நாளைய திட்டம் - நெட்ட நெடிய கனவு-நினைவுகளுக்கு அப்பாற்பட்ட ஆசை- நன்றியின் மறுபக்கம் இப்போதுதான் தருணம் வாய்த்தது வேலை செய்யத் தொடங்கி யிருக்கிறது என்பதில் நிரம்பவும் குதூகலித்து, உடனடியாகக் கர்னல் வில்க்ஸ் துரையை வரவழைத்திருந்தான். அவனிடம் ஏற்கெனவே

விவரித்திருந்த தனது பேராசை நிறைந்த திட்டங்களையும் ஒப்பந்தங்களையும் மீண்டும் ஞாபகப்படுத்துபவனே போல விவரித்தான். அனைத்தையும் தனது ராஜதந்திரம் நிறைந்த செவி மடல்களை நன்றாகவே திறந்து நிரப்பிக் கொண்டான் அந்தக் கும்பினியின் ராணுவத் தளபதி கர்னல் வில்க்ஸ்.

கர்னல் வில்க்ஸும் இந்தச் சமயம் கருதிய பெருவாய்ப்பினை விவரித்துச் சென்னைச் சபை (Council)க்கு நீண்ட கடிதம் எழுதி விரைந்து அனுப்பி வைத்திருந்தான். படைகள் சுணக்கமில்லாமல் வந்துவிடவேண்டும் என்றும், திப்புசுல்தான் ஸ்ரீரங்கப்பட்டினத்தை அடைவதற்குள் ஸ்ரீரங்கப்பட்டினத்துச் சின்ன சுல்தான் அப்துல் கரீமிடம் ஓர் ஒப்பந்த உடன்படிக்கை எழுதிக் கையொப்பம் வாங்கிவிட வேண்டும் என்றும் அச்செய்தியில் குறிப்பிட்டிருந்தான். அந்தக் கையொப்பத்தை வைத்துக்கொண்டு அவன் நடத்தவிருக்கிற நாடகம், பல காட்சிகளைக் கொண்டதாக இருந்தது.

ஆனால் அதற்கப்பாலும் சில பல ரகசியங்கள் அந்தக் கடிதத்தில் மிகவும் நரித்தன்மை கலந்து எழுதப்பட்டிருந்ததைக் கேவலம் சுயாட்சிப் பேராசை கொண்ட நன்றியின் மறுபக்கமாக மாறிய அயாஸ்கானால் அறிய முடியவில்லை. கெடுவானுக்கு வாழ்வின் ஒரு பக்கந்தானே புரியும்? பாவம், அயாஸ்கான்! அவனது சந்தர்ப்பத்துக் கேற்ப மாறும் நிலையுடைய 'ரத்தம்' இவ்வளவு ஈனத்தனமான பேடிமை நிறைந்த கடமையுடன் செயல்படுகிற போது, அவனது நாட்டின் அழிவுபற்றி, அவனுக்குப் புரிய நியாயமில்லை என்று அந்தக் கோட்டையில் ஒரு சில விவரம் தெரிந்தவர்கள் வருந்திக் கொண்டனர்.

புகழ் வாய்ந்த ஹைதர் நகரின் அரண்மனைக் கூடம் சின்னஞ் சிறியதாக இருந்தாலும், பென்னம் பெரிய கலை நுணுக்கங்களுடன் அதனைச் சீரமைத்திருந்தார் ஹைதர் அலி. அவரது ஓய்வு காலத்துக்கென அமைக்கப்பட்டதாயிற்றே? இப்போது அவரே நீண்ட ஓய்வெடுத்துக் கொண்டுவிட்டார்...

கர்னல் வில்க்ஸ், ஆசனமொன்றில் அமர்ந்து கனத்த சுருட்டைப் புகைத்துக் கொண்டிருந்தான், ஓ... அவனது நினைவுகள் அந்தக்



கூடத்தே புகைந்து வட்டமிட்டுச் சுழித்துக் கொண்டிருந்தன. அந்தக் கூடத்துள் நுழைவோமா என்று அவன் எத்தனை நாள்களாகத் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தான்...

''கர்னல் துரை! எல்லாம் சரிவர முடியும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை! ஆனால், எப்படியும் திப்புசுல்தானை எனது பேடனூர் சிறையில் அடைத்துவிட்டால், பிறகு எந்தக் கவலையும் நம்மைத் தாக்கக் காரணமே இல்லை!''

இப்படியுமப்படியுமாய் உலவிக் கொண்டிருந்த அயாஸ்கான், இவ்விதமாகத் தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்துடன் உருது மொழியைக் கலந்து கூறுகிறபோது அவனது முகத்தில் எந்தவித மெய்ப்பாடும் வெளிப்படவில்லை. ஒரு நிமிடம் நின்று கர்னல் வில்க்ஸை நோக்குகிறான்...

அவனது உள்ளத்தில் திப்புசுல்தானைப்பற்றிய நீண்ட நாள் வஞ்சம் புகைந்து, நெருப்பாகிக் கனியுந் தருணம் வாய்த்ததில் ஓர் அல்பமான சந்தோஷம். ஆனாலும் அதனை அவன் முகத்தில் காட்டிக் கொள்ளவில்லை.

கனமான சுருட்டை இருமுறை உருட்டி யுருட்டிப் பொறுக்க பொறுக்க இழுத்துப் புகையைக் கக்கிய பிறகு அண்ணாந்து கவனித்தான் கர்னல் வில்க்ஸ்: ''என்ன சொன்னீர்கள்? திப்புசுல்தானை இந்தப் பேடனூர் சிறையில் அடைத்து வைப்பதாவது? அதுவே ஒரு கவலைதானே? திப்புசுல்தான் பிடிபட்டதும் துண்டுதுண்டாக வெட்டி, பஞ்சு பஞ்சாக்கி ஒவ்வொரு அங்கத்தையும் ஒவ்வொரு பகுதியில் புதைத்தால்தான் எல்லோருக்குமே ஒரு நிம்மதி!''

கர்னல் வில்க்ஸ் தனக்குத் தெரிந்த அரைகுறை உருது பாஷையுடன் ஆங்கிலத்தையும் குழைத்துச் சொல்கிறபோது, அவனது நரிக் கண்கள் சுருட்டின் நெருப்பு போல் கனன்றிருந்தன.

அயாஸ்கான் முகத்தில் அதுவும் சரிதானே என்கிற உணர்ச்சி மெல்ல விரிகிறது. ''இப்படியும் நடந்துவிட்டால் எல்லோருக்குமே நிம்மதிதான்!''

''அயாஸ்கான்! அப்துல் கரீமை நீங்கள் பரிபூரணமாக நம்புகிறீர்களா? திப்புசுல்தான் பரிபூரணமான வீரன் ஆதலால் சத்தியத்துக்குக் கட்டுப்படுவான்! அப்துல் கரீம் கோழைமை கலந்த வீரன்! அதனால் அவன் அசத்தியவான் என்பது மட்டுமல்ல, பச்சை அயோக்கியன்! அவனை எந்த அளவுக்கு நம்பி இருக்கிறீர்கள் என்பதுதான் எனக்குத் தெரியவேண்டும்.''

''கர்னல் துரை! நீங்கள் எவ்வளவுக்கு அப்துல் கரீமை நம்பி இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கே நானும் நம்பி இருக்கிறேன். அதாவது, நீங்கள் நினைப்பதை நான் முழுவதுமாக ஏற்கிறேன் என்பது இதன் பொருள்!''

''இது மழுப்பலான பேச்சு! உங்கள் மனத்திலிருக்கும் விஷயத்தைத் தெளிவாகவே பேசலாம்.''

''தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால், நான் அப்துல் கரீமை நம்பவில்லை, எனது இந்தப் பேடனூரை எனக்குச் சுயாட்சியாக சாஸனம் வழங்கி விட்ட பிறகு, நீங்கள் ஸ்ரீரங்கப்பட்டினத்தையே விழுங்குவதானாலும் கவலைப்படமாட்டேன். ஆனால் எனக்கு வழங்கிய இந்தச் சுயாட்சி சாஸனம் எக்காரணம் முன்னிட்டும், பறிபோகக் கூடாது.''

''நல்லது; உங்கள் எண்ணத்தைப் பாராட்டுகிறேன்! நிச்சயம் உங்களுக்கு வழங்குகிற சாஸனம் பறிபோகக் காரணமே இல்லை.''

கர்னல் வில்க்ஸ், மிகவும் அர்த்தங்களடங்கிய பார்வையை அயாஸ்கான் மீது வீசி அளக்கிறான். அயாஸ்கான் அற்பமான மகிழ்ச்சியில் முறுவலிக்கிறான்.

''அடுத்து என்ன செய்வதாக உத்தேசம், கர்னல் துரை?''

''சென்னைப் பட்டணத்திலிருந்து ராணுவங்களையும் அதற்கு முன்னால் செய்தியையும் எதிர்பார்க்கிறேன். எப்படியும் திப்புசுல்தான் ஸ்ரீரங்கப்பட்டினம் அடைவதற்குள் செயல்கள் சுறுசுறுவென்று நடைபெற்று முடிந்துவிட வேண்டுமே என்று நிமிஷத்துக்கு நிமிஷம் எதிர்பார்க்கிறேன்.''



''திப்புசுல்தான் வந்தால்தான் என்ன? ராணுவத்தை வைத்து ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதானே?''

கர்னல் வில்க்ஸ் கடகடவென்று பெரு நகை புரிகிறான். பிறகு அந்தச் சிரிப்புக்கான காரணத்தை விளக்கினான்.

''நீங்கள் ஒரு கோட்டையின் தலைவன்! ராணுவத்தின் பரிபாலகனல்லன்! எனவே ராணுவத் தந்திரம் அறிய மாட்டீர்கள். அவ்வாறு ராணுவத்தைக் கொண்டு, திப்புசுல்தானைப் பதம் பார்க்க வேண்டும்; பதம் பார்க்க முடியும் என்றால் எப்போதோ செயல் பட்டிருக்கலாமே! அது முடியாதது; திப்புசுல்தான் ஒரு மாபெரும் தேசியப் புரட்சித் தலைவன். மக்களின் ஆதரவு பெற்ற திலகம்! அவன் இல்லாதபோது ராஜதந்திரமாக ஸ்ரீரங்கப்பட்டினத்தைக் கைப்பற்றி விட்டால், பிறகு திப்புசுல்தான் வேறெங்காவது ஓடி ஒதுங்க நேரிடும். மெல்ல மெல்ல - அதுவும் மெல்ல மெல்லத்தான் - ஓடி விரட்டிப் பிடிக்க வேண்டும்! அவ்வளவு எளிதில் அவன் அகப்படமாட்டான்! அவனது யதாஸ்தானமான - மூலகேந்திரமான ஸ்ரீரங்கப்பட்டினம் முதலில் பிடிபட வேண்டும். அவன் வந்து விட்டால்- நேரில் கண்ட பிறகு இன்றைக்கு நம்முடன் உடன்படும் - நம்மை எதிர்பார்க்கும் அப்துல் கரீமே மாறிவிட மாட்டான் என்பது என்ன நிச்சயம்? அவ்விதம் அவன் மாறி விட்டால் நமது முயற்சிகள் அத்தனையும் வீணாகிப் போய்விடும்; எங்களுக்குப் பயமில்லை. ஆனால் உங்களுக்கு மிஞ்சுவது பேராபத்து! புரிகிறதா?''

அயர்ந்து போனான் அயாஸ்கான்.

ஓ... இப்படியும் ஒரு பேராபத்திருக்கிறதா?

அவன் மிகவும் வேதனையுடன் தனது கழுத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டான்...

அவனது பயந்து போன பாவனைகளைக் கவனித்த கர்னல் வில்க்ஸ், ''அஞ்ச வேண்டாம் அயாஸ்கான்! எப்படியும் இந்த உள்நாட்டுக் குழப்பத்தைச் சாதகமாகக் கொண்டு நாம் நமது திட்டத்தைச் சரிவர நிறைவேற்றிவிடலாம். நமக்கு உறுதுணையாக இருக்கிற திவான் சாகிப் மீர்சாதிக், அங்கிருந்து எந்தக் கால கட்டத்தில்

எப்படிச் செயல்பட வேண்டுமோ அதனைக் கவனித்துக் கொள்வார்'' என்று தைரிய மூட்டினான்.

''எனக்கும் இந்த ஒன்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை. திவான் சாதிக், எந்த எதிர்பார்ப்பை வைத்து இப்படி துணை புரிகிறார்?''

''அதுதான் ராஜ தந்திரம்! ஹைதர் அலியின் ஆட்சியில் மீர்சாதிக் அனுபவித்த சுகங்களைக் கூட திப்புசுல்தான் ஆட்சியில் அப்துல் அனுபவிக்க முடியாது! எனவே அப்துல் கரீமுக்கு ஆசை காட்டி ஒரு பொம்மை மாதிரி அரியணையில் அமர்த்தி விட்டால், பிறகு அனைத்தும் மீர்சாதிக் கையில்தான்! ஒரு ஹைதர் அலிக்கு எத்தனை கௌரவம் உண்டோ, அத்தனையும் மீர்சாதிக்கை வந்து சேருமல்லவா?''

தன்னிலும் திவான் சாகிப் மீர்சாதிக் அனுபவிக்கப்போகிற சொர்க்கத்தை ஒரு கணம் கற்பனை செய்து வீங்கி வெடித்துக் கொள்கிறான் அயாஸ்கான்!

தான் எப்படி ஹைதர் அலி உயிருடன் இருக்கிறவரைக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டோமோ, அப்படியே இந்தத் திவான் சாகிப் மீர்சாதிக்கும் எண்ணியிருந்தானா? - அயாஸ்கான் இது குறித்துத் தீவிரமாகச் சிந்திப்பதைக் கண்ட கர்னல் வில்க்ஸ், ''என்ன அயாஸ்கான் யோசனை?'' என்றான்.

''நாம் எப்போது படைகளுடன் புறப்படுவது? என்றுதான் யோசிக்கிறேன். அப்துல் கரீம் கணத்துக்குக் கணம் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பான்.''

''கையிலிருக்கிற சேனைகள் போதுமா?''

''ஆனாலும் இருப்பதைக் கொண்டு உதவலாம் அல்லவா?''

''திப்பு எங்கிருக்கிறான் என்கிற செய்திக்காகவே நான் காத்துக் கொண்டிருக்கிறேன். அத்துடன் சென்னைப் பட்டினத்து ராணுவபலத்தையும் எதிர்பார்க்கிறேன். இன்னும்...



கர்னல் வில்க்ஸ் முழுமையாகச் சொல்லி முடிக்கு முன்பு, அவனது அந்தரங்கம் பணியாளன் ஓடோடி வந்து வணங்கி நின்று ''மாட்சிமை பொருந்திய கர்னல் துரை! திப்புசுல்தான் கோலாரில், ஹைதர் சடலத்தைப் புதைத்து விட்டுப் படைகளுடன் கிளம்பி விட்டான் என்று செய்தி கிடைத்திருக்கிறது. உடையார் ராஜ வமிசத்தவரிடமிருந்து வேறு கடிதம் வந்திருக்கிறது. ஸ்ரீரங்கப் பட்டினத்தில் உள்நாட்டுக் குழப்பம் அதிகரித்து விட்டதாம்! மக்கள் அப்துல் கரீமுக்கு எதிராகக் கோஷமிட்டுக் கிளம்பிவிட்டார்களாம்! இதற்குக் காரணம், பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷா! அந்தம்மாள், ஜனானாவிலிருந்து கொண்டு தக்க பாதுகாவலுடன் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கிறார்களாம்! எந்த நேரத்திலும் அவர்கள் திப்புசுல்தானை எதிர்பார்க்கிறார்கள். அப்துல் கரீம் தனக்குரிய ராணுவங்களை வைத்துக் கொண்டு உள்நாட்டு குழப்பத்தையடக்க முயன்று கொண்டிருக்கிறாராம்! எப்படியும் நமது உதவி உடனடியாக தேவை என்று அவசரக் கடிதம் அனுப்பி இருக்கிறார்!'' என்று துடிதுடிப்புடன் கூறி முடித்ததும், அசையாத கர்னல் வில்க்ஸின் பீரங்கி நெஞ்சம் கூட, அசைந்து ஆட்டம் கொடுத்தது. அந்தரங்கப் பணியாளன் கூறிய துடிப்பு மிக்கச் செய்தியில், ஆங்கில மொழியின் பிரமாதமான பதப்பிரயோகத்தின் காரணமாகச் சிலது புரிந்தும் பலது புரியாததுமாக விழிக்கலானான் அயாஸ்கான்.

''ஆல்ரைட்! நீ போகலாம்!'' என்று கூறித் தனது அந்தரங்கப் பணியாளன் சென்று மறைகிறவரை பேசாது இருந்த கர்னல் வில்க்ஸ், அதுவரையிலும் நிரம்பவும் எதிர்பார்ப்புடன் செய்தியை அறிகிற துடிப்புடன் காணப்பட்ட அயாஸ்கானை நோக்கி, விவரத்தை விளக்கினான். செய்தியை முழுக்கவுமாக அறிந்த அயாஸ்கான், பல வினாடிகள் வரை பேதலித்துப் போனான். பேராபத்து தனக்கு நிகழ்ந்து விடுமோ என்கிற அச்சம் கணத்துக்குக் கணம் மேலோங்கி நின்றது.

''வில்க்ஸ் துரை! தயவு செய்து இப்போது உடனடி நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். உங்கள் அபரிமிதவான ராஜ தந்திரம் பயனளிக்க வேண்டும்?'' என்று கூறுகிற போது, அயாஸ்கான்,

தனது பயத்தைச் சொற்களில் தேக்கியிருந்தது குரல் நடுக்கத்திலிருந்து தெரிய வந்தது.

மீண்டும் ஒரு சுருட்டை எடுத்துப் பற்ற வைத்தான் கர்னல் வில்க்ஸ். அவனது மூளை புகைந்தது. எழுந்து ஒரு முறை குறுக்கும் நெடுக்குமாக உலவினான்.

''அயாஸ்கான்! நமது சிறைக் கூடத்தில் எத்தனை கைதிகள் இருக்கிறார்கள்?''

'ஏன் இவன் இதனைக் கேட்கிறான்?'

அது குறித்து விளக்கம் கேட்க இது சமயமில்லை என்றுணர்ந்த அயாஸ்கான், ''சுமாராக ஐயாயிரம் பேர் இருக்கிறார்கள்'' என்றான்.

''இவர்களில் போர்க்களத்தில் சிறைப் பிடித்தவர்கள் எத்தனை பேர்?''

''நூறு அல்லது இருநூறு பெயர்களை நீக்கி அனைவருமே போர்க்களத்தில் சிறைப்பிடிக்கப் பட்டவர்கள்!''

''அனைவருமே எங்கள் ராணுவத்தவர்கள் இல்லையா?''

''ஆமாம்.''

''அனைவரையுமே விடுதலை செய்யுங்கள். அனைவரையும் ராணுவத்துடன் இணைந்து அழைத்துச் செல்கிறோம். அனைவருக்குமே நமது வெற்றிக்குப் பிறகு பரிசுப் பணங்களுடன் மரியாதை நடக்கும் என்று உத்தரவிடுங்கள்!''

''இதில்...''

''இதைப் பற்றிய பேச்சைப் பிறகு வைத்துக் கொள்ளலாம். ஆபத்து காவேரியை நெருங்கிக் கொண்டிருக்கிறது! உடனடியாக ஆணையிடுங்கள்!''

மறு பேச்சின்றி அந்தக் கூடத்தை விட்டு வெளியே சென்றான் அயாஸ்கான். மூக்கின் அடிப்பாகத்தை இடக்கரத்து ஆள்காட்டி விரலால் தேய்த்துக் கொண்டே யோசிக்கிறான் கர்னல் வில்க்ஸ். பிறகு சுருட்டை வாயில் வைத்து உருட்டியுருட்டிப் புகைக்கிறான். மிகப்



பெரிய கும்பினி ராணுவத் தளபதியான அவனது சிந்தனை திப்புசுல்தான் என்கிற ராஜகர்ஜனையை எப்படி அடக்குவது என்பது பற்றியதில் சுழல்கிறது...

ராஜகர்ஜனை அவ்வளவு எளிதில் அடங்கி விடுமா? அடக்கி விடத்தான் முடியுமா?

## 30

**சி**றைக் கோட்டத்தையே திறந்து விடுமாறு இடப்பட்ட திடீர் உத்தரவைக் கேட்டு அதன் தலைவன் மருண்டு போனான். யார் யாரை விடுதலை செய்ய வேண்டும் என்பதில்லாது ஒட்டு மொத்தமாக அனைவரையுமே விடுதலை செய்து ராணுவத்திடலுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற அயாஸ்கானின் உத்தரவு, விரைந்து செயல்படத் தொடங்கியது. உள்ளூர்க் குற்றத்துக்காகக் கைதான அந்த நூறு அல்லது இருநூறு பேர்களைத் தேடிப் பட்டியலிலிருந்து நீக்கும் அளவுக்குப் பொறுமையில்லை; நேரமும் இல்லை. அவர்கள் மட்டும் என்ன பாவம் செய்து விட்டார்கள்? அவர்களும் ராணுவத்துடன் வந்து பலியாகட்டுமே என்று எண்ணி விட்டான் போலும் அயாஸ்கான்!

பசவராஜ், ரங்கநாயகியைப் பற்றி ஒரு கணம் யோசிக்க மறந்து விட்டானோ, அல்லது அவர்களையும் ராணுவத்திடலில் சந்தித்துக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தானோ?

சிறைக்கோட்டத்தில் நடந்த இந்தக் களேபரத்தினூடே பேரம்பாக்கத்திலிருந்து ராஜாக்கானுடன் வந்த அந்தப் பதினெட்டு வீரர்களும் இதுதான் சமயம் என்று அவர்கள் தப்பித்துச் செல்வதற்குப் பதிலாக ஒரு ராஜ விசுவாச சுயரூபத்துடன் பசவராஜையும் ரங்கநாயகியையும் தப்பிக்கச் செய்து அனுப்பி வைப்பதில் தீவிரமாக முனைந்தனர்.

சிறைக்கோட்டத்திலிருந்து திபுதிபு வென்று சிற்றெறும்பு சாரைபோல் கைதிகள் சென்று கொண்டிருக்கையில்...

பேரம்பாக்கத்து வீரர்களில் இருவர் கோட்டை லாயத்திலிருந்து ஒரு குதிரையை அபகரித்து வருவதில் உயிரைப் பணயம் வைத்து ஈடுபட்டனர். ஒருவன் தனது சட்டையையும் குல்லாவையும் அவிழ்த்துக் கொடுத்து, ரங்கநாயகியை அணிந்து கொள்ள அவசரப்படுத்துகிறான்...

இதன் மூலம் வழியில் பெண் என்கிற நினைவு மற்றவருக்கு எழாமல் போகலாம் அல்லவா?

வியர்வையின் முடை நாற்றமுடன் அவிழ்த்துக் கொடுத்த அந்தச் சட்டையையும் குல்லாவையும் பெற்ற ரங்கநாயகி, அவற்றை அணியக் குமட்டினாள், அவளது அந்த உள்ளுணர்வுகளைப் புரிந்து கொண்ட பசவராஜ், ''ரங்கநாயகி! என் சகோதரி! நமக்கு இதை விட்டால் வேறு அரிய சந்தர்ப்பம் கிடைக்கும் என்று தோன்றவில்லை. நான் அழிவது குறித்துக்கூடக் கவலைப்படவில்லை. உன்னை அழியாமல் என் நண்பனிடம் சேர்த்துவிட வேண்டும்; உனது கற்புக்கு நான் பாதுகாவலாக இருப்பேன் என்று அன்று கூறிய சொற்களை நிஜப்படுத்தி நிரூபிக்கவேண்டும்! இங்கிருந்து நாம் தப்பிக்கிறபோது உனக்குப் பிடிக்காத சிலவற்றை நீ ஏற்றுத்தான் தீரவேண்டும், நம்மீது எவ்வளவு விசுவாசமாக இவர்கள் தங்கள் உயிரையும் மறந்து செயல் படுகிறார்கள்! இந்தச் சட்டையும் குல்லாவும் பாரிஜாத மலர்களினும் வாசனை மிக்கதென்றே நான் சொல்வேன்!'' என்றான்.

ஓர் ஓரமாக அவர்கள் நின்று கொண்டிருந்ததை யார் கவனிக்கப் போகிறார்கள்? சிறையிலிருந்து விடுதலை கிடைத்ததே பெரிய யோகமாகக் கருதியவர்கள் விழுந்தடிந்து ஓடிக் கொண்டிருந்தனர்.

இதற்குள் ஒருவன் மிகச் சாதுரியமாக ஒரு குதிரையை அவிழ்த்துக் கொண்டு வந்து தொலைவில் நிறுத்தியவண்ணம் சமிக்ஞை செய்தான்.

''அதோ பார் ரங்கநாயகி! குதிரையும், தயாராகி விட்டது. உன்னைக் குதிரையில் அமர்த்திக் கொண்டு செல்ல நான் நாணப்பட வில்லை; ஏனென்றால் நான் உனது உடன்பிறவா அண்ணன்! நீ நாணப்படுவாயேயானால், நமது நோக்கம் வீணாவது மட்டுமல்ல,





உனது கற்பு சத்தியமாகப் பறிபோய்விடும்! யோசிக்க இது நேரமில்லை! புறப்படு ரங்கநாயகி!''

உண்மையிலும் யோசிக்க நேரமில்லை என்பதை உணர்ந்த ரங்கநாயகி, பசவராஜைப் பின்தொடர்ந்தாள்.

சற்றைக்கெல்லாம் ரங்கநாயகியை முன்னால் அமர்த்திக் கொண்ட பசவராஜ், குதிரையைத் தட்டி விட்டான். அது நாலுகால் பாய்ச்சலில் அம்பனையப் பாய்ந்து செல்வதைக் கண்டு, சிலர் பெருத்த கூச்சலிட்டனர். அந்தக் கூச்சலைக் கேட்ட ஹைதர் நகர் வீரர்களில் பதின்மர் தொலைவில் பறந்து கொண்டிருந்த பசவராஜைப் பிடித்து வரத் தமது குதிரைகளில் துள்ளி ஏறித் தொடர்ந்தனர்.

சூரியன் மேற்கு வாயிலில் விழுந்து கொண்டிருந்தான்.

**த**னது திறமையின் பிடிப்பிலிருந்து சற்றும் மீறி விடாத அளவில், குதிரையை விரட்டோ விரட்டென்று விரட்டி வருகிறான் பசவராஜ். இந்தப் பயங்கரமான வேகத்தின் காரணமாக ரங்கநாயகி பயந்து நடுங்கி மயக்க முற்றிருந்தாள். அவளது உடல், எதிர் காற்றின் பேய் மோதலின் காரணத்தாலும் பசவராஜின் முழு அங்கங்களும் தன் மீது பட்டு இந்த அவஸ்தா சோதனைகளுக்கு ஆளாகி விட்டோமே என்கிற கூச்சமான நாணத்தக்க உள்ளுணர்வின் காரணத்தாலும் சில்லிட்டிருந்தது. எந்த ஓர் ஆடவனும் தனதுடலை இதுகாறும் தொட்டதில்லை; சகோதர வாஞ்சையுடையவனானாலும், ஏன்? உடன்பிறந்த சகோதரனே யானாலும் தொட அனுமதிக்காத வளாயிற்றே ரங்கநாயகி?

அவளுக்கு இப்படி ஒரு சோதனை முளைத்தது. அவளது உள்ளத்தைப் பெரிதும் பாதிக்கச் செய்து ஊசி முனைகளாய்க் குத்தி வேதனைப் பட செய்தது. என்றாலும், என்ன செய்ய இயலும்? ஆபத்துக்குத் தோஷமில்லை என்று கூறிய உபநிஷத்தின் ஞான வாசகங்களை எண்ணிப் பார்த்தும் அவளால் சமாதானம் செய்து கொள்ள முடியவில்லை. ஓ... தனது சங்கல்பம் இவ்விதமாய் விட்டதே என்பதில் அவள் மனம், குமைந்து கொள்ளுகிறது...

பசவராஜ் பின்னே வருபவர்களைத் திரும்பிப் பார்த்துக் கொள்கிறான்...

அவனைத் துரத்திப் பிடிக்க வந்த வீரர்கள் படுவேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள்...

இந்த வீரர்கள் பசவராஜைப் பொறுத்தமட்டில் சுண்டைக் காய்கள்; ஆனால் கையில் குறைந்தபட்சம் ஒரு குத்துவாள் கூட இல்லையே! எப்படி அவனால் சமாளிக்க முடியும்? என்னதான் வாள்வீச்சில் சமத்காரனாக இருந்தாலும் பத்து வாட்களுக்கிடையே ஒரு நிராயுதபாணியான அவனால் என்ன செய்துவிட முடியும்?

வேகத்தின் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாத பூங்கொடி போன்ற ரங்கநாயகி, இடையிடையே 'வீல் வீல்' என்று பயத்தின் காரணமாக அலறுவது பசவராஜுக்கு வேதனை தரத்தக்கதாகவும் சோதனை தரத்தக்கதாகவும் இருந்தது. அவனால் அதற்கு மேலும் பயணம் செய்ய முடியவில்லை. வேறுவழியின்றிக் குதிரையைப் பாதையை விட்டு விலக்கியோட்டி, குறுக்கே புகுந்து அடர்ந்த ஓரிடத்தில் நிறுத்தினான். அந்தப் பழக்கமில்லாத குதிரை வெறுமனே நிற்கக் கூடாதா? அது பெருத்த கனைப்புடன் முன்னங்கால்களைத் தூக்கி, மீண்டும் தரையில் போட்டு, இப்படியுமப்படியுமாக அசைந்து நிற்கச் சில விநாடிகள் பிடித்தன.

குதிரையிலிருந்து இறங்கிய பசவராஜ், மெல்ல ரங்கநாயகியை ஒரு தெய்வ உணர்வுடன் தொட்டு இறக்கி ஒரு பக்கமாக ஒளிந்து கொள்ளச் செய்தான். வருவது வரட்டும் என்கிற மரணத் துணிவு அது. ரங்கநாயகியின் அலறல் காரணமாக ஏதோ நடக்கக்கூடாதது நடந்து விடப்போகிறது என்று அஞ்சுவதற்கே அஞ்சி நடுங்கினான்.

அப்போதுதான் பக்கத்தே இருந்த படிக் கிணற்றில் தண்ணீரை அருந்தி விட்டு மேலே வந்த ஒருத்தி, சுற்றும் முற்றும் பார்க்கிறாள். சற்றுமுன் குதிரை கனைக்கிற ஒலி கேட்டதே...

தொலைவில் அவளது கண் பார்வையில் பசவராஜ் தெரிந்தான். மாலையின் பொன் வெயிலில் அவனை அவள் இனம் கண்டு கொண்டாள். அவள் வேறு யாருமல்ல. கிருஷ்ணகிரியில் பசவராஜ்



ஆணையின் பேரில் பதினெட்டு கசையடிகளைப் பெற்ற அந்தக் குடியானவனின் ஆசை நாயகி!

வேகமாக நடந்து வந்த அவள் பசவராஜை நெருங்கி, "வணக்கம் மகாராஜா!"

மகாராஜாவா?

எளிய மக்கள் அக்காலத்தே உயர்ந்த மக்களை அழைக்கும் வழக்கமான முறை இது என்பதனை உணர்ந்து, அவளைக் கூர்ந்து கவனித்தான் பசவராஜ். அவனுக்கு அவள் யார் என்பது புரிந்துவிட்டது.

"நீயா? நீ எப்படி இங்கே வந்தாய்?"

"என்னை நினைவு இருக்கிறதா மகாராஜா? கசையடிகளைக் கொடுத்து மைசூருக்குக் கொண்டு செல்லும்படி உங்கள் சிப்பாய்க்கு உத்தரவிட்டீர்கள். அந்தச் சண்டாளன் வழியிலேயே என்னை விட்டுவிட்டு உங்களைப் பின் தொடர்ந்து விட்டான். சும்மா விட்டுச் சென்றாலும் பரவாயில்லையே! என்னை அங்கம் அங்கமாகவே அனுபவித்து ஒரு சக்கையைத் தூக்கி எறிவதுபோல் எறிந்துவிட்டும் போய் விட்டான்! நான் நடந்தே ஆங்காங்கே தங்கி, வயிற்றை எப்படியோ நிரப்பிக்கொண்டு, கிருஷ்ணகிரிக்கும் போக முடியாமல், மைசூரையும் எட்டிப் பார்க்கமுடியாமல் தவித்துக் கொண்டிருக் கிறேன்! அந்தக் கிணற்றுத் தண்ணீர்தான் இன்றைய ஆகாரம்!"

ஓ... எத்தனை கொடுமையான காட்சி இது!

மேற்கொண்டு யோசித்துச் சில கேள்விகளைக் கேட்பதற்குள் தொலைவில் குதிரைகளின் குளம்படிச் சத்தங்கள் பயங்கரமாக நெருங்குகின்றன...

திரும்பிப் பார்க்கிறான் பசவராஜ்...

ரங்கநாயகி ஒரு மருங்கே மயக்கமுற்றுச் சாய்ந்து கிடக்கிறாள்... அவளை அப்போதுதான் பார்க்கிறாள் அந்த கிருஷ்ணகிரி நாயகி.

"யார் மகாராஜா இவங்க?"

''திப்புசுல்தானின் வருங்கால மனைவி! நாங்கள் விரோதிகளிடம் சிக்கிக்கொண்டோம். தப்பித்து ஓடி வந்து விட்டோம் எங்களைப் பிடிக்கத்தான் அதோ அவர்கள் வந்து கொண்டிருக் கிறார்கள். என்னிடம் ஒரு கூர்மையற்ற வாளிருந்தால்கூட போதுமானது. அது இல்லாததால் பதுங்கி நடுங்கிச் சாகிறேன்; பெண்ணே ஒரு உதவி செய்வாயா? நான் உனக்குத் தண்டனை யளித்தவன்? அதன் காரணமாக நீ அவதிப்படுகிறாய்! உன்னை நான் உதவி கேட்பதே தவறு!''

பசவராஜ் தன்னையுணர்ந்து தலைகுனிகிறான்...

''பரவாயில்லை, என்ன உதவி தேவை?''

''நாங்கள் இருவரும் ஒன்று பிடிபடுவோம்! இல்லை செத்துத் தொலைவோம்! நீ இதன் முடிவைத் தொலைவிலிருந்து பார்வையிட்டு, நேரே மைசூர் சென்று உன் மகாராஜா திப்பு சுல்தானிடம் விவரத்தை எடுத்துச் சொல்வாயா? ஹைதர் நகர் சிறையிலிருந்து தப்பி வந்ததாகச் சொல். திப்புவிடம் மட்டுமே சொல்லவேண்டும்! இது பரமரகசியமானது! சொல்வாயா?''

''சொல்வதாவது? உங்களுக்குக் கத்திதானே வேண்டும்? கொஞ்சம் பொறுங்கள்!'' என்று கூறிய கிருஷ்ணகிரி நாயகி, ஏதோ வாளை எங்கோ ஒளித்து வைத்திருப்பவளைப்போல் கண்களைப் பரக்க விரித்துத் தேடுகிறாள். தொலைவில் ஒரு நீண்ட மூங்கில் கழி இருப்பதைக் கவனித்து, நிரம்பவும் சந்தோஷப்பட்டுக் கடவுளை வாழ்த்திக்கொண்டு அதனை எடுத்துக்கொண்டு சாலைநோக்கி விரைந்தோடுகிறாள்.

'என்னமோ வாளை எடுத்துக் கொண்டு வந்து தருவாள் என்று எதிர்பார்க்க, இவள் கோலை எடுத்துக் கொண்டு குறுக்கே ஓடுகிறாளே' என்று கவனித்த பசவராஜ். வியப்புக் கலந்த பார்வையுடன் ஒளிந்த வண்ணம் சாலையைக் கவனிக்கிறான்.

சாலையின் ஓரத்தில், கையில் மூங்கில் கழியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட அந்தக் கிருஷ்ணகிரி நாயகி, துரத்தி வந்த வீரர்கள் பதின்மர் வேகமாகக் குதிரையில் அருகே நெருங்குகிறபோது,



கொஞ்சமும் தயங்காது சாலையின் குறுக்கே பாய்ந்தாள். அவ்வாறு பாய்கிறபோது கழியின் மத்தியபாகத்தைத் தனது கரங்களால் கெட்டியாகப் பற்றிக்கொண்டு தடுத்து நிறுத்துபவளைப் போன்ற பாவனையுடன் உறுதியாக இருந்தாள்.

எதிர்ப்பட்ட இரு குதிரைகள் வேகத்தின் காரணமாகத் தடைபட்டுத் திமிறி, முன்னங்கால்களைத் தூக்கியதால் வெறிப்பட்டு பின்னங்கால்கள் பிசகிக் கீழே விழுந்து பரிதாபமாகக் கனைக்கின்றன. குதிரைகள் இரண்டு மட்டுந்தானா விழுந்தன? கிருஷ்ணகிரி நாயகியும் தூக்கி எறியப்பட்டாள். அவளுடன் குதிரை மேலிருந்த சில வீரர்களும் விழுந்து காயமுற்றனர்.

அவர்கள் உறையிலிருந்து எட்டிப் பார்த்த ஒரு வாளைத் துணிந்து உருவிக்கொண்ட அந்தக் கிருஷ்ணகிரி நாயகி, ஒரு வெறி கொண்ட உணர்வுடன் தனது பலத்தை எல்லாம் ஒன்று திரட்டி எழுந்து ஓடோடிச் சென்று அதனைத் தூக்கிப் புதர் நோக்கி எறிகிறாள். அடுத்து, அவளுடலில் பரிதாபமாக ஒரு வாள் இரக்கமில்லாது நுழைந்து விடுகிறது. அவள் பரிதாபமான அலறலுடன் தரையில் சாய்கிற போது...

புதரிலிருந்து வாளேந்திய சிங்கம்போல் வெளிப்பட்டான் பசவராஜ்...

தனக்குதவியவளைத் தரையில் சாய்த்தவனை முதல் பலி கொண்டது அந்த வாள்! ஏனையவர்களிடம் அது குழந்தை போல விளையாடியது. அரைமணி நேரம்கூட அதிகம்தான். வந்தவர்களில் இருவரே மிஞ்சினர். அவர்கள் ஓட்டம் எடுத்தனர். அவர்களைத் துரத்திச் செல்வது அநாவசியமானது என்பதை உணர்ந்த பசவராஜ், தன் பொருட்டுத் தியாகம் செய்த அந்தப் பெண்ணின் அருகே வருகிறான்...

கண்களில் நீர்மல்க, அவளைக் கூர்ந்து கவனித்த பசவராஜ்: பெண்ணே! உனது ஆத்மா சாந்தியடைவதாக!'' என்று கூறிக் கால்களைத் தொட்டு வணங்குகிறான்...

இந்த நாட்டின் தேசிய உரிமைக்காக இன்னும் எத்தனையோ ஆத்மாக்கள் சாந்தியடைய இருக்கின்றன என்கிற உணர்வுடன் ரங்கநாயகியை நாடிச் சென்று நடந்த விஷயத்தை விளக்கினான். ரங்கநாயகியும் எழுந்து வந்து அந்தப் பெண்ணைக் கவனித்துத் தன்னுள் வாழ்த்தி வணங்கிக் கொண்டாள்.

தொலைவில் விழுந்து கிடந்த வீரனின் வாளுறை ஒன்றைக் கழற்றி எடுத்துக் கொண்டான் பசவராஜ். தன்னிடமிருந்த வாளை அதனுள் சொருகிக் கொண்டான். போதாக்குறைக்கு இன்னொரு வீரனுடைய வாளையும் உறையுடன் கழற்றிக் கொண்டான். வழியில் இப்போது அவனுக்கு எந்தவித ஆபத்துமில்லை என்று உணர்கிறான். இரட்டை வாள் இடுப்பில் இடம் பெற்றுவிட்டனவே! கிருஷ்ணகிரி நாயகிக்கான புதைக்குழிக் கடனை அங்கிருந்த பள்ளமொன்றில் தன்னால் முடிந்தவரை ஆற்றிவிட்டுத் தலைவணங்கிய பசவராஜ், ரங்கநாயகியைக் குதிரையில் அமர்த்திக்கொண்டு வேகமாகத் தட்டிவிட்டான். அது மைசூரை நோக்கித் தங்கு தடையின்றி விரைந்து பறந்தது.

இருள் நன்றாகவே வானை கவ்விக் கொண்டது.

## 31

**மை**சூர் எல்லையை அடைகிறபோதே பலப்பல செய்திகள் காதுகளில் தாறுமாறாக மோதத் தொடங்குகின்றன...

குதூகலத்தின் தலையில் ஓங்கித் தட்டிக் குழம்பச் செய்கிற அந்தப் பயங்கரச் செய்திகளால் அதிகமாக வெருட்சியும் மருட்சியும் காண்கிறாள் ரங்கநாயகி. இதனால் தனது அருமைக் காதலர் திப்பு சுல்தானுக்கு ஏதும் நிகழ்ந்து விடக்கூடாதே என்று அவளது பூஞ்சை மனம் ஸ்ரீரங்கநாதப் பெருமானை வாழ்த்திக் கொண்டதோடல்லாது மனத்துள் கைப்பான ஒரு வஞ்சினத்தையும் மேற்கொள்கிறது...

குதிரையின் வேகத்தைச் சற்றே மட்டுப் படுத்துகிறான் பசவராஜ்...



வழியில் அவன் கேள்விப் பட்டவைகளைக் காட்சி ரூபமாகப் பார்க்கப் போகிற தருணம்...

அதற்கு முன்னோடியாகச் சில வீரர்கள் - உள்ளூரில் அப்துல் கரீமுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியவர்கள் ரத்தக் களரி ரணகளரியாக குதிரைகளில் தப்பியோடி வருகின்றனர். அவர்களைக் கண்ட பசவராஜின் கண்களில் கோபாக்கினி கொழுந்துவிடத் தொடங்குகிறது, பசவராஜைக் கண்ட அந்த வீரர்களுக்கோ, உணர்ச்சி மயமான ஆவேசாக்கினி புறப்பட்டு, ''பசவராஜ் வாழ்க!'' என்று தங்களையும் மறந்து இரைகிறார்கள்! ஏதோ திப்புசுல்தானே தங்கள் முன் தரிசனம் தந்துவிட்டது போன்ற குதூகலத்தில் பீறிட்டு எழுந்த ஆவேசக் குரல்களாகத் தெரிகின்றன!

அனைவரையும் கையமர்த்தி நடந்த விஷயங்களை மீண்டும் ஒன்றுவிடாது கேட்டறிவதில் தனது நேரத்தைச் செலவிடுகிறான் பசவராஜ். அது தேவையானது என்றும் உணருகிறான்.

அப்துல் கரீமின் அட்டகாசச் செயல்களையும் அடாத நிலைகளையும் ஆட்சியைக் கைப்பற்ற ஏற்படுத்திக் கொண்ட அல்பமான போர்த் தந்திர முறைகளையும் கேள்விப்படக் கேள்விபடக் கொழுந்துவிட்ட அவனது கோபாக்கினி, தீப்பற்றி ஜுவாலைவிடத் தொடங்குகிறது...

''திப்புவை ஆதரிக்கும் வீரர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' - பசவராஜின் குரலில் ஒரு சந்நதம் தெரிகிறது.

''ஏறத்தாழப் பாதிக்கு மேல் நமது வீரர்கள்தான் பசவராஜ் சாகேப்!'' என்றான், ஒரு நன்றியுள்ள இசுலாமிய வீரன்.

''நல்லது, நீங்கள் அனைவருமே என்னைப் பின் தொடருங்கள்'' என்று கூறிவிட்டுக் குதிரையைக் காலால் தட்டிவிடுகிறான். அதுவும் நாட்டின் உட்பூசலை உணர்ந்ததே போல் கனைத்துப் பறக்கிறது.

பின்தொடர்ந்த வீரர்கள், தங்களுக்குள் ரகசியமாக நோக்கிக் கொள்கின்றனர். அந்த நோக்கலில் படிந்திருந்த ஐயத்தின் வீச்சு, ரங்கநாயகியைப் பற்றியதுதான்...

'பசவராஜ்! ரங்கநாயகியை இழுத்துக் கொண்டு ஓடி விட்டான்' என்கிற வதந்தியை மெய்ப்பிப்பது போல அவளைக் குதிரையின் முன்பக்கத்தில் கூச்சமின்றி அமர்த்திக் கொண்டு வந்த காட்சி, சாதகமாக அமைந்து காணப்பட்டது. இதன் உட்பொருள் என்னவாக இருந்தால் என்ன? இப்போது நாடு காக்கப்படவேண்டும். திப்புசுல்தானுக்கு எந்த ஆபத்தும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதில் அவர்களது ஆவல் மேலோங்கி நின்றது.

குதிரையை நேரே ஸ்ரீரங்கநாதர் கோயிலுக்கே செலுத்திச் சென்றான் பசவராஜ். ரங்கநாயகியை விட்டுச் செல்ல வேறு எந்த இடமும் தகுந்த பாதுகாப்பாக அவனுக்குத் தெரியவில்லை. ''ஸ்ரீரங்கநாதா! நீயே தஞ்சம்!'' என்பது போலக் கோயிலை நாடியதும் அவன் இறங்கினான்; ரங்கநாயகியையும் இறக்கிவிட்டான்.

''ரங்கநாயகி! நான் திரும்புகிறவரையில் நீ இந்தக் கோயிலை விட்டு எந்தவிதக் காரணத்தை முன்னிட்டும் நகரக் கூடாது. உனக்கு இந்த வீரர்கள் அனைவரையுமே காவல் நிறுத்திவிட்டுச் செல்கிறேன்!'' என்றான் பசவராஜ். அவனது குரலில் ஏதோ ஒரு தீர்க்கம் தெரிந்தது.

''போர்க்களத்துக்குத்தானே புறப்படுகிறீர்கள்?''

''ஆமாம்; எனது நண்பனது வைரிகளைச் சூறையாட வேண்டும்.''

''ரங்கநாதன் வெற்றியே அளிப்பான்!''

''மகிழ்ச்சி சகோதரி! உனது இந்த வாழ்த்தே போதும்! நிச்சயம் ஸ்ரீரங்கப்பட்டினம் காக்கப்படும்! எனது நண்பன் திப்புவிடம் இதனை ஒப்புவிப்பேன். அதுவரையில்...!''

''இந்தக் கோவில் வாசற்படியை விட்டுத் தாண்டமாட்டேன். உங்கள் சொல் லட்சுமணன் கிழித்த கோட்டிலும் வலிமை வாய்ந்தது!''

''சீதையும் இவ்விதம்தான் சொன்னாள், லட்சுமணன் நம்பிப் புறப்பட்டான். அதனால் நடந்தது வேறு! என்னைத் தவிர வேறு எவர் வரினும் நீ இந்த ஸ்ரீரங்கநாதர் ஆலயத்து வாசற்படியைத் தாண்டவே கூடாது. கைமேல் அடித்துச் சத்தியம் செய்!''



''சத்தியம் அவசியம்தானா அண்ணா?''

''மிகமிக அவசியம் சகோதரி! யாராவது ராஜதந்திரமாக எதையாவது கூறி அழைக்க நீயும் நம்பிப் புறப்பட்டு விடுவாய்! நான் எனது நண்பனுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். எனவே ஸ்ரீரங்கநாதர் மீது சத்தியம் செய்து கையடித்துத் தரவேண்டும்.''

ரங்கநாயகியும் அவனது மனநியாயத்தைப் புரிந்து, அதன்படி ஒரு நிறைவு தரவேண்டி அவ்விதமே ''ஸ்ரீரங்கநாதர்மீது சத்தியம். நீங்கள் வந்தாலன்றி வேறு யார் வந்து அழைத்தாலும் இந்த ஆலயத்து வாசற்படியைத் தாண்டி வரமாட்டேன்!'' என்று கூறிக் கைமேல் கையெடுத்து நிறைவு தந்தாள்.

சுற்றியிருந்த வீரர்களுக்குக் கடுமையாக ஆணையிட்டான்; ''உங்கள் சுல்தானாவைக் காப்பது உங்கள் கடமை! இதைத் தவிர அதிகமாகச் சொல்லத் தேவையில்லை.''

''சுல்தானா...''

சுற்றியிருந்தவர்களுக்கே வியப்பு. இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்ற அளவில் அவர்கள் உத்தரவைச் சிரமேல் கொண்டு காவல் புரியத் தொடங்கினர். பசவராஜும் வாளையுருவிக் கொண்டு, ''சாமுண்டீஸ்வரி! எனக்கு வலிமையைக் கொடு!'' என்று ஆவேசக் குரல் விடுத்துப் பக்கத்திலிருந்த வேற்றுக் குதிரையொன்றின்மீது தாவி ஏறினான்...

குதிரையும் போர் வெறிகொண்டு நாலுகால் பாய்ச்சலில் விரைந்து பறந்தது.

''எத்தனையோ யுத்தங்களையும் அதன் அக்கிரமமான ஆக்கிரமிப்புக்களையும் கண்டு, வெருண்டு, அமைதி கண்டு கீதையின் மூலாசிரியனாகத் திகழ்ந்து வரும் சூரியன், மேற்கு திசைநோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறான்...

ஒரு குருக்ஷேத்திரத்தை விடவா அவன் இன்னொரு யுத்த களத்தைப் பார்வையிடப் போகிறான்?

ஆயினும் வில்லில் ஓர் அருச்சுனனைப் போல் இப்போது வாளில் ஒரு பசவராஜைப் பார்க்கிறோம் என்கிற வீர சிருஷ்டியின் அற்புதத்தை ரசித்தவனாய்ப் பிரகாசக் கதிர்களைப் பூமிக்கு அனுப்பி வேடிக்கை பார்க்கிறான்...

லால்மகாலை பசவராஜ் நெருங்கி வருகிறபோது...

கூட்டத்துக்கிடையே பெரிய கோஷம் கிளம்பி வான் முகட்டுக்கு எட்டி, சூரியனையே ஒருகணம் அதிரடித்து ஸ்தம்பிக்கச் செய்கிறது...

கோஷம் எழுப்பியவர்கள் திப்புசுல்தான் ஆட்சியில் ராஜ விசுவாசம் கொண்டவர்கள். துரோகியாக மாறிய [1]அப்துல் கரீமுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியவர்கள்!

எதிரிகள் பசவராஜைக் கண்டதும் பெரும்பீதி கண்டு மருளத் தொடங்கினர். திப்புசுல்தானே வந்துவிட்டது போன்ற பயத்தின் எதிரொலியாய் ஒருகணம் வியர்த்துப் போயினர். ஆயினும் அப்துல் கரீமின் தோளுக்குத் தோளாய் விளங்கிய முக்கிய வீரத்தலைவர்கள், தமது வீரர்களுக்குக் கூக்குரலெழுப்பி உற்சாக மூட்டி முன்னேறத் தூண்டினர். இதனைக் கவனித்த சுபேதார் சூருவய்யா-திவான் சாகிப் மீர்சாதிக் கையாள்களில் ஒருவன் - நேரே அப்துல் கரீமுக்குச் செய்தி தெரிவிக்க விரைந்தான்.

பசவராஜின் திடீர்ப் போர் நுழைவைக் கண்டதும் திப்பு சுல்தானின் ராஜ விசுவாசிகள் தங்கள் வாள்கள் இப்போது மிகுந்த கூர்மை கண்டு விட்டன போன்ற உணர்வுடன் உயிரைத் துரும்பாக மதித்து ஆவேசத்துடன் அவற்றை வீசி முன்னேறினர்.

ஒரு புறம் வாள்வீச்சுக்களின் ஆரவாரம்... மறுபுறம் துப்பாக்கிக் குண்டுகளின் பயங்கரச் சத்தம்...

வலக்கையில் ஏந்திய ஒற்றை வாளிலேயே தனது உயிரான வல்லமையைத் தேக்கிச் சுழற்றுகிறான் பசவராஜ். எதிர்த்தவர்கள் தலைகளைப் பனங்காயைச் சீவுவதுபோலச் சீவித் தள்ளுகிறான்...

---

1. அப்துல் கரீம் இவ்வாறு துரோகச் சிந்தையுடன் தந்தையார் இறந்துபட்ட செய்தியைக் கேட்டதும் ஆட்சியைப் பிடிக்கக் கலகம் விளைவித்தான். History of Tippu - Hasan.



தலைகளும், கைகளும், கால்களுமாகத் துண்டிக்கப்பட்டு முண்டங்கள் நன்றி கொன்ற தன்மையின், பிண்டங்களாகத் துடிக்கின்றன.

திப்புவின்பால் மிகுந்த ராஜவிசுவாசம் கொண்டு எதிர்த்த வீரர்கள் நிமிஷத்துக்கு நிமிஷம் முன்னேறுகிறார்கள்... அவர்களுடைய துப்பாக்கிகள் எதிரிகளைக் குறிபார்த்து வீழ்த்துகின்றன.

பசவராஜின் திடீர் நுழைவால் உள்நாட்டுக் குழப்பத்துக்கு வேறு விதமான திசை திருப்பம் கண்டு விட்டது. இதனை அறிந்து, அப்துல் கரீம் வெறிகொண்டு அலறித் துடிக்கிறான். எப்படியும் இந்தப் பசவராஜைத் தீர்த்துக் கட்ட வழிவகைகளைத் தேடுகிறான்...

ஜனானாவில் செய்தி எட்டி விடுகிறது. ஒரு விதத்தில் பெரிய சுல்தானா பேகம் பக்ருன்ஷாவுக்கு ஆறுதல் செய்திகொண்டு வந்தவனைத் தனித்து அழைத்து ஏதோ விசாரிக்கிறாள். என்ன விசாரிக்கப் போகிறாள்? கூடவே ரங்கநாயகியும் வந்திருக்கிறாளா என்றுதான்.

செய்தி கொண்டு வந்தவனும் தனக்குத் தெரியாது என்று கூறியது மறு விதத்தில் பெரிய சுல்தானா பேகத்துக்கு மேலும் வேதனையைத் தருகிறது. இந்த வேதனை எது குறித்து இருக்க முடியும்? இந்த நிலையிலும் அவள் ரங்கநாயகியை ஒப்புக்கொண்டு ஏற்க முடியாத மூர்க்கத்தனமான பிடிவாதத்தையல்லவோ குறிக்கிறது?

தனது அருமைக் காதலன் பசவராஜ் வந்துவிட்டான். நாட்டின் குழப்பத்துக்கும் பரிகாரம் தேடுகிறான் என்கிற தேனினும் இனிய செய்தியைக் கேட்டு நிரம்பவும் மகிழ்ந்து போகிறாள் மஞ்சுளாதேவி. காதலனை எப்படியும் காண்போம்; தனது கனவு வீண் போகவில்லை என்று அந்த நெஞ்சம் பிரார்த்தித்துக் கொள்கிறது.

மாலை மறைந்து இருட்டு கவிழ்கிறது.

பசவராஜும் அவனுடன் சேர்ந்த ராஜ விசுவாசிகளும் ஸ்ரீரங்கநாதர் கோயிலை அடைகின்றனர். அன்றைய உள்நாட்டுக் குழப்பச் சண்டை அப்போதைக்கு அதுவரை ஓய்வு பெற்றதுபோல் அமைதி காண்கிறது.

சுற்றிலும் தீப்பந்தங்கள் ஏற்றப்படுகின்றன. கோயிலைச் சுற்றிலும் வீரர்கள் ஓய்வு கொள்கின்றனர். நகர மக்கள் அவர்களுக்கான உணவு விஷயத்தில் தங்கள் பங்கினை நன்றி உணர்வுடன் ஏற்றுச் செயல்படுகின்றனர்.

ரங்கநாயகிக்குக் கோயில் பட்டாச்சாரியார் வீட்டிலிருந்து உணவு வந்தது. அதனைப் பசவராஜுடன் பகிர்ந்து உண்டு மகிழ்கிறாள் ரங்கநாயகி. அதன் பிறகு அன்றைக்கு நடந்த போர் நிலைகள் குறித்துப் பேசினாள். எப்படியும் இந்த உள்நாட்டுக் குழப்பப் போர் அடக்கப்பட்டு விடுமா என்பதில் அவளது அக்கறை ஒரு பிரார்த்தனையே போலத் தெரிந்தது. திப்புசுல்தான், மட்டும் விரைந்து வந்துவிடுவாரேயானால்...

இரவு ஒருவர் கூட உறங்காது காவல் காத்தனர். போர் நெறிக்கே அப்பாற்பட்டு ராஜத்துரோகம் செய்ய நினைத்த அப்துல் கரீம் எந்த நேரத்திலும் எப்படியாவது தாக்க முன் வரலாம் அல்லவா?

ஆனால், அவ்வாறு ஏதும் நிகழவில்லை.

அமைதியாகவே காலை புலர்ந்து கொண்டிருந்தது.

நகர மக்கள், அத்தனை காலையிலும் சிற்றுண்டி கொண்டு வந்து தருகிறார்கள்...

அடடா அவர்களது அந்த உபசரணை திப்புசுல்தான் மீதுள்ள கருணையையல்லவோ காட்டுகிறது!

அப்துல் கரீமை எப்படியாவது வீழ்த்திச் சிறையில் அடைக்க மாட்டார்களா என்று அவர்கள் பேசிக் கொள்வதும் பசவராஜின் காதுகளில் விழத்தான் செய்கிறது. மகா மூர்க்கனும் ஸ்திரீலோலனும், ராஜரிகம் தெரியாதவனுமான அப்துல் கரீமை அவர்கள் மிகவும் வெறுக்கிறார்கள் என்பது அவர்களது அந்தச் செய்கையிலிருந்து புலனாகிறது. இல்லையென்றால் எத்தனை அதிகாலையில் அவர்கள் விழித்துச் செயல்பட்டிருந்தால் இத்தனை காலையில் சிற்றுண்டி படைக்க முடியும்?

சிற்றுண்டியைச் சாப்பிட்டு முடித்துக் கையைக் கூட அலம்பவில்லை.



எங்கிருந்தோ வானமே இடிந்து விழுகிற மாதிரி பெருத்தசத்தம்...

ஓ... ஹைதர் நகரிலிருந்து அப்துல் கரீமுக்கு உதவும் முகாந்திரமாக அயாஸ்கானும் கர்னல் வில்க்ஸும் படைகளுடன் புறப்பட்டு வந்துவிட்டார்கள். இந்தச் செய்தி அப்துல் கரீமுக்கு எவ்வளவு பெருமிதத்தைத் தந்ததோ, அவ்வளவுக்குப் பசவராஜுக்குப் பேரதிர்ச்சித் தந்தது. இருக்கிற இந்தப் படைகளைக் கொண்டு ஹைதர் நகர் படைகளை எவ்வாறு அடக்குவது? திப்புசுல்தான் இந்நேரத்தில் வந்து விடுவாரேயானால் இவர்களைத் துவம்சம் செய்து விடலாம்...

ஆ! ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கு நிஜமாகவே போதாத காலந்தானா? இந்த ஆட்சி அப்துல் கரீமிடம் சிக்கியபிறகு என்ன வெல்லாம் துன்பத்திலாழ்ந்து, விடுதலையடைய இருக்கிறதோ? அதற்குள் இந்த விடுதலைப் போராட்டத்தையே துவம்சம் செய்யக் காத்திருக்கும் வெள்ளைக் கும்பினியன் விட்டுவைக்க மாட்டானே!

தேசிய உணர்வின் எழுச்சியின் சுதந்திரக் கதை முதன் முதலில் சிவகங்கைச் சீமையில் தொடங்கி ஸ்ரீரங்கப்பட்டினத்துடன் முடிவடைய வேண்டியதுதானா?

மேலும் காலதாமதம் செய்வது சரியல்ல என்பதை உணர்கிறான் பசவராஜ். இந்த மூர்க்கமான படைகள் ஸ்ரீரங்கநாதர் கோயிலை முற்றுகையிட வைப்பது ரங்கநாயகிக்கு ஆபத்தை விளைவிக்கும்; எனவே, காவல் வீரர்களைப் பாதுகாப்பாக அமர்த்திவிட்டு, இருக்கிற படைகளை அழைத்துச் சென்று ஒன்று வெற்றி அல்லது வீர சொர்க்கம் என்று பார்த்து விட வேண்டியதுதான்!

பசவராஜ், தனது வீரர்களை அழைத்துக் கொண்டு லால் மகாலை நோக்கிப் புறப்படுகிறான். லால் மகாலில் கலகம் ஓய்ந்தது என்று தெரிய வருகிற மறுகணத்திலேயே அப்துல் கரீம் தனது ஆட்சிப் பிரகடனத்தை முழங்கி விடுவானே! அதுவல்லவோ மிகப் பெரிய ஆபத்து! அதனை எப்படியும் நடக்கவிடாது கவனித்துக் கொள்வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதற்குள் திப்புசுல்தான் வந்து விடமாட்டாரா?

''தாயே! சாமுண்டீஸ்வரி! உனக்கு மதம் ஒன்றாக இருக்கிறதோ இல்லையோ? மானுடன் ஒன்று! எனது நண்பன் திப்புசுல்தான் மானுட கீதா சொரூபன்! அவன் ஒரு மானுஷ்யோப நிஷத்! அவனது ஆட்சியைக் காப்பாயாக!'' என்று பிரார்த்தனை புரிந்தவண்ணம் போராட்டத்தில் குதிக்கிறான் பசவராஜ்.

ஹைதர் நகர் வீரர்களுடன் அப்துல் கரீமின் ஆதரவு வீரர்களும் கலந்து கொண்டு திப்புவின் ராஜவிசுவாசி வீரர்களை விழி பிதுங்க நொறுக்குகின்றனர். அப்படியும் பசவராஜ் தனது சோர்வற்ற வீரத்தால் எதிரிகள் மருளுமளவுக்குப் பாய்ந்து வாளைச் சுழற்றுகிறான். அப்போது...

எங்கிருந்தோ வந்த இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் அவன் மீது பாய்வதற்குப் பதிலாக அவனது குதிரையின் வயிற்றில் புகுந்து வெளியேறுகின்றன. அடுத்த விநாடியே குதிரை துள்ளிக் கனைத்துத் தரையில் சாய்கிறது. ஒருகணம் கீழே விழுந்த பசவராஜ், மறுகணம் சுதாரித்து, எழுந்து கொள்கிறான். இடுப்பிலிருந்த மற்றொரு வாளுக்கு இப்போது வேலை தரவேண்டியதாய் விட்டது. அதனை உருவிக் கொண்டு தனக்கே உரிய இரட்டை வாள்போர் முறையைக் கையாண்டு முன்னேறுகிறான்.

அத்தருணத்தில்...

''நவாப் - திப்புசுல்தான் ஜிந்தாபாத்!'' என்ற குரல்கள் சிலரைக் கிறங்கச் செய்கின்றன. பலரைக் கிடுகிடுக்கச் செய்கின்றன.

ஆ! தொலைவில் திப்புசுல்தானும் அவனது படைகளும் வெறி கொண்ட வேகத்துடன் வாள்களை ஏந்தி, புழுதிப் படலத்தைக் கிளப்பியவண்ணம் ஒரு புயலே வருவதுபோன்ற காட்சி...!

''குமார சுல்தான்!'' என்று சந்நதம் கொண்டவனைப் போலக் கூச்சலிட்டு வரவேற்கிறான் பசவராஜ்! அவனது உடலில் புதிய தெம்பு; உணர்வில் ஒரு புதிய உத்வேகம்; உயிரில் இன்னோர் உயிர்...

லால் மகாலின் உப்பரிகையில் இருந்து இதைக் கவனித்த அப்துல் கரீம் சர்வ நாடியும் தளர்ந்து, ஜீவனற்றுப் போய்விட்ட ஜடம் போல் ஸதம்பித்து வாய்பிளந்து நிற்கிறான்...



# 32

**அ**ரை நாள் கர்ஜனையே போதும்...

ராஜ துரோகிகளின் சாரமற்ற கூச்சல்கள் ஒடுங்கி போயின.

சர்வ வல்லமை பொருந்திய நவாப் திப்புசுல்தான் முன்பாகச் சிறைப்பிடிக்கப்பட்ட தம்பி-சின்னசுல்தான் அப்துல் கரீமை அழைத்து வருகிறார்கள்.

வெட்கித் தலை குனிந்து கொண்டிருக்கிறான் அப்துல் கரீம். அவனை ஓர் அசூயையைக் கவனிப்பது போலக் கவனித்த திப்புசுல்தான், ''இந்தத் துரோகியை அவிழ்த்து விடுங்கள். இவனுக்கு ஒரு கட்டு தேவையா? பெரிய வீராதி வீரன்!... பேடிப்பயல்; தூ!'' என்றுக் கூறிக் காரியுமிழ்ந்து, தனது வேதனை நிரம்பிய வெறுப்பினை வெளிக்காட்டி முகத்தைச் சுளித்துக் கொள்கிறான். அங்கங்கள் பதறுகின்றன.

கட்டவிழ்த்து விடப்பட்ட அப்துல் கரீம், மனத்தளவில் கறுவிக் கொண்டு தலைகுனிந்து நிற்கிறான்.

''ஏன் நிற்கிறாய்? என் முன் சில காலம் வரை 'தலை காட்டாதே' இப்படியான ராஜத் துரோகிகள் என் பக்கத்திலேயே இருந்தாலும் எனது வல்லமையைச் சோதித்துப் பார்த்துவிட முடியாது!'' என்று இரைந்து பக்கத்தே நின்றிருந்த திவான் சாகிப் மீர்சாதிக்கை ஓரக்கண்ணால் கவனிக்கிறான். அவனது அந்தக் கவனிப்பை இப்புறமாக இருந்த திவான் பூரணய்யா முதல் ராஜாக்கான் வரை உணராமலில்லை. ஆயினும் அவர்கள் எப்போதும் போலவே எந்தவித மெய்ப்பாடுகளையும் காட்டிக் கொள்ளாது நின்றனர்.

''திவான் பூரணய்யா! தப்பியோடிய அந்த நன்றி கெட்ட அயாஸ்கானைச் சிறைப் பிடித்துக்கொண்டு வர முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள். அவனைக் கடுமையாகத் தண்டிப்பதன் மூலம், இங்குள்ள பல சொறி நாய்களுக்குப் புத்தி வரவேண்டும்'' என்றான் திப்புசுல்தான்.

சுற்றும்முற்றும் கவனிக்கிறான் திப்புசுல்தான். அங்கே தனது ஆருயிர் நண்பனில்லாதது கண்டு திகைக்கிறான்.

''திவானய்யா! பசவராஜ் எங்கே? அவன் மட்டும் முன் கூட்டியே வந்து உதவியிராவிட்டால் அப்துல் கரீமின் இந்த ராஜத்துரோகச் செயலால் நாம் கொஞ்ச காலம் தலை மறைந்து வாழநேரிட்டிருக்கும். இந்நேரம் கும்பினிப் பட்டாளம் ஸ்ரீரங்கப் பட்டினத்துள் நுழைந்திருக்கும். பிறகு, நாம் போராடி இதனைப் பிடிக்கிறோம் என்பது வேறு விஷயம். ஆனால் அதன் கால தாமதம் எங்கு கொண்டு போய் நிறுத்துமோ என்பதுதான் பயங்கரமான விஷயம். சென்னைப் பட்டணத்திலிருந்து புறப்பட்ட கும்பினி ராணுவம் ராயவேலூரிலேயே தங்கி விட்ட...''

திப்புசுல்தான் நாவு தடைப்படுகிறது. கண்கள் எதையோ கவனித்து நிலைக் குத்தி நிற்கின்றன. அவற்றில் வேதனையின் வெடிப்பு தெரிகிறது; சோகத்தின் புழுதி கிளம்புகிறது...

''பசவராஜ்...

அந்தப் பிராந்தியமே அதிருகிற மாதிரி அலறுகிறான் நவாப் திப்புசுல்தான்...

எதிரே பலர் பசவராஜைப் பரிதாபமாகச் சுமந்து வருகிறார்கள்...

உடல் முழுவதும் ரத்தத்தால் அபிஷேகம் செய்த மாதிரி, காணப்பட்ட பசவராஜின் மார்பில் பல விழுப்புண் துவாரங்கள்... அவற்றில் பீறிட்ட ரத்தப் பெருக்கு...

பசவராஜைக் கீழே கிடத்துகிறார்கள். போரில் ஏற்பட்ட படுகாயங்கள்... வீரத்தில் மலர்ந்த பன்னீர் மலர்கள்... அக்கினிப் பூக்கள்...

இன்னும் உயிர் இருக்கிறது.

''உடனடியாக லால் மகாலுக்குக் கொண்டு சென்று மருத்துவம் பாருங்கள்.''

இந்த உலகமே பிரளயத்தால் மூழ்குண்டது போலக் கதறுகிறான் திப்புசுல்தான்.



பசவராஜை லால்மகாலுக்குக் கொண்டு போய்க் கூடத்தில் கிடத்துகிறார்கள்.

அரண்மனை மருத்துவர் இமாம் பக்ஷி குலாம் அகமது நிரம்பவும் சிரத்தை எடுத்துக் கவனிக்கிறார்.

பசவராஜ் மூர்ச்சை தெளிந்து, பிரகாசமாக முறுவலிக்கிறான். தனது நண்பன் திப்புசுல்தான் முகத்தில் அல்லாஹ்வின் கருணை மிக்க பிரகாசம் பிரபையிட்டிருப்பது அவனுக்கு மட்டும் புலனாகிறது போலும்! அருகே அழைக்கிறான்.

''குமார சுல்தான்! எனது சகோதரி ரங்கநாயகியை நான் ரொம்பவும் பாதுகாவலுடன் ஸ்ரீரங்கநாதரிடம் ஒப்படைத் திருக்கிறேன்! இப்போது நான் உடனடியாக எனது அன்னையாரையும், மஞ்சுளாவையும் பார்க்க வேண்டும். ஏற்பாடு செய்வீர்களா?''

பசவராஜின் குரலில் பலவீனம் பரவுகிறது. பசவராஜின் அன்னை கங்கம்மாளை உடனடியாக அழைத்து வருமாறு ஆளையனுப்பி வைக்கிறான் திப்புசுல்தான்.

''நண்பா! என்னை விட்டுப் பிரிந்து போய் விடாதே! எனக்கு மீளாத சோகத்தையுண்டு பண்ணி விடாதே! நீ எப்படியும் பிழைப்பாய்! என் பொருட்டு - இந்த மண்பொருட்டு - தேசிய உணர்வின் கண் பொருட்டு - நீ செய்த உதவியைச் சரித்திரம் மறக்காது. உனக்கும் எனது காதலிக்கும் முடிச்சிட்டுத் துரோகம் விளைவித்தவர்கள் யார்? இதுவரை எங்கிருந்தீர்கள்?''

திப்புவின் இந்தப் பதைப்பை நோக்கிய பசவராஜ் வெறுமையுடன் சிரித்து, ''எல்லா விஷயங்களையும் எனது சகோதரியைக் கேளுங்கள், குமார சுல்தான்! இப்போது எனக்குத் தேவை மஞ்சுளாதேவி!'' என்றான்.

அடுத்து கொஞ்சமும் தாமதியாத திப்புசுல்தான், எழுந்து ஜனானாவை நோக்கி ஓடுகிறான்.

ஜனானாவின் வாசலில் கவலையுடன் வந்து கொண்டிருந்த அன்னை பெரிய சுல்தானா பேகத்தையும், மற்றும் சுல்தானாக்

களையும் கூடக் கவனியாத திப்புசுல்தான், விரைந்து சென்று கொண்டிருக்கிறான்...

எந்த நிமிஷத்திலும் தன்னைத் திப்புசுல்தான் வந்து அழைத்துச் செல்வார் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த மஞ்சுளாதேவி, திப்புவை கண்டதும், முறுவலித்த முகத்துடன், ''எனது வாழ்த்துக்கள் அண்ணா!'' என்றாள்.

ஓ... தனது வெற்றியைக் குறித்து இவள் வாழ்த்துகிறாள்; இவளது சோகத்தைக் குறித்து நான் என்ன சமாதானம் கூறப்போகிறேன்?

''மஞ்சு! என்னுடன் புறப்படம்மா! பசவராஜ் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான்!''

இதற்குமேல் வேறு விதமாகச் சொல்ல அவனால் முடிய வில்லை; தெரியவில்லை.

மஞ்சுளா தேவி, பெரிதாக மகிழ்ச்சியுடன் திப்புசுல்தானைப் பின்தொடர்ந்தாள்.

இருவரும் ஓட்டமும் நடையுமாக லால்மகால் கூடத்தை அடைகின்றனர்.

அங்கே...

பசவராஜ் என்கிற ஒரு மகாத்மா - மகோன்னத நண்பன் - தனது உடலை லால்மகாலில் விட்டுவிட்டு, வீரசொர்க்கம் நோக்கிப் பயணமாகிப் பல நிமிஷங்கள் பறந்து விட்டன.

''ஓ... பசவராஜ்!''

லால்மகாலே கிடுகிடுக்கிறது.

மீண்டும் மீண்டும் ஆவேசம் கண்ட வெறியுணர்வுடன் கத்துகிறான் திப்புசுல்தான். அவனது கண்கள் இரண்டாம் முறையாகக் குளமாகி வழிகின்றன...

மஞ்சுளாதேவி தலையில் ஓங்கி அறைந்து கொண்டாள். ''உயிருடன் அழைத்து வருவேன் என்று சொல்லிச் சென்று பிணமாக



எடுத்து வந்திருக்கிறீர்களே!'' என்று கூறித் தலையைத் தரையில் இடித்துக் கொள்கிறாள். அவளுக்கு யாரே சமாதானம் கூற முடியும்?

இதற்குள் வந்த அன்னை கங்கம்மாள் மகனை இழந்த மாளாத் துயரில் இதயம் வெடிக்கக் கதறுகிறாள்...

ஒருபுறம்...

அங்கே ஹைதர்அலி...

மறுபுறம்....

இங்கே ஒரு சோகப் படலம்...

மூன்றாவதாக இன்னுமொன்று காத்திருக்கிறதே...

**அ**ன்றைய மாலைப்பொழுதில்....

பசவராஜின் சடலத்தை ராஜ மரியாதையுடன் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

ஸ்ரீரங்கப்பட்டினமே திரண்டு வந்து பார்வையிட்டுக் கண்ணீர்க் கடலில் ஆழ்ந்து தவிக்கிறது...

பக்கத்திலிருந்த திவான் பூரணய்யாவை நோக்கிய திப்புசுல்தான், ''திவானய்யா! பசவராஜைக் கடைசி முறையாகப் பார்க்க ரங்கநாயகியை அழைத்து வரச் சொன்னேனே ஏற்பாடு செய்தீர்களா?'' என்று குரல் தழுதழுக்கக் கேட்கிறான்...

திவான் பூரணய்யா என்ன சொல்வது என்று புரியாது விழித்தாலும், நடந்ததைச் சொல்லக் கடமைப்பட்டவரே போன்று, பதில் சொன்னார்: ''மகா சுல்தான்! நான் சென்று ரங்கநாயகியை அழைத்தேன்; பசவராஜ் வந்து அழைக்காமல் கோயிலைவிட்டுத் தாண்ட முடியாது என்று ரங்கநாதர் பேரில் சத்தியம் செய்திருக்கிறார்களாம்!''

முதல்முறையாக அர்த்த புஷ்டியுடன் திவான் பூரணய்யா 'மகாசுல்தான்' என்றழைத்ததுகூடத் திப்புவின் காதுகளில் ஏறவில்லை. சத்தியம் செய்தாளா? பசவராஜ்தான் இறந்து விட்டானே! அவன் எப்படிப் போய் அழைக்கமுடியும்!

சிதைக்குத் தீ மூட்டுகிறார்கள்...

கூடியிருந்த மக்கள் தங்கள் வருத்தம் தாளாது, ஓர் உண்மையான தியாகியின் மறைவை நினைத்து அழுகின்றனர். திப்புசுல்தான் அந்த நெருப்பு ஜுவாலையை நோக்கிக் குழந்தை போலக் கேவிக் கேவி அழுகிறான்...

கங்கம்மாள் தரையில் புரண்டு ''மகனே! மகனே!'' என்று கதறுகிறாள்.

இந்த நேரத்தில்...

யாருமே கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை...

வாழ்வின் முடிவை உணர்ச்சிகளில் கரைய விட்டவளே போன்ற தீர்க்கமான சிலிர்ப்புடன் தன்னை உணர்ந்து, பிறகு தன்னையே மறந்துவிட்ட மஞ்சுளாதேவி ஓடோடிச் சென்று ஓங்கிச் சுடர்விட்டெரியும் சிதையில் தாவிக் குதித்து நெருப்புடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட காட்சி...

ஓ... எல்லாரையுமே மெய் சிலிர்க்கச் செய்து, 'கோ'வென்று கூச்சலிட வைத்து விடுகிறது!

பின்தொடர்ந்து ஓடிய திப்புவால் அவளைத் தடுத்து நிறுத்த முடியாது போய்விட்ட அவலநிலை...

ஆ! இப்படியும் ஒரு காதலா?

இப்படியும் ஒரு காரியமா?

அவன் இப்போது அழவில்லை; கேவவில்லை; மலைத்துச் சிலிர்த்து விடைபுரியாத புதிருள் புகுந்து வெளிவர முடியாது தவிக்கிறான்...

பசவராஜ் எரிகிற நெருப்பினூடே தானும் எரிந்து காதலின் பரிசுத்தமான அடிச்சுவடிகளைப் பின்தொடர்ந்து சென்றுவிட்டாள், காதலின் மகத்துக்காகவே... என்றோ, எங்கோ, ஒருமுறை பிறக்கும் அமரகாதலி - மஞ்சுளாதேவி...!



நண்பனை இழந்த இதய நடுக்கத்துடன் காணப்பட்ட திப்புசுல்தானைத் திவான் பூரணய்யா தம்மாலான மட்டும் தேற்றுகிறார். மகா தந்தையை இழந்துவிட்டான்! மகா நண்பனையும் இழந்துவிட்டான்! அவனைத் தேற்ற யாரால் முடியும்? ரங்கநாயகியால்தான் முடியும்!

ஸ்ரீரங்கநாதர் கோயிலில் ரங்கநாயகியைப் பார்ப்பதற்கென்றே பலரும் சூழ்ந்து காணப்படுகிறார்கள். இப்போது அவள் பலருக்கு மகத்துவம் வாய்ந்த ஸ்ரீரங்கப்பட்டினத்துக் கதாநாயகி!

சேனைப் பரிவாரங்களுடன் - ராஜ மரியாதையுடன் ரங்கநாயகியை லால்மகாலுக்கு அழைத்துச் செல்லத் திப்புசுல்தான் வருகிறான் என்கிற செய்தியைக் கேள்விப்பட்டுப் புன்முறுவல் பூக்கிறாள் ரங்கநாயகி. அந்த முறுவலில் பசவராஜின் மறைவு வேதனையோடு நெளிகிறது... அவனது தியாகம் சாதனையோடு ஒளிர்கிறது...

அவன் எடுத்துக் கொண்ட முயற்சி, அவளைப் பாதுகாத்த விதங்கள், அவனது கரங்கள் சகோதரப் பாசமுடன் என்றாலும் சபதத்துக்கு மீறித் தன்மீது பட்டுவிட்ட - படும்படியாக நேரிட்ட சந்தர்ப்பங்கள்...

எல்லாமே அவளது தீட்சண்யமான கண்களில் பிரதிபலிக்கின்றன...

அவள் கோயில் வாசலில் ஒரு சிலைபோல் நிற்கிறாள்...

அருகே வந்த நவாப் திப்புசுல்தான், நண்பனை இழந்த சோகத்தை ஒரு கண்ணிலும், காதலியைப் பெறமுடிந்த சொர்க்கத்தை மறு கண்ணிலுமாகத் தேக்கி, முகமலராது, முறுவல் அலராது நேர்ந்து விட்ட மூலகாரணம் எதுவென்ற கேள்விக் குறியை நெற்றியிலே ஒட்டிக்கொண்டு, ''ரங்கநாயகி...!'' என்று அழைக்கிறான்.

அவன் இப்போது...

ஸ்ரீரங்கப்பட்டினத்து மகாசுல்தான்- நவாப் திப்புசுல்தான்!

அவள்-ரங்கநாயகி, மோகனமாக மென்னகை புரிந்தாலும், அதில் முற்றும் துயந்துவிட்ட சோகத்தின் கனம் தெரிகிறது.

எல்லாவற்றுக்குமே யாரும் காரணமல்ல, தானே காரணமாகத் தெரிகிறது...

''ரங்கநாயகி!''

''ம்ம்!''

''பசவராஜ் அமரத்துவம் அடைந்து விட்டான்!''

''தெரியும்.''

''ஆம்; அவனுடைய அந்த வீரக்கதை உனக்குத்தானே முழுமையாகத் தெரியும்; நானும் அறியலாமா?''

''அவசியமில்லை.''

''அவசியமில்லையா? உங்கள் இருவருக்கும் இந்த நிலை வர யார் காரணம்? என்ன காரணம் என்பதையறிய நான் துடிக்கிறேன்.''

''யாருமே காரணமில்லை. எனது விதி! இதற்குமேல் எதையும் கேட்க வேண்டாம்.''

''ரங்கநாயகி! எல்லாவற்றையும் பிறகு பேசிக்கொள்ளலாம், புறப்படு.''

''எங்கே சுல்தான்?''

''எனது அரண்மனைக்கு!''

''எனக்கு இந்த ஸ்ரீரங்நாதர் ஆலயந்தான் அரண்மனை!''

''ரங்கநாயகி!''

அதிர்ந்து போகிறான் திப்புசுல்தான்.

''நான் சொல்வது அதிர்ச்சித் தரத் தக்கதுதான்! எனது சத்தியம் அப்படி; சபதம் அப்படி!''

''சத்தியமாவது! சபதமாவது! புறப்படு ரங்கநாயகி!''



''மன்னிக்கவும் மகாசுல்தான்! உங்கள் மீதுள்ள அபார அன்பின் காரணமாகவும், தனது விதியின் ரகசியத்தை உணராமலும், 'நான் வந்து அழைக்காமல் வேறு யார் வந்து அழைத்தாலும் இந்த ஆலயத்துக் கோபுரவாசலைத் தாண்டக் கூடாது' என்று ஸ்ரீரங்கநாதர் பேரில் சத்தியம் வாங்கிக் கொண்டார் உங்கள் நண்பர். காரணம் என்னை அவ்வாறு பாதுகாத்து உங்களிடம் ஒப்படைப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். பாவம், தாமே திரும்ப மாட்டோம் என்கிற விதியின் உடன்படிக்கையை உணராமல் போய் விட்டார். உணர முடியாதே! உணர்ந்திருந்தால் நான்தான் உங்களைக் காதலித்து இருப்பேனா? இந்த மாதிரி அசிங்கமான அவலங்களை அனுபவித்திருப்பேனா?''

ரங்கநாயகியின் குரலில் சோகத்தின் சாயல் படிந்திருக்கிறது. அவள் விக்கினாள், பின்னர் விசும்பிக்கொண்டு இவ்வாறு சொல்லி முடித்தாள்.

சுற்றியிருந்த அனைவருமே சிலையனைய நிற்கிறார்கள்.

நவாப் திப்புசுல்தான் என்ன செய்வதென்றே புரியாது விழிக்கிறான்...

''பசவராஜ் இறந்துவிட்டதால் நீ செய்த சத்தியம் இப்போது உன்னைக் கட்டுப்படுத்தாது; புறப்படு ரங்கநாயகி!''

''சுல்தான்! பசவராஜ் அண்ணன் இறந்து விட்டார்! ஆனால் ஸ்ரீரங்கநாத அண்ணல் நித்திரைதான் செய்கிறார்; இறக்கவில்லை; இறக்கவும் மாட்டார்! நான் அளித்த சத்தியம் மட்டும் காரணமில்லை. அந்தச் சத்தியத்துக்கு முன்னே ஏதோ ஒன்றும் புரியாமல் என்னுள் தோன்றியது இந்த அரங்கநாதனே இவ்விதம் தோற்று வித்தானோ! இதன் காரணமாக ஒரு சபதமும் எடுத்துக் கொண்டேன். அதனால்தான் அந்தச் சத்தியத்துக்கே இணங்கினேனா என்பதையும் இப்போது எண்ணிப் பார்க்க முடிகிறது. நீங்கள் எப்படியும் சூழ்ச்சிக்காரர்களை அடக்க வேளையோடு வந்து சேர வேண்டும். இந்த மண்ணில் தேசிய கீதம் மடிந்துவிடக் கூடாது! மகாசுல்தான் ஹைதர் அலியின் சுதந்திர ராஜ கர்ஜனை இந்தத் தேசம் முழுவதும் பரவி, ஜயப்பதாகை நிறுவி, அந்நியன் ஒழிந்து, அடிமைத் தளை நீங்கி, அவலம் மறைந்து, எங்கும்

சுபிட்சம், எதிலும் சுபிட்சமாக வேண்டும்! எனவே இந்த உள்நாட்டுக் குழப்பம் நீங்கி, உங்கள் தம்பி வீழ்ந்து, நீங்கள் அரியணையில் எந்தவிதப் பயங்கரத் தாக்குதல்களுக்கும் ஆளாகாமல் அமருவீர்களே யானால் நான் எனது காதலைத் தியாகம் செய்துவிடுவதாக ஸ்ரீரங்க நாதரிடம் சபதப் பிரார்த்தனை விடுத்துக் கொண்டேன். எனது பிரார்த்தனை வீண் போகவில்லை! மகாசுல்தான் திப்புசுல்தான் என்கிற ராஜப் பிரகடனம் இன்றிரவு பிறக்கப் போகிறதே. அதைவிடப் பெருமை எனது காதலில் இருப்பதாகத் தெரியவில்லை. தயவு செய்து மேலும் வற்புறுத்தாமல் சென்று வாருங்கள்! இந்த ரங்கநாயகியை என்றுமே நீங்கள் தரிசிக்கலாம். இந்த ரங்கநாயகியும் என்றுமே தங்களைத் தரிசிப்பாள். நாமிருவருமே பரிசுத்தத்தைத் தரிசிப்போம்! சென்று வாருங்கள்...''

''ரங்கநாயகி! நான் சொல்வதைக் கேள்! நீ இதனை...''

''தயவு செய்து மன்னியுங்கள் மகாசுல்தான் நவாப் பகதூர்! நமது காதல் அடுத்த ஜென்மத்தில் நிறைவேறுமாக! போய் வாருங்கள்.''

சில நிமிஷங்கள்வரை தரையைப் பார்ப்பதும், ரங்கநாயகியை நோக்குவதுமாக இருந்த திப்புசுல்தானின் கண்களில் நீர் எவ்வளவு நேரம்தான் தாரையிடுமோ...

அவன் ஒன்றையும் அதற்குமேல் பேசிக் கொள்ளாது திரும்புகிறான்.

அவனது மனத்தே வேதனைகள் எல்லையற்றுப் பொங்கிப் பிரவகிக்கின்றன.

பரிவாரங்கள் பின் தொடரக் குதிரை மீது ஆரோகணித்து லால்மகால் நோக்கி ஒரு துன்பியலின் சித்திரமாய்ச் செல்கிறான் நவாப் திப்புசுல்தான்...

டாங், டாங், டாங், டாங்... டாங்...

ஸ்ரீரங்கநாதம் சுநாதமாக ஒலிக்கிறது...

பெருமாளுக்கு அந்தி காலப்பூஜை நடைபெறுகிறது...

கோயில் மணிக் கயிற்றைப் பிடித்து கண்ணீர் மல்க அசைத்து அசைத்து அடிப்பவள் ரங்கநாயகிதான்...



அவளது கண்களில் துன்பியல் நீராய்ப் பெருகித் தாரை தாரையாகக் கொட்டுகிறது...

ஸ்ரீரங்கநாதத்தைச் செவிமடுத்து ஒரு கணம் நின்று திரும்பிப் பார்க்கிறான், மகாசுல்தான் நவாப்கான்...

ஓ... பழைய நினைவுகள்...

இந்த மணியோசை என்றைக்குக் கேட்கும்...

இந்த மணியோசையை அவள் என்றைக்குமே எழுப்புவாள்...

இதன் மூலம் திப்புசுல்தானின் வருங்காலத்தையே நாதமயமாக்க வைராக்கியம் பூண்டுவிடுகிறாள், ரங்கநாயகி...

பின்னாளில் பரந்து விரிந்து ஒரு மாமாங்க காலத்துக்குச் செல்லவிருக்கிற மாவீர திலகம் திப்புசுல்தானுடைய வீரமும் சோகமும் நிறைந்த சரித்திரத்துக்கு, இந்தக் கோவில் மணி ஒரு சேகரம் போல்-ஒரு மகுடம் போல் - ஒலித்து, எண்திசையிலும் புகழ் மணம் பரப்பப் போகிறது!

டாங், டாங், டாங், டாங்...

**நிறைந்தது**



இலக்கிய சாம்ராட்
கோவி.மணிசேகரன்

நடமாடும் பல்கலைக்கழகம்,
உறவாடும் கலைக்களஞ்சியம்;
படைப்பாளர்கள் மத்தியில்
இவர் ஒரு பெரிய படிப்பாளி.

- மகாவித்துவான்
பேராசிரியர். ப. நமசிவாயம்




பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண் : 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.
தொலைபேசி : 25267543